இறக்கை: 14 இறகு: 9

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

செப்டம்பர் 2025 | விலை ₹ 50



**இந்திய நவீனத்துவத்தின் முன்னோடி பெரியார்**
■ இரா.முரளி

**செயற்கை நுண்ணறிவுக் காலமும் குருகுலக்கல்வியும்**
■ நீகழ் அய்க்கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வெளிச்சத்தில் பெரியார்:

## ஆங்கிலத்தில் எஸ். வி. ஆரின் புதிய பங்களிப்பு

நூல் மதிப்புரை

காக்கையார்






பெரியார்: சாதி, தேசம், சமத்துவம் என்ற நூலை மும்பையில் உள்ள மக்கள் இலக்கிய பதிப்பகம் வெளியிட்டுள்ளது. மார்க்சிய, பெரியாரிய அறிஞர் எஸ். வி. ராஜதுரையுடன் டெல்லியில் உள்ள சாதி எதிர்ப்புப் போராளி வித்யா பூசன் ரவாத் நடத்திய உரையாடல் இதன் உள்ளடக்கம். பெரியார் வட மாநிலங்களில் பயணித்து ஆற்றிய உரைகள்.. சந்திப்புகள் குறித்த தகவல்கள் நமக்கு அதிகம் கிடைக்கவில்லை. அந்த வகையில் இந்த நூல் தவிர்க்க முடியாத ஒரு படைப்பு. பெரியார் குறித்து வெளிவராத தகவல்கள், திராவிட இயக்கத்துடன் பாபாசாகிப் அம்பேத்கர் கொண்டிருந்த உறவு ஆகியவை இந்த நூல் மூலம் நமக்குக் கிடைக்கிறது. பெரியாரின் சிந்தனை மற்றும் தமிழ்நாட்டுக்கு அப்பால் அவருடைய அரசியல் தாக்கம் குறித்த அபூர்வமான விரிவான பார்வையைத் தருகிறது. பல பத்தாண்டுகளாக மறைக்கப்பட்ட பெரியாரின் பங்களிப்பை மீட்டெடுத்து பெரியார் மற்றும் அம்பேத்கர் ஒரே காலத்தில் சமத்துவத்துக்காக போராடியது மட்டுமின்றி இந்தியா முழுமைக்குமான அவர்களின் எதிர்வினைகள்.. செயல்பாடுகள் குறித்தும் அறியக் கிடக்கிறது.

பெரியார் குறித்த திரிபுகள் அதிகரித்துள்ள இந்த வேளையில் அதை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. கடும் உழைப்பு, அறிவார்ந்த பார்வை மூலம் பெரியாரைப் பற்றி நூல்களை ஆங்கிலத்திலும் படைத்துள்ள எஸ்.வி. ராஜதுரை இந்த நூலில் கூடுதல் புரிதலைத் தந்துள்ளார். மறுவிளக்கம் செய்துள்ளார். இந்த உரையாடலை நடத்தியுள்ள வித்யாபூசன் ரவாத் உலகம் முழுவதும் பல செயல்பாட்டாளர்கள் எழுத்தாளர்களை சந்தித்து இந்த உரையாடல் வடிவத்தில் கருத்துக்களை வழங்குவதில் பிரபலமானவர். குறிப்பாக அம்பேத்கர் குறித்து உலக நாடுகளில் பரவியுள்ள சிந்தனையாளர்கள் இந்தியாவிலிருந்து வேறு இடங்களில் குடியேறியவர்களுடன் பேட்டி எடுத்துள்ளார். அம்பேத்கர் குறித்து பேசுவதற்கு வட இந்தியாவில் பல கருத்தாளர்கள் உள்ளனர். ஆனால் பெரியார் குறித்து பேசுவதற்கான கருத்தாளர்கள் அங்கு குறைவு.

-தொடர்ச்சி மூன்றாவது அட்டையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14
இறகு: 9

திருவள்ளுவராண்டு 2055

ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2025

*ஆசிரியர்*
*வி. முத்தையா*
9841457503

*ஆசிரியர் குழு*
*முகிலன்*
*இரா.எட்வின்*

*தொடக்க கால நெறியாளர்கள்*
*காலஞ்சென்ற*
*கி. பி. அரவிந்தன்*
*வீர. சந்தானம்*

*உலகளாவியத் தொடர்பாளர்:*
*க. முகுந்தன்*
K. Mukunthan
kmukunthan@gmail. com

*முகப்பு ஓவியம்:*
*Courtesy: Img.freepik.com*

*உள் ஓவியங்கள்:*
*லெசி*

*தொடர்பு முகவரி:*
*காக்கை, 22, MJB தெரு,*
*திருவல்லிக்கேணி,*
*சென்னை- 600 005.*
*செல்பேசி: 98414 57503*

*மின்னஞ்சல்:*
***kaakkaicirakinile@gmail.com***

இணைய முகவரி: *kaakkai.in*
*www.facebook.com/kaakkai.cirakinile*


## ஜி.எஸ்.டி (GST) வரி குறைப்பு

**2016** இல் பணமதிப்புக் குறைப்பு; 2017இல் ஜி.எஸ்.டி வரிவிதிப்புமுறை அமலுக்கு வந்தது. 2020இல் கொரோனாத் தொற்று பாதிப்பினைத் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சிவீதம் குறைந்தது. இதனால், வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது; தொழிலாளர்கள் பெற்றுவந்த ஊதியமும் குறைந்தது; பணவீக்கம் அதிகரித்தது; விலைவாசி உயர்ந்தது; மக்களின் வாங்கும் சக்தியும் குறைந்தது. இதுமட்டுமின்றி, பெட்ரோல்-டீசல் மற்றும் தங்கத்தின் விலையானது சர்வதேச நிலவரத்திற்கேற்றவாறு அன்றாடம் விலை நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக, இதனையும் சேர்த்து சுமக்க முடியாமல் மக்கள் நிலைகுலைந்தனர். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முன்வைத்து ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையில் மாற்றம் வேண்டி அரசியல் கட்சிகளும், பொருளாதார ஆலோசகர்களும் குரல் எழுப்பினர். அரசானது அவ்வப்போது சிற்சில மாற்றங்களைச்செய்ததே ஒழிய மக்களின் நிலையறிந்து வரிவிதிப்பு முறையில் சாதகமான மாற்றம் ஏதும் செய்யவில்லை. அரசோ, ஒவ்வொரு மாதமும் ஜி.எஸ்.டி வருவாய் கூடிக்கொண்டே போவதை, நாட்டின் வளர்ச்சியாக பார்த்ததே ஒழிய, மக்களின் வாழ்வாதாரத்தின் நிலை சுருங்கிவருவதைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை.

தற்போதைய சூழலில், புவிசார் அரசியல், வேலைவாய்ப்பின்மை, அமெரிக்காவின் இரட்டை வரிவிதிப்பு, போர்சூழல் ஆகிய காரணங்களை முன்வைத்து "உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்குவோம்" எனும் கோரிக்கையுடன் அரசானது ஜி.எஸ்.டி அடுக்குமுறை வரிவிதிப்பில் மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறது. அதாவது, வருகிற தீபாவளி முதல் ஏற்கனவே இருந்துவந்த 5; 12; 18; 28 சதவீத அடுக்குமுறை வரிவிதிப்புப் பதிலாக, தற்போது 5;18 சதவீதமும், ஆடம்பரப்பொருட்களுக்கு 40 சதவீதமும் அடுக்குமுறை வரி விதிப்பினை அமல்படுத்தப் போவதாகக் கூறியுள்ளது. புதிய வரி விதிப்பினால், தற்போது 12 சதவீத வரி விதிக்கப்படிருக்கும் 99 சதவீதப்பொருட்கள் இனி 5 சதவீத வரி வரம்பிற்குள் கொண்டுவரப்படும். மேலும், தற்போது 28 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கும் 90 சதவீதப்பொருட்களுக்கு 18 சதவீத வரி விதிக்கப்படும் என்கிறது.

இந்த நாட்டில் 90 சதவீத மக்கள் அமைப்புசாராத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். 15-29 வயதுள்ள இளைஞர்களில் 83 சதவீதத்தினர் வேலை வாய்ப்பின்மையால் அவதியுற்றுள்ளனர். வறுமைக்கோட்டிற்கும் கீழே 25 சதவீதத்தினர் உள்ளனர். நாட்டில் 80 கோடிக்கு மேலான மக்கள் இன்னும் பொது வினியோகத் திட்டத்தை நம்பியே உள்ளனர். நிலைமை இப்படியிருக்கும்போது ஊதிய உயர்வின்மை; சமூகப்பாதுகாப்புத் திட்டங்களின்மை; வேலைவாய்ப்பின்மையை முடிவுக்கு கொண்டுவருவது அரசின் கடமையாகும். உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி நாட்டின் வளர்ச்சிக்கு உதவிட, முதலில் மக்களின் நிலையறிந்து வரிவிதிப்பு இருக்கவேண்டும். தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, வேலைவாய்ப்பு, சமூக பாதுகாப்புத்திட்டங்களை உறுதிசெய்யவேண்டும். பெட்ரோல்-டீசல் விற்பனையை ஜி.எஸ்.டி வரி வரம்பிற்குள் கொண்டுவரவேண்டும். ஜி.எஸ்.டி. வரிவருவாயினை அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சமின்றி பகிர்ந்தளித்திட வேண்டும். அப்போதுதான் மக்களிடம் வாங்கும் சக்தியும் அதிகரிக்கும். வரிவருவாயும் பெருகும். கூட்டாட்சி முறையும் வலுப்பெறும். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை ரூ. 50.00
ஆண்டு சந்தா ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 2000.00

வெளிநாடு

ஆண்டு சந்தா $ 50.00

வங்கி விவரம்

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்

பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை ரூ.5000


**காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.**

## சிறகுக்குள்ளே...


இந்திய நவீனத்துவத்தின் முன்னோடி பெரியார்
**இரா.முரளி** ........ 05

தூக்கு மேடையில் ஜனநாயகம்
**தி.சிகாமணி** ........ 10

செயற்கை நுண்ணறிவுக் காலமும் குருகுலக்கல்வியும்
**நிகழ் அய்க்கண்** ........ 12

ஒன்றிய பாகுபாட்டுக் கல்விக் கொள்கைக்கான மாற்று
**ஆயிஷா இரா. நடராசன்** ........ 17

உலகளாவிய தெற்கின் 'BRICS' கூட்டாண்மை
**ரூபன் சிவராஜா** ........ 21

முதலாளித்துவ வீழ்ச்சியும் செயற்கை நுண்ணறிவும்
**வல்லபாய்** ........ 26

இந்துத்துவாவின் உடலரசியல்
**ஜமாலன்** ........ 32

வழிபாட்டு அரசியலும், அரசியல் வழிபாடும்!
**இரா.மோகன்ராஜன்** ........ 37

Paulo Freire
**ரூபன் சிவராஜா** ........ 42

மதச்சார்பற்ற வரலாற்றுக்கதையாடல்களும்,
வகுப்புவாத சவால்களும்
**பி.பி. சைதாலி, மு.சாகுல் ஹமீது** ........ 47

வண்ணத்துப்பூச்சி விளைவும் ஆட்டிசமும்
**சு.இராமசுப்பிரமணியன்** ........ 51

தமிழ்க் கதைப் புத்தகங்கள் அச்சிடுதலும்,
காலனித்துவத் தாக்கமும், வரலாறும்
**எஸ். ஜெயசீல ஸ்டீபன்** ........ 54

இராஜேன்டிர சோலனா? இராஜேந்திர சோழனா?
**ச. வின்செண்ட்** ........ 56

ஆய்வறிஞர் வையாபுரியாரின் சொல்லாய்வு
**க.முத்துச்சாமி** ........ 58

வே. தில்லைநாயகத்தின் நூலகத்தமிழ் இலக்கியம்
**அரிஅரவேலன்** ........ 60

கரசேவை
**அய்யனார் ஈடாடி** ........ 63

65/66
**இரா.எட்வின்** ........ 65

தமிழர் நிதி நிர்வாகம்
**வெற்றிச்செல்வன்** ........ 67

சேலைகளின் நிறங்கள்
**சுப்ரபாரதிமணியன்** ........ 71

வசந்தி தேவி
**ஜே.ஆர்.வி. எட்வர்ட்** ........ 74

'உலகமெலாம் பெரியாரைப் பரப்ப வேண்டும்'
**குந்தவை** ........ 77

வலிய கேசி கொச்சு கேசி வில்லுப்பாட்டு
**அ.கா. பெருமாள்** ........ 79





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நவீனத்துவத்தின் முன்னோடி பெரியார்

பெரியார் பெரியார்தான்! அவர் அறிவுப் பரப்பில் எந்த சமரசத்தையும் முன்வைக்காதவர். பெரியாரியம் எனும் கோட்பாடுகளைக் கொண்டு அவரின் மெய்யியலை அடையாளப்படுத்துவது ஒரு புறம் இருப்பினும், அவருடைய பகுத்தறிவு முறையே ஒரு மெய்யியலாக இருக்கிறது என்பதையும் காணவேண்டும். சரியான அறிவு என்பது எது என்பதே மெய்யியலின் மையப் பிரச்சினை. இந்திய ஆத்திக மரபு மட்டுமின்றி மேற்கத்திய கருத்து முதல்வாத மெய்யியல் வாத மரபுகளும் மனிதர் அறிவுக்கு அப்பாற்பட்ட பேருண்மை ஒன்று இருப்பதாக வலியுறுத்துகின்றன. உண்மைகளை அறியவிடாமல் தடுப்பது மனிதர்களின் பகுத்தறிவே என்று இந்திய ஆன்மிகம் இன்றுவரை கூறிவருகிறது. சூட்சும உலகின் பாற்பட்டு இருப்பதே முழு உண்மையாகும் என மேற்கத்திய மெய்யியலாளர் ஹெகல் அறிவித்தார். பிளாட்டோவிற்கோ நம் அறிவு என்பது குறைபாடுகள் உள்ள அறிவு என்பது மட்டுமல்ல, அவை புறத்தே உள்ளே முழுமையான பேரறிவின் நகல்களே ஆகும். ஷோபனேர், லீபீனீட்ஸ், ஹென்றி பெர்க்சன் போன்ற மேற்கத்திய மெய்யியலாளர்கள் பலர் பகுத்தறிவு முறைமைகளைப் படிக்கட்டுக்களாக்கி, நுண்ணிய ஆன்மிக வெளியில் பயணித்தவர்கள் என்பதே உண்மை. பகுத்தறிவே உண்மையை அறிய உதவும் சாதனம் என்று பிரகடனப்படுத்திய நவீனத்துவ தத்துவத்தின் தந்தையாகக் கருதப்படும் ரெனே டேக்கார்ட்ஸ்கூட தன் தருக்க முறைகளைக் கொண்டு கடவுள் இருப்பதற்கான நிரூபணங்களைத் தந்தார். இந்திய மெய்யியல் பரப்பில் ஆத்திகப் பிரிவில், தருக்கத்தின் பலத்தினால் இறைக் கோட்பாட்டை நிலைநாட்டி வந்துள்ளனர். ஒவ்வொரு சிந்தனைப் பள்ளியும் தன் கோட்பாட்டை நிரூபிக்கத் தருக்கத்தையே பாதையாகக் கொண்டது. தருக்கம் என்பது பகுத்தறிவின் முதுகெலும்பு என்றாலும், அது கடவுள் மறுப்பிற்கானது மட்டுமன்று. அது கடவுள் இருப்பையும் நிரூபிக்க உதவும். ஆனால், இப்படிச் செய்யும்போது, இறுதியில் அது தருக்கத்தைச் சிதைக்கும் தன்மையையே கொண்டுள்ளது. இந்தச் சூழலில், ஆங்காங்கே சில நாத்திகச் சிந்தனைப் பள்ளிகள் தோற்றம் பெற்று, இந்தியப் பரப்பில் ஆத்திக மெய்யியலைக் கேள்விக்குள்ளாக்கினாலும், அதை உறுதியாக, வலுவான முறைமையோடு சமூகத் தளத்தில் அதைப் பரிசோதனை செய்தவர்தான் பெரியார். அருவமான தத்துவப் பேருண்மைகளை வலுவாக நிராகரித்து, அறிவு என்பது மனிதர்களின் புலன்களால் அறிந்து, அனைவருக்கும் பொதுவான (ஒன்றல்ல) பலவித உண்மைகளை உரைப்பதே ஆகும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தியவர்களில் முதன்மையானவர் பெரியார் என்றே கருதுகிறேன்.

### பகுத்தறிவு எனும் தொடர் ஓட்டம்

நாத்திக மரபு மெய்யியலைச் சேர்ந்த ஜே.கிருஷ்ணமூர்த்தி, அறிந்தவை என்பவை



**இந்திய ஆன்மிக மெய்யியலின் ஆத்திகத் தத்துவங்கள் அனைத்தையும், அவர் நிராகரிப்பதற்கான மையப்புள்ளி கடவுள் என்பதைவிட ஆன்மா என்பதே ஆகும். கடவுளை சமூகப் பரப்பில் நிராகரிக்கும் பெரியார், மெய்யியல் பரப்பில் முதலில் மறுப்பது ஆன்மா எனும் கட்டமைப்பையே ஆகும். விளக்க முடியாத ஆன்மா பற்றி விளக்க முற்படுவது மெய்யியலின் பணி அல்ல என்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட குறை கொண்ட அறிவே. எனவே, அறிந்தவற்றிலிருந்து விடுதலை என்பதே மெய்மையை அறிய உதவும் என்றார். ஆனால், பெரியாரைப் பொறுத்தவரை அறிவதே மனத் தளைகளிலிருந்து விடுதலை தரும். அறிந்தவை என்பவை சரியானவையா என்ற குறுக்கு விசாரணை எனும் நுட்பமான அறிதலே இங்கு முக்கியம் என்கிறார். பகுத்தறிவு என்பது கேள்விகளால் செய்யப்படும் வேள்வியாகும். எது சரியானது என்பதை அறிவதற்குத் தருக்கம்தான் உதவும் அதுவே அறிவின் அஸ்திவாரம் என்றவர், வெறும் தருக்கம் எனும் சிந்தனை முறையைத் தாண்டி,



**கடவுளை இல்லை என்று சொல்பவருக்கு என்ன இலாபம் என்று கேட்கும் பெரியார், மறுபுறம் சர்வ வல்லமை பொருந்திய கடவுள் ஏன் இப்படி ஒருவனைச் சிந்திக்கவைக்க வேண்டும் என்றும் வினவுகிறார். மேலும், கடவுள் உண்டு என்றால் அவர் இருப்பை ஏன் ஒருவன் பிரச்சாரம் செய்ய வேண்டும்? இதில் அவனுக்கு ஏதோ சுய இலாபம் இருக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்.**

அதை வாழ்வியல் நெறியாக எப்படிக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். உள்ளதை உள்ளபடி அறிவதே அறிவு என்ற நிலைப்பாட்டில் அவர் தீவிரமானவர். தத்துவம் என்பது அவருக்கு விமர்சனப் பாதையே! ஒரு பக்கச் சார்பற்ற விசாரணையை மேற்கொள்வதே மெய்யியலின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே அவர் கொள்கை. மெய்யியல் எனும்போது புலன் கடந்த அறிவுக் கோட்பாடு அல்லது அனுபூதிக் கொள்கை என்ற வகையில் விளக்க இயலாத, நிரூபிக்க முடியாத உண்மைகள் என்று சொல்லப்பட்டவற்றை அவர் அறிவுப் பரப்பிலிருந்து நிராகரிக்கத் தயங்கியதே இல்லை. மேற்கிலும், இவருடைய சம காலத்தவர்களான தருக்கவியல் புலனறிவு வாதத்தினர் (*Logical Postitivists*) அனுபூதவியலை அர்த்தமற்றவை (*Metaphysical Nonsense*) என ஒட்டுமொத்தமாக நிராகரித்தனர். அந்த வகையில், பெரியார் இந்திய மெய்யியல் வகைகளின் கூறுகளை அறிந்து அவற்றைத் தீவிர விசாரணைக்குட் படுத்தியவர்.

கண்டவர் விண்டிலர் என்று சொன்ன மகான்களும் ஆயிரமாயிரம் பாடல்களில் ஆன்மிக மெய்யியலை விண்டிருப்பது மறுக்க இயலாததாகும். விண்டவர் கண்டிலர் எனும் கூற்று இங்கு மறுக்கப்படுவதையும் காணலாம். ஒருவர் அறிவை விலக்கி ஆன்மிகப் பாதையில் சுயம் தொலைத்து, உயிர்நிலை உண்மை என்ற ஒன்றை அடைந்தால்கூட, அதை விளக்க அவர் அறிவின் துணையைத்தான் நாட வேண்டியிருக்கும். எனவே, அவருக்கு மூளையின் கூறுகளைக் கொண்டே அதைப் புரிந்துகொள்ள வேண்டிவரும். பொதுவாக மேல் நாட்டு மெய்யியலாளர்கள், மார்க்ஸ் போன்ற சிலரைத் தவித்து, (மார்க்சை மெய்யியலாளராக மேலை நாட்டினர் கருதுவதில்லை) கோட்பாடுகளை உருவாக்கி, பொது வெளிக்கு சமர்ப்பித்துவிட்டு என்ன வாதங்கள் நிகழ்கின்றன எனக் கவனிப்பார்கள். ஆனால், மேற்கத்திய நாத்திகச் சிந்தனை மெய்யியலாளர்களைவிட அதிக அளவிலான சவால்கள் பெரியாருக்குத் தமிழக பண்பாட்டுப் பரப்பில் இருந்தன் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். ஆகையால்தான் சிந்தனை இருக்கையை விட்டு சிலிர்த்து எழுந்து, சமூகக் களத்தில் பகுத்தறிவு எனும் ஒளி கொண்ட வாளுடன் இறங்கி, அறியாமை எனும் மாயப் பேயுடன் அவர் தொடர் சமர் செய்தார். தான் எழுதி அல்லது பேசிவைத்த விமர்சனப் பதிவுகளை வேறு ஒருவர் வந்து பின்னர் நடைமுறைப்படுத்துவார் என்று அவர் காத்திருக்கவில்லை. அவருக்குத் தத்துவ நிலைப்பாடு என்பது செயல்பாட்டுடன் இணைந்த ஒன்றாகும். செயல்பாடுகள் மூலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தத்துவமும் நிலைபெறுகிறது. ஆன்மிகம்கூட பலவகை சடங்கு செயல்பாடுகள், சம்பிரதாயங்கள், கடவுள்கள், வழிபாடுகள், கலைவடிவங்கள் என்பனவற்றின் மூலமே தங்கள் புனித உலகை உருவாக்கியுள்ளன என்பதை அவர் கண்டுகொண்டார். எனவேதான் இவற்றை உடைத்தால்தான் ஆன்மிகக் கருத்தியல்களை நிராகரிக்க முடியும் என்று அறிந்தார்.

### மண்ணில் பிரச்சினை, விண்ணில் தீர்வா?

இந்திய பண்பாட்டு வெளியைத் தீவிரமான விசாரணைக்குட்படுத்தியவர் பெரியார். மெய்யியலைச் சமூக வரலாற்றின் அடிப்படையிலே ஆராய்ந்தார். வெறும் கருத்துகளாக அவர் மெய்யியலை அவதானிக்கவில்லை. அது சமூகம் சார்ந்து உருவாவது என்பதை தெளிவித்தார். மனிதர்களைச் சமத்துவத்துடனும், சுயமரியாதையுடனும் வாழவைப்பதே மெய்யியலின் நோக்கம். அப்படியில்லாமல் ஏற்றத் தாழ்வு கொண்ட சமூகமாக இச்சமூகம் இருப்பதற்குக் காரணம் அது பெருவாரியாக அங்கீகரித்துள்ள மெய்யியலே என்று அறிந்தவர் பெரியார். இங்கு சமத்துவம் எனும்போது, ஆன்மிகமும் ஆன்மநேய சமத்துவம் பற்றி வலிறுத்துவதையும் மனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் அவை தட்டையான, அருவமான கருத்தாக்கங்களை தங்கள் மெய்யியலின் அடிப்படையாகக் கட்டமைத்துள்ளன என்பதை பெரியார் விளக்குகின்றார். மேலும் இம்மாதிரி மெய்யியல்கள் கட்டமைப்பின் மூலம் அநீதியான சமூக மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டு, பரப்பப்பட்டு அவற்றிற்கு மக்கள் தாமாகவே முன்வந்து தரும் ஒப்புதலையும் பெற்று அவர்களை அடிமைப்படுத்தும் வேலையே நடைபெறுகின்றன என்பது பெரியாரின் கணிப்பு. விண்ணுலக நாயகன் இறைவனைப் பற்றிய விசாரணையே மனிதருக்குத் தேவை என்றும், புவி வாழ்வு என்பது விதியினாலும், கர்மாவினாலும் கட்டப்பட்டது என்ற மனவிலங்கை இட்டு ஆன்மிகம் மனிதர் இவ்வுலகில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வை விண்ணிலே கொண்டுசென்று வைத்துவிட்டது என்ற குற்றச்சாட்டைத் தமக்கே உரிய பாணியில் பெரியார் வாதிட்டார்.

களத்தில் ஆன்மிகத்தின் கோட்டைச் சுவர்களைத் தகர்க்காமல், அதன் மெய்யியலை உடைக்க இயலாது என்பதால்தான் அவர் மக்களுக்கு விதைக்கப்பட்ட நம்பிக்கைகளைப் பொதுவெளியிலே காத்திரமான கேள்விகளுக்குள்ளாக்கினார். புராணங்களைக் கட்டுடைத்து கடவுள்களை நிராகரித்தார். இவை சரிந்தால்தான், ஆன்ம தத்துவங்கள் பலமிழந்து தருக்கப் போரினை எதிர் கொள்ள இயலாமல் தவிக்கும் என்பதே இவரின் உத்தி எனலாம். இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்கள் கூட புத்தர் காலத்துக்கு முன்பு மிகவும் சிறிய படைப்புகளாக இருந்தன என்றும், பௌத்தம் பரவுவதைத் தடுக்கும் கருத்தியல் கருவியாகவே பிற்காலத்தில் இவை விரிவாக்கப்பட்டன என்றும் பெரியார் வாதிட்டார்.

ஆத்திகத் தத்துவ மரபு தன்னுடைய பிரம்மாண்ட பெருங்கதையாடலை வெகுஜனங்களிடையே பரப்புவதற்கு சுயநலமான ஒருசில இனத்தவரே மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்ற உள்நோக்கம் உள்ளது. பார்ப்பனியம் தனது பண்பாட்டு மேலாதிக்கத்திற்கான கருத்தியல் கருவியாகவே ஆத்திகத் தத்துவங்களை அறக்கோட்பாடுகளை, கடவுள்களை, புராணங்களை உருவாக்கியது என்ற அவருடைய கடுமையான குற்றச்சாட்டைத்தர்க்கரீதியாகஎதிர்கொள்வது மிக மிகக் கடினம். தன்னுடைய வேத மறுதலிப்பிற்கு அவர் கையாண்ட தத்துவ முறைமையே கட்டுடைப்பு ஆகும். இவரைத் தமிழகத்தின் டெரிடா என்று கூட கருதலாம். எந்தப் புராணத்தைக் கொண்டு ஆத்திக தத்துவ அமைப்புகள் வெகுஜன மனவெளியில் அறிவிற்கு அப்பாற்பட்ட பெரும் நம்பிக்கை பிடிப்பை உண்டாக்கியதோ, அதே புராணத்தின் மதிப்பீடுகளை, புராண நாயகர்களைப் பகுத்தறிவு கொண்டு உடைத்தார். அவர் ஆதாரங்களுடன் எழுப்பிய பல கேள்விகள் தீப்பொறிகளாகத் தமிழ் இளைஞர்களைப் பற்றியது. இதனால் இராமன், கிருஷ்ணன் போன்ற தெய்வங்கள் தமிழகத்தில் முக்கியத்துவம் இழந்தனர் எனலாம்.

### ஆன்மாவை மறுத்தல்

இந்திய ஆன்மிக மெய்யியலின் ஆத்திகத் தத்துவங்கள் அனைத்தையும், அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிராகரிப்பதற்கான மையப்புள்ளி கடவுள் என்பதைவிட ஆன்மா என்பதே ஆகும். கடவுளை சமூகப் பரப்பில் நிராகரிக்கும் பெரியார், மெய்யியல் பரப்பில் முதலில் மறுப்பது ஆன்மா எனும் கட்டமைப்பையே ஆகும். விளக்க முடியாத ஆன்மா பற்றி விளக்க முற்படுவது மெய்யியலின் பணி அல்ல என்கிறார். அவர் தன்னை ஒரு 'பிரக்ருதிவாதி' என்றழைத்துக்கொண்டார். சாங்கிய யோகம் ஆத்திக மரபினால் கபளீகரம் செய்யப்படுவதற்கு முன்பு, அதில் இயற்கையின் தன்மையை விளக்க பிரக்ருதி எனும் பொருள் ஆற்றலே மையமாக இருந்தது. பிற்காலத்தில்தான் புருஷா எனும் இறை ஆற்றல் அதனுள் இடம்பெற்று அதற்கு ஆத்திக முகம் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் பெரியார் ஆதிகால சாங்கியராகத் தன்னை அடையாளப் படுத்துகிறார். ஆக தத்துவம் என்பது புலன்களால் அறியப்படும் மெய்மையைப் பற்றி பேசுவதாகும் என்றார்.

இயற்கை என்பது பஞ்சபூதக் கூட்டு என்றாலும் அந்தச் சேர்க்கையை உண்டாக்க, இயக்க, ஒரு சக்தி வேண்டுமல்லவா? அதுதான் கடவுள் என்று ஆத்திகர் வாதிடுகின்றனர். இந்த எல்லாம் வல்ல கடவுள், அல்லா, ஆண்டவர் எப்படி மக்களின் மனதிற்கு வந்தார் என்பதைத்தான் இங்கு விசாரிக்க வேண்டும் என்கிறார் பெரியார். தன்னால் விளக்க முடியாதவற்றைக் கடவுள் சக்தி என்று மனிதன் ஒதுக்கிவிடுகிறான். நமக்குப் பூரண அறிவும், ஆராய்ச்சி முடிவும் ஏற்படும் வரை கடவுள் உணர்ச்சி நம்மை விட்டு விலக முடியாது என்றும் பெரியார் சொல்லுவது கவனிக்கத்தக்கது. அப்படியாயின் எது எப்போது சாத்தியமாகும் என்பதும் பதிலில்லா கேள்வியே. இங்கே கவனிக்கத்தக்க மற்றுமொரு விஷயம் என்னவென்றால், அவரவர்கள் தங்கள் அறிவுத் தன்மையின் நிலைக்கு ஏற்பத் தமக்கான கடவுள்களைத் தேர்வுசெய்கின்றனர்; உருவாக்குகின்றனர். பெரும் ஆய்வுகளை மேற்கொள்பவர்களில் பலர் மிகவும் அருவமான இறை சக்தியைக் கடவுளாக விளக்க முற்படுவதும் இதனால்தான்.

கடவுளை இல்லை என்று சொல்பவருக்கு என்ன இலாபம் என்று கேட்கும் பெரியார், மறுபுறம் சர்வ வல்லமை பொருந்திய கடவுள் ஏன் இப்படி ஒருவனைச் சிந்திக்கவைக்க வேண்டும் என்றும் வினவுகிறார். மேலும், கடவுள் உண்டு என்றால் அவர் இருப்பை ஏன் ஒருவன் பிரச்சாரம் செய்ய வேண்டும்? இதில் அவனுக்கு ஏதோ சுய இலாபம் இருக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார். தத்துவ விசாரணை என்பது திருப்தியான பதிலைப் பெறும்வரை எழுப்பப்படும் தயக்கமற்ற கேள்விகளாகும். சர்வ வல்லமையாளரை விசாரிக்க வேண்டும், 60-70 சோதனைகள் செய்து பார்க்க வேண்டும். பக்தனுக்கு இது தேவையில்லாமல் இருக்கிறது. அவன் நம்பிக்கையையே மெய்மை காட்டும் பேரறிவாகக் கருதுவதால் சும்மா இருக்கிறான்.

கடவுள் மறுப்புக் கோட்பாட்டிற்கு இந்த ஆன்ம மறுப்பு நிலைப்பாட்டை பெரியார் முன்வைத்தாலும், அவர் முன் சவால் விட்டு நின்றது மற்றொருவகை ஆன்மிகம். அதுதான் தன்னை அறிதல் என்றும், ஒளி உலகில் தியானத்தின் மூலம் சஞ்சாரம் செய்து, நாம் பிரபஞ்ச இயக்க சக்தியுடன் கலக்கலாம் என்ற வகை ஆன்மிகம். இதை முன்வைத்தவர்களில் வள்ளலார், இரமண மகரிஷி போன்றோர் அடங்குவர். இந்தத் தரப்பு ஆன்மிகம் பற்றி பெரியார் அதிகமாக விவாதிக்கவில்லை என்றே கருதுகிறேன். ஆனால் இவர்களின் மையப் புள்ளியான தன்னை அறிதல் என்ற கோட்பாட்டை அவர் தன்னுடைய மெய்யியல் நிலைப்பாட்டிலிருந்து விளக்குகிறார்.

தன்னை அறிந்தவன் கடவுள் ஆகின்றான் என்று கூறுவதன் பொருளை இவர் வேறுவிதமாகவும் புரிந்து கொள்ளலாம் என விளக்குகிறார். நான் எது என்று அறிவது மனதுக்கு எட்டாத ஒரு விஷயம் எனக் கருதுபவன் அதைக் கண்டுபிடித்துவிட்டால் ஞானியாகவும், துறவியாகவும், கடவுளைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லாதவனாகவும் ஆவதே இந்த ஞானத்தின் விளைவாக இருக்க முடியும். நானே கடவுள் என்று உணர்ந்தால், அதாவது ஒருவரின் ஆத்மாவே கடவுள் ஆகிறது என்று அர்த்தமாகிறது. இதன் பொருள் அவன் கடவுள் என்று ஒன்று தனக்கு வெளியே இல்லை என்பதைப் புரியும் நிலை. அது ஒருவகை நாத்திக நிலையே என்று வாதிடுகிறார் பெரியார். எனவே, ஒருவர் பொருளற்ற சூட்சும வெளி என்று சொன்னாலே பெரியார் அதை ஆத்திக மரபின் மற்ற பரப்புகளுக்கு இட்டுச் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடவுளர்கள் மூலமும், புனித நூல்கள் மூலமும், சடங்குகள் மூலமும், அப்பாலைத் தத்துவங்கள் மூலமும் போதிக்கப்படும் அறம் போலியானவை. அவற்றால் உண்மையான அறத்தை வளர்க்க முடியவில்லை. அவை தோற்றுவிட்டன என்று கருதும் பெரியார், நன்மை செய்பவனுக்குக் கடவுள் பயமும், மோட்ச–நரக பயமும் தேவையில்லை என்று அறுதியிடுகிறார்.**

பாதை என்றே கருதுகிறார். ஆனாலும், இவர் தன்னறிவு பற்றி ஆன்மிகமாகப் பேசி மக்களை ஈர்த்த ஞானிகள் பற்றி அதிகம் பேச முற்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. ஏனெனில் வள்ளலார், ஐயா வைகுண்டர், ஸ்ரீநாராயண குரு போன்றோர் ஆத்திக மரபை எதிர்த்து,சாதி எதிர்ப்பை முன்வைத்ததே ஆகும். பெரியார் பக்தியை மறுக்கும் வேளையில், ஒழுக்கம் மனிதருக்கு மிக அவசியம் என்பதை வலியுறுத்துகிறார். சமூக வாழ்வில் பக்தியைவிட ஒழுக்கம் முதன்மையானது, இன்றியமையாதது என்பது இவரின் வலியுறுத்தல். ஒழுக்கத்திற்கும் ஒரு விளக்கம் தருகின்றார். "மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கின்றோமோ, மற்றவர் நமக்கு எதைச் செய்யவேண்டுமென்று கருதுகின்றோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கின்றோமோ அதன்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்துகொள்ள வேண்டும் அதுதான் ஒழுக்கம்" ('விடுதலை' 26-9-1956)

### நீதி பொதுவானது

நாட்டில் எல்லாப் பரப்புகளிலும் ஒழுக்கக்கேடு பரவுவதை அவர் மிகவும் வேதனையுடன் பகிர்கிறார். சமய வெளிகளில் மட்டுமல்ல, வணிகத்திலும், அரசியலிலும் ஒழுக்கக் கேடு அதிகரிக்கிறது. ஒழுக்கக் கேடானவர்களைத் தலைவர்களாக ஏற்கும் மனநிலையும் மக்களிடம் எப்படி உருவானது, அயோக்கியர்களும், துரோகிகளும் நாட்டில் தைரியமாக உலாவுவதும், மக்கள் அவர்களை வெறுக்காமல் இருப்பதையும் பார்த்தால் இக்கூட்டத்தில் நாம் வாழ்வதே ஒழுக்கக்கேடு என்று தோன்றுவதாகவும், எனவே இந்த ஒழுக்கக்கேட்டைக் களைந்தே ஆகவேண்டும் என்றும் பெரியார் 1956 இலேயே குன்றக்குடியில் ஆற்றிய சொற்பொழிவில் வேதனைப் பட்டுள்ளார். ('விடுதலை' 20-6-1956) அப்படியாயின் இதற்குத் தீர்வாக அவர் என்ன முன்மொழிகிறார் என்று பார்த்தால், பகுத்தறிவு சார்ந்த புரிதலையே. ஒழுக்கம் என்பதை யாவருக்குமான பொதுக் கோட்பாடாக இருக்க வேண்டும் என்றும் அவர் குடியரசு கட்டுரை ஒன்றில் (24-11-1940) குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் ஒழுக்கம் எல்லோருக்கும் பயனளிக்கும் செயற்பாட்டை வலியுறுத்துகிறது. மதச் சார்பான ஒழுக்கம் பன்மைத் தன்மை கொண்டதாக இருந்து ஒவ்வொரு பிரிவினருக்கு ஒவ்வொரு ஒழுக்கத்தை, சமூக ஏற்றத்தாழ்வை நிலைநிறுத்தும் வகையில் வலியுறுத்துவதாக இருப்பதால்தான் இவர் நீதி என்பது எல்லோருக்கும் பொதுவானது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துகிறார் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இவர் வலியுறுத்தும் பொது அறக் கோட்பாடு தத்துவார்த்தமானது. இதைப் பொது சிவில் சட்டத்தை நியாயப்படுத்த பயன்படுத்திக் கொள்ளமுடியாது என்ற தெளிவும் அவசியம்.

கடவுளர்கள் மூலமும், புனித நூல்கள் மூலமும், சடங்குகள் மூலமும், அப்பாலைத் தத்துவங்கள் மூலமும் போதிக்கப்படும் அறம் போலியானவை. அவற்றால் உண்மையான அறத்தை வளர்க்க முடியவில்லை. அவை தோற்றுவிட்டன என்று கருதும் பெரியார், நன்மை செய்பவனுக்குக் கடவுள் பயமும், மோட்ச-நரக பயமும் தேவையில்லை என்று அறுதியிடுகிறார். ஆனால், பகுத்தறிவுப் பயணம் மேற்கொள்வது ஒரு சாதாரண மனிதனுக்கு எவ்வளவு சிரமமோ, அதைவிட அதிக அளவு கஷ்டம் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்வதென்பது என்பதையும் அவர் புரிந்து வைத்திருக்கக் கூடும். எந்த வித நிர்பந்தமும், கர்மவினைப் பயனுமின்றி ஒருவர் அறம் காத்து வாழ வேண்டுமெனில் அவர் எப்படிப்பட்ட சுயநலமற்றவராக இருக்க வேண்டும் என்பதை பெரியாரின் கோட்பாடு உணர்த்துகிறது. பகுத்தறிவே மேற்கத்திய நவீனத்துவத்தின் ஆணிவேராகும். அறிவியல்தன்மை கொண்ட சிந்தனையே அதன் மூச்சு. இந்த வகையில் இந்திய நவீனத்துவத்தின் நாயகனாகப் பெரியாரை அடையாளம் காணமுடியும். ●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | தி.சிகாமணி



# தூக்கு மேடையில் ஜனநாயகம்

ஜனநாயக வழிமுறை, மாண்புகள் மீதான தாக்குதலை மோடி ஆட்சி சமீப காலமாக விரைவுபடுத்தி வருகிறது. அமலாக்கத்துறை, சிபிஐ ,தேர்தல் கமிஷன் போன்றவற்றின் நம்பகத்தன்மை படுகுழிக்கு ஏற்கெனவே தள்ளப்பட்டு விட்டது. பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணியில் இவை செயல்படுகின்றன என்ற விமர்சனத்தைத் தாண்டி ஏவலாள்கள் நிலைக்கு கீழிறங்கி விட்டன. தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பதவியை பறிக்க 130-வது அரசியல் சட்டத்திருத்தம் செய்ய துணிந்துள்ளனர். பிரதமர்,ஒன்றிய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், மாநில அமைச்சர்கள் ஐந்தாண்டுகள் வரை தண்டனை பெறக்கூடிய ஒரு குற்ற வழக்கில், கைது செய்யப்பட்டு 30 நாட்கள் ஜாமினில் வெளிவராமல் இருந்தால் 31 வது நாள் அவரது பதவி பறிக்கப்படும் என்பதுதான் இந்தத் திருத்தம். இந்தச் சட்டத்தை ஏதோ ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிரான பொதுவான சட்டம் போல் இவர்கள் ஏமாற்றுகின்றனர். ஆனால் அமலாக்கத்துறை, சிபிஐ வழக்குகள் எதிர்க்கட்சிகளை நோக்கித்தான் பாய்கின்றன என்பது ஊரறிந்த விஷயம்.

பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் அமலாக்கத்துறை சோதனை நடப்பதில்லை. இதற்கு மாறாக ஜார்க்கண்ட், டெல்லி ஆகிய மாநில முதல்வர்களையே கைது செய்தார்கள். தமிழ்நாட்டில் பொன்முடி, செந்தில் பாலாஜியை கைது செய்தார்கள் இதன் மூலம் இந்தச் சட்டம் யாருக்கானது என்பது தெளிவு. அதனால்தான் எதிர்க்கட்சிகள் இந்த திருத்தத்தை கடுமையாக எதிர்க்கின்றன. இதை ஒரு கருப்பு சட்டம் மசோதா என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார். சர்வாதிகாரம் இப்படித்தான் துவங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அரிச்சந்திர மூர்த்தி மோடியோ இந்தச் சட்டம் ஊழலுக்கு எதிரானதுதான். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஊழல்வாதிகள். அவர்கள்மீது வழக்குகள் உள்ளன. சிலர் ஜாமினில் உள்ளனர் அவர்களே இந்த சட்டத்தைக் கண்டு அஞ்சுகின்றனர்; அமைச்சர்கள் சிறையில் இருந்து கொண்டு ஆட்சி நடத்துவது சரியா என்றும் மோடி கேள்வி கேட்கிறார். ஒருவர்மீது வழக்கு போட்டு விட்டாலே அவர்கள் குற்றவாளி என்று முடிவு செய்துவிட முடியாது. அதேபோல் ஜாமின் கிடைக்கவிடாமல் ஆட்சியில் உள்ளவர்கள் செய்துவிட்டால் அதன் காரணமாகவே அவர்கள் குற்றவாளி என்று கூற முடியாது. குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள்தான். இது சட்ட நடைமுறைக்கும் இயற்கை நீதிக்கும் எதிராக கொண்டு வந்துள்ள சட்டம். ஜனநாயக வழிமுறையில் சர்வாதிகாரத்துக்கு வழிகோலும். அரசமைப்பு சட்டத்தையும் கூட்டாட்சி முறையையும் குழி தோண்டி புதைக்கும் முயற்சி ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும். இது நவ பாசிசத்தின் புது சோதனை. சில மாநிலங்களில் ஓட்டு திருட்டு நடத்தியது போல் இது ஒரு சட்டத்திருட்டு என்று எதிர்க்கட்சிகள் எம்பிக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதை அடுத்து இந்தச் சட்டம் கூட்டு நாடாளுமன்றக் குழு விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது

ஒரே நாடு; ஒரே தேர்தல் மற்றும் தொகுதி மறு வரையறை மூலம் ஒரு கட்சி சர்வாதிகாரத்திற்கு திட்டமிடுகிறார்கள். மாநிலங்களே இருக்கக் கூடாது என்பது உள்ளிட்ட ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சி நிரல் படி ஒவ்வொரு காயையும் பாரதிய ஜனதா கட்சி நகர்த்துகிறது. யூனியன் பிரதேசம் ஆக்கப்பட்ட ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து தர வேண்டும் என்ற உச்சநீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற மறுக்கிறார்கள். ஜனநாயக கட்டமைப்புகள் ஒவ்வொன்றையும் சீர்குலைப்பதன் மூலம் தற்போது ஜனநாயகம் தூக்கு மேடையில் நிற்கிறது.

2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்பே நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கணவர் பரக்கல பிரபாகர் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசினார். அப்போது மோடி தோற்றாலும் அவரை ஆட்சியில் இருந்து நீக்குவது கடினம் என்று சொல்லி இருந்தார். அத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை மோடிக்கு கிடைக்கவில்லை. இதன் பின் தான் தேர்தல் கமிஷன் மீதான கட்டுப்பாட்டை மோடி அரசு மேலும் இறுக்கியது. தேர்தல் கமிஷன் ஒரு பாரபட்சமற்ற அமைப்பு என்ற நம்பிக்கை தகர்ந்ததற்கு ஹரியானா தேர்தல் உதாரணமாக அமைந்தது. தேர்தலில் ஆச்சரியம் ஊட்டும் வகையில் பாரதிய ஜனதா அங்கு வெற்றியை ஈட்டியது. மக்களவைத் தேர்தலுக்குப் பின்பு மக்களிடையே சில மாதங்களில் பெரிய மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் மகாராஷ்டிரா மாநிலத்தில் எதிர்பாராத வகையில் காங்கிரஸ் கூட்டணி தோல்வியை சந்தித்தது. 2024 ஆம் ஆண்டு தேர்தலில் 48 மக்களவை இடங்களில் 17 இடங்களில் தான் பாஜக வெற்றி பெற்றிருந்தது ஆனால் ஐந்து மாதத்திற்கு பிறகு நடந்த மகாராஷ்டிரா சட்டசபை தேர்தலில் பாரதிய ஜனதா வெற்றியை ஈட்ட முடிந்தது எப்படி? தேர்தல் நிபுணர்கள் இந்த திடீர் மாற்றத்தை விளக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர். மாலையில் திடீரென்று அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பதிவானது எப்படி? பதிவான வாக்காளர்கள் குறித்த வீடியோ பதிவை ராகுல் காந்தி கேட்டார். ஆனால் அப்போது தேர்தல் ஆணையராக இருந்த ராஜீவ் குமார் வீடியோவைத் தர முடியாது அந்த வீடியோக்களை ஆராய 3600 ஆண்டுகள் ஆகும் என்று திமிர்த்தனமாக பதில் சொன்னார் இதன் மூலம் தேர்தல் கமிஷன் மீது சந்தேகம் அதிகரித்தது.

2024 மக்களவைத் தேர்தலில் கர்நாடக மாநிலம் பெங்களூர் மத்திய தொகுதிக்கு உட்பட்ட மகாதேவபுரா சட்டசபை தொகுதியில் மட்டும் வாக்காளர்கள் அபரிமிதமாக அதிகரித்தது எப்படி? பாரதிய ஜனதா அங்கு மட்டும் கூடுதலாக வாக்குகள் பெற்றது எப்படி? மாலை 6 மணிக்கு மேல் குறுகிய நேரத்தில் வாக்குகள் பதிவானது எப்படி என்பது குறித்து ஆய்வு செய்ய ராகுல் காந்தி நடவடிக்கை எடுத்தார். இந்த சட்டசபை தொகுதியின் வாக்குப்பதிவு வீடியோவை தருமாறு ராகுல் காந்தி கேட்டார். கம்ப்யூட்டர் மய உலகத்தில் அவர்கள் டிஜிட்டலாக பட்டியலைத் தராமல் அச்சடிக்கப்பட்ட பட்டியலை தந்தார்கள். இந்த பட்டியலை ஆய்வு செய்ததில் ஒரு லட்சத்து 250 பேர் சந்தேகத்துக்குரிய வாக்காளர்கள் என்று தெரியவந்தது. பல பூத்துகளில் 14 ஆயிரத்து 965 வாக்காளர்கள் மாறி மாறி பதிவு செய்திருந்தனர். 40, 409 பேர் முகவரி தவறாக இருந்தது வீட்டு முகவரி எண் ஜீரோ என்று பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஒரே வீட்டில் பலர் பதிவு செய்திருந்தனர். ஒரு ஒயின் ஆலையில் 68 வாக்காளர்கள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டு இருந்தது 4132 பேருடைய போட்டா கோளாறாக இருந்தது. வயதை தவறாக குறிப்பிட்டு இருந்தார்கள். இப்படி பல தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த மக்களவைத் தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி 32,707 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் மகாதேவபுரா சட்டசபை தொகுதியில் மட்டும் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 707 வாக்குகள் வித்தியாசத்தை பாரதிய ஜனதா ஏற்படுத்தியது.

ராகுல் காந்தி பத்திரிக்கையாளர் சந்திப்பில் வாக்காளர் பட்டியல் முறைகேட்டை அம்பலப்படுத்தினார். தற்போது தலைமை தலைமை தேர்தல் கமிஷனராக உள்ள ஞானேஷ் குமார் உரிய பதிலை தராமல் ஒரு அரசியல் கட்சி பிரதிநிதி போல் ராகுல் காந்திக்கு பதிலை அளித்தது தேர்தல் கமிஷனனின் பாரபட்ச போக்கை வெட்ட வெளிச்சமாக்கியது. ராகுல் காந்தி பிரமாண பத்திரம் மூலம் புகார் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் ஒரு வாரத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தேர்தல் ஆணையர் அடாவடியாக கூறினார் .

பீகாரில் வாக்காளர்களை குறைத்து அதன் மூலம் வெற்றியை ஈட்ட பாஜக முயற்சிக்கிறது என்று முன்பே நாம் குறிப்பிட்டு இருந்தோம். சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தம் என்ற பெயரில் உரிய ஆவணங்கள் தரவில்லை என்று கூறி 65 லட்சம் வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கினார்கள் இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையிட்ட போது ஆதார் உள்ளிட்ட 11 ஆதாரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. வாக்காளர்களை நீக்கியது ஏன் என்பதற்கான விளக்கத்தை தர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கூறியது. வாக்காளர்கள் தாங்கள் இந்திய குடிமகன் தான் என்று நிரூபிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதாவது குடிமக்கள் பதிவேட்டு சட்டம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தேர்தல் கமிஷன் செயல்பட்டது. எவ்வளவு வாக்காளர்களை சேர்க்க முடியுமோ அவ்வளவு வாக்காளர்களை சேர்க்க வேண்டும் என்ற குறிக்கோளில்தான் தேர்தல் கமிஷன் செயல்பட்டிருக்க வேண்டும் இதற்கு மாறாக பாரதிய ஜனதா கட்சியின் நோக்கத்தை நிறைவேற்றுவது போல் ஊடுருவல் காரர்கள் என்றெல்லாம் கூறி ஆவணங்களை பாதுகாக்க முடியாத கீழ்த்தட்டு மக்கள், இஸ்லாமியர்களின் வாக்குகளை பறிக்க முயற்சி நடக்கிறது. குடியுரிமையை நிரூபிக்காவிட்டால் ரேஷன் மூலம் பொருட்கள் வாங்குவது மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவது பெரும் பாதிக்கும். இந்த வழக்கு குறித்து உச்சநீதிமன்றம் ஒரு முக்கியமான கேள்வியை கேட்டுள்ளது. அதாவது இவ்வளவு லட்சம் வாக்காளர்களை பட்டியலில் தொடர்ந்து நீடிப்பதற்கு அரசியல் கட்சிகள் எந்த வகையில் மக்களுக்கு உதவி செய்தார்கள்? அரசியல் கட்சிகளும் விழிப்பாக இல்லை. நாடாளுமன்றம் முன்பு போராட்டம் நடத்தினால் மட்டும் போதாது. களத்தில் அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். அரசியல் கட்சிகள் மட்டும் இல்லை. குடிமக்கள் ஒவ்வொருவரும் வாக்கு என்ற ஜனநாயக உரிமையை நிலை நாட்ட செயலில் இறங்க வேண்டும்.

●

*கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | நிகழ் அய்க்கண்

# செயற்கை நுண்ணறிவுக் காலமும் குருகுலக்கல்வியும்

இன்றைக்குச் சந்தை - வணிகம் - தொழில்நுட்பம் யாவுமே உலகம் தழுவியதாக மாறியுள்ளது. குறை கடத்தி - செயற்கை நுண்ணறிவு - ஆயுத விற்பனை ஆகிய மூன்றும் வளர்ந்துவரும் நாடுகளில் பேசுபொருளாக மாறியுள்ளன. சந்தையானது தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கும், நீடித்த வளர்ச்சியை எட்டுவதற்கும் இரண்டு விடயங்களை மிக கவனமாகக் கையாளுகின்றன. அதிலொன்று, தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வது; மற்றொன்று, வேலைவாய்ப்பின்மையைத் தொடர்ந்து நீடித்திருக்கச் செய்வதுமாகும்.

தற்போது அதிவேகமாகப் பரவலாகிவரும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமானது ஒரேசமயத்தில் வேலையிழப்பு; குறைந்த ஊதியம் வழங்குவது;, வேலைவாய்ப்பின்மையை நீடித்திருக்கச்செய்வதாக இருப்பதை ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளிலிருந்து அறிந்து கொள்ளமுடியும். வேலையிழப்பு - குறைந்த ஊதியம் - வேலைவாய்ப்பின்மை ஆகிய மூன்றுமே சமத்துவமின்மையை உருவாக்கக் கூடியதாகும்.

செயற்கை நுண்ணறிவின் விளைவால் உலகம் முழுக்கக் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட பணிகளுக்கான வேலைவாய்ப்புகள் பறிபோய்க் கொண்டேயிருக்கின்றன. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் அறிமுகமான கடந்த மூன்று வருடத்தில் உலகம் முழுக்க 12 லட்சம் பேர் வேலையிழப்பினைச் சந்தித்திருக்கிறார்கள். 'நாசா' தனது வேலைகளில் 40 சதவீதத்தையும், அமேசான் தனது வேலைகளில் 62 சதவீதத்தையும் செயற்கை நுண்ணறிவிடம் ஒப்படைத்துள்ளன.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பினது (ILO) கணிப்பின்படி, உருவாக்கும் திறன்மிக்க (GENERATIVE AI) செயற்கை நுண்ணறிவானது, உலகில் நான்கில் ஒருபங்கு அளவிலான பணிகளை அபகரித்துக்கொள்ளும் ஆபத்திருப்பதாகக் கூறுகிறது. உதாரணத்திற்கு, நிர்வாகம், சட்டம் சார்ந்த பெரும்பாலான பணிகள் இதனால் பாதிக்கப்படக்கூடும் என்கிறது.

உலக பொருளாதார அமைப்பினது (WEF) அறிக்கையின்படி, செயற்கை நுண்ணறிவினால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 8.3 கோடிப்பேர் வேலைவாய்ப்பின்மையைச் சந்திக்க நேரிடலாம் என்கிறது. அதுமட்டுமின்றி, உலகளவில் 2030ஆம் ஆண்டிற்குள் செயற்கை நுண்ணறிவுப் பிரிவுகளில், 17 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் எனவும், இதில் 9.2 கோடி வேலைவாய்ப்புகள் இடம் பெயர்ந்ததுபோக, மீதமுள்ள 7.8 கோடி வேலைவாய்ப்புகள் மட்டுமே புதிதாகச் சேர்ந்திட வாய்ப்பிருக்கிறது என்கிறது.

இந்த அமைப்பானது இந்தியாவைப் பற்றிக்கூறும்போது, வளர்ந்துவரும் வேலைவாய்ப்புச் சூழலுக்கேற்ப பணியாளர்கள் போதுமான அளவு தயாராய் இருப்பதை உறுதிசெய்ய, நிலவிவரும் திறன் இடைவெளியைக்குறைப்பது அவசியம் என்கிறது. இதற்காக, கல்வியில் அதிகளவு முதலீடு; தொழிற்கல்வி பயிற்சி; டிஜிட்டல் கல்வியறிவினை வளர்த்தெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

உலகப் பொருளாதார அமைப்பு இப்படியாகக்கருத்துத் தெரிவித்துள்ளதற்கிணங்க பார்க்கும்போது, கல்விக்கான ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடானது ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து குறைந்துகொண்டே வருவதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழங்குடியின, மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களில் சிலர், ஏதோ ஒரு நெருக்கடியின் காரணமாக தற்கொலைசெய்துகொள்கின்றனர். இக்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு ஆர்வங்கொண்டு, நீட் (NEET) மற்றும் ஜெ.இ.இ. (JEE) தேர்வெழுதத் தனியார் பயிற்சி மையத்தில் பயிலும் மாணவர்களும்கூட அழுத்தத்தின் காரணமாகத் தற்கொலைசெய்துகொள்வதும் நிகழ்ந்தவண்ணமிருக்கிறது. மேற்சொன்ன தகவல்களையெல்லாம் உற்றுநோக்கும்போது, அனைத்துக் குடிமக்களையும் சமமாகப் பாவிப்பதில் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஏதோ ஒருவகைப் பாகுபாடு நிலவுவதை உணரமுடியும்.

**தற்போது அதிவேகமாகப் பரவலாகிவரும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமானது ஒரேசமயத்தில் வேலையிழப்பு; குறைந்த ஊதியம் வழங்குவது;, வேலைவாய்ப்பின்மையை நீடித்திருக்கச்செய்வதாக இருப்பதை ஊடகங்களில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகளிலிருந்து அறிந்துகொள்ளமுடியும். வேலையிழப்பு – குறைந்த ஊதியம் – வேலைவாய்ப்பின்மை ஆகிய மூன்றுமே சமத்துவமின்மையை உருவாக்கக்கூடியதாகும்.**

தொழிற்கல்வி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்திலும் வேலைவாய்ப்பிற்கேற்ற திறன்சார்ந்த பயிற்சியின்மை காரணமாகப் பற்றாக்குறை நிலவுவதைவும் கல்வியாளர்கள் பலரும் சுட்டிக்காட்டிய வண்ணமிருக்கின்றனர்.

### இந்தியக் கல்வியின் நிலை

பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியின் நிலை எப்படியிருக்கிறது என ஊடகங்களில் வெளிவந்த செய்திகளைச் சற்று ஆராய்ந்தோமேயானால், இன்றைய சூழலுக்கேற்றவாறு கல்வி அமைந்திடவில்லை என அறிந்துகொள்ள முடியும். இதுவரையில் 15 அயல் நாட்டு பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தனது வளாகத்தை நிறுவ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உலகின் சிறந்த 100 பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு இடமில்லை. அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் காலியாக உள்ள தலித், பழங்குடியின, மற்றும் பிற்படுத்தப்பட்ட பேராசிரியப் பணியிடங்கள் அளவுக்கு அதிகமாக நிரப்பப்படாமலிருக்கின்றன. உயர்கல்வி நிறுவனங்களில் பேராசிரியப் பணியிடங்கள் 'காண்ட்ராக்ட்' முறையில் பணியமர்த்தப்படுகின்றன. இக்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயின்றுவரும் தலித்,

பொதுவாக, வேலைவாய்ப்பினை அதிகம் நல்கக்கூடிய பொறியியல் சார்ந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கும் - தொழில்துறைக்கும் இடையிலான உறவு நெருக்கமாகப் பேணப்படுவதில்லை. மேலும், பொறியியல் கல்லூரிகள் பலவும் படிப்பினை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கு, வளாகத் தேர்வு மூலம் அதற்கேற்ற வேலைவாய்ப்பினை உத்திரவாதப் படுத்துவதில்லை. இன்னும் சொல்லப்போனால், பொறியியல் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு ஏற்ற திறன்மேம்பாட்டு பயிற்சியினையும் உறுதிப்படுத்துவதாகக்கூட இருப்பதில்லை. உதாரணத்திற்குக் கூறவேண்டுமெனில், 2024-25 ஆண்டுக்கான இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையின்படி, 8.25சதவீதப் பட்டதாரிகள் மட்டுமே தகுதியுள்ள வேலையில் அமர்ந்திருக்கின்றனர். 53 சதவீதப் பட்டதாரிகள் மற்றும் 36 சதவீத முதுநிலைப் பட்டதாரிகள் குறைந்தளவு திறனுடன், தங்களது படிப்புத் தகுதிக்குக் குறைவான வேலையைப் பெற்றிருக்கின்றனர் என்கிறது.

இங்குள்ள உயர்கல்வி நிறுவனங்கள் காலத்திற்கேற்றவாறு பாடத்திட்டத்தினை மாற்றியமைக்காதது; நவீனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தாதது; வேலைவாய்ப்பினை உத்திரவாதப்படுத்தாதது போன்ற காரணங்களால் கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் 18.08 லட்சம் இந்திய மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று படித்துவருகின்றனர். இதுதவிர, கடந்த ஓராண்டில் மட்டும் இரண்டு லட்சத்திற்கு மேலானவர்கள் இந்தியக் குடியுரிமையை உதறிவிட்டு அயல்நாட்டுக் குடியுரிமையைப் பெற்றுள்ளனர் என்பதிலிருந்தே கல்வியின் தரம் மற்றும் வேலைவாய்ப்பிற்கான சூழல் எந்தளவுக்கு இங்கே இருக்கிறது என அறிந்துகொள்ள முடியும்.

### புதிய கல்விக் கொள்கை

இந்தியாவில் நவ தாராளமயப் பொருளாதாரக் கொள்கை 1991 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. புதிய கல்விக் கொள்கை 2020 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இடைப்பட்ட காலத்திலும் சரி, புதிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதற்குப் பிறகான இந்த ஐந்து வருட காலத்திலும் சரி, கல்வியானது சந்தையின் நலனுக்கும், வலதுசாரி அடையாள அரசியலுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறதே ஒழிய, மாணவர்களைச் சிறந்த குடிமகனாக்குவதற்குரிய ஜனநாயகம், குடிமைப்பண்புகள், வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடிய திறன் சார்ந்த பயிற்சி ஆகியனவற்றை அளிக்கத் தவறியிருப்பதனைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்திய இளைஞர்களில் 83 சதவீதத்தினர் வேலையின்மையினால், கடும் உளைச்சலுக்குள்ளாகி வருகின்றனர். இதுதவிர, 90 சதவீத மக்கள் சமூகப் பாதுகாப்பின்றி அமைப்புசாராத் தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர். கிட்டத்தட்ட 25 சதவீதத்தினர் இன்னும் வறுமைக்கோட்டிற்கும் கீழாக இருந்துவருகின்றனர் எனப் புள்ளிவிவரம் சுட்டிக்காட்டுகிறது. இப்படியான சூழலிருந்து சந்தைமயமும் சரி, புதிய கல்விக் கொள்கையும் சரி, வலது அடையாள அரசியலானாலும் சரி, இந்த நாட்டின் எளிய குடிமக்களுக்கானதல்ல என்பது புரியும்.

புதிய கல்விக் கொள்கையானது சந்தையின் நலனையும், வலதுசாரி அடையாள அரசியலின் நலனையும் கருத்தில் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது.' இதில், சந்தையானது கல்வியினூடாக, தனது நலன் சார்ந்த வணிகம், போட்டி, நிதி மூலதனம், காப்புரிமை, நுகர்வுக்கு முன்னுரிமையளிக்கிறது. வலதுசாரி அடையாள அரசியலோ, தன் நலன் சார்ந்த சனாதனக் கருத்தியலை பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியில் மொழி, பாடத்திட்டங்கள் மாற்றியமைப்பு, அதீத தேசியவாதம், ஆகியவற்றினை, நுணுக்கமாக உள்நுழைப்பதாக இருக்கிறது. ஒரேநாடு- ஒரேகல்வி - ஒரே மொழி அடிப்படையில், பள்ளிக்கல்வியை என்.சி.இ.ஆர்.டி. (NCERT) மூலமாகவும், உயர்கல்வியை யூ.ஜி.சி. (UGC) மூலமாகவும் நாடு முழுக்கக் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது.

புதிய கல்விக் கொள்கையானது, மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவதாகக் கூறிக்கொள்கிறது. மட்டுமின்றி, சமூக நெறிமுறை மற்றும் உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு, குலத்தொழில் சார்ந்த, வேத இதிகாச மரபுகளை மீட்டெடுப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கல்விக் கொள்கையின் பரிந்துரைகளையும், இந்திய அறிவு மரபினையும் படிப்படியாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடத்திட்டங்களின் வழியாகக் கொண்டு செல்வதுதான் ஆட்சியாளர்களின் இலக்காக இருக்கிறது.

'இந்திய அறிவு அமைப்பு' (INDIAN KNOWLEDGE SYSTEM) என்பது, இந்தியாவின் கலாச்சாரம், தத்துவம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலைகள் ஆகியவற்றிலுள்ள அறிவைக் குறிக்கிறது. இது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும் அறிவு அமைப்புகளை உள்ளடக்கியதாகும். இதன் நோக்கம் இந்திய அறிவு அமைப்புகளை மேம்படுத்துவதும், அதி நவீன கல்விமுறையில் ஒருங்கிணைப்பதும் ஆகும்.

புதிய கல்விக் கொள்கையானது இந்திய அறிவு அமைப்பினதுமான, வேதம், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆயுர்வேதம், யோகா, வாஸ்து சாஸ்திரம், ஜோதிடம் மற்றும் பலவற்றினைக் கல்வி முறைகளில் ஒருங்கிணைக்க முயலுகிறது.

புதிய கல்விக் கொள்கைகளை மும்முரமாகச் செயல்படுத்தும் விதமாக,

- இந்திய அறிவு அமைப்பின் நோக்கங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பத்தோடு இணைக்கும் வகையில் சென்னையில் உள்ள ஐ.ஐ.டியில் இசை, ஓவியம் உள்ளிட்ட நுண்கலையில் தேர்ந்தவர்களை அக்கல்வி நிறுவனத்தில் 2025-26 கல்வியாண்டு முதல் சேர்ந்து பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் புதுமைச் சிந்தனை அவசியம் எனக் கருதி, இதற்கென இசையமைப்பாளர் இளையராஜா பெயரில் ஓர் இசை ஆராய்ச்சிமையமும் அவ்வளாகத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது.

- தில்லி பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில் இளங்கலை நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு 2025ஆகஸ்டு 1, முதல் 12 மணிநேரம் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது.
- இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக் கழகத்தின் வாயிலாக, பகவத் கீதையில் முதுகலைப்பட்டம், மனையியல் துறையில் இளங்கலைப் பட்ட வகுப்புகள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, ஜோதிடம், யோகா குறித்த பாடத்திட்டமும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது.
- பாரம்பரியமான குருகுலங்களில் படித்த மாணவர்கள் இனி முறையாகப் பட்டப் படிப்புச் சான்றிதழ் இல்லையென்றாலும்கூட ஐ.ஐ.டி. (IIT)யில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து அங்கீகரிக்கப்பட்ட தகுதியைப் பெறமுடியும் எனக் கூறி, 'சேது பந்த வித்வான் யோசனா' எனும் திட்டத்தினை நடைமுறைபடுத்தத் தயாராகிவிட்டது. இத்திட்டமானது, பாரம்பரியமிக்க குருகுல மரபுகளை நவீன விஞ்ஞானம் மற்றும் கல்வி விசாரணையுடன் இணைப்பதான திட்டமாகும். இத்திட்டத்தினை ஒன்றியக் கல்வித்துறையின் கீழ்வரும் மத்திய சமஸ்கிருதக் கழகத்தின் ஒரு பிரிவாக 'இந்திய அறிவு அமைப்பால்' செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், முதுகலை படிக்கும் மாணவர்களுக்கு மாதம் 40 ஆயிரம் உதவித்தொகை மற்றும் ஆண்டுக்கு ஒரு லட்சம் மானியம்; ஆராய்ச்சி மாணவர்களுக்கு மாதம் 65 ஆயிரம் உதவித்தொகை மற்றும் 2 இலட்சம் மானியம் கிடைக்கும்.

**குருகுலக் கல்வி**

குருகுலக் கல்வி என்பது மன்னர் காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கப்பட்டதாகும். இது கல்வி கற்றலைத் தார்மீக மற்றும் ஆன்மிக வளர்ச்சியுடன் இணைக்கிறது. பண்டைய காலத்தில் கல்வி கற்றுத்தரும் குருவின் ஆசிரமத்தில் தங்கிப் பணிவிடை செய்துகொண்டே, குருவின் அருகிலேயே இருந்து கல்வி பயிலும் இடமாகும். வேதம், வேதாந்தம், புராணம், தர்க்கம், யோகா, ஜோதிடம், வானவியல், ஆயுர்வேதம் ஆகியன அங்கே கற்றுத் தரப்பட்டன. இக்குருகுலத்தில் பிராமணர், சத்திரியர், வைஷ்ணவர் ஆகிய மூன்று வர்ணத்தார் மட்டுமே கல்வி பயிலலாம்.

சூத்திரர்களுக்கு அங்கே இடமில்லை. இந்து மதப் புனித நூல்கள் யாவும் சூத்திரர் கல்வி கற்பதைத் தடுப்பதாகவே இருக்கின்றன. உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால்,

"ஒரு சூத்திரன் மத போதனையை போதித்தாலோ அல்லது வேத வார்த்தைகளை முணுமுணுத்தாலோ அல்லது ஒரு பிராமணனை தூஷித்தாலோ அவனது நாக்கைத் துண்டித்திட வேண்டும்" என்கிறது பிருஹஸ்பதி ஸ்மிருதி.

"ஒரு சூத்திரன் வேதம் ஓதுதலை வேண்டுமென்றே காது கொடுத்துக்கேட்பானேயெனில், அவனது இரு காதுகளிலும் ஈயத்தையோ அல்லது அரக்கையோ உருக்கி நிரப்பவேண்டும்." என்கிறது கௌதம தர்ம சூத்திரம்.

மேற்சொன்ன, நுண்கலைகளான இசை, ஓவியம் உள்ளிட்டவை மற்றும் வேதக்கல்வியும் குருகுலக்கல்வியும் வருண தர்மத்தை நிலைநிறுத்தவும், அவற்றைக் கடைப்பிடிக்கவும் அமைந்த நிறுவனங்களாகும். இதனையே புதிய கல்விக் கொள்கையில் சேர்த்து அதனை அனைவருக்குமானதாக மாற்றும் முயற்சி இங்கு நடக்கிறது.

மன்னராட்சிக் காலங்களில் கல்வியானது மூன்று வர்ணத்தாருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. அப்போது சூத்திரர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. அதன் பிறகான ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் சூத்திரர்-தலித்துகள் கல்விபயில வாய்ப்பு ஏற்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகான காலத்தில் சமூகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அளவில் பின்தங்கிய சூத்திரர்-தலித்துகளுக்குக்கல்வியிலும்வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இவ்வாறாக அரசியல் சட்டத்தால் உறுதிசெய்யப்பட்ட இட ஒதுக்கீடானது முதலில் சந்தைமய காலத்தில் சற்றுத் தடுமாறி, தற்போதைய சந்தைமய- வலதுசாரி அடையாள அரசியல் காலத்தில் மிகவும் கேள்விக்குறியாகியுள்ளது. அதாவது, சூத்திரர்களுக்கும் தலித்துகளுக்கும் வழங்கப்பட்டுவந்த இட ஒதுக்கீடானது, வலதுசாரிகளின் ஆட்சிக் காலத்தில் ஒருபக்கம் தனியார்மயம், நவீனமயம், ஆளெடுப்புத் தடைச்சட்டம் என்கிற பெயரில் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கப்பட்டு வருகிறது. இன்னொரு பக்கம் நுண்கலை, குருகுலம் என்கிற பெயரில் கல்வி நிறுவனங்களுக்குள் ஊடுருவி அதன் சமூகநீதிப் பண்பையே சிதைக்கிற கொடுமை. இதனால், ஏற்கனவே சமத்துவமின்மையை அனுபவித்து வரும் சூத்திரர்களும், தலித்துகளும் இன்னும் கூடுதலாக சமத்துமின்மையை எதிர்கொள்பவர்களாக ஆகியுள்ளனர்.

கடந்த 11 வருட கால வலதுசாரிய அரசின் ஆட்சியில், கல்வி - வேலைவாய்ப்புகளில் மட்டுமல்லாது, சட்டசபை-நாடாளு மன்றங்களில் மட்டும் உயர்சாதியினரின் பிரதிநிதித்துவம் சற்றுக் குறைவாக இருப்பினும், அதிகார வர்க்கம், நீதிமன்றங்கள், ராஜ்ய சபா, மாநில ஆளுநர்கள், ஜனநாயக நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் - அரசு - பொதுத்துறைகளிலுள்ள உச்ச பதவிகளில் உயர்சாதியினர்களின் ஆதிக்கம் நீக்கமற நிறைந்திருக்கிறது.

வலதுசாரிய ஆட்சியாளர்கள் முதலில் உயர்கல்வி நிறுவனங்களில் சேருவதற்குப் போட்டித்தேர்வினைக் கொண்டுவந்தனர். பின்னர், பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட சாதியிலுள்ள ஏழைகளுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்தனர். ஒருபக்கம் இட ஒதுக்கீட்டின் அளவு 50 சதவீதத்திற்கும் மிகாமல் பார்த்துக்கொள்கின்றனர். இன்னொரு பக்கம் சிறுபான்மையினர்களுக்கு இட ஒதுக்கீட்டுச் சலுகை அளிக்கக் கூடாது எனக் கூச்சலிடுகின்றனர். ஒற்றுமை சிதைந்துவிடக் கூடாது எனக் கருதி, உள் இட ஒதுக்கீட்டிற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தற்போது, பாரம்பரியத்தையும், தொழில்நுட்பத்தையும் இணைப்பதாகக் கூறி உயர்கல்வி நிறுவனங்களில் சத்தமில்லாமல் உள் நுழைய புதுப்புது வழிகளைக் கையாளுபவர்களாக இருக்கின்றனர்.

கல்வியின் மூலம் மட்டுமே கடந்த காலத்தை மீட்டெடுக்கவும், முடியும், வேண்டாதவற்றை ஒதுக்கிவைக்கவும் முடியும். இதனை உறுதிப்படுத்தும் பாரம்பரிய நினைவாற்றலைப் புதுப்பிப்பது; பிற சிறுபான்மையினர்களின் வரலாற்றை மறக்கடிப்பது; ஆற்றல் மிக்க ஜனநாயகத்தின் கூறுகளைச் சிதைப்பது என்பதுதான் வலதுசாரிகளின் வேலையாக இருக்கிறது.

ஒருபக்கம், மக்கள்தொகைப் பெருக்கம், காலநிலை மாற்றம், செல்வ சமத்துவமின்மை, வேலைவாய்ப்பின்மையினால் நாட்டின் பெரும்பான்மை மக்கள் பாதிப்படைகின்றனர். இன்னொரு பக்கம், தகவல் தொழில்நுட்பஞ் சார்ந்த செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு, கண்காணிப்பு, தரவு அறிவியல், பெருகியுள்ள இக்காலத்தில் நாட்டின் பெரும்பாலான குடிமக்கள் இன்னும் இந்த வசதியைப் பெறமுடியாத சூழலில் இருந்து வருகின்றனர். நிலைமை இப்படியிருக்கும்போது, இங்கே, பாரம்பரியக் கலாச்சாரத்தினைத் தொழில்நுட்பத்துடன் இணைப்பதாகக் கூறிக்கொண்டு, கல்வியில் உயர் வகுப்பினரின் நலன்காக்கும் நோக்கில், இப்படியாக முன்னுரிமையளித்துச் செயல் படுவது என்பது பெரும்பான்மை மக்களுக்கு அளிக்கப்படும் துரோகம் என்றே கருத முடிகிறது. சமூக நீதி மறுப்பும் - சமத்துவமின்மை அதிகரிப்பும் சேரும்போது உயர் சாதியினருக்கு வாழ்வாகவும், சூத்திரர்-தலித் மக்களுக்கு வீழ்வாகவும் ஆகியுள்ளது.

**இக்கட்டுரை எழுத உதவியவை : நன்றி!**

- *Marx and the Collapse of Capitalism in the Age of AI - Article by Ariella Kropman from Counter Currents.org- Dated 24.07.2025.*
- *80% OBC,64% Dalit and 83% Tribal Professor level posts vacant: Govt Data -Article by The Wire Staff - Dated 24.07.2025.*
- *The Times of India-Delhi Edition-dated 31.07.2025*
- *The Hindu, இந்து தமிழ் திசை, தினமணி மின்னிதழ் Various Dated.*

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஆயிஷா இரா. நடராசன்



# ஒன்றிய பாகுபாட்டுக் கல்விக் கொள்கைக்கான மாற்று இடது சாரிக் கல்வி முறையே

"கல்வி என்பது சிந்தனையை விதைப்பது, அடிமைத்தனத்தை உடைப்பது, சமத்துவ சமுதாயத்தை நோக்கி ஒருவரை செலுத்துவது... கல்வி என்பது தேர்வெழுதி வாங்கும் பட்டமல்ல"

-தோழர் லெனின்

மேற்கொண்ட ஒரு வாசகம் நாம் முன்மொழியும் கல்வி குறித்த அணுகுமுறையை மிகச் சிறப்பாக விளக்குகிறது. இது தோழர் லெனின் அவர்களின் சோவியத் கல்வித் துறையின் மூன்றாவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கருத்து ஆகும். சிறார்கள் விரும்பும் கல்வி முறை என்று வருகின்ற பொழுது இப்படியான சிந்தனைகளை விதைப்பது ஆகச் சிறந்த வழியாக நான் கருதுகிறேன்.

இடதுசாரிக் கல்வி அணுகுமுறைகள் முக்கியமான சில அடிப்படைக் கருவிகளைக் கொண்டவை ஆகும். கல்வி என்பது ஒரு சிலருக்கே உரிமையான விஷயமல்ல. அனைவருக்கும் சமமான விலை இல்லாத உரிமையாக கல்வி ஆக்கப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தி நம் நாட்டில் கல்வியைக் குழந்தைகளின் அடிப்படை உரிமையாக மாற்றிய பெருமை இடதுசாரிகளுக்கே உண்டு. குறிப்பாக இந்திய மாணவர் சங்கம் அதற்காக நடத்திய போராட்டங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை

மாணவர்களின் வாழ்க்கை வேர்களைத் தேடிச்சென்று அந்தவேர்கள் அடிமைத்தனத்தின் அடிப்படைகளைக் கொண்டிருந்தால் அவற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு விடுதலைக்கான வேர்களைப் புதிதாக உருவாக்குவதே கல்வியின் நோக்கம் என்பதைச் சரியாக நாம் முன்மொழிந்து வருகின்றோம். இந்த உலகைப் புரிந்து கொள்வதற்குத்தான் ஏனைய தத்துவங்கள் முன்மொழியப்பட்டன. மார்க்சியத் தத்துவம் ஒன்றுதான் இருக்கின்ற இந்த நியாயமற்ற ஏற்றத்தாழ்வு கொண்ட உலகை எப்படி மாற்றுவது என்பது குறித்த தத்துவமாக மலர்ந்தது.

மார்க்சிய ஆசான்கள் முன்மொழிந்த கல்வி என்பது ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான கல்வியாக வளர்ச்சி அடைந்து உலகெங்கிலும் இன்று வரை எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதனுடைய வேர்கள் கார்ல் - மார்க்ஸிடமிருந்து தொடங்குகின்றன. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளிவந்த பொழுது கல்வி குறித்த நம் சிந்தனை என்ன என்பதைத் தோழர் மார்க்ஸும் தோழர் எங்கல்சும் மிகச் சரியாக அதில் குறிப்பிடத் தவறவில்லை. சமூக நீதிக்கான ஒட்டுமொத்த விடுதலை குறித்த சிந்தனை மற்றும் முதலாளிய எதிர்ப்பு கல்வியாக அவர்கள் முன் வைத்தது அனைவருக்குமான முன்னேற்றம் ஆகும்.

பின்நாட்களில் 1920களில்சோவியத் யூனியன் அக்டோபர் புரட்சியின் மூலம் ஏற்பட்ட பொழுது குரூப்ஸ்கயா எனும் மாமனிதர் தோழர் லெனினின் இணையர் அனைவருக்கும் சமமான விலை இல்லாத கல்வி என்கிற முக்கியமான அறிக்கையை வெளியிட்டார். இந்த அறிக்கையின் மூலம் குழந்தைகள் உரிமை என்கிற சொல்லாக்கம் முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்டது. இதைத் தான் பின்நாட்களில் ஐ. நா. சபை அங்கீகரித்தது. குழந்தைகள் உரிமைப் பிரகடனம் என்கிற அந்த அறிக்கை இடது சாரிக் கல்வி முறை என்றால் என்ன என்பதை உலகிற்குப் பறைசாற்றுகிறது.

கடுமையான போராட்டங்களின் மூலம் இடதுசாரிக் கல்வியாளர்கள் தங்கள் உயிரையும் பணயம் வைத்து சிறார் விரும்பும் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்திற்கான கல்வியைச் சாதித்து இருக்கிறார்கள். நம் நாடு மட்டுமல்ல உலகமெங்கும் முதலாளித்துவக் கல்வி என்பது குழந்தைகள் விலை கொடுத்து வாங்கும் ஒரு பண்டமாகக் கல்வியை மாற்றுகிறது. இதற்கு எதிராக. தங்கள் கடும் போராட்டங்களின் மூலம் அத்தகைய கார்பரேட் கல்வி கட்டமைப்புகளைச் சவால்விட்டு சமூக நீதியை ஊக்குவிக்கும் கல்விக்கான அணுகுமுறையை முன்மொழிந்தவர்கள் பலர்.

அதற்காக உயிரைக் கொடுப்பது என்பது சாதாரண விஷயமல்ல. 20 ஆண்டுகள் கடும் சிறையில் இத்தாலியின் கொடுங்கோலன் முசோலினியால் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கி கொலைசெய்யப்பட்ட அன்டோனியோ கிராம்ஷி வழியாக இத்தகைய கல்வி முதலில் அறிமுகமானது. பாவ்லோபிரையனு, ஹெர்பர்ட் மார்க்யூஸ், லூயிஸ் அல்தூசர், சாமுவேல் பௌல்ஸ் உட்பட பல அறிஞர்கள் இந்தக் கல்விக்கான கட்டமைப்புகளை உருவாக்கினார்கள்.

இந்தக் கல்வி எத்தகையது? அதிகாரக் கட்டமைப்புகளை விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்வதற்கு - ஏன் என்று கேள்வி எழுப்புவதற்குக் குழந்தைகளைப் பக்குவப்படுத்தும் கல்வி - விமர்சன பூர்வக் கல்விமுறை ஆகும். சமூக மாற்றத்திற்காக மாணவர்கள் தங்களை எப்படி ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும், அதிகாரத்திற்கு எதிராக எப்படி நாம் மக்களை ஒன்றிணைத்து முதலில் இந்த உலகைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விமர்சன பூர்வக் கல்வி முறை விளக்குகிறது. ஆணாதிக்கக் கல்விக்கு எதிராக ஆண் பெண் சமத்துவக் கல்வியை முன்மொழிந்தது விமர்சனப் பூர்வ கல்வி முறையே ஆகும்.

அரசுகளும் கல்வியை நடத்திக் கொண்டிருக்கின்ற கார்ப்பரேட் முதலாளிகளும் முக்கியம் என்று கருதுகின்ற செய்திகளைப் பாடப்புத்தகம் என்கிற பெயரில் திணித்து அவற்றை வகுப்பில் நடத்துவது, மனப்பாடம் செய்ய வைப்பது, தேர்வு எழுதுவது, மதிப்பெண் அடிப்படையில் மாணவர்களைப் பாகுபாடு செய்வது, சொத்த கத்திரிக்காய் என்று நீ பெயில் ஆகி விட்டாய் என நான்காம் வகுப்பிலிருந்தே ஒரு குழந்தையைப் பிரிப்பது இதெல்லாம் இன்றைய காவி கார்ப்பரேட் கல்வியாக இந்தியாவில் திணிக்கப்பட்டுள்ளது. புதிய கல்விக் கொள்கை என்கிற பெயரில் ஒன்றிய அரசு பல்வேறு அராஜகங்களை - பாகுபாடுகளைக் கல்விக்குள் திணித்திருக்கிறது.

இன்றைக்குக் கல்விக்கூடங்களைத் தனியாரிடம் தாரை வார்ப்பதற்கு மிகப்பெரிய ஒரு சதிப்பின்னலாக இந்தத் தேசியக் கல்விக்கொள்கை உள்ளது. மூன்று வயது குழந்தை இந்தி உட்பட திணிக்கப்பட்ட மொழிகளைக் கற்க வேண்டும் என்று கட்டாயக் கொடுமை ஒரு புறம். மறுபுறத்திலோ பல்கலைக் கழகங்களில் இருந்து அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டுக் கடுமையான கடன் சுமையை மாணவர்கள் மீது ஏற்படுத்துவது அதை விடப் பெரிய கொடுமை. அனைத்து வகையான உயர்கல்விக்கும் பள்ளிக்கல்வியின் மதிப்பெண்ணை எடுத்துக்கொள்ளாமல் தனித்தனியே நுழைவுத்தேர்வு வியாபார வர்த்தகக் கலாச்சாரத்தைத் திணிக்கின்ற ஒரு கல்வியாக தேசிய கல்விக் கொள்கை மக்கள் விரோத கொள்கையாக முன்மொழியப் பட்டுள்ளது.

**இடதுசாரிக் கல்வி அணுகுமுறைகள் முக்கியமான சில அடிப்படைக் கருவிகளைக் கொண்டவை ஆகும். கல்வி என்பது ஒரு சிலருக்கே உரிமையான விஷயமல்ல. அனைவருக்கும் சமமான விலை இல்லாத உரிமையாக கல்வி ஆக்கப்பட வேண்டும். என்பதை வலியுறுத்தி நம் நாட்டில் கல்வியைக் குழந்தைகளின் அடிப்படை உரிமையாக மாற்றிய பெருமை இடதுச்சாரிகளுக்கே உண்டு.**

இந்த நுழைவுத் தேர்வு என்பது ஏனைய அனைவருக்குமான ஓர் அக்னி பரீட்சை. ஆனால் குருகுலங்களில் பயின்று வருகின்ற பார்ப்பனிய மாணவர்களுக்கு அதெல்லாம் எதுவும் கிடையாது. அவர்கள் நேரடியாக ஐ ஐ டி நிறுவனங்களில் இணையலாம் என்பது போன்ற பகிரங்க பாகுபாடுகள் நாட்டையே நாறடித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு எதிரான கடுமையான உரிமைப் போராட்டங்கள் தேவை. ஒவ்வொரு நாளும் இது போன்ற அறிவிப்புகள், செயல்பாடுகள். ஒன்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினுடைய கல்விக் கொள்கை என்பது பார்ப்பனியக் கல்விக்கொள்கை – கார்ப்பரேட் சாயம் பூசப்பட்ட காவி கல்விக்கொள்கை என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக இருக்கிறது.

இதற்கு எதிரான் கல்வி முறையைத்தான் நாம் சிறுவர் விரும்பும்விடுதலைக்கான இடதுசாரிக் கல்வி முறை என்று அழைக்கிறோம். இந்தக் கல்விமுறையில் ஆசிரியர் அதிகாரம் செலுத்த மாட்டார். குழந்தைகளோடு ஆசிரியர் கருத்துக்களைக் கலந்துரையாடுவார். சோசலிசக் கல்வி என்பது சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கும் முதலாளித்துவ விழுமியங்களைச் சவால்விடும் ஒரு கல்வி முறையாகும். சமூகத்தின் சக்தியைப் பராமரிப்பதில் அறிவுஜீவிகள் மற்றும் கலாச்சாரத்தின் பங்கை ஆய்வு செய்த இத்தாலிய மார்க்சிய அறிஞர் அண்டோனியோ கிராம்ஷி எதையும் குறித்த விமர்சனக் கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்வதே கல்வி என்று அறிவித்தார்.

பாவுலோ பிரைரே என்கிற போர்ச்சுக்கீசிய பிரேசிலிய கல்வியாளர் நம்முடைய இன்றைய கல்வி எவ்வளவு கொடுமையானது என்பதை விளக்கினார். இதை வங்கி முறைக்கல்வி என்று அவர் குற்றம் சாட்டுகிறார். வங்கியில் பணம் போடுவது போல மாணவனின் தலையைத் திறந்து முதலாளித்துவம் வழங்கி இருக்கிற பாடப் பொருள் என்கிற வெற்றுச் செய்திகளை அவன் தலையில் போட்டு நிரப்பும் அதிகாரம் ஆசிரியர்களிடம் இருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். ஆசிரியர் மையப் படுத்துகின்ற அணுகுமுறை எதையுமே விமர்சிக்காமல் வேடிக்கை பார்க்கும் ஜனங்களை உருவாக்குவதற்கான சதி என்று அவர் விளக்குகிறார். அதற்கு மாற்றாக அவர் முன்வைத்தது தான் பகுப்பாய்வுக் கல்வி – விமர்சனப்பூர்வக் கல்வி.

ஜெர்மன் அமெரிக்கத் தத்துவப் பேராசானாகிய சமூகவியல் அறிஞர் ஹெர்பர்ட் மார்க்யூஸ் பிரங்க்ஃபோர்ட் எனும் கல்விச் சிந்தனை அமைப்பைச் சேர்ந்தவர். தனிநபர் ஒருவரைத் தேர்வு செய்து அவரை இந்தச் சமூகத்தில் பல படிநிலைகள் முன்னேற வைத்து ஆஹா பாருங்கள் கல்வி என்னவெல்லாம் சாதிக்கிறது என்று சொல்லுகின்ற மோசடி வியாபாரக் கல்வியில் இருப்பதைச் சுட்டிக்காட்டியவர். கல்வி விமர்சனச் சிந்தனையும் ஒடுக்குமுறைச் சமூகக் கட்டமைப்புகளுக்கு எதிராகவும் செயல்பட வேண்டும் என்று அவர் வாதிட்டார். இதற்காக குழந்தைகளுக்கு அவர்கள் மிகவும் விரும்புகின்ற குழுவாகப் பிரிந்து விவாதிக்கும் கல்வியை அறிமுகம் செய்தார்.

கல்வியை உள்ளடக்கிய கருத்தியல் அரசு எந்திரங்களுக்கு எதிராக அதை ஸ்தம்பிக்க வைக்கும் கல்வியை அறிமுகம் செய்ய வேண்டும் என்று முழங்கியவர் பிரான்ஸ் நாட்டின் மார்க்சியத் தத்துவ அறிஞர் லூயிஸ் அல்தூசர். முதலாளித்துவச் சமூக உறவுகளை மீண்டும் உருவாக்குவதற்குப் பள்ளிகளைப் பயன்படுத்தும் அரசு அதிகாரத்திற்கு எதிராக வாதிட்டவர். கல்விச் சாலைகளில் இருந்து கல்வியை மீட்டு உழைக்கும் வர்க்கத்தினரின் பகுதிகளுக்குச் சென்று நேரடியான அனுபவங்கள் மூலம் கல்வி கற்பதைத்தான் சிறார்கள் விரும்புகிறார்கள் என்பதை வெளியிட்டதோடு அதை நடைமுறையிலும் செய்து காட்டியவர் அல்தூசர்

பள்ளிகள் சமூக, வர்க்க, சாதிய ஏற்றத்தாழ்வுகளைத் தக்க வைத்துக்கொள்ள உதவக்கூடாது என்கிற கருத்தை முன்மொழிந்தவர்தான் சாமுவேல் பௌல்ஸ். யார் கல்வி கற்க வேண்டும், யார் கற்க கூடாது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளும் அதிகாரம் பெற்ற வலதுசாரி அரசியல் மீண்டும் மீண்டும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு எப்படியெல்லாம் சதி செய்யும் என்பதை அவர் அழகாக விவரித்தார். அவர்கள் சொல்வது போல கல்வி என்பது ஒருபோதும் நடுநிலையானது அல்ல. யார் கற்றுக்கொள்கிறார்கள் என்பதை எப்போதும் கண்காணித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்திய நாட்டில் ஆதிகால வர்ணாசிரம வேற்றுமைகளைப் பேணுவதற்குக்குலக் கல்வியை மீண்டும் திணிப்பதற்கு விசுவகர்மா போன்ற சதித்திட்டங்களை அரசு தீட்டுவது இதைத்தான் காட்டுகிறது.

சாதி வேறுபாடுகளை அப்படியே சனாதன முறையில் பேணிக் காப்பதற்கான காவிச் சதியாக இந்தியக் கல்வி இன்றைக்கு உருமாறிக் கொண்டிருக்கும் மிகப்பெரிய ஆபத்துக்கிடையே நம் குழந்தைகள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். விசுவகர்மா போன்ற சதித் திட்டங்கள் மூலம் சனாதன குலக்கல்வியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநாட்டத் துடிக்கின்ற இந்த அரசுக்கு எதிரான கல்வி என்பது விடுதலைக்கான கல்வியாகவும் உரிமைக்கான கல்வியாகவும் மட்டுமே இருக்க முடியும். அதற்குக் கீழ்க்கண்ட ஐந்து முக்கிய விஷயங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்:

1. விமர்சனக் கல்வி அறிமுகமாக வேண்டும். உதாரணமாக உணவு நிறைந்த இந்த தேசத்தில் விவசாயிகள் மட்டும் ஏன் ஏழைகளாக இருக்கிறார்கள் என்பன போன்ற கேள்விகளை விவாதிக்கும் வகுப்பறைகளாக நம் வகுப்பறைகள் மாற்றப்பட வேண்டும். மாணவர்கள் வெறும் தகவல் பெட்டிகள் அல்ல, சிந்தனையாளர்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. ஆசிரியரே எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் கொடூரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து ஆசிரியர் மாணவர் இருவரும் கற்பவர் தான். வகுப்பறையின் வயது முதிர்ந்த மாணவர் ஆசிரியர், வகுப்பறையின் இளம் ஆசிரியர் மாணவர், பள்ளிக்கு வருகின்ற மாணவர்கள் ஏற்கனவே பலவற்றை அறிந்து தான் வருகிறார்கள் மேலாதிக்க ஒழுங்கை உடைத்து எறியும் பொழுது சமத்துவக் கல்வி பிறக்கிறது. உதாரணமாக சமீபத்தில் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ஒரு பழங்குடியினர் பள்ளியில் பாம்பு கடித்துவிட்ட தன் ஆசிரியரை மாணவர்கள் காப்பாற்றிய சம்பவம் உண்மையிலேயே பரிசீலிக்கத் தகுந்ததாகும். இரு தரப்பிற்கும் பயனளிக்கும் வகுப்பறையாக நாம் வகுப்பறையை மாற்ற வேண்டும்.

3. இற்றுப்போன இந்தத் தேர்வு முறையைத் தூக்கி எறிந்துவிட்டுச் செயல்முறைக் கல்வியை முன்மொழிய வேண்டும். செயல் அதுவே சரியான சொல் எனும் மார்க்சின் வழியில் நின்று அறிவை மட்டுமே பக்கம் பக்கமாக அச்சிட்டு அதை மனப்பாடம் செய்யும் செயல் இல்லாத வக்கற்ற இந்தக் கல்வியைத் தூக்கி எறிந்துவிட்டு மாணவர்கள் தங்கள் சூழலைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் ஒரு கல்வியை முன்மொழிய வேண்டும். தற்காலத்தின் அனைத்து வகையான பிரச்சனைகளையும் வகுப்பறையில் வாதாட வேண்டும். காலநிலை மாற்றம் முதல் பாலஸ்தீனச் சிக்கல் வரை அனைத்தையும் பேசுகின்ற வகுப்பறைகளாக இவை மாற்றப்பட வேண்டும்.

4. தனித்தனி மாணவரையும் மதிப்பெண் அடிப்படையில் பிரிவினை ஏற்படுத்தும் முறையைப்போட்டி நுழைவுத் தேர்வு கொடூரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். கூட்டாகக் கற்றல்(போட்டிக்காகக் கற்றலல்ல). இந்த மூலதனக் கல்வி, அறிவையும் மூலதனம் என்று சொல்லிக் கொடுக்கிறது. நம்முடைய அணுகுமுறையில் ஒற்றுமை, உதவிக்கரம் நீட்டல், குழு முயற்சி ஆகியவற்றைதான் நாம் வலியுறுத்துகின்றோம். கற்றல் வட்டங்கள் என்கிற மார்க்சியக் கோட்பாட்டு வகுப்பறைகளை நாம் உருவாக்க வேண்டும். தோல்வி அடையாத மாணவர்களின் கல்வியே நம்முடைய கல்வி.

5. பண்பாடு என்கிற பெயரில் மத அடிப்படைவாதத்தைத் திணிக்கின்ற அறிவியலைப் புறம் தள்ளுகின்ற கல்வியைத் தூக்கி எறிய வேண்டும். அனைவருக்குமான சமத்துவ, சகோதரத்துவ மதசார்பற்ற அடிப்படைகளை உருவாக்கும் கல்வியே நம்முடைய தேவை. ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வியலைப் பாடத்திட்டத்தில் இணைக்கும் கல்வி நம்முடைய மிகப்பெரிய நோக்கம். சமத்துவப் பண்பாடு,ஜனநாயக விழுமியங்கள் ஆகியவற்றைக்காப்பாற்றும் வகுப்பறைகளை வலியுறுத்தும் இடதுசாரிக் கல்வி... போராட்டம் மிக்க இந்த உலகத்தில் தங்கள் எதிர்காலத்தில் தான் எதிர்கொள்ளத்தக்க அனைத்து வகைச் சவால்களையும் சமாளிக்கும் திறன் மிக்க குழந்தைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. அறிவியல் வளர்ச்சியோடு தானும் வளரும் வகுப்பறைகள் நம்முடையவை. பள்ளி முதல் கல்லூரி வரை அனைத்து வகை கல்வியும் விலையின்றி வழங்கப்பட வேண்டும்.

இன்றைய வணிகமாகிவிட்ட கல்வியை - இந்து மதவெறி விதைக்கப்பட்ட வர்ணாசிரமக் காவிக் கல்வியை முடிவுக்குக் கொண்டுவந்து அனைவருக்குமான உரிமையாக கல்வி மாற்றப்பட வேண்டும். வகுப்பறையில் தங்கள் சொந்த வாழ்வியலைப் போராட்டங்களை விவாதித்து எதிர்காலத்திற்கான தங்கள் சவால்களை எதிர்கொள்ளகின்ற அறிவியல் சிந்தனை சார்ந்த சமூக விடுதலைக் கல்வியே இடதுசாரி மாற்றுக் கல்வியாகும்.

கட்டுரையாளர்: முதன்மை ஆசிரியர்
'புதிய புத்தகம் பேசுது' இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ரூபன் சிவராஜா

# உலகளாவிய தெற்கின் 'BRICS' கூட்டாண்மை: அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிரான மாற்றுச் சக்தியாக உருவாகுமா?

## வாய்ப்புகளும் சவால்களும்!



**புதிய அபிவிருத்தி வங்கி ((New Development Bank), அவசரகால கையிருப்பு உடன்படிக்கை (Contingency Reserve Arrangement) போன்ற நிறுவனங்கள் மூலம் BRICS தன்னுடைய வலிமையை வெளிப்படுத்தியுள்ளதுடன், டொலர் ஆதிக்கத்தைக் குறைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளது. இதன் அடிப்படைக் கேள்வி: BRICS உண்மையில் G7–இற்கு மாற்றாக உலகளவில் நிலைகொள் சக்தியாக மாறுமா?**

### உலக பொருளாதாரத்தில் BRICS-இன் எழுச்சியும் முக்கியத்துவமும்

**BRICS:** ஒரு வளர்ந்துவரும் பொருளாதாரக் கூட்டாண்மை மையம். உலகப் பொருளாதாரம், அரசியலில் இன்றியமையாத வகிபாக மையமாக மாறியுள்ளது அது. ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், தற்போதைய உலக அதிகார அமைப்புகளைச் சவாலுக்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார முன்னெடுப்புகள், மூலோபாயக் கூட்டாண்மைகள் மூலம் தனது செல்வாக்கை விரிவுபடுத்தியுள்ளதோடு, எதிர்காலத்தில் மேலும் புதிய விரிவாக்கங்கள் மற்றும் ஒருங்கிணைப்புகளைத் திட்டமிடுகிறது.

இந்தக் கட்டுரை, *BRICS* உருவாக்கத்திற்கான புறநிலை, வளர்ச்சி, அதன் 'பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் நிறுவனங்கள்', உலகப் பொருளாதாரத்தில் அதன் பங்கு, 'முதலீடு அபிவிருத்தி உத்தரவாதங்களுக்கான அதன் திட்டங்கள்', எதிர்கால இலக்குகள் போன்ற விடயங்கள் மீது கவனம் செலுத்துகின்றது. அத்தோடு அந்நிறுவனத்தின் இந்த ஆண்டுக்கான மாநாட்டினை முன்வைத்தும் சில விடயங்களைப் பேசுகின்றது.

### பின்னணியும் BRICS உருவாக்கமும்

இது நாடுகளுக்கிடையிலான பொருளாதார இலக்குகளைக் கொண்ட ஒரு கூட்டமைப்பு. அதுவொரு சர்வதேச அமைப்பு. ஆயினும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நீங்கலான - அவற்றுக்கு மாற்றான ஒரு அமைப்பு. அது தொடங்கப்படும் போது, பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்துவரும் நாடுகளின் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. இதன் தொடக்க கால உறுப்பு நாடுகளாக, பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்-ஆபிரிக்கா இணைக்கப்பட்டன. அந்நாடுகளின் பெயர்களின் முதல் எழுத்துகளைக் கொண்டு குறிக்கப்படுவதே *BRICS* எனும் விளிப்புப்பெயர். இந்நாடுகளுக்கிடையே பொருளாதார மற்றும் பூகோள அரசியல் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்த உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

இன்னொரு வகையிற் சொல்வதானால் சர்வதேச நாணய நிதியம் *International monetary fund, IMF*), உலக வங்கி *World Bank*) உட்பட்ட மேற்கின் மேலாண்மைக்கு உட்பட்ட உலக நிதிநிறுவனங்களுக்கு மாற்றான - அவற்றின் செல்வாக்கினைச் சமநிலைப்படுத்தும் கூட்டமைப்பாகவும் கருதப்பட்டது. ஆனால் *BRICS*-உறுப்பு நாடுகளின் மத்தியில் உண்மையான கருத்தொற்றுமையும் ஒருங்கிணைப்பும் நிலவிவந்துள்ளதா என்பது கேள்விகளுக்கும் விவாதங்களுக்குமுரியது. இதன் உறுப்பு நாடுகளின் அரசியல் அமைப்புகள், பொருளாதாரக் கொள்கை, நடைமுறை, அரசியல் நிலைப்பாடுகளில் நிலவும் பரந்தளவிலான வேறுபாடுகள் அந்தக் கூட்டமைப்பினது அமைப்புரீதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனத்திற்கான காரணியாகச் சில விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

*BRIC* என்ற பெயர்ச்சுருக்கம் கோல்ட்மேன் சாக்ஸ் (*Goldman Sachs*: நியூயோர்க் நகரில் அமைந்துள்ள உலகளாவிய முன்னணி முதலீட்டு வங்கி, பத்திரங்கள் மற்றும் முதலீட்டு மேலாண்மை நிறுவனம்) இன் பொருளாதார நிபுணர் ஜிம் ஓ'நீல் (*Jim O'Neill*) இனால் முதன்முதலிற் பயன்படுத்தப்பட்டது. வளர்ந்துவரும் இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நீடிக்குமானால், இந்நான்கு நாடுகளும் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா) 2050 வாக்கில் உலக பொருளாதாரத்தில் மேலாண்மை செலுத்துவனவாக அமையும் என்ற கணிப்பினை முன்வைத்து அவர் அப்பெயர் அடையாளத்தை பயன்படுத்தினார். இந்நாடுகளின் பிரதிநிதிகள் முதன்முதலில் 2006 ஆம் ஆண்டு ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தின் போது தற்காலிகமாகச் சந்திக்கத் தொடங்கினர். 2009 ஆம் ஆண்டு இதன் முதலாவது மாநாடு இடம்பெற்றது. ஒரு பன்முக உலக ஒழுங்கிற்கும் உலகளாவிய தலையிடாக் கொள்கைக்குமான இணக்கத்தை நான்கு நாடுகளும் அம்மாநாட்டில் வெளிப்படுத்தின. அத்தோடு அமெரிக்க டொலருக்கு மாற்றான ஒரு புதிய உலக கையிருப்பு நாணய (*Global reserve currency*) உருவாக்கத்திற்கான தேவையையும் முன்வைத்தன. 2011ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா இணைய கூட்டமைப்பின் பெயர் '*BRICS*' ஆனது. தொடர்ந்து இந்த அமைப்பு ஒரு பொருளாதார நிறுவனம் எனும் வகைப்பாட்டிலிருந்து விலகி, பிராந்திய சக்திகளின் ஒருங்கிணைப்புக் குழுவாக மாறியது.

இதன் உறுப்பு நாடாக இணைவதற்கு அதிகாரப்பூர்வ விண்ணப்பச் செயல்முறை எதுவும் இல்லை, ஆனால் புதிய உறுப்பு நாடுகள், அதன் நடப்பு உறுப்புநாடுகளால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். 2023ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உச்சி மாநாட்டில், சவுதி அரேபியா, ஈரான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் அர்ஜென்டினா ஆகியவை புதிய உறுப்புநாடுகளாக இணைக்கப்பட்டன. ஆனால் அர்ஜென்டினாவின் ஜனாதிபதியாக ஜாவியர் மிலெய் பதவியேற்ற சில நாட்களில், தன் நாடு *BRICS* கூட்டமைப்பில் இணையாது என அறிவித்தார். சவுதி அரேபியா அதிகாரப்பூர்வமாக இணையவில்லை. இந்தோனேசியா 2025 ஜனவரி உறுப்பினராக இணைந்தது. அமைப்பின் விரிவாக்கத்தை அடையாளப்படுத்தும் பொருட்டு '*BRICS+*' என்ற தற்காலிகப் பெயர் சில சமயங்களிற் பயன்படுத்தப்படுகிறது.

### நிறுவனமயமாக்கல்

2012 உச்சிமாநாட்டில், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் போக்கினை விமர்சித்து, வளர்ந்துவரும் நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி மற்றும் கடன்களை வழங்க புதிய சர்வதேச அபிவிருத்தி வங்கியை உருவாக்கும் திட்டம் முன்மொழியப்பட்டது. புதிய வங்கி (*This New Development Bank - NDB*) 2014 ஜூலையிலிருந்து செயற்படத் தொடங்கியது. உறுப்பு நாடுகள் வங்கிக்கான நிதிமூலதனமாக 100 பில்லியன் டொலர்களை வழங்கின. ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் அந்த அபிவிருத்தி வங்கியில் சம பங்கினைக் கொண்டிருந்தன.

புதிய அபிவிருத்தி வங்கியுடன், அவசர கையிருப்பு உடன்படிக்கையும் (*Contingency Reserve Agreement - CRA*) உருவாக்கப்பட்டது. அவசரக் கையிருப்பு உடன்படிக்கை ஒரு நிதி பாதுகாப்புக் கட்டமைப்பாகும். இது, உறுப்புநாடுகள் செலவுத்தொகைச் சீர்குலைவு (*Balance-of-payments*) பிரச்சினைகள் அல்லது திடீர் நிதிநெருக்கடிகளை எதிர்கொள்ள நேரும்போது, குறுகிய காலத் தேவைகளை நிவர்த்திசெய்ய உதவுவதற்காக வடிவமைக்கப்பட்ட உடன்பாடு. உறுப்புநாடுகளுக்கு இடையிலான சர்வதேச வணிகத்திற்குப் 'பொதுநாணய' உருவாக்கம் தொடர்பாகவும் *BRICS* விவாதித்துள்ளது. ஆனால் அந்த இலக்கு நோக்கிய திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

2025 இற்கான *BRICS* மாநாடு பிரேசிலின் 'ரியோ டி ஜெனீரோ' மாநகரில் ஜூலை முதற்பகுதியில் நடைபெற்றது. இதில் ரஷ்யா, சீனாவின் தலைவர்களின் நேரடிப் பங்கேற்பு இருக்கவில்லை. மெய்நிகர் வழியாகவே ரஷ்யாவும் சீனாவும் கலந்துகொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் உலகளாவிய பொதுவான நலன்கள், இலக்குகள் சார்ந்த உடன்படிக்கைகள் எட்டப்பட்டுள்ளன.

### தெற்கின் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் கூட்டறிக்கை

பன்முக நிறுவனங்களின் சீர்திருத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மாநாட்டிற் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் ஐ.நா. பாதுகாப்பு அவையில் பிரேசில் மற்றும் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமைக்கான ஆதரவு தெரிவிக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வாக்குரிமை விதியில் திருத்தமும் கோரப்பட்டது. உலகளாவிய சூழலியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் தொடர்பான விடயங்களும் பேசப்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு *(AI)* தொழில்நுட்ப விவகாரங்களில் உலகளாவிய தெற்கின் *(Global South))* பார்வைகளை உள்ளிணைக்கும்தேவையும்வலியுறுத்தப்பட்டது. காசா மீதான போர், ஈரான் மீதான தாக்குதல்கள் மற்றும் ரஷ்ய சிவில் உட்கட்டமைப்புகள் மீதான அண்மையை தாக்குதல்கள் உட்பட்ட சமகால முரண்பாடுகளுக்குச் சமாதானத்தீர்வு காணப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

### உலகளாவிய தெற்கின் அபிவிருத்திக்கான உத்தரவாதம்

உலக வங்கியின் பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனத்தை *(Multilateral Investment Guarantee Agency -MIGA)* முன்மாதிரியாகக் கொண்ட மாற்று அமைப்பு உருவாக்கம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அரசியற் பேரிடர்களின் போதான உத்தரவாதமாகக் தொழிற்படக்கூடிய உலகளாவிய தெற்கின் உட்கட்டுமான மற்றும் அபிவிருத்தி முதலீடுகளை எளிதாக்கும் புதிய நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டது. பல்தரப்பு உத்தரவாதங்கள் *(Multilateral Guarantees)* எனப்படும் இந்த முயற்சி, *BRICS* நாடுகளின் முதலீடுகளுக்கு மட்டுமல்லாமல், விரிவான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்படவுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் *BRICS* முயற்சிகளை எச்சரித்துள்ளார். உலகப் பொருளாதார விவகாரங்களில் அமெரிக்க மேலாண்மை நிலையை மாற்றும் அதன் முயற்சிகளுக்கு எதிரான எச்சரிக்கையை ட்ரம்ப் நிர்வாகம் விடுத்திருந்தது. '*BRICS* இன் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளுடன் இணையும் எந்தவொரு நாட்டின் மீதும் கூடுதல் *10* வீத சுங்கவரி விதிக்கப்படும்' என்று ட்ரம்ப் நேரடியான எச்சரிக்கையை விடுத்திருந்தார். மட்டுமல்லாது, அமெரிக்க டொலருக்கு மாற்றான அதன் கையிருப்பு நாணயப் பயன்பாட்டுக்குரிய நகர்வுகள் *100* வீத சுங்கவரிகளாற் தண்டிக்கப்படும் என்ற மிரட்டலையும் முன்னர் ட்ரம்ப் வெளியிட்டிருந்தார். '*BRICS 2025* மாநாட்டின்' உத்தியோகபூர்வ அறிக்கையில் அமெரிக்காவின் பெயர் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. இது, அமெரிக்கா மற்றும் சில *BRICS* நாடுகளுக்கிடையே இடம்பெற்றுவரும் வர்த்தக மற்றும் சுங்கக் குறைப்புக்கான பேச்சுவார்த்தைகளின் பிரதிபலிப்பாக இருக்கக்கூடும். அரசியல் முரண்பாடுகள், நலன்சார் வியூகங்கள், மூலோபாயங்கள் எவ்வாறிருப்பினும் *BRICS* நாடுகளின் பொருளாதாரம் இன்னும் அமெரிக்கச் சந்தையுடன் பிணைந்துள்ளமை யதார்த்தம். குறிப்பாக ஏற்றுமதி சார்ந்து அந்தப் பொருளாதார வலைப்பின்னலை நோக்கலாம்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு பசுமைத் தொழில்மயமாக்கல் *(Green industrialisation)* மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் *(Renewable energy)* சார்ந்தும் கவனம் செலுத்துகிறது. மேலும் பேண்தகு தொழில்மயமாக்கலை மேம்படுத்தவும் செயற்பாட்டினை வடிவமைத்துள்ளது. ஆரம்பத்தில் சொன்னதுபோல் பிரிக்ஸ் நிதி அமைப்புகளை உருவாக்குகிறது இது டொலர் மற்றும் மேற்கத்தியத் தடைகளைச் சமாளிக்கவும் அதன் பாதிப்புகளைக் குறைக்கவும் உதவக்கூடியது. சீனா மற்றும் ரஷ்யாவின் 'டொலர் நீக்க' *(de-dollarisation)* முனைப்பிற்கு கூட்டமைப்பில் வலுவான ஆதரவு உண்டு. *BRICS* இன் நிகழ்ச்சிநிரலிலும் அது முன்னுரிமையில் உள்ளது. ஆனால் அத்திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ளகச் சச்சரவுகள் நிலவுகின்றன. *BRICS* அமைப்பில் மூலோபாயப் பிளவுகள் அதற்கு தடையாயுள்ளன என்கிறார் பூகோள அரசியல் நிபுணர் வேலினா சாகரோவா *(Velina Tchakarova, ISS Today)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெரிக்க மேலாதிக்கம் - எண்ணெய், எரிவாயு - சுதந்திர வர்த்தகம்

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலக ஒழுங்கினை அமெரிக்க மேலாதிக்கம், ஹைட்ரோகார்பன் (எண்ணெய், எரிவாயு) மற்றும் சுதந்திர வர்த்தகம் ஆகிய மூன்று அம்சங்கள் வழிநடத்தின அல்லது தாங்கிநின்றன எனலாம். பின்-போர் யுகத்தில் தோற்றம்பெற்ற உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் நிறுவனங்களில் (*UN, IMF, NATO, World Bank*) அமெரிக்காவே மேலாதிக்கமும் செல்வாக்கும் செலுத்திவருகின்றது. எண்ணெய் மற்றும் எரிவாயு உலகப் பொருளாதார வளர்ச்சியின் இயங்குசக்தியாக விளங்கியது. அதாவது உற்பத்தி, வணிகம், மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் நாடுகளை இணைத்தது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலான சுதந்திர சந்தை என்பது சர்வதேச வணிகம் மற்றும் உலகமயமாக்கலை அடிப்படையாகக் கொண்டது. அமெரிக்காவே இக்கொள்கை நகர்வுக்கான முன்னோடி. தற்போதைய அமெரிக்க ஆட்சி நிர்வாகத்தின் போக்குகளினால், இம்மூன்று தூண்களும் சிதைவடைகின்றன. இதன் விளைவாக அமெரிக்க மேலாதிக்கம்; சவாலுக்கு உள்ளாகிறது. சீனா, இந்தியா போன்ற புதிய சக்திகள் மேலெழுந்து வருகின்றன. எண்ணெய், எரிவாயுவின் தேவை கணிசமாகக் குறைவடைகின்றது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வேகமான வளர்ச்சியை நோக்கி நகர்கிறது. டொனால்ட் ட்ரம்ப் ஆட்சியில் சுதந்திர வணிகமும் நலிவடைகின்றது. ட்ரம்ப் நிர்வாகத்தின் வர்த்தகவரி, சுங்கக் கட்டண அதிகரிப்பு, உட்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் பின்-போர் யுகத்தில் அமெரிக்கா உருவாக்கி மேலாண்மை செலுத்திய உலக அமைப்புகள், விதிமுறைகளையே பலவீனப் படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வரி-சுங்க அதிகரிப்புத் திட்டங்களும் அவை குறித்து அது உலக நாடுகளுக்கு விடுத்துள்ள அச்சுறுத்தல்களும்; பிரிக்ஸ் நாடுகள் தமக்குள்ளும், மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற பிற நாடுகளுடனும் ஒத்துழைப்பை வலுப்படுத்த வைத்துள்ளன. இத்தகு புறச்சூழல்களின் பின்னணியில் பிரிக்ஸ் நாடுகள் சவால்கள் மட்டுமல்லாது, வாய்ப்புகளையும் கொண்டுள்ளன. சீன நிறுவனங்கள் பிரிக்ஸ் நிதிமையங்களை நோக்கி நகரும்போது, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்றன சீனாவுடன் தொழில்நுட்ப, உற்பத்தி உடன்படிக்கைகளை அதிகரிக்கக்கூடும். எதுவாகினும் பிரிக்ஸ் நாடுகள் மூலோபாய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அந்த ஒருங்கிணைப்பு தற்போதைய சூழலில் சீராக இல்லை என்பதே யதார்த்தம். புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார் கொள்கை வேறுபாடுகள், சீனாவின் ஆதிக்கம் குறித்த சந்தேகங்களால் அந்நிறுவனமும் அதனை வலிமையான சர்வதேச மாற்றாக நிறுவும் முனைப்புகளும் பாதிக்கப்படுகின்றன. மேற்கத்திய அமைப்புகளைத் தவிர்க்கக்கூடிய நிதி நிறுவனங்களை உருவாக்கும் பிரிக்சின் முயற்சி, அதன் உறுப்புநாடுகளின் தேசிய நலன்களிலும், மூலோபாய ஒருங்கிணைப்புத் திறனிலும் பெரிதும் தங்கியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யப் போரின் விளைவுகளில் ஒன்றாகவும் *BRICS*இன் சர்வதேச வகிபாகம் பேசுபொருளானது. அமெரிக்கா மற்றும் மேற்குலகம் மேலாண்மை செலுத்தும் சர்வதேச நிறுவனங்களிலிருந்து ரஷ்யா மற்றும் சீனா பெரிதும் புறக்கணிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. இப்புறநிலையில் ரஷ்யாவும் சீனாவும் *BRICS*இனை அமெரிக்க நலன்களுக்குச் சேவகம் செய்யும் உலக அமைப்பியலுக்கு எதிர்வினை ஆற்றப் பரிந்துரைத்தன. ரஷ்யா தவிர்ந்த கூட்டமைப்பின் அனைத்து நாடுகளும் ஐரோப்பிய கொலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளாகும். அந்த அடிப்படையில் உலகளாவிய தெற்கின் பின்-கொலனித்துவ நாடுகளின் (*Postcolonial states in the Global South*) தன்னிறைவுப் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பாக சீனா, ரஷ்யாவினால் *BRICS* சித்தரிக்கப்படுகிறது. ஆனால் பேச்சளவிற்கு அதன் செயற்பாடுகள் தீர்க்கமானவையாக இல்லை, பெயரளவிலான குழுவாகவே அது உள்ளது, பரந்த அளவில் நலன்சார்ந்த வேறுபாடுகளுடனும் பிராந்திய நிலைப்பாடுகளுடனும் அவை உள்ளன என்பது விமர்சகர்கள் சுட்டிக்காட்டும் விடயமாகும்.

இக் கூட்டமைப்பினைச் சீனா தனது புவிசார் அரசியல் நோக்கங்களுக்கான ஒரு கருவியாகக் கையாள்வதாகவும் சில விமர்சனங்கள் நிலவுகின்றது. அந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நாடுகளை அதன் உறுப்பினர்களாக இணைத்து அதனை விரிவுபடுத்தவும் சீனா விரும்புகின்றது. விரிவாக்கத்தை ரஷ்யாவும் ஆதரிக்கின்றது. உக்ரைன் போரின் விளைவாக அமெரிக்க - ஐரோப்பிய வணிக மற்றும் பொருளாதாரப் புறக்கணிப்புகளை எதிர்கொள்ளும் ரஷ்யாவிற்கு அவற்றை ஈடுசெய்யப் புதிய வணிக உறவுளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அதுவே விரிவாக்கத்திற்கான ரஷ்ய ஆதரவின் முதன்மைக் காரணம். அதேவேளை ஏனைய உறுப்பு நாடுகளில் முக்கியமானவை இந்தியாவும் பிரேசிலும். இவை அமெரிக்காவுடன் நெருக்கமான உறவைப் பேணுகின்றன. எனவே BRICSஇனை அமெரிக்க எதிர்ப்பு புவிசார் அரசியல் முகாமாக (Geopolitical bloc) அல்லாமல் பன்முகத்தன்மையும் நடுநிலைமையும் பேணும் அமைப்பாகப் பேண விரும்புகின்றன. சீனாவுடன் சில ஒத்துழைப்புச் செயற்பாடுகளில் இந்தியா ஈடுபட்டாலும் இவற்றுக்கிடையில் எல்லை மோதல்கள் நிலவிவருகின்றது. சீனாவின் சுயநல நோக்குகள் குறித்த எச்சரிக்கை இந்தியாவிற்கு உள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தக் அமைப்பின் கூட்டுவலு முக்கிய உறுப்புநாடுகளில் நிலவும் தீவிர உள்நாட்டுப் பிரச்சினைகளால் அதிகம் பாதிக்கப்படுகிறது. உள்நாட்டு முரண்களின் விளைவாக முதன்மை உறுப்புநாடுகள் பொருளாதார மற்றும் அரசியற் சவால்களையும் எதிர்கொள்கின்றன.

### எதிர்காலம்: தலைமைத்துவமும் சவால்களும்:

2026இல் BRICS தலைமைத்துவத்தினை இந்தியா பொறுப்பேற்கவுள்ளது. இந்நிலையில், கூட்டமைப்பின் திசைவழி நியூடெல்லி எத்தகு விவகாரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப் போகின்றது என்பதில் பெரிதும் தங்கியிருக்கப் போகின்றது. இந்த மாநாட்டை பிரேசில் தனது இராஜதந்திர வகிபாகத்தை முன்னிறுத்தவும், உலகளாவிய நிர்வாகச் சீர்திருத்தங்களை வலியுறுத்தவும் பயன்படுத்தியது. இப்போது இந்தக் கூட்டமைப்பிற்கு முன்னால் உள்ள சவால், வெளியிடப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கும் திறனையும் உள்முரண்பாடுகளைச் சமாளிக்கும் வல்லமையையும் காட்டுவதாகும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியா மற்றும் சீனா போன்ற முக்கிய உறுப்பு நாடுகளுக்கிடையிலான எல்லைசார் பதட்டச் சூழல்கள் உலகளாவிய விவகாரங்களில் இக்கூட்டமைப்பு ஒருமித்த குரலை வெளிப் படுத்தவும் வலியுறுத்தவுமான வாய்ப்புகளைக் குறைக்கின்றது. அதேவேளை நிலவுகின்ற அமெரிக்க மேலாதிக்கச் சர்வதேச அமைப்பில் அவசியமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்குரிய வலு கூட்டமைப்பினாற் சாத்தியமா, அதற்குரிய அமைப்பியல் நிலவுகின்றதா என்ற கேள்வியும் எழுப்பப் படுகின்றது.

### பன்முக உலக ஒழுங்கிற்கான பாதையில் BRICS

BRICS அமைப்பில் உறுப்புநாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதோடு, பொருளாதார வலிமையும் அதற்கு உள்ளது. இருப்பினும் அது முக்கியமான சவால்களை எதிர்கொள்கிறது. அமெரிக்க, ஐரோப்பிய மேலாண்மைவாதம், ட்ரம்ப் நிர்வாகத்தின் வரி, சுங்க அதிகரிப்புக்கு மத்தியில் ஒரு மாற்றுப் பொருளாதார மையமாக இத்தகு அமைப்பின் சமகாலத் தேவைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. ஆனால் இதன் முதன்மை அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு முரண்பாடுகள் - அந்நாடுகளின் தலைவர்களின் ஈடுபாட்டுப் போதாமை, - உறுப்பு நாடுகளுக்கிடையில் மூலோபாய இணக்கப்பாடின்மை போன்ற காரணங்களால் இந்தக் கூட்டமைப்பின் செயல்வலுவும், விளைவுகளும் பாதிக்கப் படுகின்றன என்று கருதப்படுகின்றது. இப்புறநிலை அதன் உலகளாவிய அதிகாரத்தை உருவாக்கும் திறனை குறைக்கிறது.


**உசாத்துணை:**

- BRICS: intergovernmental organization | Miles Jenny | https://www.britannica.com | 18.08.2025
- BRICS Summit 2025: will slow and steady actually win the race? | Ronak Gopaldas & Priyal Singh | Premium times | 09.07.2025
- The Guardian view on Brics growing up: A new bloc seeks autonomy - and eyes a post-western order (Editorial, The Guardian, 13.07.2025)
- What really came out of this year's BRICS summit? | Valentina Sader & Ignacio Albe | https://www.atlantic-council.org | 08.07.2025
- Trump Threatens Extra 10% Tariff for Countries 'Aligning' Themselves With 'Anti-American' BRICS Policies | Callum Sutherland| Time | 08.07.2025



கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மார்க்ஸ் –

# முதலாளித்துவ வீழ்ச்சியும் செயற்கை நுண்ணறிவும்

ஸ்லாவொஜ் ஜிஸேக், ஃப்ரெட்ரிக் ஜேம்சன் எனும் தத்துவ ஞானிகள் இருவர் பருவநிலை மாற்றமும் முதலாளித்துவமும் ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாத கண்ணிகளாய்ப் பயணம் செய்வதால் முதலாளித்துவத்தின் முடிவைக் கணிப்பதைக் காட்டிலும் இந்த உலகத்தின் முடிவை எளிதாகக் கணித்திட முடியும் என்று கூறியுள்ளனர். தனிமனிதர் ஆதாயத்திற்கான முடிவற்ற லாப வேட்கையால் உந்தப்படுகிற முதலாளித்துவம் வரையறைகளுக்குட்பட்ட வளங்களைக் கொண்டுள்ள இந்த உலகில், மற்றெல்லாவற்றிற்கும் மேலாகப் பொருளாதார முன்னேற்றத்தை மாத்திரம் முதன்மைப்படுத்துகிறது. எனினும், ஒப்பீட்டளவில் பருவநிலை மாற்ற விளைவுகள் மற்றும் விபரீதங்களின் முன் அநீதியின் ஊற்றான முதலாளித்துவக் கருத்தாக்கம் ஒரு தனித்துவ, இலகுவான இடரென்று சொல்வதற்கில்லை. சுரண்டலையே இயல்பாகக் கொண்டிருக்கிற ஒரு பொருளாதார அமைப்பிலிருந்தும் வெடித்துக் கிளம்பும் பல்வேறு விதமான ஏற்றத் தாழ்வுகளை, சமத்துவமின்மையை ஜான் கென்னத் கால்ப்ரெய்த் "முதலாளித்துவத்தில் மனிதன் தன் சக மனிதனையே சுரண்டுகிறான்" என்கிற தன் முத்திரை வார்த்தைகளின் வழி உறுதிபடக் கூறுகிறார்.

பெருகும் மக்கள்தொகை, சூடேறும் நம் பூமிக் கிரகம், வளங்கள் மற்றும் செல்வத்தில் நிலவும் மலைக்கும் மடுவுக்குமான ஏற்றத்தாழ்வுகள், சமத்துவமின்மை ஆகிய இந்த நிலவரங்களெல்லாம், நாம் தக்கவைத்து தகவமைத்துக்கொள்கிற ஒரு சரியான எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்யவில்லை என்பதைத்தெளிவுறுத்துகின்றன. மார்க்ஸ் இன்னும் ஒருபடி மேலே போய் முதலாளித்துவத்துடன் ஒரு வெகு தொலை தூர எதிர்காலம் என்பது சாத்தியமேயில்லை என்றுதான் சொல்கிறார்.1818இல் பிறந்த மார்க்ஸ் எனும் சோசலிசப் புரட்சியாளர் முதலாளித்துவத்தை முற்றிலும் வெறுத்தார் என்பது ஒரு பிழையான கண்ணோட்டமே. உண்மையில் அவர் முதலாளித்துவத்தை "மானுடம் உருவாக்கிய ஆகப் பெரிய பகாசுர உற்பத்திச் சக்தி" என்றுதான் கணித்திருந்தார். மார்க்ஸுடைய இயக்கவியல் பொருள்முதல்வாத வரையறைகளின்படி வரலாற்றில் முதலாளித்துவம் மிக முக்கியமானதொரு காலகட்டம் எனவும் மானுடப்பரிணாமத்தில் அது ஒரு முன்னேறிச் செல்லும் படி என்றும் தனக்கேயுரிய மனித வரலாறு குறித்த தீட்சண்யத்துடன்தான் அதை அடையாளம் கண்டிருந்தார். என்றாலும், அவருடைய தொலைநோக்குத் தரிசனம், முதலாளித்துவத்தின் தோல்வி என்பது தவிர்க்க முடியாதது என்பதையும் அவருக்குத் தெளிவாக்கியிருந்தது. முதலாளித்துவம் ஏன் வீழ்ச்சியுறும் என்பதை மார்க்ஸ் விளக்கியிருந்தாலும் அந்த வீழ்ச்சிக்கான காலக்கெடுவையோ, முதலாளித்துவத்திற்குப் பிந்தைய உலகம் எப்படியாயிருக்கும் என்பதையோ கோடிட்டுக் காட்டவில்லை. இந்தக் கட்டுரை மனித குலத்தின் மிக உன்னத, வசீகர முன்னெடுப்பான "செயற்கை நுண்ணறிவு" எவ்வாறு மார்க்ஸியப் புரட்சியை வேகமெடுக்கச் செய்யும் என்பதற்கான வாதங்களை முன்வைக்கிறது. வியத்தகு முன்னேற்றமான செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆழ்ந்த கற்றல் செயற்கை நுண்ணறிவின் ஆற்றலென்பது திறமை, உற்பத்தித் திறன், மேம்பட்ட அபரிதமான முடிவெடுத்தல்கள் என்கிற தளங்களில் மட்டுமேயல்லாது தனிமையின் வலி நிவாரணியாகக் கூடச் செயல்படச் சாத்தியமானது என்பதுவும் புலப்படுகிறது. என்றாலும், இதனால் உருவாகும் சமூகப் பொருளாதார விளைவுகளை ஒதுக்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளுவதோ, அசட்டை செய்வதோ சாத்தியமற்றது. மனிதக் கூட்டமாகிய நம் மத்தியில் வேலை, சமூகம் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகள் குறித்த நமது நடப்பு நிலவரங்களில் சந்தேகத்திற்கிடமின்றி நிச்சயமாக இது வரையிலுமில்லாத பார தூர விளவுகளை இந்தச் செயற்கை நுண்ணறிவு கட்டவிழ்க்கும். இந்தக் கட்டுரை பெருவாரியாக ஒரு செய்முறைத் தீர்வாக அல்லாமல், மார்க்ஸின் "மூலதனம்" என்கிற அவருடைய தாரக நூலின் வழி, மார்க்சியச் சிந்தனைகளின் அடிப்படையில், ஒரு கோட்பாட்டுத் தேடலாகவே முயற்சிசெய்யப்பட்டிருக்கிறது. மார்க்ஸ் விவரித்திருக்கிற முதலாளித்துவ வீழ்ச்சிக்கு இந்த செயற்கை நுண்ணறிவு எப்படியொரு கிரியாஊக்கியாக இயங்கும் என்பதைப் புரிந்துகொள்கிற முயற்சிதான் இந்த எழுத்துகள்.

**பெருகும் மக்கள்தொகை, சூடேறும் நம் பூமிக் கிரகம், வளங்கள் மற்றும் செல்வத்தில் நிலவும் மலைக்கும் மடுவுக்குமான ஏற்றத்தாழ்வுகள், சமத்துவமின்மை ஆகிய இந்த நிலவரங்களெல்லாம், நாம் தக்கவைத்து தகவமைத்துக்கொள்கிற ஒரு சரியான எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்யவில்லை என்பதைத் தெளிவுறுத்துகின்றன.**

பொருளாதாரம், தத்துவம் எனும் இரு வேறுபட்ட வழிகளிலும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை மார்க்ஸ் விளக்கியுள்ளார். முதலாளித்துவப் பொருளாதாரம் தனக்குள்ளே கொண்டுள்ள "வணிகச் சுழற்சி" எனும் தவிர்க்க முடியாத சிக்கலால் தானே வீழ்ச்சியுறும். அதிகதிகமான லாபம் என்கிற ஒரே குறிக்கோளுடன் இயங்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் கிடைக்கப் பெறும் லாபம் மறுபடியும் மறுபடியும் முதலீடு செய்யப்படுகிறதே அல்லாமல் அதிகமாய் சந்தையில் செலவழிக்கப்படுவதில்லை. இது உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையிலான சிக்கலான சமன் நிலையைத் தோல்வியுறச் செய்கிறது. இவ்வாறு வாடிக்கையாளர் நுகர்வு ஒரு பொழுதும் மறு முதலீடுகளை எட்டிப் பிடிப்பதேயில்லை. அன்றைய பொருளாதார நிபுணர் ரெக்கார்டோ இதை ஒரு மதிப்பீட்டுப் பிரச்சினையாக மாத்திரம் கணித்தபொழுது, மார்க்ஸோ இதை முதலாளித்துவக் கட்டமைப்பையே அச்சுறுத்தும் அடையாளமாக எச்சரித்தார். பொருள்களும் சேவைகளும் வாங்கப்படாமலும் நுகரப்படாமலும் போவதென்பது "பயன்பாட்டுச் சிக்கலை" நோக்கி உந்தித் தள்ளுவதாக அமைகிறது என்றார். இது இன்றைய பொருளாதாரத்தில் முக்கியப் பாத்திரமாகியிருக்கிற நிலவரங்களில், இந்தக் கட்டுரை சிக்கலின் இரண்டாவது வழியை அலச முயல்கிறது.

தத்துவார்த்தத் தளத்தில், முதலாளித்துவம் முதலாளிகளின் கைகளில் உபரி மூலதனத்தைக் குவிக்கிற பொழுது கூடவே வேலையற்ற கூலிப் பட்டாளமெனும் ஒரு "நிலை சேனையையும்" மறுபுறம் வளர்த்தெடுக்கிறது என மார்க்ஸ் குறிப்பிட்டார். உயரும் வேலை வாய்ப்பின்மை, சமத்துவமின்மை, யுத்தங்கள் மற்றும் வர்க்கப் போராட்டங்கள் எனும் இந்த எல்லை கடந்த துன்பங்களும் துயரங்களும் "உழைக்கும் வர்க்கத்தை" ஒரு "மூர்க்கமான புரட்சியை" நோக்கி உந்தித் தள்ளுகின்றன. இந்த எழுச்சி மிகும் தருணத்தில் உழைக்கும் வர்க்கம் உற்பத்தி முறைகளைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு ஒரு புதிய பொருளாதார அமைப்பை நிலைநிறுத்துகிறது. வெகு மூர்க்கமான நடவடிக்கை என்பது ஒரு தீவிர, துவந்த, வலிமையான அரசியல் நடவடிக்கையாகக் குறிக்கப்படுகிறதே அல்லாமல் கைகலப்பு என்கிற அர்த்தத்திலன்று; ஏனெனில், ஒருபோதும் தங்கள் அதிகாரத்தை இழக்க விரும்பாத முதலாளித்துவ ஆளுமைகள் மற்றும் அமைப்புகளைத் தூக்கியெறிய இந்த உழைக்கும் வர்க்கப் போராட்டம் மிகமிக அத்தியாவசியத் தேவையாகிறது. முதலாளித்துவத்திற்கெதிரான இந்தப் புரட்சிகர நடவடிக்கைகளைத் தூண்டும் அதிகதிகமான தீர்மானகரமான நிகழ்வுகளைச் செயற்கை நுண்ணறிவு தூண்டுவதால், இந்தச் சமூக நிகழ்வுகள் மற்றும் சக்திகளைக் குறித்து நாம் மேலும் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

உழைக்கும் மக்களை ஒரு புரட்சியை நோக்கி உந்தித் தள்ளுவதற்கான காரணங்களில் வேலையில்லாதோரின் பட்டாளம் பெருகுவது ஒரு முக்கியக் காரணியாகும். "மூலதனக் குவியலில் ஏகபோகமாய் உருவெடுக்கும்" பகாசுரக் குழுமங்களே (MNC) உழைக்கும் வர்க்கத்தையும், வேலையில்லாதோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாளத்தையும் ஒருசேர உருவாக்குகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் இயந்திர மயமாக்கலில் முதலாளித்துவத்தால் செய்யப்பட்ட முதலீடுகள், குறைந்த மனித உழைப்பின் வழியாக, உற்பத்திச் செலவைக் குறைத்து அதிக லாபத்திற்கு வழிசெய்த வரையிலும் அவற்றின் நோக்கம் காரணம் பொதிந்தவையாய் நிலவியதை மார்க்ஸ் அறிந்திருந்தார். இயந்திரமயமாக்கல் சில துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது என்பதை மார்க்ஸ் ஏற்றுக் கொண்டாலும் ஒட்டுமொத்த உற்பத்தி நிலவரத்தில் அது வேலையின்மையை அதிகரிக்கவே செய்கிறது என்று உறுதியாகக் கூறினார்; "மூலதனம் வளருகின்றபோது அது மனித உழைப்பைக் குறைக்கிறதேயல்லாமல் கூட்டுவதில்லை" என்றுதான் அறிவிக்கிறார். செயற்கை நுண்ணறிவின் விளைவாக மிகப் பெரும் வேலையின்மையும் பணித்தள இடப்பெயர்வுகளும் அரங்கேறும். சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்தினால் (ILO) நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று உலகின் கால் பங்கு வேலைகளை ஆக்கபூர்வ செயற்கை நுண்ணறிவு விழுங்கிவிடும் அபாயம் காத்திருப்பதாக எச்சரிக்கிறது. இது அடிமட்ட - திறன் குறைவான தொழிலாளிகளையே அதிகம் பாதிக்கும் என்கிற புரிதலே பெரும்பான்மை அபிப்ராயமாகப் பொதுப் புத்தியில் உலாவுகிறது; ஆனால், உண்மையென்னவோ முடிவுகளெடுக்கும் நிர்வாகத் தளத்தில் 46 சதமும் சட்டப் பணிகளில் 44 சதமுமெனத் தொழில் நிபுணத்துவ வேலைகளுக்கும் வேட்டு வைத்துவிடும் என்பது இப்பொழுது உறுதியாகியிருக்கிறது. இந்தப் பரிமாணத்தின் தீவிரத் தாக்கங்களை இது பலப்படுத்துகிறது.

அனைத்து தேசப் பொருளாதாரங்களிலும் எவ்விதச் சந்தேகத்துக்குமிடமின்றி இதன் தாக்கம் தனி மனிதர்கள் மற்றும் உழைப்பாளிகள் சந்தையில் மிகப்பெரும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். தேசங்களின் தேவைக்கும் கிடைக்கக் கூடியதுமான தொழில் திறன்களுக்கும் இடையில் இதுவொருமிகப் பெரிய தலைவலியாக உருவெடுக்கும்போது, உழைக்கும் மக்கள், மின்னல் வேக மாற்றங்களுக்குள்ளாகி அச்சுறுத்தும் வேலைச் சந்தையில் தங்களைத் தக்கவைத்துக்கொள்ளத் தேவையான தொழில்நுட்பங்களில் தேர்ச்சிபெற ஒரு ஜீவ மரணப் போராட்டத்திற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள். கூடவே ஒரு மிகப் பெரும் வேலையில்லாப் பட்டினிப் பட்டாளம் தனியொரு உழைப்பாளி / தொழில் வல்லுநரின் பேர சக்தியைத் தலைகீழாக்கி ஊதியக் குறைப்புக்கு நிர்ப்பந்திக்கும்.

பன்னாட்டு நிதியம் (IMF) நடத்திய ஓர் ஆய்வில் வளர்ச்சியடைந்த பொருளாதார அமைப்புகளில் 60 சதமும் குறைந்த வருவாய் ஈட்டும் நாடுகளில் 26 சதமுமாக மொத்தம் உலகளவில் 40 சதமானம் வேலைகளில் சம்பள வெட்டு/குறைப்பு நடைபெறுமெனக் கூறப்பட்டுள்ளது. முதலாளிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையில் நிலவும் அதிகாரச் சமமின்மையினால் உருவாகும் கேடு என்று இதை மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இது முதலாளித்துவத்தின் அடிநாதமான அபரித லாபம் என்கிற நோக்கங்களை அடிப்படையாய்க் கொண்டு இயங்குகிற பன்னாட்டுக் குழுமங்களின் "செலவினக் குறைப்பு என்கிற போட்டாபோட்டியிலிருந்து உருவாகிறது என்பது நடப்பில் வெளிப்படையாய்த் தெரிகிறது. இந்த நடைமுறைகள், குறிப்பாகக் கிழக்குலகில் நிலவும் மிகப் பரிதாபமான தொழிலாளர் உரிமைகளிலிருந்து புலப்படுகிறது. இதற்கு, மிகமிக மோசமான பணியிடச் சூழல்கள் மற்றும் நெருக்கடிகளால் மன உளைச்சலுக்கு ஆளாகும் ஊழியர்களைக் கவனிக்க, ஆப்பிள் நிறுவனத்தின் உதிரிகளைத் தயாரிக்கும் பன்னாட்டுக் குழுமமான ஃபாக்ஸ்கான் தங்களுடைய லோங்குஹா தொழிற்சாலையில் நிறுவியிருக்கிற "தற்கொலைத் தடுப்புகள் / வேலிகளே" மிகச் சிறந்த உதாரணம்.வரும் நாள்களில் பெருகும் வேலையில்லாப் பட்டாளம் வேலைச் சந்தையில் உருவாக்கும் எதிர்மறை நிலவரங்களின் மத்தியில், கட்டுப்படுத்தப்பட்ட முதலீட்டுக் குவியல்கள் செயற்கை நுண்ணறிவின் துணையுடன் பீடுநடை போடும் என்பதே மார்க்ஸியத் தெளிவாகும். ஊழியர்களின் புலப்பெயர்வு, வேலையின்மை, குறைக்கப்படும் ஊதிய விகிதங்கள் ஆகியவற்றின் ஊற்றுக்கண்ணாகச் செயற்கை நுண்ணறிவு வலம்வருவது, பொருளாதாரக் கட்டமைப்புகளின்மீது தொழிலாளர்களுக்கு ஒரு உற்சாகமின்மையையும், மோதலையும், எரிச்சலையுமே கட்டவிழ்த்துவிடும். முதலீட்டுத் திரட்சியையும் சமத்துவமற்ற செல்வக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவிப்பையும் உத்தரவாதமாக்கும் முதலாளித்துவத்தின் "உபரி மதிப்புதான்" வெகு ஜனங்களை ஒரு சமூகப் புரட்சியை நோக்கி உந்தித் தள்ளுகிறது. முதலாளித்துவத்தில் தொழிலாளர்கள் தங்களின் உழைப்பை விற்று, அவர்களின் ஜீவன இருத்தலை மாத்திரம் உறுதி செய்கிற அளவிலே பெறுகிற ஊதியத்தால் மிஞ்சும்உபரி மதிப்பால் முதலாளிகளால் அவர்களை ஒட்டச் சுரண்ட முடிகிறது என்று மார்க்ஸ் சுரண்டலின் வழியை, வடிவத்தை விளக்கினார். செயற்கை நுண்ணறிவின் அடிப்படைச்சூத்திரம், அமைப்பு மற்றும் உபகரணங்களைக் கையிலே வைத்திருக்கும் தொழில் முனைவர்கள், தொழிலாளர்களுடனான ஊதிய பேரத்தின் வழியாகத்தாங்கள் வென்றெடுக்கும் குறைந்த செலவிலான உற்பத்திப் பெருக்கத்தின் வழியாக ஈட்டும் அபரிமிதமான லாபத்தை எவருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டிய தேவையோ அவசியமோ இல்லாதிருப்பதால், சமூகத்தில் நிலவும் சமமற்ற செல்வப் பங்கீட்டின் இடைவெளி இன்னும் அதிகரிக்கவே செய்யும். அடுத்த பத்து வருஷங்களில் உலக மொத்த உற்பத்திக் குறியீடு செயற்கை நுண்ணறிவினால் 7 டிரில்லியன் டாலர்களுக்கு உயரும் என்று கோல்ட்மேன் ஸாச் நடத்திய ஆய்வொன்றில் தெரிய வந்திருக்கிறது.

மேலும், தொழில்நுட்ப மேம்பாடு என்பது உற்பத்தியையும் பெருக்குகிறது. இந்த உற்பத்திப் பெருக்கம் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளைக் கணிசமாகக் குறைக்கிறது என்றாலும், மிகக் குறைந்த வேலை நேரமே உபயோகப்படுத்தப்படுவதால் ஊதியச் செலவினங்கள் குறைவதன் மூலமாக உற்பத்தியில் உபரி மதிப்பு உயரவே செய்கிறது. இவ்வாறு தொழில்நுட்ப மேம்பாடுகள் "உழைக்கும் வர்க்கத்தின் மீதான அதிகாரத்தை" முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் செய்கிறது என்பதை மார்க்ஸ் முன்பே கூறியிருக்கிறார். செயற்கை நுண்ணறிவும் இந்தப் பட்டியலில் இணைந்து சமூகத்தில் வளங்களைப் பகிர்ந்து கொள்வதிலிருக்கும் குறைகளை, வேறுபாடுகளை இன்னமும் அதிகமாக்குகிறது. "செயற்கை நுண்ணறிவில் இயங்கும் நிறுவனங்கள்" அல்லது "10x" என்றழைக்கப்படும் மிகக் குறைந்த அளவிலான மனித உழைப்பினால் இயக்கப்படும் இது போன்ற நிறுவனங்கள் லாபத்தைக் கணிசமாக அதிகரிக்கின்றன. எனவே, சமத்துவமின்மையும் செல்வக் குவியலும் விரைந்து நிறைவேறுகின்றன.

எனினும், செயற்கை நுண்ணறிவு உலகளாவிய நிலையில் தனிப்பட்ட செயற்கை நுண்ணறிவு நிபுணர்களை உருவாக்கினாலும், நாடுகளின் மத்தியிலும் ஒரு சமத்துவமற்ற நிலையை உருவாக்கவே செய்யும். 2023இல் இந்தச் செயற்கை நுண்ணறிவுத் தளத்தில் இரண்டாவது இடத்திலிருந்த சீனாவைக் காட்டிலும் 8.7 மடங்கு மேலான 67.2 பில்லியன் டாலர்களை அமெரிக்கா தனியார் துறை முதலீடாகச் செய்திருந்தது. நடப்பிலிருக்கும் சமத்துவமற்ற நிலவரங்களைக் கணக்கிலெடுத்தால் ஏழை நாடுகளுக்கு செயற்கை நுண்ணறிவு என்பது எட்டாக்கனியாக, ஒரு கனவாகவே இருக்குமென்பதும் இதனால் உருவாகும் விளைவுகளைச் சந்திப்பதும் சாத்தியமற்றதாகவே அமையும் என்பதும் உறுதியாகிறது. இதற்கு இணையப் பயன்பாட்டில் ஒப்பீட்டளவில் அதிக வருவாயீட்டும் நாடுகளுக்கும் குறைந்த வருவாயீட்டும் நாடுகளுக்கும் இடையில் நிலவும் 55 சதக் குறைவை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். எனவே, செயற்கை நுண்ணறிவு இந்த நிலவரத்தை நாடுகளுக்கு உள்ளேயும், நாடுகளுக்கு இடையிலேயும் மேலும் மோசமாக்கும். மார்க்ஸியப் பார்வையில் இந்தப் பட்டவர்த்தனமான செல்வக் குவிப்பும் அதிகரிக்கும் பங்கீட்டு இடைவெளிகளுமே

**முதலீட்டுத் திரட்சியையும் சமத்துவமற்ற செல்வக் குவிப்பையும் உத்தரவாதமாக்கும் முதலாளித்துவத்தின் "உபரி மதிப்புதான்" வெகு ஜனங்களை ஒரு சமூகப் புரட்சியை நோக்கி உந்தித் தள்ளுகிறது. முதலாளித்துவத்தில் தொழிலாளர்கள் தங்களின் உழைப்பை விற்று, அவர்களின் ஜீவன இருத்தலை மாத்திரம் உறுதி செய்கிற அளவிலே பெறுகிற ஊதியத்தால் மிஞ்சும்உபரி மதிப்பால் முதலாளிகளால் அவர்களை ஒட்டச் சுரண்ட முடிகிறது என்று மார்க்ஸ் சுரண்டலின் வழியை, வடிவத்தை விளக்கினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மற்றும் வர்க்க உரசலை உந்தித் தள்ளும் முக்கியக் காரணிகள் என அறியப்படுகின்றன. ஒரு கட்டத்தில் இந்த உரசல் மற்றும் பதற்றமும் பொருத்துக்கொள்ள முடியாத உச்சம் தொடுகிறபோது முதலாளித்துவம் தூக்கியெறியப்படுகிற சூழ்நிலைகள் உருவாகுமென மார்க்ஸ் எச்சரிக்கிறார்.

மார்க்ஸியக் கோட்பாடுகளுக்கும் செயற்கை நுண்ணறிவிற்கும் இடையேயான முரண்பாடு என்பது "மதிப்பு குறித்த உழைப்பின் கோட்பாடு", குறைக்கப்பட்ட உழைப்புத் தேவைகள் சம்பந்தப்பட்டது. மதிப்பென்பது உற்பத்திக்குத் தேவையான உழைப்பின் நேரத்தைப் பொறுத்து அமைகிறது என்பது கோட்பாடு. எனவே, முதலீடு என்பது சேமித்துக் குவித்துவைக்கப்பட்ட உழைப்பு என்றுதானாகிறது. "சமூகத் தேவையான" உழைப்பு மாத்திரமே மதிப்பைக் கணிப்பதில் பங்களிக்கிறது என்று மார்க்ஸ் அறுதியிட்டுக் கூறினார். இதற்கு உதாரணமாக மார்க்ஸ், அந்த நாள்களின் புரட்சிகரக் கண்டுபிடிப்பான விசைத்தறிகளைக் குறிப்பிட்டார். விசைத்தறிகள் துணிகளை நெய்து முடியும் நேரத்தை நேர் பாதியாகக் குறைத்தன. கைத்தறிகளில் தொடர்ந்து உற்பத்திசெய்த நெசவாளர்களின் வேலை நேரம் இப்பொழுது "சமூக உழைப்பு நேரத்தின்" - விசைத் தறிகளின் புழக்கத்தின் - பின்னணியில் பாதியாகவே மதிக்கப்படும் என்று விளக்கினார்.

செயற்கை நுண்ணறிவோ இன்னமும் அதிகப் புரட்சிகரமான ஒரு முன்னெடுப்பு என்பதால் மேலே சொன்ன விசைத் தறி - கைத்தறி "உழைப்பு நேர" உதாரணத்தையே இதற்கும் பொருத்திப் பார்க்கலாம்.செயற்கை நுண்ணறிவு அனைத்து உற்பத்தி மற்றும் சேவைத் தளங்களிலும் மிகக் கணிசமான அளவிற்கு வேலை நேரத்தைக் குறைத்துவிடும் என்பது உறுதியாகத் தெரிகிறது.இன்றைய நிலவரத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு அதன் நம்பகத் தன்மையையும், திறமையையும் நிரூபித்திருப்பதால் அது இன்றைய பணியாளர்களின் 70 சதமான வேலை நேரத்தைக் கையிலெடுத்துவிடும் திறன் படைத்தது. சமூக உழைப்பின் நேரமே மதிப்பின் காரணியாய் இருப்பதனாலும், லாப அதிகரிப்பிற்காகவும், தொழிற் போட்டியில் நிலைத்திருக்கவும் முதலாளிகள் செயற்கை நுண்ணறிவை அதிகதிகமாய்ப்பயன்படுத்துவர்.

இது பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் முரண்பட்ட சூழல்களை உருவாக்கும். மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் மனித உழைப்பு தேவைக்கும் அதிகமான அளவில் இருந்தது என்பதைக் கற்பனை செய்வதுகூடக் கடினம்; அவருடைய மதிப்பு குறித்த உழைப்பின் கோட்பாடு இந்த நவ நாகரிக நாள்களுக்கு மிகவும் பொருந்தும். மிகவும் சிக்கலும் சவாலுமான உற்பத்தி முறைகளையெல்லாம் செயற்கை நுண்ணறிவு கையாளத் தொடங்கினால்,மார்க்ஸின் வாதத்தில் மிக மிகக் குறைந்த மனித உழைப்பே தேவைப்படும் தருணத்தில் உற்பத்திப் பொருள்களும் அதற்கேற்ற அளவில் மதிப்பிழக்கும். பெருகத் தொடங்கும் வேலையில்லாத ஒரு "நிலைத்த பட்டாளமும்" இந்த நிலவரத்திற்கு உரமூட்டும். செயற்கை நுண்ணறிவு மிகப் பெருவாரியான பணியாளர்களை உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்தும் நீக்குமேயானால் பெருகும் வேலையில்லா ஊழியர்கள், தொழிலாளிகள் நுகர்வோர் பட்டியலிலிருந்து வெளியேறுவதால் உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகளை நுகர்வோரின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறையும். பணத்தின் மறு முதலீட்டிலேயே கவனமாக இருக்கும் முதலாளிகளுக்குத் தேவையை அதிகரிக்கும் அக்கறை இருப்பதில்லை. சந்தையில் தேவைக் குறைவு இயல்பாகவே பொருள்களின் விலையைக் குறைப்பதில் போய் முடியும். முதலாளித்துவத்தின் அடிப்படை இயக்கமான உற்பத்திப் பெருக்கமும், தொழிலாளர் பராமரிப்பும் பொருள்கள் மற்றும் சேவைகளின் தகுதியான மதிப்பைப் (விலை) பொருத்தே அமைகின்றன. சந்தை விலையை நிர்ணயித்து விற்றல் வாங்கலின் அடிப்படையில் இயங்கும் ஒரு பொருளாதார அமைப்பு, அதன் பொருள்கள் மற்றும் சேவைகள் தங்களுக்குரிய மதிப்பையே (விலை) தொலைக்கும்போது எப்படி இயங்க முடியும்?

அடிப்படையில் வெகுவேகமாக விஸ்வரூபமெடுக்கும் செயற்கை நுண்ணறிவு மனிதகுலத்தின்மேல் என்ன விதமான விளைவுகளை உருவாக்கும் என்பதை ஒருவராலும் துல்லியமாகக் கணிக்க முடியாது. மார்க்ஸிய வெளிச்சத்தில் செயற்கை நுண்ணறிவின் சமூகத் தாக்கங்களையும், முதலாளித்துவ அமைப்பையே அசைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஆற்றலையும் ஒரு கோட்பாட்டளவில் அலசியுள்ளோம்.யதார்த்தத்தில் பலவேறுபட்ட உண்மைக் காரணிகள் சமூகத்தின் மீதான அதன் தாக்கத்தை உறுதிசெய்யும்.செயற்கை நுண்ணறிவு குறித்த விழிப்போடும் அது கொண்டுவரும் அபாயங்கள், அதன் வலிமையான பொருளாதாரச் சாத்தியப்பாடுகள் பற்றியெல்லாம் அதனுடன் இடைபடும்போது அரசாங்கங்கள் ஒரு துவந்த வேறுபட்ட இயக்கத்தை உத்தரவாதம் செய்ய வேண்டியிருக்கும். சமூக விளைவுகளைப் பொருட்படுத்தாமல் உற்பத்தியைப் பெருக்க நாடுகள் செயற்கை நுண்ணறிவில் முதலீடு செய்யலாம். மாறாக, சமூக விளைவுகளை, தம் மக்களுக்கு வழங்கும் நிதி மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் சரிசெய்ய முயலலாம். சர்வதேச ஆளுகை அமைப்புகளை முன்னெடுப்பதன் வழியாக பிரச்சினைகளைச் சரிசெய்ய முயலலாம். இப்படியான அரசு நடவடிக்கைகளினால் மார்க்ஸின் மூர்க்கமான புரட்சிகள் வெடிக்காமல் காலதாமதமாகலாம். "தொழில்நுட்பப் பிரபுத்துவம்" (*Techno feudal-ism*) ஒரு மாற்றுப் பொருளாதாரச் செயல்பாடாக முன்னெடுக்கப்படுகிறது. இதுவும் நாம் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது. அபரிமித வளர்ச்சியின் மூலம் முதலாளித்துவத் தேவைகளுக்கு ஒரு குறுகிய கால நிறைவைச் செயற்கை நுண்ணறிவு உறுதிசெய்தாலும், சமத்துவமின்மையைத் துரிதமாக்குவதிலும், போட்டியற்ற சந்தை நிலவரத்தில் புதிய முன்னெடுப்புகள் தடைபடுவதும், நிலையற்ற சமூகமும் அதன் பூதாகரமான பின்விளைவுகளாய் உருவெடுப்பது நிச்சயம். இந்த நிலவரங்கள் மார்க்ஸிய முடிவுகளை உறுதிசெய்வதோடு மாத்திரமல்லாமல், இந்தச் சமூக அமைப்பின் நிலைத்திருத்தலையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

செயற்கை நுண்ணறிவைக் கையாள மனிதகுலம் முன்னெடுக்கும் முடிவுகளற்ற உத்திகள் அனைத்தும் இந்தப் பிரச்சினையில் மேலும் மேலும் சிக்கலான நிலவரங்களையும் ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்தையுமே உருவாக்கும். இதனாலேயே ஒரு கோட்பாட்டின் வழி இந்தப் பிரச்சினையை அணுகியிருக்கிற இந்த முயற்சி, சிக்கலும், குழப்பமும், துவந்த மாற்றத்திற்கும் உள்ளாகும் இந்தருசிகரமான பிரச்சினைக்கு ஒரு நுழைவாயிலைத் திறந்திருக்கிறது என உறுதிபடக் கூறலாம். செயற்கை நுண்ணறிவின் ஆளுமை இப்பொழுதும் இயல்பாகவே ஒரு அனுமான வரைவுகளுக்குள்ளேயே கட்டமைக்கப்படுகிறது. ஒரு தத்துவ ஞானியாகவும் பொருளாதார மேதையாகவும், நம்மிடையே இன்று நிலவும் பல சமூக நிகழ்வுகளைத் துல்லியமாக மார்க்ஸால் அன்று கட்டியம் கூற முடிந்திருந்தது. இதற்கு உதாரணமாக உலகமயமாதல் குறித்த அவருடைய வார்த்தைகளைக் கூற முடியும். எவ்வாறு "ஸ்தல மற்றும் தேசிய முடக்கங்களும் சுய நிறைவும்" "உலகளாவிய தேசங்களின் இடையிலான சார்பு நடவடிக்கைகளால்" மாற்றியமைக்கப்படும் என்பதான அவருடைய தீர்க்கதரிசனமே மிகப் பெரிய சான்று. எனவே, இந்தக் கட்டுரையில் காணப்படும் மேற்கோள்கள் காலத்தால் செயற்கை நுண்ணறிவு உருவாகிய நாள்களுக்கு முந்தியவை என்றாலும் நிகழ் உலகின் போக்குகளையும் பிரச்சினைகளையும் புரிந்துகொள்ளவும், தேர்ந்து தெளிவுறவும் விலையேறப்பெற்ற பொக்கிஷங்களாய் உதவும் என்பதில் ஐயமில்லை.நடப்பில் மார்க்ஸின் சிந்தனைப் பயன்பாடுகளின் வழியாகப் பார்த்தால் செயற்கை நுண்ணறிவு அபரிமிதமான சமத்துவமின்மைக்கும் அநீதிக்கும் வழிவகுத்து மக்களை முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்திற்கு உந்தித்தள்ளும் என்பது உறுதியாகிறது. இது அப்படியே அச்சரம் பிசகாமல் மார்க்ஸ் வரையறுத்திருக்கிறபடியே நிறைவேறினாலும், ஆகாவிட்டாலும் சாராம்சத்தில் செயற்கை நுண்ணறிவு ஒரு புதிய சமத்துவமின்மையையும் குரூர அநீதிகளையும் கட்டவிழ்த்துவிடும் என்பதில் ஐயமில்லை. மிகச்சரியான கட்டுப்பாடுகளும், உத்திரவாதமான தலையீடுகளும் இல்லாத தடைகளற்ற செயற்கை நுண்ணறிவு செயல்பாடுகள் மானுடத்தை, அதன் பெருவாரி நடப்பு பொருளாதார அமைப்பான முதாலாளித்துவம் குறித்த ஒரு தீவிர மறுபரிசீலனைக்கு உந்தித்தள்ளும் என்பது நிச்சயம்.

*Courtesy: Translated from counter Currents.org dated 24/7/25 Article - "Marx and The theory of the collapse of capitalism" - by Ariella Kropman.*

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துத்துவாவின் உடலரசியல்



சென்ற இதழ் தொடர்ச்சி

காந்தி கொல்லப்பட்டப் பிறகு, அவ்வமைப்பை தடை செய்ய அரசு கூறியக் காரணம் "சங் அமைப்பினர்கள் விரும்பத்தகாத அல்லது அபாயகரமான செயல்களில் ஈடுபடுகின்றனர், ராஷ்டீரிய சுயம்சேவக் சங்கின் தனிப்பட்ட உறுப்பினர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் தீ வைப்பு, திருட்டு, கொள்ளை, கொலை போன்ற வன்முறை செயல்களில் ஈடுபடுவதாகவும் சட்டவிரோதமாக ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் சேகரிப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது. பயங்கரவாத முறைகளில் ஈடுபடுமாறும், ஆயுதங்களைச் சேகரிக்குமாறும், அரசுக்கு எதிராக அதிருப்தியை உண்டாக்குமாறும், போலிசையும் ராணுவத்தையும் தவறு செய்யத் தூண்டுமாறும் மக்களுக்கு அறிவுறுத்தும் துண்டுப் பிரசுரங்களை வினியோகிப்பதும் தெரிய வந்தது. இந்தச் செயல்பாடுகள் ரகசியமாக நடக்கின்றன; சங் அமைப்பையும் அதன் கூட்டுச் செயல்பாட்டுத் திறமையையும் எப்படிக் கையாள்வது என அரசு அவ்வப்போது சிந்தித்து வருகிறது." (பிப். 4, 1948 அன்று ஆர்எஸ்எஸ்ஸைத் தடை செய்து அரசு வெளியிட்ட செய்தி. (2022, 641)) ஆளும் அரசதிகாரத்தை பெற்ற, இன்றுவரை மேற்கூறிய காரணங்கள் எதுவும் மறுக்கப்பட முடியாத நிலையில்தான் அந்த அமைப்பின் செயல்பாடுகள் உள்ளது. அதன் நோக்கம் அரசோ, அதிகாரமோ அல்ல ஒட்டுமொத்த உலகையும் தனது தலைமையில் அதாவது 'விஷ்வ குருவாக' இருந்து உலகை பிராமண சனாதன வருண தர்மத்திற்கு அடிமையாக ஆக்க வேண்டும் என்பதே. அது இந்த உலகை 'வசுதேவ குடும்பம்' என்று கூறுவதில் வெளிப்படுவது உலகளாவிய அதிகாரத்திற்கான உடலரசியல் வேட்கையையே.

இவ்வமைப்பு துவக்கப்பட்டதே பிரித்தானிய இந்தியாவில் உருவான குறிப்பாக மகாராஷ்டிராவில் ஜோதிராவ் பூலே, அம்பேத்கரால் உருவாகிய தலித் எழுச்சி, மற்றும் தென்னிந்தியாவில் உருவான நீதிக்கட்சி, பெரியாரால் ஏற்பட்ட பிற்படுத்தப்பட்டோர் விழிப்புணர்வு ஆகியவற்றின் பார்ப்பனிய எதிர்ப்பில் அச்சமுற்ற படித்த மராட்டிய சித்பவன் பிராமணர்களால் உருவாக்கப்பட்டது. இந்த சித்பவன் பிராமணர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்து கொங்கன் பகுதியிலும், பிற்காலத்தில் சிவாஜியின் அரசில் பூனாவிலும் குடியேறியவர்கள். இங்குள்ள பூர்வீக ஆரிய வந்தேறிகளான பிராமணர்களோடு தொடர்பற்ற பிற்கால குடியேறிகள். மராட்டியில் இவர்கள் சிவாஜிக்கு பிந்தைய அரசில் பேஷ்வாக்களாக மாறி அதிகாரத்தில் அமர்ந்து மனு மற்றும் சனாதன வருண தருமத்தைக் கொண்டு ஆட்சி நடத்தியவர்கள். இவர்கள் அவுரங்கசீப் காலத்தில் ஆட்சி அதிகாரத்தை இழந்தார்கள். பின்னால் பிரித்தானிய குடியேற்ற அரசில் மனு தருமத்தை மீறி கடல்தாண்டி சென்று ஆங்கிலக் கல்வி பயின்று தங்களை ஒரு மேட்டிமையாளராக, மத்திய தர வர்க்க அறிவாளிகளாக வளர்த்துக் கொண்டு பிரித்தானிய அரசியல் தொண்டூழியம் புரிந்து அதிகாரத்தைத் திரும்ப பெற்றார்கள். இந்த சூழலில் இவர்கள் கண்ட நவீன அரசியல் கருத்தியலே 'இந்து மதம்' என்பதும், அதன் இந்திய தேசிய இனம் என்ற பொருளில் உருவாக்கிய இந்துத்துவா உடலரசியலும்.

### ஆர்.எஸ்.எஸும் உடலை ஒழுங்குறுத்துதலும்

1925ல் நாக்பூரில் இருந்த 'அகாரா'க்கள் (Akharas) எனப்படும் உடற்பயிற்சிக் கூடங்களில் மற்றும் வியாயாஸாலா (Vyayamshalas) எனப்படும் மல்யுத்த பயிற்சி நிலையங்களில் (2008, 6) தேர்ந்தெடுக்கப்பட்ட பலம் கொண்ட இளைஞர்களை இணைத்து 'ஷாகா' எனப்படும் தினசரிப் பயிற்சியின் வழியாக உருவாக்கியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திய குடியேற்ற ஆட்சிக் காலத்தில் பரவலாகி வரும் பார்ப்பன எதிர்ப்பு, பார்ப்பனரல்லாதோர் எழுச்சி, ஆரிய எதிர்ப்பாக உருவான திராவிட அரசியல் ஆகிவற்றிற்கு எதிராக கட்டப்பட்ட பார்ப்பனிய பாதுகாப்பு அமைப்பே ஆர்.எஸ்.எஸ். வந்தேறிகளான பார்ப்பனர்கள் தங்களுக்கு என்று நிலமற்ற, பூர்வீகமற்ற நிலையில் சனாதன வருண தர்மத்தை, புராணக் கதைகளை வைத்துக் கொண்டு இந்திய ஆதிக் குடிகளை ஆண்டுவந்த கதை அம்பலமானதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கண்டடைந்ததே 'மாத்ரு பூமி', 'பித்ரு பூமி', 'புனித பூமி' ஆகியவை. இந்தியாவை ஒற்றை நாடாக அதாவது 'பாரத்' ஆக கட்டுவதன்மூலம் ஏற்கனவே உள்ள மொழிவழி, இனவழி மாநிலங்களை ஒழித்து, ஒற்றைத் தேசத்தை உருவாக்கி அதனை தங்களது நிலமாக மாற்ற முயல்கிறார்கள்.**

மிருக வைத்தியரான மருத்துவர் ஹெட்கேவர். இவர் இந்து தேசியத்தின் தாயகமாக விளங்கிய அன்றைய கல்கத்தாவில் படித்தவர். காங்கிரஸ் இயக்கம் பசுவதையைத் தடை செய்ய மறுப்பதால் அதிலிருந்து வெளியேறியவர். (2008, 7)

காலை மாலை இரு நேரங்களிலும் ஷாகா நடைபெறும். கட்டாயம் ஏதோ ஒன்றில் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டும். திறந்தவெளியில் கொடி வணக்கம், தேசபக்த உறுதிமொழி ஆகியவை சமஸ்கிருதத்தில் நடத்தப்படும். சூரிய நமஸ்காரம், யோகா, உடற்பயிற்சி, விளையாட்டுகள், புராண, இதிகாச அறிவை போதித்தல்,நேரம் தவறாமை, உடலை ஒழுங்குறுத்தல், வலுப்படுத்தும் பயிற்சிகள், கையில் தடியுடன் இராணுவ ஒழுங்கமைப்பில் பயிற்றுவித்தல் என 1 மணிநேரம் நேர ஒழுங்குடன் நிகழ்த்தப்படுகிறது. ஒருவரை ஒருவர் சந்தித்து தான் தனியர் அல்ல ஆர்.எஸ்.எஸ். என்ற பேருடலின் ஒரு சிறு உறுப்பு என்பதை நனவிலியில் பதிவு செய்வதே ஷாகாவின் முக்கியத்துவம். வருடம் 365 நாட்களும் ஷாகாக்கள் உண்டு. அதற்கு விடுமுறையே கிடையாது. அதுதான் ஆர்.எஸ். எஸ்ஸின் அடிப்படை அலகு.

ஷாகா என்றால் இந்தியில் கிளை என்று பொருள். ஆர்.எஸ்.எஸ். என்ற ஆலமரத்தின் கிளை அதுதான். மரம் சாய்ந்தாலும் அதன் கிளைகள் வலுவுடன் அதை தாங்கி நிற்கும் ஓர் இந்துத்துவ உடலை உருவாக்குவதே ஷாகா. நான்கு வகையான ஷாகாக்கள் உள்ளது. 1. 5 வயதிற்கு உட்பட்டவர்கள் சிசு (Shishu), 2. 6-12 வயதிற்கு உட்பட்டவர்கள் பால (Baal), 3. 13-18 வயதிற்கு உட்பட்டவர்கள் இளைஞர் (Adolescent), 4. 18 வயதிற்குமேற்பட்ட வயதானவர்கள் (Praud) (2008, 20). இதைத் தவிர இன்றைய உலகிற்கு ஏற்ப ஐ.டி. ஷாகா (IT Shakhas) என்று மெய்நிகர் ஷாகாக்கள் ஐ.டி. தொழில் வல்லுனர்களிடம் உருவாக்கப்பட்டுள்ளது (2008, 20). இது இணையவழி தொடர்பில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் கூடி ஷாகா பயிற்சிகளை செய்யும் அமைப்பு. மெய்யுலகில் மட்டுமின்றி மெய்நிகர் உலகிலும் இவர்கள் தங்கள் இந்துத்துவ அரசியலையும் அதற்கான உளவியல் தயாரிப்புகளையும் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்த ஒழுங்குமுறை இராணுவத்திற்கு ஆள் சேர்த்து ஒரு போர் எந்திரமாக (War Machine) உடலைக் கட்டமைப்பதற்கு நிகரானதாக அமைந்துள்ளது. அடிப்படையில் அனைத்து உடல்களையும் ஒரு போர் எந்திர உடலாக மாற்றுவதே இவ்வமைப்பின் நோக்கம்.

ஷாகாவில் 13 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள், 18 வயதுவரையிலான இளைஞர்களின் அமைப்புகளை உருவாக்கிய ஆர்.எஸ்.எஸின் நோக்கம்; அரசியல் அறியாத, உலகை அறியாத நுகர்வு வேட்கைக் கொண்ட சிறார்களின் உளவியல் மற்றும் இளைஞர்களின் உளவியலைக் குறிவைத்து உருவாக்கப்பட்டதே. அவர்களது பால்ய கால இன்ப நுகர்ச்சியை முழுக்க மத சார்ந்ததாக மடைமாற்றுவதே அதன் பணி. அதாவது உடல்களை மதவெறி கொண்ட 'இயல்பு' உடல்களாக வடித்தெடுப்பதற்கே. உடற்பயிற்சி கழகங்களில் உள்ள உடற்பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்ததே இதன் உடலரசியல் அடிப்படையை தெளிவுபடுத்துவதாக உள்ளது.

இந்திய குடியேற்ற ஆட்சிக் காலத்தில் பரவலாகி வரும் பார்ப்பன எதிர்ப்பு, பார்ப்பனரல்லாதோர் எழுச்சி, ஆரிய எதிர்ப்பாக உருவான திராவிட அரசியல் ஆகிவற்றிற்கு எதிராக கட்டப்பட்ட பார்ப்பனிய பாதுகாப்பு அமைப்பே ஆர்.எஸ்.எஸ். வந்தேறிகளான பார்ப்பனர்கள் தங்களுக்கு என்று நிலமற்ற, பூர்வீகமற்ற நிலையில் சனாதன வருண தர்மத்தை, புராணக் கதைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு இந்திய ஆதிக் குடிகளை ஆண்டுவந்த கதை அம்பலமானதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கண்டடைந்ததே 'மாத்ரு பூமி', 'பித்ரு பூமி', 'புனித பூமி' ஆகியவை. இந்தியாவை ஒற்றை நாடாக அதாவது 'பாரத்' ஆக கட்டுவதன்மூலம் ஏற்கனவே உள்ள மொழிவழி, இனவழி மாநிலங்களை ஒழித்து, ஒற்றைத் தேசத்தை உருவாக்கி அதனை தங்களது நிலமாக மாற்ற முயல்கிறார்கள். இங்குதான் திராவிட மாதிரி அரசியல் இந்தியாவின் முக்கியமான அரசியலாக மாறி உள்ளதைப் புரிந்துகொள்ள முடியும். அதன் பன்முகத்தன்மையும், பல் தேசியங்களின் கூட்டமைப்பைக் கொண்ட கூட்டாச்சித் தத்துவமும் முக்கியத்துவம் அடைகிறது. அடிப்படையிலேயே திராவிட அரசியல் இந்துத்துவ அரசியலுக்கு எதிரானது.

1925களில் நாக்பூரில் நடந்த ஒரு கலவரத்தில் இக்கூட்டத்தினர் சோதனை முயற்சியாக மதவாத சைபோர்க்குகளை அதாவது ரைபோரக்குகளை (*Ri-borg* (ரைபோர்க்) = *Religious Cyborg*) உருவாக்குவதே அடிப்படை. அதாவது, வலுவான சண்டைக்குத் தயாரான மதவெறி ஊட்டப்பட்ட சுயசிந்தனையற்ற உடல்கள். அவர்களது தேவை மனிதர்கள் அல்ல. இந்துத்துவா என்கிற கருத்தியலுக்காக தன்னார்வலராக (ஸ்வயம்சேவக்காக) தானம் செய்து கொள்ளக்கூடிய உடல்கள் மட்டுமே.

இந்துத்துவா உடல்கள் என்பது முழுக்க சனாதன வருண தருமத்தால் கட்டமைக்கப்பட்ட உடல்கள். பிராமண, சத்ரிய, வைசிய வருணத்திற்காக தங்கள் உடலை சேவை உடல்களாக அடிமை உடல்களாக கட்டமைத்துக் கொண்ட சூத்திர மற்றும் பஞ்சமா் உடல்கள். இந்துமதம் என்ற பெயரில் பிராமண வேதமதத்தால் கட்டப்பட்ட உடல்கள். இவர்களுக்குள் இந்துத்துவா

**இந்துத்துவா உடல்கள் என்பது முழுக்க சனாதன வருண தருமத்தால் கட்டமைக்கப்பட்ட உடல்கள். பிராமண, சத்ரிய, வைசிய வருணத்திற்காக தங்கள் உடலை சேவை உடல்களாக அடிமை உடல்களாக கட்டமைத்துக் கொண்ட சூத்திர மற்றும் பஞ்சமர் உடல்கள். இந்துமதம் என்ற பெயரில் பிராமண வேதமதத்தால் கட்டப்பட்ட உடல்கள். இவர்களுக்குள் இந்துத்துவா கருத்தியலால் கட்டமைக்கப்பட்ட தன்னிலையானது இந்த உலகை சனாதன வருண தர்மம் உருவாக்கிய பிராமண மேலாதிக்க உலகாக கட்டமைத்துக் காட்டுவதே.**

இறக்கப்பட்டு அதில் பெற்ற வெற்றியே இவர்களது பரவலாக்க உத்தியாக மாறியது. இவ்வமைப்பின் வேர்க்கால்மட்ட அமைப்பு மேலே குறிப்பிட்ட ஷாகா எனப்படும் தினசரி உடல், மன மற்றும் ஆன்மீகப் பயிற்சியே. இதில் தேசபக்தி, தெய்வபக்தி என்ற பெயரில் முழுமையாக வெறுப்பரசியலை ஒவ்வொரு உடலின் ஆழ்மனப் பரப்பில் பதிவு செய்வதே இதன் முக்கியப் பணி. இவ்வமைப்பு உலக மனித உரிமைக்கு எதிராக பாலர்களை, சிறார்களை தங்களது ஷாகாவில் பயிற்றுவித்து வளர்த்தெடுக்கிறது. இச்சிறார்களின் உளவியலை, மூளையில் உருவாகும் வேதிவினைப் பதிவுகளை முழுக்க மதவெறிகொண்டதாக உருவாக்குகிறது. அவ்வுடல்கள் வேறு எந்த சிந்தனைக்கும், உணர்வுக்கும் ஆட்படாத ஒரு மதவெறி எந்திரமாக கட்டமைக்கப்படுகிறது. நவீன கணிப்பொறி தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படும் 'சைபோர்க்' மனித இயந்திரங்களைப்போல, சுயசிந்தனையற்ற கருத்தியலால் கட்டமைக்கப்பட்ட தன்னிலையானது இந்த உலகை சனாதன வருண தர்மம் உருவாக்கிய பிராமண மேலாதிக்க உலகாக கட்டமைத்துக் காட்டுவதே. அவ்வமைப்பின் முழுநேரமாக அர்ப்பணித்துக் கொண்ட தன்னார்வலர்களான 'பிரச்சாரக்'குகள் பல ஊர்களில் உள்ள உடற்பயிற்சிக் கூடங்கள், இளைஞர் அமைப்புகளில் ஊடுறுவி அந்த அமைப்பை ஷாகாவாக மாற்றிவிடுவதே இதன் இயக்கப்பணி. (பிரதமர் மோடியே ஒரு பிரச்சாரக் ஆக பணியாற்றியவர்தான்) இப்பணிகள் வழியாக உலகம் முழுவதும் ஒரு இராட்சத 'ஆக்டோபஸ்' போன்ற வலைப்பின்லை உருவாக்கி உள்ளது இவ்வமைப்பு.

### ஆர்.எஸ்.எஸ். எனும் ஆக்டோபஸ்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஆக்டோபஸ் போன்ற ஒரு பெரிய வலைப்பின்னலை இந்திய சமூகத்தின் வேர்க்கால் மட்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திய ஒன்றியத்தில் உள்ள பெரும்பான்மைவாதம் என்பது ஒருவகை இந்துத்துவ உடலரசியலே. உண்மையில் ஆர்.எஸ்.எஸ். ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களாக உள்ள பெண்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்துகள் மற்றும் சிறுபான்மை மக்களின் ஒருங்கிணைப்போ அவர்களை பிரதிநிதித்துவம் செய்வதோ அல்ல. மாறாக, மிகச்சிறு சிறுபான்மையான பார்ப்பனர்களின் கருத்தியலை ஆழ்மன அளவில் ஏற்ற உடல்களாக கட்டமைக்கப்பட்ட பார்ப்பனிய நகல் உடல்களே இங்கு பெரும்பான்மை உடல்களாக கருதப்படுகிறது.**

உருவாக்கியுள்ளது. ஆனால், அதனை ஒரு திட்டமிட்ட அமைப்பு வடிவமாக அவை வெளிப்படுத்துவதில்லை. அதற்கான உறுப்பினர்கள் யாருக்கும் அடையாள அட்டைகூட வழங்கப்படுவதில்லை. அவ்வமைப்புச் சட்டம் பிரிவு 7(ஆ) ஒவ்வொரு ஷாகாவும் அதில் செயல்படும் அல்லது செயல்படாத ஸ்வயம்சேவக்குகளின் விவரங்கள் அடங்கிய பதிவேட்டினைப் பராமரிக்க வேண்டும்" என்கிறது. ஆனால், அப்பகுதிகளில் நடைபெறும் கலவரங்களின் விசாரணைகளின்போது அப்பதிவேடுகள் இல்லை என்பதாக கமிஷன் முன் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வமைப்பு உருவாக்கப்பட்டது 1925இல் என்றாலும், அது காந்தி படுகொலைக்கு பின் தடை செய்யப்பட்ட 1948 வரை அதற்கென்று ஒரு அமைப்பு சட்டமே கிடையாது. முழுக்க தனிநபர்கள் வழியாக தொடர்புகளைக் கொண்டதாக அது அமைந்துள்ள ஒரு ரகசிய அரசை கவிழ்க்கும் பண்டையக்காலசதிகார அமைப்பைப்போலவே அதன் செயல்பாடுகள் அமைந்துள்ளது. 1948இல் அதன் தடைநீக்கத்திற்கு அரசு முன்வைத்த நிபந்தனை அதன் அமைப்புத் திட்டத்தை சமர்பிக்க வேண்டும் என்றும், அது தனது வடிவத்தை வெளிப்படையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுவே. 1948இல்தான் கோல்வால்கர் தலைமையில் அதன் அமைப்புத் திட்டம் வழக்கம்போல் பல உள் முரண்பாடுகளையும், குழப்பத்தையும், அவர்களுக்கே உரிய வினோத விளக்கங்களையும் கொண்டதாக ஒன்றை சமர்பிக்கிறது. அவ்வமைச் சட்டம் அடிப்படையில் நவீனத்துவம் உருவாக்கிய அரசியல் கட்சி என்கிற வரையறைக்குள் வராத ஒரு உடலரசியல் அமைப்பிற்கான வேட்கையாக உள்ளது.

மூவர்ண தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தாமல் தங்களது 'பக்வா த்வஜ்' என்கிற காவிக்கொடிக்கு வணக்கம் செலுத்தி வந்த அந்த அமைப்பு முதன்முறையாக மூவர்ணக்கொடியை "தேசியக் கொடிக்கு விசுவாசமாக இருந்து மரியாதை செய்வது ஒவ்வொரு குடிமகனின் கடமை என அங்கீகரிக்கும் அது நேரத்தில், சங் அமைப்பிற்கென்று ஒரு கொடி இருக்கிறது, பக்வா த்வஜ் எனப்படும் அக்கொடி இந்துக் கலாச்சாரத்தின் புராதன சின்னம்" என்கிறது பிரிவு 5இல். ஆனால், இதுநாள்வரை சுதந்திர தினம், குடியரசுதினங்களில்கூட ஆர்.எஸ்.எஸ். தேசியக் கொடியை ஏற்றி வணக்கம் செலுத்தியதில்லை. அரசு கேட்டதற்கு இணங்க நிர்வாகிகளின் தேர்தல் முறையை அறிவித்தது. ஆனால் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை குறித்து எந்தவித அமைப்பு விதியும் அதில் இல்லை. ஒருவர் அவ்வமைப்பில் உள்ளாரா இல்லையா என்பதை அவரே சொன்னால் ஒழிய யாரும் அறிந்துகொள்ள முடியாது. அது தன்னை ஒரு வெளிப்படையான அமைப்பாக, தனது அரசியலை நேரடியாக மக்களிடம் கொண்டு செல்லும் ஒன்றாக வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. அதனது ஆதரவுடன் உருவாக்கப்பட்ட கிளை அமைப்புகள் குறித்தும் அதற்கும் அவ்வமைப்பிற்கும் உள்ள தொடர்புகள் குறித்தும் எதுவும் அவ்வமைப்பு சட்டத்தில் இல்லை. ஆனால் இந்திய ஒன்றியத்தை மிகவும் நுட்பமாக 11 மாகாணங்களாக (ஷேத்ரா) பிரித்து தனது அமைப்பு வடிவத்தை உருவாக்கி உள்ளது (2008, 14). இதன்பொருள் அடிப்படையில் மொழிவாரி மாநிலங்கள் என்கிற அமைப்பை அது ஏற்கவே இல்லை. அதன் உள்தர்க்கம் ஒன்றுதான் ஏக இந்தியா அதாவது பாரத். இந்துக்களின் புனித பூமி என்பது.

அமைப்பு வடிவம் என்பது வழக்கமான பல்வேறு அமைப்புகள், கட்சிகள், இயக்கங்கள் போல இல்லாமல் ஒரு நுட்பமான அடிப்படையான வேறுபாட்டைக் கொண்டிருப்பதை காணமுடியும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியத்தின் இந்து என்று ஆங்கிலேயர்களால் அடையாளமிடப்பட்ட பெரும்பான்மை மக்களை ஆரிய சனாதன தர்மாவிற்கும், பண்பாட்டிற்குள்ளும் ஏற்ப தகவமைத்தல் அல்லது ஒரு புதிய இந்துத்துவ உடலாக அவர்களை உருவாக்குதல் என்பதே. அவ்வகையில் ஆர்.எஸ்.எஸ். என்பது ஒரு அமைப்பு அல்ல அடிப்படையில் அது மனிதர்களை சனாதன பார்ப்பனியர்களுக்கான அடிமைகளாக மறுவார்ப்பு செய்யும் ஒரு ஸ்யம்சேவக் உடலரசியல் தொழிற்சாலை என்பதை புரிந்துகொள்வது அவசியம். அரசியலில் இரண்டுவகை உண்டு. ஒன்று பாரிய அரசியல் (*macro politics*) மற்றது நுண்அரசியல் (*micro politics*). ஆர்எஸ்எஸின் அரசியல் நுண்அரசியல் தன்மைக் கொண்டது. நுண் அரசியல் என்பது வெளிப்படையாகத் தெரியாது. அது ஒரு நிறுவனமாகக் கட்டமைக்கப்படும் உடலரசியல்.

### பெரும்பான்மைவாதம் எனும் உடலரசியல்

இந்திய ஒன்றியத்தில் உள்ள பெரும்பான்மைவாதம் என்பது ஒருவகை இந்துத்துவ உடலரசியலே. உண்மையில் ஆர். எஸ்.எஸ். ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களாக உள்ள பெண்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்துகள் மற்றும் சிறுபான்மை மக்களின் ஒருங்கிணைப்போ அவர்களை பிரதிநிதித்துவம் செய்வதோ அல்ல. மாறாக, மிகச்சிறு சிறுபான்மையான பார்ப்பனர்களின் கருத்தியலை ஆழ்மன அளவில் ஏற்ற உடல்களாக கட்டமைக்கப்பட்ட பார்ப்பனிய நகல் உடல்களே இங்கு பெரும்பான்மை உடல்களாக கருதப்படுகிறது. அவை அனைத்துமே நுண்பாசிச உடல்கள். அதாவது அளவில் சிறுபான்மையாக உள்ள பார்ப்பனர்கள், ஆளும் கருத்தியல் என்ற பண்பில் பெரும்பான்மையாக உள்ளனர் என்பதே. சற்று நிதானித்து சிந்தித்தால் சொல்லவரும் கருத்து புரிந்துகொள்ள எளிமையானதே.

மார்க்சியக் கோட்பாட்டில் கூறினால், பண்பாட்டு மூலதனம் (*cultural capital*) பார்ப்பனியரிடமும், பொருளியல் மூலதனமும் (*economic capital*) பனியாக்களிடம் குவிக்கப்பட்டுள்ளதால்தான் இன்றைய பாஜக அரசு அனைத்து அறமற்ற உத்திகளைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. இதற்கு மூளையாக செயல்படுவது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வடிவமற்ற வடிவமே. இந்த வடிவமற்ற வடிவம் என்பது ஒவ்வொரு இந்து, இஸ்லாமிய, கிறித்துவ மதஉடலாக தன்னுடலை பெருமிதமாக எண்ணும் அனைத்து மத உடலுக்குள்ளும் உட்திணிவாக்கப்பட்டுள்ளது (*internalised*). சைவ சித்தாந்திகள் இதனை உள் உரு (*subtle body*) என்பார்கள். இதனை தன் நுண்ணுணர்வால் கண்டுகொண்ட பெரியார் பார்ப்பனியமே முதன்மையான எதிரி என்பதை கண்டுணர்ந்து அறிவித்தார்.

பார்ப்பனியம் ஒவ்வொரு உடலுக்குள்ளும் உள்ள நுண்ணுடலான பார்ப்பன உடலே. அதுதான் இந்துத்துவாவின் உடலரசியல். ஒவ்வொரு இந்திய ஒன்றிய உடலுக்குள்ளும் ஒரு சனாதன வர்ண பார்ப்பன உடலை உள் உருவாகக் கட்டமைப்பது. நமக்குள் இருக்கும் இந்த பார்ப்பன உடலை அறிந்து அதனை முற்றிலுமாக வெளியேற்றாமல் எந்தவித மாற்றமும், மாற்று அரசியலும் சாத்தியமில்லை. பார்ப்பனிய நலனை பார்ப்பனரல்லாத பெரும்பான்மை மக்கள் தங்கள் நலனாகக் கருதி வாதிடுவதும், அதற்காக போராடுவதும் ஏன் உயிரைவிடவும் தயாராக இருப்பதற்கு காரணம், நமக்குள் உட்கார்ந்து கொண்டு நம்மை இயக்கும் இந்த பார்ப்பன உள் உடலே. அது ஏற்படுத்தும் இறைசார், மதம்சார் கிளர்ச்சியை பக்தியாகக் கருதும் ஒரு நுண்ணரசியலே இதன் அரசியலாக உள்ளது.


**பயன்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள்**

1. 2005, பகவான், தமிழில் முனைவர் சிவ. சண்முகம், ஆதி சங்கரரின் மக்கள் விரோதக் கருத்துகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை – 24

2. 2008, Arun Anand, Know About RSS, Prabhat Books

3. 2019, Sunil Ambekar, The RSS Roadmaps for the 21st Century, Rupa Publishing India Pvt. Ltd, New Delhi

4. 2019, ஜமாலன், தலித் சினிமா, நிழல், சென்னை – 83

5. 2020, ஜமாலன், உடலரசியல், காலக்குறி, சென்னை – 66

6. 2022, ஏ.ஜி. நூரானி, தமிழில் ஆர். விஜயசங்கர், ஆர்எஸ்எஸ் இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தல், பாரதி புத்தகாலயம், சென்னை – 18.


---


கட்டுரையாளர்: எழுத்தாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.மோகன்ராஜன்

# வழிபாட்டு அரசியலும், அரசியல் வழிபாடும்!

பகுதி-2

தமிழ்நாட்டில் கீழடியை, தொல்பொருள் ஆதாரங்களை, தடயங்களை, வரலாறுகளை ஒன்றிய அரசின் கீழுள்ள தொல்லியல் துறை திருத்த வேண்டும் என்கிறது. அறிவியல் என்பது பாஜக பரிவாரங்களுக்கு முற்றிலும் எதிரான ஒன்று. நம்பிக்கை மட்டுமே அவர்களது மூலதனம். புஸ்பகவிமானம் இருந்தது, சரஸ்வதி நதி இருந்தது. வாசுகி பாம்பு இருந்தது. மகாபாரதத்தில் ஏவுகணை இருந்தது. அந்தக் காலத்திலேயே பிள்ளையார் அறுவை சிகிச்சையால் தலை மாற்றப்பட்டவர். இராமன் கட்டிய சேதுபாலம் வங்கக் கடலுக்கு அடியில் இருக்கிறது அனுமன் அங்கு உலவிக்கொண்டிருக்கிறார் அதைத் தாம் பார்த்தாக பிரதமர் மோடி வரை புனைகிறார். இவையெல்லாம் என்ன? அவர்கள் - ஆரிய புதல்வர்கள் தாம் வந்தேறிகள் அல்லர் இந்த மண்ணின் மைந்தர்கள் என்று சொல்வதற்கான அடையாள அரசியல். ஆனால், புனைவுகளும் புராணங்களும் அறிவியல் ஆதாரங்களாக ஒருபோதும் ஆக முடியாது. அறிவியல் ஆதாரங்களை மண்ணிலிருந்து மட்டுமே எடுக்க முடியும். விண்ணில் உலவும் கற்பனையிலிருந்து எடுக்க இயலாது. ஆனால், புராணங்களையும் கட்டுக் கதைகளையும் அவர்கள் அறிவியல் என்று சொல்கிறார்கள். அறிவியல் என்று சொல்வதானால் மட்டும் அவை அறிவியல் ஆகிவிட முடியாது.

எல்லா அறிவியலும், அறவியலும் இருந்ததாகச் சொல்வதானால் ஒரு மேம்பட்ட அறிவியலில் முன்னேறிய சமூகம் ஒன்று இங்கு இருந்திருக்கும் அதற்கான தடயங்கள் கிடைத்திருக்கும். ஒரு விமானத்தின் எஞ்சிய பாகங்களோ ஏதோ ஒரு உலோகத்தின் ஏதோ ஒரு பகுதியோ கிடைத்திருக்க வேண்டும். அப்படிக் கிடைத்திருந்தால் மேற்செல்லவோ, ஆய்வுக்கு உட்படுத்தவோ முடியும். நாவில் எழுதப்பட்ட கற்பனைகளுக்குக் காற்றில்தாம் தடயத்தைத் தேட வேண்டும்.

அறிவியலில் முன்னேறிய சமூகம் என்றால் அதன் தொடர் வளர்ச்சி என்பது கற்காலத்திற்குத் திரும்புவதாக இருந்திருக்க முடியாது. கற்காலத்திலிருந்து மேம்பட்ட வளர்ச்சி அடைந்த சமூகமாகவே இன்றைய சமூகம், இந்திய சமூகம் இருந்திருக்க வேண்டும். யாரும் அந்த அறிவியலையோ, தடயங்களையோ களவாடிக் கொண்டு சென்றிருக்க இயலாது. இயற்கைப் பேரிடர் போன்றவற்றால் முற்றிலும் இப்புவி அழித்து எழுதப்பட்டாலும் இந்த மண்ணில் வெகுகாலம் முன்பு வாழ்ந்த டினோசரஸ், அதற்குப் பிந்தைய விலங்குகள், முதுமனிதனின் எலும்புகள் இன்றைக்கும் கிடைக்கத்தான் செய்கின்றன. அவை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் காலங்கள் ஆய்வாளர்களால், ஆய்வகங்களில் கரிம சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வெகு துல்லியமாகக் கண்டறியப் படுகின்றன.

விமானம் அல்லது ஏவுகணைத் தொழில்நுட்பம் பொறியாளர் ராமன் கட்டிய சேதுபாலம் போன்றவை இன்றைக்கு மேம்பட்டத் தொழில்நுட்பத்தில் இந்தியா பிற நாடுகளை விஞ்சியிருக்க வேண்டும். அந்தத் தொழில்நுட்பத்தின் தொடர்ச்சி அதனை சாதித்துக் காட்டியிருக்கும். அறுவை சிகிச்சையில் பலபடிகள் முன்னேறி மூளை மாற்று சிகிச்சையில் இந்திய மருத்துவத்துறை மெடிக்கல் மிராக்கில் என்று சொல்லும் அளவிற்கு அதன் அபார வளர்ச்சி தொடர்ந்திருக்கக்கூடும். அத்தகையத் தொடர்ச்சி, வளர்ச்சி வரலாறு ஏன் தடைபட்டது? எப்படித்தடைபட்டிருக்கக்கூடும்? வழி வழி வந்த அந்த மேம்பட்ட அறிவு, அறிவியல் வளர்ச்சி என்னவாயிற்று? எல்லா வரலாறுகளும் எழுதப்பட்டபோதும், ஊர்தோறும், கோவில்கள் தோறும் கோவில் தலங்கள் தோறும் அவற்றிற்கென்று எழுதப்பட்ட, புனையப்பட்ட பல ஆயிரம் கதைகளைப் போல ஏன் அறிவியல் ஆய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி வைக்கப்பட்டிருக்கவில்லை? கோவில் ஆகமங்கள், மநு சட்டங்கள், ஸ்மிருதிகள், தல புராணத்தின் அச்சுவடிவங்கள் எல்லாம் இருக்கின்றன. பிற தடயங்கள் நிலத்திற்கடியிலோ, வாய் மொழி வழக்காகவோ ஏன் இந்த அறிவியல் ஆய்வுகள், அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குத் தொடர்ச்சி இல்லாமலாயிற்று? நாளந்தா போன்ற பல்கலைக் கழகங்களின் ஆய்வுகள் அதன் தொடர்ச்சிகள் இப்போது என்னவாக இருக்கின்றன? வெற்றுப் பெருமைக்காகப் பேசுவதைவிடக் கீழடியைப் போல அவற்றுக்கான வரலாற்றுத் தடயங்களை, ஆவணங்களை ஒன்றிய அரசு வெளியிட முன்வரும் என்று சொல்வதற்கில்லை. இப்படியான புரட்டுகளைத் தொடர்ந்து பேசுவதன் வழி தமக்கான அரசியலையும், பார்ப்பனத் தலைமையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவுவே இந்தக் கதையாடல் அரசியல் இருக்கிறது.

மகாபாரதக் கால வரைபடத்தை வெளியிடுகிறார்கள். அந்த அகண்ட பாரதத்தை இலக்காக வைத்துதான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பே தொடங்கப் பெற்றது. ஆனால், மகாபாரதக் கதையின் எந்த ஒரு தடயத்தையும் நிலத்தின் மேலாகவோ கீழாகவோ கண்டறிய முடியவில்லை. இராமாயண சித்தரிப்புகள் ஆரிய-திராவிட போராகவும், திராவிட வெறுப்பு இதிகாசமாகவுமே இருக்கிறதே தவிர, நிலத்தில் அதன் தடயங்கள் ஒன்றுமில்லை. திராவிடர் மேல் எவ்வளவு வன்மம் இருக்கிறது என்பதே இராமாயணம். பழியுணர்ச்சி காவியம். திராவிடப் பகையின் இலக்கிய வகைமையில் ஒன்று. அதைத் திராவிடர்களே போற்றுவதுதான் அவலம். உலகத்தில் வேறு எங்கும் இப்படி ஓர் இனத்திற்கெதிராகத் பிறிதொரு இனம் காவியம் எழுதியதாகச் சரித்திரம் இல்லை. ஒடுக்கும் இனத்தின் வரலாற்றை ஒடுக்கப்பட்ட இனம் கொண்டாடுகிறது என்பது வரலாற்றுத் துயரமே.

வேதங்களைக் கற்பதற்கோ, தியான யோக முறைகளைச் செய்வதற்கோ ஆரியர்களைத் தவிர அனைவருக்கும் ஆகப்பெரிய தடை இருந்தது. இராமாயணத்தில் திராவிட அல்லது பழங்குடி குகனை சகோதரனாக அணைக்கும் கைகளாலேயே மறைந்திருந்து வானர இனத்தைச் சேர்ந்த சுக்கிரன் துணையுடன் அவன் சகோதரன் வாலியை இராமன் அம்பெய்து கொல்கிறான். இங்கிருந்தே சகல பிளவு அரசியலும் தொடங்குகிறது. பிரித்தாளும் அல்லது பிளவு அரசியல் ஆரியர் அறமாகவே இருக்கிறது. போரறமாக இருக்கிறது. போலவே தியானம் செய்துகொண்டிருந்த சம்புகனையும் இராமன் கொல்கிறான். சூத்திரன் எவன் ஒருவனுக்கும் தியானம் செய்யும் உரிமை கிடையாது என்பது மநுநீதி; ஆரிய நீதி; ஆரிய அரசியல் நீதி. இராமாயணம் என்பது மநுநீதியின் சட்ட வடிவமே.

இராமாயணம் வழிபாடாக, வழிபாட்டு அரசியலாகத் தொடர்ந்து முன்னெடுக்கப் படுகிறது. இராமன் இந்திய முதல் குடிமகன்; கதாநாயகன்; கடவுள்; நவீன அரசியல் வடிவம்; பண்டம். பெரியார் ஆண்டானின் கடவுளை அடிமைகள் ஏற்பதை எதிர்த்தார். வரலாற்றில் தமக்கு எதிரான கடவுளை வணங்கும் ஒரே இனம் திராவிட இனம் என்றார். ஆரியர்கள் திராவிட மன்னன் ராவணனை வரலாற்று எதிரியாக்கினர். திராவிடர்களோ தமது இனத்தின் எதிரியான ராமனை வரலாற்று நாயகனாக்கினர். இது ஆரியர் வெற்றி. ஆரிய அரசியலின் வெற்றி. ஆரிய ஆன்மிக அரசியலின், வழிபாட்டு அரசியலின் வெற்றி.

எந்த இராமனை ஆரியர் தமது அடையாளமாக்கினார்களோ அந்த இராமனைப் பெரியார் எதிர்ப்பின் வடிவமாக்கியது இயல்பாக நிகழ்ந்தது. தாய்வழிச் சமூகமான திராவிடர்களால் தந்தைவழி ஆரிய சமூகத்தின் இராமனைத் திராவிடர்கள் ஏற்பது மனதளவில் ஒவ்வாமையைத் தரக்கூடிய ஒன்று. மேலும், மகாபாரத பாஞ்சாலியைப் பெண்ணியத்தின் குறியீடாகக்கூட ஆரியர்கள் முன்னிருத்த விரும்பவில்லை. புராணத்திலும் கூட பெண்ணியக் குரல்கள் நசுக்கப்படுவதாகவே இருந்ததை பாஞ்சாலியின் கதையைத் திராவிடக் கருத்தியல்வழி புரிந்துகொள்ள முடியும். இராமாயணத்தில் இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையின் ஒழுக்கம், கற்பின் மீதான அய்யத்தின் பேரில் இராமன் நெருப்பில் இறங்கச் சொன்ன அவலம் ஆரிய முற்போக்குகளால் [அப்படி ஒன்று இருந்தால் (!)] முன்னெடுக்கப்படவேயில்லை. அது வெறும் பட்டிமண்டப விவாதங்களின் ரசனையாகவே முடிந்துவிட்டது. திரௌபதி என்ற பாஞ்சாலியைக் கடவுளாக்கி அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாடலும் வழிபாட்டுச் சடங்குடன் மவுனிக்கப்பட்டது. ஆரிய வரலாற்றில் பெண் எதிர்ப்புக் குரல்கள் காலந்தோறும் சுயமாக வெளிப்பட்டிருக்கவில்லை. அப்படி வெளிப்பட்டவர்களின் குரல்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு அவர்கள் வரலாற்றில் அக்கினியில், நெருப்பில் இடப்பட்டார்கள். மகாபாரதத்தில் திருநங்கை அம்மைக்கு எந்த ஒரு மதிப்பும் இருந்திருக்கவில்லை. அகலிகை கல்லாக சபிக்கப்பட்ட கதையாடலை நந்தனுடனும், வடலூர் இராமலிங்கனாருடனும் கூட ஒப்பிட்டுக்கொள்ள முடியும். நந்தனும், வடலூர் வள்ளலாரும் நெருப்பில் எரியூட்டப்பட்டனர். அப்படித்தான் தில்லைவாழ் அந்தணர்கள் கதையாடினர். அவ்வாறே சூத்திர நந்தனுக்கு சிவபெருமான் காட்சி தந்த கடுப்பில் அவரை நெருப்பில் வீசினர். சிவபெருமானுக்குக் கண்கொடுத்த கண்ணபிரான் ஜோதியில் கலந்தார். இவர்கள் எல்லாம் கடவுளுக்கு நெருங்கிய சூத்திரர்கள். கருவறையை நெருங்கியவர்கள். அல்லது ஆரியரின் ஆன்மிக ஆக்கிரமிப்பாளர்களில் ஒருவரான சிவபெருமான் போன்ற கடவுள்களைத் தமது பக்தியால் நெருங்க முயன்றவர்கள்.

வள்ளலாரோ ஆரிய பார்ப்பனக் கடவுள் வணிகத்தை,புரட்டை ஆழப்புரிந்துகொண்டவர். மாற்றுக் கடவுளை வழிபாட்டை உள்ளிருந்தே கண்டடைய முயன்றவர். பின்னர் அதிலிருந்து தனி வழியை அடைய முயன்றவர். அவரது உருவமற்ற ஜோதிவடிவம் அவர்களது ஆன்மிகக் கதையாடலுக்கும், அரசியலுக்கும் மிகப் பெரிய சவாலாக, எதிராக இருந்தது. அதிர்ச்சியாக இருந்தது. எனவே, இராமலிங்கனார் அவர் உருவாக்கிய சோதியிலேயே கரைக்கப்பட்டார். கருக்கப்பட்டார். இங்கு ஆரியருக்கு அக்னி தேவனாக இருப்பதும், இந்திரனாக இருப்பதும் புரிந்துகொள்ளக்கூடியதே.

ஆரியர் தமது வழிபாட்டின் அரசியலை, வலிமையை நன்கு புரிந்துகொண்டவர்கள் அதனால்தாம் அதைத் தொடர்ந்து அரசியலுடன் இணைத்தே வந்துள்ளனர். மன்னர்களைக் கொண்டு கடவுளையும் தமது மதத்தையும் வாள் நுனியில் ஏற்கச் செய்வது. வழிபடத் தடுப்பது. இயன்றால் அவர்களது கடவுள்களைத் தன் கடவுளாக உட்செரிப்பது. தத்துவ வாதங்களில் வென்றதாகச் சொல்லி மாற்று வழிபாட்டாளர்களைக் கொடூரமாகக் கொல்வது. நிலங்களை ஆக்கிரமித்தவாறே வழிபாட்டுத் தலங்களை இடித்துத் தள்ளுவது இதுவே அவர்களது ஆன்மிக அரசியலாக அன்று முதல் இன்றுவரை இருந்துவருகிறது.

சமணமும், பவுத்தமும் பெரும் செல்வாக்குப் பெற்ற காலத்தில் நந்தவம்சத்தை அழித்ததோடல்லாது வரலாற்றில் அவர்களது மடாலயங்களை, துறவிகளை, வழிபாட்டாளர்களை மன்னர்களை ஒட்டுமொத்த வம்சத்தையும் அழித்தொழித்தார்கள். நந்தவம்சம் என்பது வரலாற்றில் சூத்திர வம்சமாயிற்று. கி.மு. 5 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.மு. 320 ஆம் ஆண்டுவரையிலும் சந்திரகுப்தமவுரியன் ஆட்சிக்கு வரும் வரை சுமார் 100 ஆண்டுகள் நந்த வம்சம் ஆட்சி செய்தது. மகாபத்மன் தொடங்கி நந்த வம்சத்தின் கடைசி மன்னன் தனநந்தன் வரையிலும் தமிழ்நாட்டுடன் சிறப்பான கலை பண்பாட்டு அரசியல் தொடர்பில் இருந்தனர். ஆனால், மவுரியர் ஆட்சி காலம் தமிழ்நாட்டு அரசுகளுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தனர்.

சங்கப்பாடலின் மாமூலனார் கூறும் வம்பமோரியர் எனும் மவுரியர் ஆட்சி (கி.மு. 3) காலம் பார்ப்பன நெறிக்கும், வாழ்விற்கும் அச்சுறுத்தலாக இருந்தது. மவுரிய மன்னன் பிருகத்ரனைக் கொன்று அவன் தளபதி புஷ்யமித்ரன் ஆட்சிக்கு வருகிறான். புஷ்யமித்ரன் பார்ப்பனன். எனவே சமண, பவுத்த மதங்களின் ஆதரவு பெற்ற மவுரிய ஆட்சி புஷ்யமித்ரனால் முடிவுக்கு வரவும் புஷ்யமித்ரனால் என்றுமில்லாத வகையில் பார்ப்பன ஆட்சி எழுச்சிபெறத் தொடங்கிற்று. முதன்முதலில் அரசவையில் அசுவமேத யாகத்தை நடத்தியவன் புஷ்யமித்ரனே. இன்றைக்கு அவனது வழித்தோன்றல்கள் நாடாளுமன்றம் வரையிலும் கொண்டு வந்து அந்தச் சடங்கை, தீயை அணையாமல் காக்கின்றனர். பாஜக அரசு புதிய நாடாளுமன்றத்தில் யாகங்கள் நடத்தியது நினைவிருக்கலாம். நாடாளுமன்றமும், மக்களாட்சியும் நவ புஷ்யமித்திரர்களின் மடாலயங்களாக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றில் இந்துத்துவ அரசியல் மேலே வரும் போதெல்லாம் நவ புஷ்யமித்ரன்கள் தோன்றுவார்கள் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுத்தர்களை, சமணர்களை வதைக்கவும், நாடு கடத்தவும் செய்கிறான் புஷ்யமித்திரன். அசோகர் காலத்திய 84 ஆயிரம் பவுத்த மடங்களை இடித்துத் தள்ளுகிறான் அவன். இந்த இடித்துத் தள்ளும் பார்ப்பன புஷ்யமித்ரன் மரபைத்தான் அவர்களது மித்ரர்கள் இன்றைக்கும் உத்திரப்பிரதேசம் தொடங்கி பீகார் வரையிலும் தொடர்கிறார்கள். புல்டோசர் அரசியல் புஷ்யமித்ரனின் நவீன வடிவம். மத சகிப்பு என்பது அவர்களது வரலாற்றில் மிகப் பெரிய அச்சுறுத்தலான சொல். நந்த வம்சம், நாவீத வம்சம் என்றும் சமண பவுத்த மதங்களுக்கு ஆதரவளித்து பார்ப்பன மத மேலாண்மைக்கு ஒத்துழைக்காததால் மவுரிய மன்னர்கள் அசுரர்கள் என்றும், கடவுள் பகைவர்கள் என்றும் பார்ப்பனப் புராணங்கள் காழ்ப்பையும், வெறுப்பையும் கொண்டு மவுரியரை உமிழ்கின்றன.

தமது மேலாண்மைக்கு ஆதரவு தரும் மன்னர்கள், அவர்களது ஆட்சியையே அவர்கள் பொற்காலம் என்று புகழ்கின்றனர். அவர்களது புராணங்கள் பாலாறும், தேனாறும் ஓடியதாக புனையும். ஆரியர், தமக்கு ஆதரவு தரும் மன்னர்களின் அரியணை பக்கத்தில் அமர்ந்துகொண்டு, யாகங்களையும், மூடநம்பிக்கைகளையும் பெரும் மூலதனமாக்கி மக்கள் புரட்சி உருவாகாதவாறு கட்டமைக்கப்பட்ட தமது வேத, உபநிடத சூத்திரங்களை, சோதிடத்தை, கர்ம வினைப்பயன் உள்ளிட்ட விதிக்கோட்பாடுகளை மன்னரின் மூளையிலும், அவர்களது சட்ட நடவடிக்கைகளிலும் மெல்லத் திணித்தனர். பகுதி கலாச்சார நடவடிக்கையாகச் சோதிடம், கர்ம வினைப் பயன், சாதிக் கோட்பாடுகள், வழி எல்லாம் விதியின் படியே நடப்பதாக நம்பவைக்கப்பட்டனர். காலந்தோறும் ஆரியர், திராவிட எழுச்சியை உளவியல் வழியில் இப்படித்தான் தடுத்துவந்தனர். வாளால் முடியாததை, வாய்ஜாலத்தால் சாதித்தனர்.

அண்மையில் மோடி அரசு, பேரரசன் இராஜராஜனின் புதல்வன் இராஜேந்திர சோழனை மறுகண்டுபிடிப்புச் செய்து விழா எடுத்தது. அவ்விழாவில் இராஜேந்திர சோழனுக்கும் மாமன்னன் இராஜராஜ சோழனுக்கும் வானளாவிய சிலை அமைக்கப்படும் என்று கூறிச் சென்றதும் பார்ப்பனரின் பொற்காலமாக விளங்கிய இராஜேந்திர சோழனின் ஆட்சியைப் பிறிதொருவகையில் போற்றுவதும், நினைவுகூர்வது கடந்த காலப் பார்ப்பன அதிகாரத்தை, பொற்காலத்தை நினைவுகூரும், போற்றும் கடந்த கால வரலாற்று அரசியலின் பகுதியே ஆகும்.

மக்களிடையே வர்ண கலப்பை மன்னர்கள் எப்பாடுபட்டேனும் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும் என்பது பார்ப்பனர் எச்சரிக்கையாகவும், வலியுறுத்தலாகவும் இருந்தது. வர்ணங்களின் கலப்பு என்பது பார்ப்பனர் மேலாண்மைக்கும் அதன் இருப்புக்கும் வேட்டு வைத்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல. எனவே, வர்ண கலப்பைத் தடுக்கும் மன்னர்களை அவர்கள் புராணங்கள் வழியும், யாகங்கள் வழியாகவும் போற்றிப் புகழ்ந்தனர். மன்னர்களும் தமது இருப்புக்கு இப்படியான பிளவு அரசியல் தேவைப்படுவதையும் உணர்ந்தனர். சாதியாகப் பிரிந்து ஒருவருக்கு ஒருவர் பிளவுபட்டுக் கிடப்பதை மன்னராட்சிகள் மட்டுமல்ல மக்களாட்சியும் ஒருவகையில் ஏற்கத்தான் செய்யும் என்பதே மநுவின் தொடர் இருப்பும் அதன் ஆட்சி இன்றும் தொடர்வதற்கு காரணமாகும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். சாதிக் கலப்பு பார்ப்பன இருப்பை சிறுபான்மை ஆக்கிவிடுவதுடன் அவர்களது சமூக அரசியல், அதிகார மேலாண்மையை ஒழித்துக் கட்டிவிடும் என்பதும் அவர்களது வரலாற்று மரபு வழி அச்சமாகும்.

சாதவாகனர்கள் ஆந்திரப் பகுதியை மிகுந்த செல்வாக்குடன் ஆட்சி செய்தனர். (கி.மு.1 முதல் கி.பி. 2வரை) இவர்களில் கவுதம புத்த சாதகர்னி (106-130) இவன் சத்திரியரின் அகந்தையை அடக்கியது மட்டுமல்லாது நான்கு வர்ணங்களுக்கிடையே கலப்பு நிகழ்வதைத் தடுத்தான் (வருணஜாதி உருவாக்கம்-குவே. கி.ஆசான்) என்று ஆரிய பார்ப்பனர்களால் வரலாற்றில் புகழப்படுகிறான். அவர்களது ஆட்சியில் வேதம் மற்றும் வேள்வி செய்யும் பார்ப்பனருக்கு பிரம்மதேயங்கள் (கிராமங்கள்) இலவசமாக அளிக்கப்பட்டன. மேலும், அவர்களுக்குச் சொத்தில் வரிவிலக்கும் அளிக்கப்பட்டிருந்தது.

கி.மு.2 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படும் பார்ப்பன சட்ட நூலான மநு நூல் மன்னர்களுக்கான சட்ட வழிகாட்டுதல்களை வழங்குகிறது. எந்தவிதமான இரக்கமும் காட்டாத இன்றைய அரசியல் மொழியில் சொன்னால் ஒரு பாசிச சட்ட முறை ஒன்றைச் சமூக அரசியல் சட்டமாக மநு என்ற மன்னன் இயற்றுகிறான். இவன் அரசனை உயர் தலைவனாக்கி வழங்கும் தண்டனைகள் மனித நேயமற்றவையாகும். வருண கலப்பைத் தடுப்பதற்கும், சாதிகளை உருவாக்கி அவை ஒன்றுக்கொன்று உறவு கலவாத வகையில் நடைமுறைப்படுத்துவதற்கும் மன்னனுக்கு மநு கட்டளையிடுகிறான். மேலிருந்து கீழாக கட்டுக்கோப்பான, கட்டுக்குலையாத அரசு மற்றும் சமூக அமைப்பொன்றை நிறுவிச் செல்கிறான். அதற்கான விதிமுறைகளை அவன் கடும் தண்டனைகளுடன் கூடியதாக நிறுவுகிறான்.

அரசனே சமூக, அரசியல் ஆட்சித் தலைவன்; கடவுள். ஆரியர் அரசனை இந்திரன் என்று சொல்வார்கள். எனவே இந்திரனின், அரசனின் ஆட்சிக்கும், சொற்களுக்கும் மறுப்பு இல்லை மாற்று இல்லை. திராவிடர்களுக்கு அப்படியான சகல அதிகாரங்களும் வழங்கப்பட்ட தலைவன் இல்லை. இனக்குழுத் தலைவருக்கும் முழு அதிகாரம் கிடையாது. தலைவன் உண்டு; ஆனால், அதிகாரம் பரவலாக்கப் பட்டவையாகவே இருந்தன.

சிந்து சமவெளி முதல் கீழடி வரையிலும் இதுதான் திராவிடர் சமூக அரசியல் ஏற்பாடு. ஆரியருக்குத் தலைவனே கடவுள், தலைவனே அரசன். அவன் ஒப்பாரும் மிக்காருமற்றவன். இதனால்தான் அரசனின் தலைமேல் அமர்ந்துகொண்டு பார்ப்பனர் அரசாள முடிந்தது. தலை போனால் மன்னின் தலைதான் போகும் பார்ப்பனர் குடுமிகூட போகாது. எனவேதான் சட்டம் வகுக்கும் மன்னனையே சட்டத்திற்கு உட்படுத்தும் விதிமுறைகளை, மன்னனான மநுவே அப்படியான சட்டங்களை, யாத்து சமூக அரசியல், அதிகார ஒழுங்கை நிறுவுகிறான். இதை அம்பேத்தகர் தெளிவாக எடுத்துரைக்கிறார். அரசனானவன் வைசியர்களை வாணிபத்திலும், கொடுக்கல் வாங்கலிலும், விவாசாயத்திலும், அல்லது கன்று காலிகள் வளர்ப்பதிலும் ஈடுபடுத்த வேண்டும். அடிமை மக்களை பிராமணர்களுக்குச் சேவை செய்வதில் ஈடுபடுத்த வேண்டும்.

அரசனானவன் எல்லா நேரங்களிலும் தன் கடமையைச் செய்வதுடன் ஏற்கெனவே உள்ள ஒழுங்கைக் காப்பாற்ற உறுதியுடன் செயல்பட வேண்டும். ஏற்கெனவே உள்ள சமூக ஒழுங்கைக் காப்பாற்ற அரசன் தவறும்போது அரசன் சாதாரண மக்களைப் போன்று தண்டனைக்கும் சிறைவிதிப்பிற்கும் உள்ளாகிறான் என்பதை அம்பேத்கர் சுட்டிக்காட்டுகிறார். (அம்பேத்கர் நூல் தொகுதி-25 பக்87)

கீழ்க்குடியில் பிறந்த ஒருவனுக்கு ஒரு பணம் தண்டனை விதித்தால் அரசனுக்கு அளிக்கப்படும் தண்டனை ஆயிரம் பணமாக இருக்க வேண்டும். அவன் அந்த அபராதத்தை பூசாரிகளுக்குக் கொடுக்க வேண்டும். அல்லது ஆற்றில் எறிய வேண்டும். இது புனிதமான விதி என மநு அரசனுக்கே தண்டனையையும், எச்சரிக்கையையும் ஒருசேர விடுக்கிறான்.

அரசன் அசட்சையாக நடந்து கொள்ளும் போது அல்லது ஏற்கெனவே உள்ள சமூக அமைப்பிற்கு எதிராகச் செயல்படும்போது அவனைத் தண்டிக்க மநு மற்றொரு ஏற்பாட்டை வகுத்துத் தந்துள்ளான். அரசனுக்கு எதிராக பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் புரட்சி செய்யும் உரிமைதான் அது (மேலது நூலில் டாக்டர் அம்பேத்கர்)

ஆக அரசனின் அதிகாரம் என்பது நால்வருண அதிகார வர்கக்கத்தின் கைகளில் குறிப்பாக பார்ப்பன வருணத்தின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. இந்த நால் வருணத்தாரின் புரட்சி தோல்வி அடையவதற்கு வாய்ப்பில்லை. அப்படி அடைந்தாலும் அவர்களுக்கு அரசிற்கு எதுவித தண்டனை அளிக்கும் உரிமை கிடையாது. அரசனுக்கு மேலான பேரரசர்களாக இந்த நால் வருணத்தார் இருக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அரசனை நீக்கவோ, பதவியில் நீட்டிக்கவோ அல்லது அரசாளவோ நால் வருணத்தாரின் அனுமதியும், விருப்பமும் முக்கியம். அரசனின் அதிகாரம் அந்த நால்வருணத்தாரிலேயே தங்கியிருக்கிறது. இதில் இருக்கும் இன்னொரு செய்தி சூத்திரன் அரசனுக்கு எதிராக எக்காலத்திலும் புரட்சி செய்ய முடியாது என்பதுதான்.

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Paulo Freire கண்டடைந்த மானிட மேம்பாட்டுக்கும் சமூக மாற்றத்திற்குமான கல்வி!

## தோற்றம், முறைமை, விளைபயன் பற்றிய பார்வை

சென்ற இதழ் தொடர்ச்சி

### ஆசிரியர் - மாணவர் இடைவெளி

**'நான் உலகத்தை நேசிக்கவில்லையெனில், வாழ்க்கையை நேசிக்கவில்லையெனில், மனிதர்களை நேசிக்கவில்லையெனில், என்னால் உரையாடலில் ஈடுபட முடியாது'** என்ற அவரது கூற்று முக்கியமானது.

கற்றலுக்கும் கற்பித்தலுக்குமான புதிய அணுகுமுறை குறித்துச் சிந்திக்கத்தொடங்கிய அவர், மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையிலான இடைவெளியைக் குறைப்பதுவே உகந்த மைய அம்சமாகக் கண்டடைந்தார். ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையேயான உரையாடல் மூலம் 'மௌனக் கலாச்சாரம்' தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, சமத்துவ சமூகத்தை உருவாக்கவும் வழிகோலும் என்று கருதினார்.

1964 இல் பிரேசிலில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதையடுத்து, பவுலோ சிறைப்படுத்தப்பட்டார். பின்னர் நாட்டைவிட்டு வெளியேறி சிலி நாட்டிற்குப் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டார். அங்கு ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனத்தின் (United Nations Educational, Scientific and Cultural Organization - UNESCO) ஆதரவுடன் வளர்ந்தவர்களுக்கான கல்வித்திட்டங்களில் தனது பங்களிப்பினை வழங்கினார்.

சமத்துவம், பொறுப்புணர்வினை அடிப்படையாகக் கொண்ட பவுலோவின் கற்பித்தற் பாடத்திட்டம் 1959இல் அவரது கலாநிதி ஆய்வுக் கல்வியின் வழியாக முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து ரெசிபே பல்கலைக் கழகத்தில், பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அக்கற்பித்தல் முறைமையின் கோட்பாடும் நடைமுறையும்; மேலும் ஆழப்படுத்தப்பட்டது.

1973இல் சிலியில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பிற்குப் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறி அமெரிக்காவில் வசிக்க நேர்ந்தது. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ஆலோசகராக பணியாற்றினார். அங்கு அமெரிக்கக் கல்வியாளர் குழுக்களுடன் இணைந்து கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ந்தோர் கல்வித் திட்டங்களில் இணைந்து பணியாற்றினார். பின்னர் ஜெனிவாவில் உள்ள உலகக் கிருஸ்தவ சபைக்கு ஆலோசகராகப் பொறுப்பேற்றார்.

### கல்வியினூடு வாழ்வின் உட்பொருளை உணர்தல்

ஒருவர் தன்னுடைய சொந்த வாழ்வின் உட்பொருளை உணர்தல் என்பதே பவுலோவின் கற்பித்தலின் மைய அம்சம். நடைமுறை என்பது கட்டுண்டிருக்கும் ஒன்றல்ல, அசைவற்ற ஒன்றும் அல்ல. எம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு அமைப்பியற் கட்டமைப்பும் அசைவுகளைக் கொண்டது. பவுலோவின் கற்பித்தல் முறையில் மாணவர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் புதிய வாய்ப்புகளின் மூலம் கூடுதல் சுதந்திரத்தினையும் மேம்பட்ட வாழ்வை நோக்கியும் நகர்த்தப்படுகின்றனர். அவர்களின் வாழ்வுச்சூழல் தீர்வுகளைக் கண்டடைய வேண்டிய பிரச்சனைகளால் நிரம்பியது.

உலகம் அசைவற்றதல்ல. வாழ்க்கை என்பது ஒருவர் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப வாழ ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய 'யதார்த்தம்' அல்ல. வாழ்க்கை என்பது சுயாதீனமானதும் சுதந்திரமானதுமான பொறுப்பை உள்ளடக்கியது. ஒரு மதிப்பார்ந்த வாழ்க்கையை வாழவும் - வாழ்க்கையை மேம்படுத்தவும் - அடக்குமுறைகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






விடுபடவும்- சுயாதீனமாகச் செயல்பட வேண்டும். இதிலுள்ள முதலாவது பொறுப்பு என்பது தன்னையும் தனது அன்றாட வாழ்க்கையையும் உணர்வதைச் சுட்டுகின்றது. இதற்குப் பவுலோ தொழிலாளர்களுக்கான கற்பித்தல் அனுபவத்திலிருந்து ஒரு உதாரணத்தினை முன்வைக்கின்றார். ஒரு பாடநெறியின் தொடக்கத்தில், தொழிலாளி தன்னால் பெறப்படும் குறைந்த ஊதியத்தை 'நியாயமான ஊதியம்' என்று அழைக்கிறார். பாடநெறியின் முடிவில், அவர் அதனைச் 'சுரண்டல்' என்று அழைக்கிறார். அத்தகு தூரம் கற்பித்தற் செயல்முறைக்கூடாக உணர்தலிலும் அனுபவத்திலும் அறிதலிலும் பார்வையிலும்; அந்தத் தொழிலாளிக்குள் ஒரு மாற்றம் நிகழ்கின்றது.

மேலும் புவுலோ இந்தச் செயல்முறையை இவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார்:

**ஒவ்வொரு மனிதரும் தமது கருத்தை வெளிப்படுத்தும் உரிமையை மீளப்பெறுவதோடு, தம் வாழ்வின் உள்ளர்த்தத்திற்குப் பெயரிடுகின்றனர். இன்னுமோர் உதாரணத்திற்கு, இந்தக் கற்பித்தலில் எழுதவோ படிக்கவோ தெரியாத ஒரு ஏழைக் குடும்பத்தலைவி அல்லது விவசாயத் தொழிலாளி;, ஒரு உரையாடலில் பங்கேற்கும்போது,குறிப்பாகமுதன்முறையாகத் தமது, அன்றாடச் சூழலுக்கு வெளியே யாரோ ஒருவர் தங்கள் அனுபவங்களைச் செவிமடுக்க ஆர்வமாக இருப்பதை உணர்கிறார்கள். இதன் மூலம் அவர் தன்பற்றிய ஒரு புதிய விழிப்புணர்வைப் பெறுகிறார், தான் மதிக்கப்படுவதாக உணர்கிறார், புதிய நம்பிக்கையை, புத்தூக்கத்தைப் பெறுகிறார்.**

### மூலப்பொருண்மையியற் கடப்பாடு
### (Ontological responsibility)

பூமியில் குறிப்பிட்ட பொறுப்புகளை கொண்டிருப்பது மனித இயல்புகளில் முதன்மையானது என்பதை மனிதத்துவத்தை வலியுறுத்தும் தன் எழுத்துகளில் பவுலோ சுட்டுகின்றார். இவ்வகை முன்னெடுப்புகளின் நிபந்தனைகளை மனிதர்களின் 'மூலப்பொருண்மையியற் கடப்பாடு (*Ontological responsibility*) என்று அழைக்கிறார். இத்தகு கருதுகோளின் அடிப்படையில் அவர், ஒவ்வொரு மனிதனும் தனது வளமான வாய்ப்புகளைப் பயன்படுத்த என்ன வகையான கல்வி தேவை என்ற கேள்வியினை முன்வைக்கின்றார். 'விடுதலை அளிக்கும் கல்வி' என்று அதற்கு விடைகண்டு பெயரும் சூட்டுகின்றார்.

ஒரு மனிதன் சமூகத்திற் பங்கேற்பதற்கான முதன்மையான நிபந்தனை, அவன் பாதுகாப்பற்ற செயற்திறனற்ற, அடக்கப்பட்ட நிலையில் இருக்கக்கூடாது என்பதே. மறுவளமாகச் சொல்வதானால் பாதுகாப்பும் செயற்திறனும் கொண்டிருப்பதோடு விடுதலைச் சூழலில் (மன விடுதலை - சமூக விடுதலை) இருக்கவேண்டும். குழந்தைகளுக்கான கல்வி என்பது, அக்குழந்தை தன்னைச் சமமான பங்கேற்பாளராக உணர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேற்குலக நாடுகளில் வாழ்வோர் மத்தியில் மௌனக் கலாச்சாரம் நிலைபெற்றுவிட்ட ஒன்றாக உள்ளது. அது பல்வேறு முறைகளில் தனிமனிதர்கள் மத்தியில் பாதிப்புகளை உண்டுபண்ணுகின்றது. சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பலர் தமது உரிமைகளை வலியுறுத்துவதற்கு அவசியமான சொற்களை இழந்தவர்களாக, சொற்கள் கைவராதவர்களாக வாழ்கின்றனர். அச்சூழல்களில் பவுலோவின் கற்பித்தல் முறைமை மிக உகந்தது.**

ஒவ்வொருவரும் தங்கள் அடையாளத்தையும்; சுயமரியாதையையும் உருவாக்குவதற்குரிய வழிகாட்டல் மற்றும் ஆதரவைப் பெறவேண்டும். மாணவர்கள் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் எதிர்கொள்ளப்பட வேண்டும். மாணவர்களுக்கு அவர்களின் பொறுப்பை உணர்த்த வேண்டும் பொறுப்புணர்வை இழக்கச்செய்வது ஒரு மனிதனை எப்போதும் தாழ்த்திவைத்திருக்கும். நேர்மறையான அணுகுமுறைகளும் எதிர்கொள்ளல்களுமே காலப்போக்கில், சூழ்வுள்ள யதார்த்தத்தை உணர்த்தும். ஒடுக்குகின்ற யதார்த்தங்களை மாற்றுவதற்கு அவசியமான விமர்சனப்பூர்வமான அணுகுமுறைகளுக்கு அதுவே வழிசமைக்கும். இந்தச் செயல்முறையில், பாரம்பரியமான உயர்வு-தாழ்வு, ஆசிரியர்-மாணவர் போன்ற கட்டமைக்கப்பட்ட உறவுநிலைகள் மீறப்படுகின்றன. மனிதர்களுக்கு இடையிலான சந்திப்பில்-தொடர்பாடலில்-உரையாடலில் சமத்துவம் கொண்டுவரப்படுகின்றது, நிலைநிறுத்தப்படுகின்றது.

### ஃப்ரெய்ரின் கல்விமுறை வளர்ச்சியடைந்த மேற்குலகிற்குப் பொருத்தமா?

அடிப்படையிற் பார்க்கும் போது பவுலோ ஃப்ரெய்ரின் கல்விமுறை எழுத்தறிவில்லாதவர்களுக்கான கற்பித்தல் முறையாகவே தோற்றமளிக்கும். ஆனால் அவர் முன்வைத்த கல்விமுறையானது வளர்ச்சியடைந்த உலகுக்கும் பொருத்தமானது, அவசியமானது என்றே கருதப்படுகின்றது. பவுலோவின் கல்விமுறை வறுமை மற்றும் ஒடுக்குமுறைச் சூழலில் உருவாக்கப்பட்டது. வறிய மக்களிடம் மனித வாழ்வுக்கு அத்தியாவசியமான வாழ்வாதாரமும் பொருளாதாரமும் மட்டும் பற்றாக்குறையாக இருப்பதில்லை. மனித உரிமைகளை வலியுறுத்தவும், அதிகாரச் சக்திகளிடம் தமக்கான நியாயத்தை, கோரிக்கைகளை முன்வைப்பதற்குரிய சொற்களும்கூட அவர்களுக்குப் பற்றாக்குறையாக இருக்கிறது. அவர்கள் தமது அனுபவங்களைப் பற்றி பேசவும் எழுதவும் பவுலோ உதவியதால், அவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உணர்ந்தனர், மாற்றத்திற்காகச் செயற்பட முன்வந்தனர்.

மேற்கத்திய சமுதாயங்களில் இவற்றை ஒத்த ஒடுக்குமுறைகளை அடையாளம் காண்பது கடினமல்ல. சில தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் மத்தியில் மொழி சார் சவால்கள், வேலை வாய்ப்பின்மை, நிறவாதம் சார் ஒடுக்குதல்கள், உடல்நலப் பிரச்சினைகள், அல்லது கல்வி முறைமை சார்ந்த சவால்கள் காரணமாக ஒடுக்குதல்கள், ஒதுக்குதல்களுக்கு முகம்கொடுக்க நேர்கின்றது. அவமதிப்புகள், தரவரிசைப் படுத்தல்கள், பாகுபடுத்தல்கள், அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கும் மேற்குலக மனிதர்கள், சமூகங்களிற் பல முகம் கொடுக்கின்றன. இத்தகைய ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ளும் மனிதர்கள், சமூகங்களுக்கு பவுலோவின் கல்விமுறை பயன் தரக்கூடியது.

மேற்குலக நாடுகளில் வாழ்வோர் மத்தியில் மௌனக் கலாச்சாரம் நிலைபெற்றுவிட்ட ஒன்றாக உள்ளது. அது பல்வேறு முறைகளில் தனிமனிதர்கள் மத்தியில் பாதிப்புகளை உண்டுபண்ணுகின்றது. சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட பலர் தமது உரிமைகளை வலியுறுத்துவதற்கு அவசியமான சொற்களை இழந்தவர்களாக, சொற்கள் கைவராதவர்களாக வாழ்கின்றனர். அச்சூழல்களில் பவுலோவின் கற்பித்தல் முறைமை மிக உகந்தது. நிலவும் போட்டிச் சமூக ஒழுங்கு மனிதர்களைப் புறப்பொருட்களாகவே ஆக்கிவைத்துள்ளது. நிலவும் சமூக அமைப்பின் தர்க்கத்திற்குள் பொருந்துவதற்குரிய முறையில் மனிதர்களின் உளவியல் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. மனிதர்களாகிய நாம் நுகர்வோர், கொள்வனவாளர், வாடிக்கையாளர் போன்ற பாத்திரங்களாக அதிகமதிகம் மாற்றப்பட்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிந்தும் அறியாமலும் இவ்வாறான பயிற்றுவிக்கப்படுதல்கள் மூலம் ஒரு மௌனக் கலாச்சாரத்திற்குள் சிக்கிக்கொள்கிறோம். இச்சூழலில் வளர்ச்சியடைந்ததும் வளமானதுமாக நாடுகளில் வாழும் பலரும் எழுப்பவேண்டிய கேள்வி,' எமது குழந்தைகளும் இளைஞர்களும் சுயாதீனமாகச் சிந்திக்கவும் - விமர்சனபூர்வமான பார்வையுடனும் - படைப்பாற்றலை வளர்த்துக்கொள்வதற்கும் ஏதுவான கல்வியைப் பெறுகிறார்களா' என்பதாகும். அத்தோடு முன்னேற்றத்தை விரும்புகின்றவர்களும் சிறந்த முன்னேற்ற வாய்ப்புகளைக் கொண்டவர்களும்கூட, பாரபட்சங்களையும் புறக்கணிப்புகளையும் வெளியொதுக்குதல்களையும் உருவாக்கும் போக்கிற்கு (அமைப்பு - System) வளைந்துகொடுக்கின்ற கல்விமுறையைத்தான் பெற்றுக்கொள்கின்றார்களா என்பதாகும்.

### மேற்கில் மாற்றுக்கல்வியின் தேவையும் பயன்பாடும்

மேற்கின் ஜனநாயக, மனித உரிமை, கருத்துச் சுதந்திரம் சார் முன்னேற்றகரமான சூழல் என்பது ஒடுக்கப்பட்டோருக்கான கற்பித்தல் மற்றும் அரங்க வடிவங்களை அதே அரசியல் மாற்றம் சார்ந்த செயற்பாடுகளுக்குரிய தேவைக்காக அல்லாமல் மனித உறவுகள், சமூக வாழ்வியல் சார்ந்த மேம்பாடுகள், மாற்றங்களுக்காக அதிகம் பயன்படுத்தப் படுகின்றன. குறிப்பாக நோர்வே உட்பட்ட ஸ்கன்டிநேவிய நாடுகளில் அதிகம் உளவியல் சார் தேவைகளுக்கான கலைச் செயற்பாடுகளில் கையாளப்படுகின்றன. சமூக, இலக்கிய, கல்வியத்துறை உட்பட்ட பல்வேறு துறைசார் ஆய்வுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

பவுலோ ப்ரெய்ரின் கல்வியியற் கருத்துகள் 1960-களின் இறுதியில் ஸ்காண்டினேவிய நாடுகளை அடைந்தன. பிற்பட்ட காலங்களிலும் சமகாலத்திலும் அவை கல்வித்துறையில், குறிப்பாக சமூக மானிடவியற் துறை, மருத்துவத்துறை உட்பட்ட இன்னபிற கல்வித்துறைகளிற் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மத்தியிற் செல்வாக்குச் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- **மனிதப்பொருப்பு, பங்கேற்பு, சுயாதீனம், சுதந்திரச் சிந்தனை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை வளர்க்கும் கல்வியியல் எது?**
- **ஆசிரியர் - மாணவர் இடையே சமமான உறவை உருவாக்கக்கூடிய உரையாடற் திறனை மேம்படுத்தும் கல்வியியல் எது?**
- **மனிதன் தன் வாழ்வின் பொருளை உணர உகந்த கல்வியியல் எது?**

போன்ற கேள்விகளுக்கு விடைகாண பவுலோ ப்ரெய்ரின் கருத்துகளும் முன்மொழிவுகளும் உதவக்கூடியன, விளைவுத்தாக்கம் மிக்கவகையிற் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்துவன.

மாற்றுக் கல்வி என்பது இன்றும் அவசியமான ஒன்று. கால மாற்றத்தில் வகுப்பறைக் கல்விமுறைகளில் பல்வேறு மாற்றங்கள்

> **வகுப்பறைக் கல்வி என்பது, பெரும்பாலும் ஒருவழித் தொடர்பாடலாகவே உள்ளது. ஒப்புவித்தலையும் போலச் செய்தலையுமே அதிகம் தற்காலக் கல்விமுறைகளும் விளைவுகளாகத் தருகின்றன. மாற்றுச் சிந்தனை, புத்தாக்கம் என்பனவற்றிற்கு முற்றுமுழுதான வெளி கற்பித்தற் முறைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கூறிவிட முடியாது. செயற்கை நுண்ணறிவுவரை அதியுயர் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது, அது மனிதர்களை ஆக்கிரமித்தும் விட்டது.**

நிகழ்ந்திருந்தாலும் வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளிலும்கூட கல்வி, கற்பித்தல் முறைகள், கல்விச் சூழல்கள் மாணவர்களின் கற்றலுக்கு முற்றிலும் உகந்ததாக இன்னும் ஆகிவிடவில்லை. அவற்றில் பெரும் குறைகள் நிலவிக்கொண்டுதான் இருக்கின்றன. வகுப்பறைக் கல்வி என்பது, பெரும்பாலும் ஒருவழித் தொடர்பாடலாகவே உள்ளது. ஒப்புவித்தலையும் போலச் செய்தலையுமே அதிகம் தற்காலக் கல்வி முறைகளும் விளைவுகளாகத் தருகின்றன. மாற்றுச் சிந்தனை, புத்தாக்கம் என்பனவற்றிற்கு முற்றுமுழுதான வெளி கற்பித்தற் முறைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கூறிவிட முடியாது. செயற்கை நுண்ணறிவுவரை அதியுயர் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது, அது மனிதர்களை ஆக்கிரமித்தும் விட்டது. இதுபோன்ற தொழில்நுட்ப உச்சங்கள் சுயசிந்தனை வளர்ச்சிக்கு உதவுகின்றனவா? தடுப்புச் சுவரை எழுப்புகின்றனவா என்ற வாதங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்நிலையில் மாற்றுக் கல்வி என்பது அவசியமான ஒன்று. மாற்றுக் கல்வி என்பதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை | பாவலர் கருமலைத்தமிழாழன்



# மறைந்ததுவோ சாதி

ஒரேகடையில் வாங்கிட்ட துணியோ நம்மை
ஒன்றாகக் காக்கிறது மானம் தன்னை
ஒரேகடையில் வாங்கிட்ட அரிசி நம்முள்
ஒன்றாக அணைக்கிறது பசியின் தீயை!
ஒரேவகுப்பில் படித்திட்ட கல்வி பட்டம்
ஒன்றாக அளிக்கிறது நம்மின் கையில்
ஊரினிலே எக்கடையில் வாங்கிய சாதி
உங்களினை ஏற்றியது உயர்ந்தோ ரென்றே!

உங்களுடை இல்லத்துத் திரும ணத்தில்
உயர்வான பந்திலினைப் போடு கின்றோம்
உங்களுடை இல்லத்துத் திரும ணத்தில்
உட்கார நாற்காலி போடு கின்றோம்!
உங்களுடை இல்லத்துத் திரும ணத்தில்
உண்பதற்குப் பந்தியினைப் போடு கின்றோம்
எங்களுக்குப் பந்திமட்டும் பந்தல் விட்டு
ஏக்கமுடன் காத்திருக்கும் நாய்க ளோடே

புறம்போக்கென் றெங்களுக்கோ ஊரை விட்டுப்
புறம்போக்கில் சேரிகட்டி ஒதுக்கி வைத்தீர்
அறமின்றித் தேர்தல்லே போட்டி போட
அறிவித்தீர் தனியாகத் தொகுதி யென்றே!
மறத்திமிழன் யாதும்ஊர் கேளிர் என்றே
மார்தட்டி முழங்குகின்றீர் மேடை தோறும்
இறந்தாலும் தனியான சுடுகா டென்றே
இருக்கின்ற போதுசாதி மறைந்த தெங்கே!

புரிந்துகொள்ளவும் செயற்படுத்தவும் பல்வேறு சிந்தனைகளும் வடிவங்களும் உள்ளன. மாற்றுக் கல்வி என்பது உலகின் எல்லா நாடுகளுக்கும் அவசியமானது.

### இன்றும் பவுலோவின் செல்வாக்கு

இன்றும் உலகளாவிய ரீதியில் கல்வியியல் இயக்கங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக பிரெய்ரே உள்ளார். கோட்பாட்டாளராக கல்வியியலாளராக சோசலிசவாதியாக வறுமைநீக்கச் செயலூக்கியாக, எழுத்தறிவூட்டல், மாற்றுக்கல்வி எனப் பன்முகத் தளங்களில் இயங்கியவர். 1968இல் ஸ்பானிஸ் மொழியில் வெளிவந்த அவரது நூலான 'Pedagogy of the Oppressed' நூலானது கற்பித்தல் சார் விமர்சனச் சிந்தனை, மாற்றுப் பார்வை, மாற்றுச் செயல் தொடர்பான ஒரு கவனயீர்ப்பினை உலகளாவி ஏற்படுத்தியது. 1967 – 1968 இல் அடிப்படையில் போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 1970இல் வெளிடப்பட்டது. தொடர்ச்சியாகப் பல்வேறு உலக மொழிகளிலும் அது வெளிவந்தது.

அந்நூலின் முதன்மை அம்சங்கள் மரபுரீதியான கற்பித்தலின் ஒருவழித் தொடர்பாடலுக்கு மாற்றான உரையாடல், பிரதிபலிப்பு, செயல் என்பதாகும். அதிலும் இருவழி உரையாடல் என்பது கற்பித்தலின் மையம். வார்த்தை என்பது உரையாடலின் சாரம்; பிழிவு, அத்தோடு வார்த்தை இரண்டு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, பிரதிபலிப்பு மற்றையது செயற்பாடு என்பது அவரது அடிப்படை நிலைப்பாடு. ஒரு உண்மையான வார்த்தை செயற்பாட்டினைக் குறிக்காததாக (செயல்நீக்கம் செய்யப்பட்டதாக) இருக்க முடியாது என்பது அவரது பார்வை.


உசாத்துணை

*Pedagogy of the Oppressed | Paulo Freire (1921-1997) | 1970 (English)*

*De undertryktes pedagogikk | Paulo Freire | 1999 (Norwegian)*

*Paulo Freire – Pedagogy for Humanity and Social Change (Pedagogikk for medmenneskelighet og samfunnsendring) | Eva Nordland | 1999*

*Boal's Image Theatre as Embodied Exploratory Reflection – A Study with Business Leaders as Research Participants (Boals bildeteater som kroppslig utforskende refleksjon – En studie med næringslivsledere som forskningsdeltakere) | Linda Wilhelmsen | 2018 | UiT, The Artic University of Norway | https://jased.net/index.php/jased/article/view/919*



கட்டுரையாளர்: எழுத்தாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | பி.பி. சைதாலி, மு.சாகுல் ஹமீது

# மதச்சார்பற்ற வரலாற்றுக்கதையாடல்களும், வகுப்புவாத சவால்களும்: களத்திலிருந்து எழும் பிரதிபலிப்புகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

வரலாற்றை அதிகாரப்பூர்வ உண்மைகளின் தொகுப்பாக முன்வைத்ததால், வகுப்பறை விவாதங்கள் அற்ற ஆசிரியர் மைய அணுகுமுறை கொண்ட கற்றல், கற்பித்தலில் புதுமைகள் அற்ற வகுப்பறையாக மாறிவிட்டது. பல்வேறு முதன்மை ஆதாரங்கள் அடங்கிய புத்தகங்களைப் படிப்பது, அதனைப் பகுப்பாய்வு செய்வது அதற்குப் புதிய வியாக்கியானங்களைக் கொடுப்பது, அறிவியல் முறைகள் மூலம் முடிவுகளுக்கு வருவது போன்ற திறன்கள் உட்பட இத்துறையின் அடிப்படைப் பயிற்சியையும் மாணவர்கள் இதனால் இழந்தனர்.[1]

சுருக்கமாகச் சொன்னால் மதச்சார்பற்ற மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான செயல்திட்டங்கள் வரலாற்றின் விவரிப்புகளுக்கு சில வரம்புகளைச் சுமத்தின. இது தேசத்தின் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் புரிந்துகொள்ள முடியாமல் இருதலைக் கொள்ளியாக மாற்றியது. மதச்சார்பற்ற வரலாறுகளைச் சரியான நேரத்தில் திருத்துவதற்கான தயக்கம், மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் சர்ச்சைக்குரிய இப்பொது வரலாறுகள் கல்விப்புல வரலாற்றை மறுவடிவமைக்கத் தீவிரமாக முற்படும் ஒரு சகாப்தத்தில் அதைத் தேவையற்றதாக ஆக்குகிறது.

1 Bhattacharya, Neeladri 'Teaching History in Schools: The Politics of Textbooks in India', in History Workshop Journal, no. 67 (2009), pp. 99-110; Bhattacharya, Neeladri, 'Predicaments of Secular Histories', in Public Culture, Vol. 20, no. 1 (2008), pp. 57-73; Guichard, Sylvie, 'The Indian Nation and Selective Amnesia: Representing Conflicts and Violence in Indian History Textbooks', in Nation and Nationalism, Vol.19, no. 1 (2013), pp. 68-86.

### விவாதத்துக்குரிய வெகுஜன வரலாறுகளும் எங்களது அனுபவங்களும்

தொழில்முறைசார் வரலாற்றாசிரியர்கள் *(Professional Historians)* ஒரு காலத்தில் அறிவியல்பூர்வமான மற்றும் மதச்சார்பற்ற வரலாறுகளைக் கொண்டு, தங்களது கல்விசார் செயல் முறைகளின் உதவியுடன், பாரம்பரியமிக்க வெகுஜன வரலாறு என்றும் பழைய சமூகவரலாறுகள் *(Old Social Histories)* என்றும் தொழிற்சாரா வரலாற்று ஆசிரியர்களால் *(Non Professional Historians)* வடிவமைக்கப்பட்ட வரலாற்றை மாற்ற முடியும் என்றும் நம்பினர். வெகுஜன வரலாற்று ஆசிரியர்கள் மதப்பிரிவுகள், சாதிகள், இனக்கூறுகளின் தொடர்புகள், பிராந்தியங்கள், மொழிகள், இலக்கியம், இசை, கலை என அனைத்தையும் தங்களது பிராந்திய மொழிகளில் தங்களது கருத்தாக்கத்துடனும், அரசியல் இயக்கத் தொடர்புகளுடனும் தயாரிப்பதில் ஈடுபட்டனர். இவ்வெகுஜன வரலாறுகள் புத்தகங்கள், மடக்கு ஓலைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் கற்றறிந்த உள்ளூர் சமூகங்கள், சமூக இயக்கங்கள், அரசியல் இயக்கங்கள், கலைகள் எனப் பல தளங்கள் மூலமாக இவ்வரலாறுகள் பரவலாகப் பரப்பப்பட்டன. வெகுஜன வரலாற்றாசிரியர்கள் நவீன மற்றும் மரபார்ந்த வரலாற்று எழுத்தியல் முறையைக் கையாண்டாலும் அவர்கள் படைப்புகள் சமயம் சார்ந்தவையாகவும், பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய விதத்திலும் உணர்ச்சிப் பூர்வமாகவும் வெளிப்படுகின்றன.[2] எனினும், வலதுசாரிகளின் அரசியல் வெற்றியானது

2 Chatterjee, Partha, 'History and the Domain of the Popular', In Seminar, 522 ( 2003), pp. 31-34 [https://www.india-seminar.com/2003/522/522%20partha%20chatterjee.htm].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **வெகுஜன வரலாற்றாசிரியர்கள் நவீன மற்றும் மரபார்ந்த வரலாற்று எழுத்தியல் முறையைக் கையாண்டாலும் அவர்கள் படைப்புகள் சமயம் சார்ந்தவையாகவும், பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய விதத்திலும் உணர்ச்சிப்பூர்வமாகவும் வெளிப்படுகின்றன. எனினும், வலதுசாரிகளின் அரசியல் வெற்றியானது தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிராகவும், பிற சிறுபான்மை மக்களுக்கு எதிரான பிளவுபடுத்தக்கூடிய வரலாற்றுப் பிரச்சாரங்கள் மதச்சார்பற்ற வரலாற்று ஆய்வாளர்களின் நம்பிக்கையை அழிப்பதாகவும் உள்ளது.**

தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிராகவும், பிற சிறுபான்மை மக்களுக்கு எதிரான பிளவுபடுத்தக்கூடிய வரலாற்றுப் பிரச்சாரங்கள் மதச்சார்பற்ற வரலாற்று ஆய்வாளர்களின் நம்பிக்கையை அழிப்பதாகவும் உள்ளது.[3] எனினும், இவ்வளர்ச்சி வரலாற்று ஆசிரியர்கள் தங்களை சுயபரிசோதனை செய்து கொள்வதற்கும், அணுகுமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தவும் தூண்டியது. எனினும், இவ்வரலாற்றின் செல்வாக்குகள் உள்ளூர் அளவில் ஊடுருவவில்லை காலாவதியான மதச்சார்பற்ற வரலாறுகளே இன்னும் செல்வாக்கு செலுத்திக் கொண்டிருக்கின்றன. தற்போதைய சூழலில் சர்ச்சைக்குரிய வெகுஜன வரலாற்றாசிரியர்கள் ஒரு தளத்திலும், காலாவதியான மதச்சார்பற்ற வரலாற்றாசிரியர்கள் ஒரு புறத்திலும் இன்று புதிய சவால்களை உள்ளூர் அளவில் வரலாற்றுத் துறைக்கு அளித்து வருகின்றனர். இன்றும்கூட தென்தமிழகத்தில் பல கலைக் கல்லூரிகளில் மதச்சார்பற்ற, அரசியல், பொருளாதார வரலாறுகளே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

பெருநகரங்களில் உள்ள பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் இருக்கின்ற புதிய மதச்சார்பற்ற சமூகப் பண்பாட்டு வரலாற்றை உள்ளடக்காத ஒரு பாடத்திட்டமாக இது இருந்துவருகிறது. இதனுடைய ஒரு பகுதியாகப் போதுமான அளவுக்கு வரலாற்றுப் புத்தகத்தில் ஏற்பட்டிருக்கும் இப்புதிய முறைகளைப் புரிந்துகொள்வதற்கான பயிற்சியும் பிராந்திய மொழியில் வாசிப்பதற்கான சூழலும் வாய்ப்பும் இல்லாத நிலையே இன்றும் இங்கு உள்ளது. வரலாற்று ஆய்வாளர் பார்த்தாசாட்டர்ஜி *(Partha Chatterjee)* உயர்கல்விப் புல வரலாற்றின் குறுகிய வரம்புகளின் சிக்கல்களைப் பதிவுசெய்யும்போது, சமச்சீரான முறையில் ஆய்வு செய்வதற்கான போதுமான பயிற்சிகள் அளிக்கப்படாததையும், நூலகங்களையும், ஆவணக் காப்பகங்களையும் அணுகி ஆய்வுப்புலம் சார் கட்டுரைகளைப் பதிக்கும் உலகில் நுழைவதில் உள்ள ஆழ்ந்த பிரச்சினைகளையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். இதுகல்விப் புலம்சார் வரலாற்றாசிரியர்களை உள்ளூர் அளவில் சமூகத்தில் ஊடுருவதற்கு மட்டுமல்ல, வெகுஜன வரலாற்றுடன் ஊடாட வரம்புகளையும் ஏற்படுத்திவிடுகிறது.[4] மேலும், இப்பொதுவான பிளவுவாத வரலாற்றின் செல்வாக்கு அச்சுறுத்தும் வகையில் கல்விப்புல வரலாற்றில் செல்வாக்கு செலுத்துகிறது. இதற்கு ஒரு சான்றாக ஒருமுறை வகுப்பறையில் சில மாணவர்கள் காந்தியைப் பற்றிய விவாதத்தின்போது மாணவர்கள் பலருக்கும் காந்தியின் மீது கசப்புணர்வு இருந்ததை அறிய முடிந்தது. இது ஒரு இயற்கையான நிகழ்வு போல் தெரிந்தாலும், அவர்களுடன் தொடர்ச்சியாக நாம் உரையாடியபோது அம்மாணவர்களுக்குக் காந்தியின் மீது உண்டான ஆழமான வெறுப்பிற்கான ஆதாரம் சமூக வலைத்தளங்கள் என்பது தெரியவந்தது,

காந்தியைக் கொலை செய்ததைக் கூட நியாயப்படுத்த நம் மாணவர்கள் தங்களுக்கான கருத்து ஆதாரங்களை சமூக ஊடகங்களில் இருந்து பெற்றதாகப் பதிவுசெய்தார்கள். இந்நிகழ்வு காந்தியைப் பற்றிய ஒரு புரிதலை ஏற்படுத்த ஒரு சிறப்புக் கருத்தரங்கை நடத்த எங்களைத் தூண்டியது. இரண்டாவது நிகழ்வு, பிராமணர் அல்லாதோர் இயக்கத்தைப் பாடத்திட்டத்தில் உள்ளடக்குவது பற்றி, தமிழகத்தினுடைய வரலாற்றுப் பின் புலத்தில் பிராமணர் அல்லாதவர் என்ற வார்த்தை மிகப் பொது என்றாலும் பாடத்திட்டத்தில் இருக்கக்கூடிய வார்த்தையை பார்த்த ஒரு

3 Chakrabarty, Dipesh, "The Public Life of History: An Argument Out of India,' Postcolonial Studies, Vol. 11, no. 2 (2008), pp. 169-190.

4 Chatterjee, Partha, 'History and the Domain of the Popular,' [https://www.india-seminar.com/2003/522/522%20partha%20chatterjee.htm].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **ஒருமுறை வகுப்பறையில் சில மாணவர்கள் காந்தியைப் பற்றிய விவாதத்தின்போது மாணவர்கள் பலருக்கும் காந்தியின் மீது கசப்புணர்வு இருந்ததை அறிய முடிந்தது. இது ஒரு இயற்கையான நிகழ்வு போல் தெரிந்தாலும், அவர்களுடன் தொடர்ச்சியாக நாம் உரையாடியபோது அம்மாணவர்களுக்குக் காந்தியின் மீது உண்டான ஆழமான வெறுப்பிற்கான ஆதாரம் சமூக வலைத்தளங்கள் என்பது தெரியவந்தது,**

நிபுணர் பிராமணரல்லாதோர் என்ற வார்த்தையை நீக்குமாறும் அது சமூகப்பிரிவினையைக் கோருவதாகத் தான் கருதுவதாகவும் வெளிப்படுத்தினார். மூன்றாவது நிகழ்வு, ஒரு கருத்தரங்கத்துக்காக தென் தமிழகத்திலுள்ள ஒரு கல்லூரியில் "தென்னிந்தியாவில் சமூக சீர்திருத்துக்கான முன்னோடிகள் ஐயா வைகுண்டர் மற்றும் அயோத்திதாச பண்டிதர்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்த முடிவுசெய்தபோது பல்வேறு தளங்களில் இருந்து அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புகள் வந்தன. ஐயா வைகுண்டர் ஒரு சமூக சீர்திருத்தவாதி அல்ல, அவர் ஒரு கடவுள் என்பதே அவர்களுடைய குற்றச்சாட்டு. எனவே, தேவையற்ற சில சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காக அக்கல்லூரியின் கருத்தரங்கக் குழு அந்தத் தலைப்பில் உள்ள ஐயா வைகுண்டர் என்ற தலைப்பை நீக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானது. வகுப்புகளில் இட ஒதுக்கீடு பற்றி விவாதிக்கும் போதெல்லாம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்துகளைப் பதிவுசெய்ததையும் அவதானிக்க முடிந்தது.

இதில் விவாதத்துக்குரிய செய்தி என்னவென்றால் மாணவர்களில் பட்டியலினத்தினர் பெரும்பாலும் இட ஒதுக்கீட்டையே அதிகம் விமர்சிக்கின்றனர் ஆச்சரியப்படத்தக்க வகையில் இம்மாணவர்கள் பெரும்பாலும் முதல்தலைமுறைப் பட்டதாரிகள். அடுத்த நிகழ்வாக, பொதுவாக வரலாற்றுப் புலத்தில் படிக்கக்கூடிய மாணவர்கள் கள ஆய்வினை தங்களுடைய இளநிலை மற்றும் முதுநிலை வகுப்புகளில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம். கள ஆய்வுகள்தாம் அவர்களுக்கு நேரடியாக வரலாற்றை எவ்வாறு அணுக வேண்டும் என்பதைப் பற்றியும், ஆதாரங்களை வகைப்படுத்திச் சேகரித்து அதன் அடிப்படையில் கட்டுரைகளைப் பதிப்பதைப் பற்றியும் அனுபவத்தைக் கொடுக்கும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பல மாணவர்கள் உள்ளூர் வரலாறுகளை சில பத்திரிகை செய்திகளை போலவும், எந்த ஒரு ஆக்கப்பூர்வமான விவாதம் இல்லாமலும், கருத்தியல் பின்னணியற்று சமர்ப்பிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. வருந்தத்தக்க அளவில் போதுமான ஆதாரங்களைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்குப் பல தரப்பட்ட வியாக்கியானங்களைக் கொடுக்கும் சாத்தியக் கூறுகளைப் போதுமான அளவுக்கு அறிந்திருக்கவில்லை.

இது, நம் கல்விப்புல அமைப்பின் கூட்டுத் தோல்வியைப் பிரதிபலிக்கிறது. எனினும், இப்பிரச்சனையின் வீரியம் குறைத்தே மதிப்பிடப்படுகிறது, சமூக அறிவியல் பாடப்புத்தகங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் வரலாற்றை அரசியல்மயமாக்கி, வகுப்பு மயமாக்கி வருகின்றன என்ற விமர்சனம் தேசிய அளவில் உள்ளபோது, மானுடவியலாளர் டேனியல்பர்டி (*Deniela Berti*) அவதானித்தபடி உள்ளூர் வரலாற்றை (*Local History*) முறையாக மீண்டும் எழுதுவதற்கான முயற்சிகள் புறக்கணிக்கப்படுகின்றன.[5] அனன்யா சக்ரவர்த்தி (*Ananya Chakravarthy*) செப்டம்பர் 2023 கேரவன் மாத இதழில் எழுதிய கட்டுரையில் "தேசிய வரலாற்றைப் பற்றிய விவாதங்கள், கடந்த காலத்தினைக் கட்டுப்படுத்துவதில் முதன்மையானது உள்ளூர் வரலாறு என்ற உண்மையை மறைக்கின்றன" என்கிறார்.[6] இருவருமே ஆர்.எஸ்.எஸ் (*RSS*) அமைப்பின் ஒரு அங்கமான அகில பாரதிய இதிகாச சங்கலன் யோஜனா (*ABISY*) தங்களது வகுப்புவாத, அரசியல் நோக்கத்துக்காக வரலாற்றை மீண்டும் எழுதும் இவ்வமைப்பு முயற்சி குறித்து எச்சரிக்கின்றனர். இந்தச் சூழலில் நாம் முன்பே குறிப்பிட்டது போல்

5 Berti, Daniela, "Hindu nationalists and local History: From ideology to local lore." Rivista di Studi Sudasiatici, II (2007): 7-38.

6 Chakravarti, Ananya, "Forgotten Tales: The NCERT debate misses the Sangh's grip over local histories." The Caravan, 01st September 2023.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ஆசிரியர்களும், மானுடவியல் ஆய்வாளர்களும் சில சமயங்களில் இந்த உள்ள வரலாறுகளை அங்கீகரிக்கவோ அல்லது அவற்றைப்போதுமான தீவிரத்துடன் நடத்தவோ தவறிவிடுகிறார்கள். மேலும், தாங்கள் கற்பதற்கு அவ்வாதாரங்களைத் தரமற்றதாகக் கருதுகிறார்கள். உள்ளூர் வரலாற்று ஆய்வுகள் தங்களுடைய அரசியல் மற்றும் வகுப்புவாத நோக்கங்களுக்காக விவாதத்துக்குரிய கதையாடல்களை அதிகமாக எடுத்தாளும்போது நமது கல்லூரிகளில் உள்ள செயல் திட்ட அறிக்கைகளோ (Field Work) அல்லது கள ஆய்வுகளோ (Project) எந்த ஒரு உள்ளார்ந்த விவாதமும் இல்லாமல் ஏற்கெனவே இருக்கின்ற கதையாடல்களை மீண்டும் உருவாக்கிக்கொண்டிருக்கின்றன.

கடந்தகால மற்றும் சமூக வரலாறு தொடர்பான தகவல்களுக்கு உள்ளூர் கதையாடல்களை அல்லது நாட்டார் பாடல்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றிய பயிற்சியைப் பெறுவதற்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. வரலாற்று ஆராய்ச்சிக்கு வாய்வழி வரலாறுகளை முதன்மையான ஆதாரங்களாகப் பயன்படுத்துவதிலும், சேகரிப்பதிலும், உள்ளூர் கல்லூரிகளில் பணிபுரியும் ஆய்வாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் புரிதல் குறைவாகவே உள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியக்குழு பல்வேறு துறைகளுக்கிடையே உரையாடல்கள் நிகழ வேண்டும் என்று வலியுறுத்தினாலும் அவை மேலோட்டமாகவும் குறுகிய எல்லைக்குட்பட்டதாகவே இருக்கின்றன.

முடிவுரை: மதச்சார்பற்ற வரலாறுகளை மறுவடிவமைத்தல்

தொடக்கத்தில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு வடிவமைக்கப்பட்ட நமது மரபார்ந்த மதச்சார்பற்ற வரலாறுகள் உள்ளார்ந்த வரம்புகளைக் கொண்டுள்ளன. இவ்வரம்புகள் சில நேரங்களில் கவனக் குறைவாக பிளவுபடுத்தும் மற்றும் சர்ச்சைக்குரிய வெகுஜன வரலாறுகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கின்றன. சமூக ஊடகங்கள் முதல் வீதிகள் வரை தீவிரமாக நடத்தப்படும் பிளவுபடுத்தும் இவ்வரலாற்றுப் போர்கள் (Historical Wars) கல்விபுலன்சார் வரலாற்றை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருக்கின்றன. நமது தேசிய மற்றும் கல்விபுலன்சார் வாழ்வை மேம்படுத்த நமது பழைய மதச்சார்பற்ற வரலாறுகளை ஒழுங்குபடுத்துவதோடு புதிய உத்திகளை இணைத்து, சமகாலச் சவால்களை எதிர்கொள்ள மாணவர்களைத் தயார்படுத்த வேண்டும். 2005 ஆம் ஆண்டு முதல் தொடங்கி இத்திசையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முதன்மையாகப் பெருநகரங்களில் உள்ள மேட்டுக்குடி பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த மாற்றங்கள் உள்ளூர் மட்டத்துக்கு பரவுவதற்கு கல்விபுலன்சார் சமூகத்திடமிருந்து தீர்க்கமான செயல்பாடுகள் வர வேண்டிய அவசர தேவை உள்ளது. இந்தியாவில் இதுவரை வந்த அனைத்து கல்விக்கொள்கைகளும் தரமான கல்விக்கான உலகளாவிய அணுகல் தேசிய ஒருங்கிணைப்புக்கு முக்கியமான முன் நிபந்தனை என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இச்சீர்திருத்தங்களில் சமரசம் செய்யப்படும்போது அது தற்போதுள்ள சமூகப் படிநிலைகளை, வலுப்படுத்துவதோடு ஒட்டுமொத்த தேசத்தைச் சீர்குலைக்கும் ஆற்றலையும் பெற்றுள்ளது. சமூகநீதி உணர்வு கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க, மாநில அரசும், அரசு சாரா வரலாற்று அமைப்புகளும் உள்ளூர்மட்ட அளவில் வரலாற்றைக் கொண்டுசெல்லத் தீவிரமான பயிற்சிகளும், ஆய்வுமுறை வகுப்புகளும், போதுமான நிதி நல்கைகளும், மொழிப்பெயர்ப்புத்திட்டங்களும், உள்ளூர் அளவில் செய்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும். இவ்வாறு ஆசிரியர்களை வளப்படுத்துவதன் மூலமாக அறிவார்ந்த, சமூகநீதி மரபைக் கொண்ட, ஒரு சமூக அமைப்பை உருவாக்கலாம். சந்தையை அடிப்படையாகக் கொண்ட கல்விச் சீர்த்திருத்தங்களும், வகுப்புவாதத்தன்மை கொண்ட வரலாறுகள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும், இவ்வாபத்தான சூழ்நிலையில், மேற்கண்ட முயற்சிகளே மதச்சார்பற்ற விழுமியங்களைப் பாதுகாப்பதோடு, அனைவருக்குமான வளமான எதிர்காலத்தைத் உருவாக்க வழிவகுக்கும்.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சு.இராமசுப்பிரமணியன்



# வண்ணத்துப்பூச்சி விளைவும் ஆட்டிசமும்

**Butterfly effect may explain some genetic causes of Autism**

எந்த ஓர் அறிவியல் கோட்பாடும் பயனுள்ளதாக மாறும்போதுதான் அது முழுமைபெறுகிறது. அந்த வகையில் கணிதவியலாளர்களும், இயற்பியலாளர்களும் அறிந்துவைத்திருந்த 'வண்ணத்துப்பூச்சி விளைவு' (*Butterfly effect*) என்னும் கோட்பாடு ஆட்டிசம் நோயின் சில மரபணுக்கூறுகளை விளக்குவதாகத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் செய்யப்படும் ஆய்வுகள், ஆட்டிசம் நோய்க்கான தீர்வைக் கொண்டுவருமானால் அது மனித சமூகத்திற்குப் பேருதவியாக அமையும்.

### வண்ணத்துப்பூச்சி விளைவு

'அதிர்வுகள்' (*Vibration*) காரணமாகவே, அலைகள் உருவாகின்றன. 'இயக்கவியலில்' (*Dynamics*), அலைகளை ஏற்படுத்தும் இயக்கம் இரு வகைப்படும். முதலாவது, நேர்கோட்டு இயக்கம் (*Linear Dynamics*), இந்த இயக்கம் சீரானது; ஒழுங்கானது. இந்த வகை இயக்கத்தில் உள்ள பொருள்களின் எதிர்காலப் போக்கை, ஆரம்ப கட்டத்திலேயே, துல்லியமாகக் கணிக்க இயலும். இரண்டாவது, 'ஒற்றை அலையை' (*solitary wave or soliton*) உருவாக்கும் 'நேர்கோடல்லா இயக்கம்' (*non-Linear Dynamics*). இவ்வகை இயக்கத்தில் பொருள்களின் எதிர்காலத்தைத் துல்லியமாகக் கணிக்க இயலாது. தொடக்கக் காரணிகளைச் (*Initial Conditions*) சார்ந்து இயக்கம் சீரானதாகவும் இருக்கலாம். அல்லது சீரற்றுக் குழப்பநிலையாகவும் (*Chaos*) , இருக்கலாம்.

நேர்கோடல்லா இயக்கத்தை, சில இயற்கை நிகழ்வுகளில் இருந்தும் புரிந்துகொள்ள முடியும். மலைமுகட்டில் வைக்கப்பட்ட ஒரு பந்து, அதன் ஆரம்ப நிலையைச் சார்ந்து, நகர்ந்து, உருண்டு, சுற்றியுள்ள எந்த ஒரு பள்ளத்தாக்கின் அடி ஆழத்திற்கும் செல்லும் வாய்ப்பு உள்ளது. அது எப்படி, எங்கே செல்லும் என நாம் முன்கூட்டியே கணிக்க இயலாது. மேலும் ஓர் எடுத்துக் காட்டாக, 'தாயக்கட்டை' (*Dice*) வீசுவதைச் சொல்லலாம். வீசும்போது கொடுக்கப்படும் விசை, திசை போன்ற ஆரம்ப காரணிகளைச் சார்ந்து தாயக்கட்டையின் எண்ணிக்கை மாறக்கூடியது. அடுத்தடுத்து இரண்டு முறை ஒரே மாதிரியாகத் தாயக்கட்டையை வீச முடியாது. ஃப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கணிதவியலாளரும் இயற்பியலாளருமான ஹென்றி பாயின்கேர் (*Henry Poincare*) நேர்கோடல்லா இயக்கம் சார்ந்த 'குழப்ப' கொள்கைக்குச் ( *Chaos Theory*) சொந்தக் காரர். அவர்தான் 'நேர்கோடல்லா இயக்கத் துறையின் தந்தை' (*Father Of Non-Linear Dynamics*) என அழைக்கப்படுபவர். 'வானிலை முன்னறிவிப்புத் துறையில்' (*Meteorology Department*) நேர்கோடல்லா விளைவைப் பயன்படுத்தலாம் என அவர் கருத்துக் கூறியதை அடுத்து லாரென்ஸ் (*Lorenz*) என்கிற அறிவியலாளர் அதனை நடைமுறைப் படுத்தினார். லாரென்ஸ், ஒரு கணக்கீட்டுக் கணினியைக் (*Numerical Computer*) கொண்டு, வானிலை முன்னறிவிப்பிற்கான கணக்கீடுகளைச் செய்துகொண்டிருந்தார். 0.506127 என்கிற 'தரவை' (*Data*), 0.506 என்பதாகச் சுருக்கி உள்ளீடு செய்து கணக்கீடுகளைச் செய்த போது, முற்றிலும் எதிர்பாராத, வேறு விதமான 'வானிலை மாற்றம்' தோன்றுவதைக் கண்டு வியப்படைந்தார். 0.000127 என்கிற திருத்தம், புறக்கணிக்கத்தக்க அளவு மிகவும் குறைவானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தக் 'காட்சிப்பதிவை' (*Observation*),1963 இல், லாரென்ஸ், ஓர் அறிவியல் ஆய்விதழில் வெளியிட்டார். ஓர் அறிவியலாளர் கூட்டத்தில், அந்த ஆய்வறிக்கையை வாசித்த வானிலை முன்னறிவிப்புத் துறையைச் (*Meteorology Department*) சேர்ந்த இளம் ஆய்வாளர் ஒருவர், "சீகல்லின் (*Seagull*-ஒரு கடற்பறவை) சிறகசைவுகூட வானிலையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும்" என்பதாகக் கருத்துத் தெரிவித்தார். இதனைத்தான் லாரன்ஸ் தனது பிந்தைய அறிவியல் கட்டுரை வாசிப்புகளில், 'சீகல்' என்பதற்குப் பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வண்ணத்துப்பூச்சியின் சிறகசைவு' என மாற்றிப் பயன்படுத்தினார். அன்று முதல், ஆரம்ப காரணிகளில் ஏற்படும் மிகச் சிறிய மாற்றம்கூட, இயக்கத்தில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்திவிடும் என்கிற அறிவியல் கருத்து 'வண்ணத்துப்பூச்சி விளைவு' *(Butterfly Effect)* என்று வழங்கப்பட்டு வருகிறது.

தென் அமெரிக்காவின் அமேசான் காடுகளில் ஒரு வண்ணத்துப்பூச்சி தனது சிறகை மெல்ல அசைப்பதன் காரணமாக, வட அமெரிக்காவில், டெக்சாஸ் மாநிலத்தில் பெரும் புயல் வீசக்கூடும் எனச் சொல்லப்படுவதுண்டு. அதாவது நேர்கோடல்லா இயக்கத்தில், ஆரம்ப காரணிகளில் வண்ணத்துப்பூச்சியின் சிறகசைவு அளவே ஆன மெல்லிய வேறுபாடுகூட, இயக்கத்தின் பிற்பகுதியில், ஒரு பெரும் புயலை ஏற்படுத்தும் அளவிற்கு மாற்றங்களை ஏற்படுத்திவிடும் என்பதாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் இந்தோனேஷிய கடலின் அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் சென்னையிலிருந்து தென்கோடி குமரி வரையிலுமான கிழக்குக் கடற்கரையில் சுனாமியாக எழுந்து பல்லாயிரக் கணக்கானோரைச் சுருட்டிக் கொண்டோடியதற்குப் பின்னால் இருப்பதும் இந்தப் பட்டாம்பூச்சி விளைவுதான். சுனாமி அலை *(Tsunami wave)* என்பது ஒற்றை அலையே *(solitary wave).*

### ஆட்டிசத்தை விளக்கும் வண்ணத்துப்பூச்சி விளைவு

ஒருவரின் டி.என்.ஏ. வில் *(DNA)* உள்ள ஆட்டிசம் *(Autism)* தொடர்பிலான மரபணுக்கள் *(genes)* எவ்வாறு முடுக்கம்பெறுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கு 'வண்ணத்துப்பூச்சி விளைவு' உதவக்கூடும் என்று புதிய ஆய்வொன்று தெரிவிக்கிறது. ஆட்டிசத்துடன் தொடர்பில்லாத மரபணுக்களின் திரிபு *(mutations in genes),* ஆட்டிசம் தொடர்புடைய மரபணுக்களைத் தூண்டுவதாக அமைந்துவிடுகிறது.

டி.என்.ஏ. வில் மரபணுக்களைத் திறந்துமூடும் *(On and off)* மரபணு உறுப்பு *(gene promoters)* ஒன்று உள்ளது. டி.என்.ஏ. முறுக்கப்பட்டு முப்பரிமாணத்தில் சுருள்வடிவில் அமைந்திருப்பதால், டி.என்.ஏ. தொடரில் இந்த உறுப்புகளிலிருந்து *(promoters)* தொலைவில் உள்ள மரபணுக்களைக் கட்டுப்படுத்த அவற்றால் முடியும். டி.என்.ஏ.வை மடிப்புகள் இன்றி நீட்டிவைத்தால் மரபணுக்களும் அவற்றைத் திறந்துமூடும் அமைப்புகளும் தொலைவில் அமைந்திருக்கும். ஆனால், மடிக்கப்படும்போது அவை ஒன்றுக்கொன்று நெருங்கிவந்துவிடும். மரபணுக்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் அமைப்பும் இணைந்து ஒரு 'சீர்-அலகை' *(regulatory unit)* உருவாக்குகின்றன *(topologically associated domain).* இப்படிப்பட்ட சிக்கலான கட்டமைப்பு காரணமாக ஆட்டிசம் தொடர்பிலான மரபணுத்திரிபு இல்லாதவர்களுக்கும், அவர்களது மரபணுத்தொகுதியில் *(genome)* வேறு ஏதோ ஓரிடத்தில் உருவாகும் மரபணுத்திரிபும் *(mutation)* ஆட்டிசத்தைத் தோற்றுவித்துவிடும்.

இந்தப் புதிய கருத்தியல்தான், வண்ணத்துப் பூச்சி விளைவை ஆட்டிசத்திற்குப் பயன்படுத்திப் பகுப்பாய்வுசெய்ய ஆய்வாளர்களைத் தூண்டியிருக்கிறது. காரணம், ஓரிடத்தில் ஏற்படும் மீச்சிறிய மாற்றம், வேறு ஏதோ ஓரிடத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்பதுதானே 'குழப்பக்கொள்கை' *(chaos)* அடிப்படையிலான வண்ணத்துப்பூச்சி விளைவு. இப்புதிய ஆய்வுமுடிவு 26 ஜனவரி 2024 நாள் *Cell Genome* ஆய்விதழில் வெளிவந்துள்ளது. ஆட்டிசம் பெரிதும் மரபுசார்ந்தது. 40 விழுக்காடு முதல் 80 விழுக்காடு வரையிலான ஆட்டிசம் நோயாளிகளில் அதற்கான மரபணுக்கள் அவர்களது குடும்பங்களின் வழியாக அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் கடத்தப்பட்டுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது. என்றாலும், டி.என்.ஏ. வில் திடீரென்று ஏற்படும் திரிபுகளாலும் ஆட்டிசம் ஏற்படக்கூடும். இப்படிப்பட்ட டி.என்.ஏ. திரிபுகள் டி.என்.ஏ.வின் 'குறியிடாப்பகுதியில்' *(non-coding regions of DNA)* தோன்றுவதாக சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது 98.5 விழுக்காடு மரபணுத்தொகுதியை உள்ளடக்கியதாக உள்ளது.

'குறியிடாப்பகுதியில்' *(non-coding regions of DNA)* தோன்றும் டி.என்.ஏ. திரிபுகள் ஒருவருக்கு ஆட்டிசத்தை *(ASD - Autism Spectrum Disorder)* ஏற்படுத்தக்கூடும் என்பதற்கான தரவுகள், இன்று வரையிலும், மிகவும் குறைவாகவே உள்ளன. ஆய்வுக் குழுவினர், ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட 5,000 நபர்களின் மரபணுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளை (*genomes*) ஆய்வுசெய்தனர். ஒப்பீட்டிற்காக, ஆட்டிசத்தால் பாதிக்கப்படாத அவர்களது பிள்ளைகளின் மரபணுத் தொகுதிகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர். மரபுவழியில் அல்லாத மரபணுத்திரிபுகளைக் கண்டறிவதில் ஆய்வுக் குழுவினர் கவனம்செலுத்தினர். சிறப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மரபணுத் தொகுதிகளின் முப்பரிமாண கட்டமைப்பைப் பிடித்து, அவற்றிலிருந்து ஆட்டிசம் தொடர்பிலான மரபணுக்களைச் சுற்றியுள்ள முப்பரிமாணப் பகுதிகளின் எல்லைகளைத் (*Topologically Associating Domain*) தெளிவுபடுத்துவதும் ஆகும். ஆட்டிசத்திற்கும், மரபணு சீரமைப்புக்கும் நேரடித்தொடர்பு இருப்பதை ஆய்வுக் குழுவினர் கண்டறிந்துள்ளனர். சிலவேளைகளில் டி.என்.ஏ. குறியீட்டில் ஓர் எழுத்தை (*A,T,G & C*) அல்லது 'உப்பை' (*base*) மாற்றுவது ஆட்டிசம் ஏற்படுவதற்கான கூடுதல் வாய்ப்புகளோடு தொடர்புடையதாக இருக்கிறது. புரதம் இல்லாக் குறியீட்டுப் பகுதியில் (*non protein coding region*) டி.என்.ஏ. தொடரின் (*DNA sequence*) ஒற்றை உப்பின் வேறுபாடு (*change in single base*) அருகமைந்த மரபணுக்களைப் பாதிக்கும் என்பதை ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அது, தொலைவில் அமைந்திருக்கும் மரபணுத் தொகுதியில் மரபணுக்களின் புரோட்டின் உருவாக்கத்தை (*gene expression*) மாற்றியமைத்து, ஆட்டிசத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் ஆய்வுக் குழுவினர் கண்டறிந்துள்ளனர்.

மரபணுத் தொகுதியில் ஏற்படும் இப்படிப்பட்ட மாற்றங்களை,'வண்ணத்துப்பூச்சி விளைவு' என்னும் இயற்பியல் விளைவோடு தொடர்புபடுத்துகிறார், மூத்த ஆய்வாளர் முனைவர் அசுஷி டகாட்டா (*Dr. Atsushi Takata , a reasercher at the Riken Centre for Brain Science in Japan*) ஆரம்ப காரணியில் ஏற்படும் சிறிய மாற்றம், தொலைவில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்னும் வண்ணத்துப்பூச்சி விளைவுபோல, மரபணு சீரமைப்பானில் ஏற்படும் மரபணுத்திரிபு (*mutation in a promoter*), தொலைவில் அமைந்திருக்கும் மரபணு புரோட்டின் உருவாக்க அமைப்பில் (*gene expression*) மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும். அது ஆட்டிசத்திற்கு வழிவகுக்கும். குறியிடப்படாமல் தங்களைத் தாங்களே புதுப்பித்துக்கொள்ளக்கூடிய 'மனிதத்தண்டு செல்களில் (*human stem cells*)' செய்யப்பட்ட வேறு ஓர் ஆய்வுக்கூட சோதனையில், குறிப்பிட்ட மரபணு சீரமைப்பானில் திரிபுகளை ஏற்படுத்தினர் [(*induced mutations) in TAD promoters*]. அதற்காக மரபணுத்-தேர்வு (*gene-selection*) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினர். மரபணு சீரமைப்பானின் செயல்திறனைக் குறைக்கும் ஒற்றைத்திரிபு (*single mutation*), அதே மரபணுக் கட்டுப்படுத்தும் பகுதியில் (*TAD promoters*) உள்ள ஆட்டிசம் தொடர்புடைய மரபணுவின் செயல்பாட்டில் மாற்றங்களை நிகழ்த்திவிடுகிறது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது மனிதர்களிடம் ஏற்கெனவே அறிந்திருந்தவற்றோடு பொருந்திப்போவதாக இருந்தது. இக்கண்டுபிடிப்பு ஆட்டிசம் வந்தவர்களின் மரபணுத்திரிபுகளைச் சரிசெய்து நோய்நீக்கும் மருத்துவத்தில் பயன்படும் என்று ஆய்வுக் குழுவினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

கல்லூரியில் வகுப்பறையில் தேர்வுக்காக நடத்திய பாடம் ஒன்று மனிதர்களின் நோய்தீர்க்கப் பயன்படப்போகிறது என்பதில் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.'பட்டாம்பூச்சியும், சாதிமத மோதல்களும்' என்று நான் எழுதிய ஒரு கட்டுரை காக்கைச் சிறகினிலே இதழில் வெளிவந்திருந்தது. அக்கட்டுரையில் திடீர் திடீரென உருவாகும் சாதி மத மோதல்களுக்குப் பட்டாம்பூச்சி விளைவைப் பயன்படுத்தித் தீர்வுகாண முயலலாம் என்று எழுதியிருந்தேன். இன்று அதே 'வண்ணத்துப்பூச்சி விளைவு' ஆட்டிசம் நோய்தீர்க்கும் மருத்துவ ஆய்வில் பயன்படுத்தப்பட்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது. அறிவியல், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மனித குலத்திற்கு நன்மைகளை ஏற்படுத்தும்போதுதான் அவை முழுமைபெறுகின்றன. நேர்கோடல்லா இயக்கம்போலவே, கால ஓட்டத்தில் எந்தக் கண்டுபிடிப்பு எப்போது, யாரால் அப்படிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை முன்கூட்டியே யாரும் சொல்லிவிடமுடியாது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

*Ref: Article by Emily Cooke in Live Science, 26 January 2024*

●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | எஸ். ஜெயசீல ஸ்டீபன்

# தமிழ்க் கதைப் புத்தகங்கள் அச்சிடுதலும், காலனித்துவத் தாக்கமும், வரலாறும்

ஐரோப்பியர்கள் வருகைக்குப் பின்பு கதைகள் பல வகைகளில் இருந்துள்ளன; அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் மொழியைக் கற்ற மேலைநாட்டவர் இதனைச் சிறப்பாக, தெளிவாகக் குறிப்பிட்டு, கதைகளின் பால் ஈர்க்கப்பட்டுள்ளனர். பனை ஓலைச் சுவடிகளை விலைக்கு வாங்கி ஐரோப்பாவுக்கு அனுப்பினர். பலர் அவர்கள் மொழிகளில் அவற்றை மொழிபெயர்த்தனர்.

வாய்மொழிக் கதைகளைத் திரட்டி, பனை ஓலைப் பிரதிகளைப் பார்த்து நூலாக அச்சிட்டனர். பிறமொழியை அடிப்படையாகக் கொண்டு அராபிக் கதைகள், பெர்ஷியன் கதைகள் வெளிவந்தன. மேலும் கிறித்தவக் கதைகளும் எழுதப்பட்டன; அச்சில் வெளிவந்தன. இவ்வாறாக கதை இலக்கியப் பயணம் தமிழில் வளர்ச்சி பெற்றுள்ளது. முதலில் யார் எந்தக் கதையைச் சொன்னார் என்று கண்டுபிடிப்பது கடினமானதாகும். உண்மையான எழுத்தாளர் யார், ஏன் அதைச் செய்தார் எனக் கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது. கதைகள் அதிக எண்ணிக்கையில் பெருகின. அவற்றில் சில சிறியனவாகவும், சில நீளமானவையாகவும் உள்ளன. இந்த இரு வகைகளும் கல்விக்காகவும் பொழுது போக்கிற்காகவும் பயன்பட்டனவா எனத் தெளிவாக இல்லை. மதம் தொடர்பான பல புதிய கதைகள் செய்யுள் வடிவில் அவ்வப்போது உருவாக்கப்பட்டுப் பரப்பப்பட்டன. தமிழ்ச் சமூகத்தில் நிலவும் இந்தப் புகழ்பெற்ற நடைமுறை ஐரோப்பியர்களால் கவனிக்கப் பட்டது. துப்புயி உலகப் பண்பாட்டு இயக்கம், புதுச்சேரி, ஆ.ச. அந்தோணிசாமி, ராஜ்ஜா வெளியிட்ட 'கதா மஞ்சரி தொகுப்பாசிரியர் துப்புயி லூயிஸ் சவினியன்', 2024, நூலில் பல பிழைகள் உள்ளன. எனவே இந்தப் பிழைகளைத் தொடர்ந்து பல எழுத்தாளர்களாலும் தவறாக எழுதப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, உண்மைகள் இவண் ஆவணச் சான்றுகளின் படி விளக்கப்படுகின்றன.

1. புதுச்சேரியில் இருந்த லூயி சவினியன் துப்புய்யால் கதா மஞ்சரி தொகுப்பு உருவாக்கப்படவில்லை.

2. கதா மஞ்சரி ஆசிரியர் வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியார், சென்னையின் ஆங்கிலேய ஆளுநர் ரிச்சர்ட் கிளாக் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கதைகளைத் தொகுத்தார்.

3. கதா மஞ்சரி வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியாரால் தயாரிக்கப்பட்டு, கிறித்து ஆண்டு 1826இல், சாலிவாகன ஆண்டு 1748இல், சென்னையில் முதலில் அச்சிடப்பட்டது. நூலின் இறுதியில் ஒரு பக்கத்தில் பிழை திருத்தங்கள் உள்ளன (சான்று: வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியார், கதா மஞ்சரி, *A Selection of Tales*, சென்னை, 1826, பக்கங்கள் 84, பிரித்தானிய நூலகம், லண்டன், 14170.k.23).

4. எனவே கதா மஞ்சரி முதல் பதிப்பு 1842ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது என்ற செய்தி தவறு.

5. வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியாரின் கதா மஞ்சரி மீண்டும் 1846இல், சென்னையில் அச்சடிக்கப்பட்டது (சான்று: கதா மஞ்சரி, *A Selection of Tales, Second edition*, பிரித்தானிய நூலகம், லண்டன், 14170.k.69; *Bibliothek der Evangelisch-Lutherisches Mission-san-stalt, Leipzig, Germany*).

6. கதா மஞ்சரி நூலில் 79 கதைகள் உள்ளன என்ற செய்தி தவறு. முதல் பதிப்பு நூலில் 82 கதைகள் சேர்க்கப்பட்டிருப்பதை நாம் காணலாம் (சான்று: வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியார், கதா மஞ்சரி, *A Selection of Tales*, சென்னை, 1826, பிரித்தானிய நூலகம், லண்டன், 14170.k.23).

7. லூயி சவினியன் துப்புய்க்கும் கதா மஞ்சரி நூலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. புதுச்சேரியில் இருந்த லூயி சவினியன் துப்புய் கதா மஞ்சரி நூலை அச்சிடவில்லை.

8. வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியாரின் கதா மஞ்சரி 1864இல், புதுவை



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

கல்விச் சாலை அச்சுக்கூடம், புதுச்சேரியில் அச்சிடப்பட்டது (சான்று: வில்லிப்பாக்கம் தாண்டவராய முதலியார், கதா மஞ்சரியும், நீதிசாரா வாக்கியமும், புதுவை கல்விச் சாலை அச்சுக்கூடம், புதுச்சேரி, 1864, பக்கங்கள் 176, மதுரை இயேசு சபை ஆவணக்காப்பகம், செண்பகனூர், 221/176; கதா மஞ்சரியும், நீதிசாரா வாக்கியமும், *Kathamanjari Followed by Selection from Ramasami Pillai's Neethisaaraa Vakkiyam*, 1864, பிரித்தானிய நூலகம், லண்டன், 14171.aa.15).

9. கதா மஞ்சரி மீண்டும் மீண்டும் 1870, 1876, 1883ஆம் ஆண்டுகளில் சென்னையில் அச்சடிக்கப்பட்டது (சான்று: தாண்டவராய முதலியார், கதா மஞ்சரி, சென்னை, 1870, தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை; தாண்டவராய முதலியார், கதா மஞ்சரி, சென்னை, 1876, தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை; தாண்டவராய முதலியார், கதா மஞ்சரி, சென்னை, 1883, தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை).

10. எனவே கதா மஞ்சரி 3ஆம் பதிப்பு 1888ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது என்ற செய்தி தவறு. இது சென்மவிராக்கினி மாதா தேவாலய அச்சுக்கூடத்தில் 1888ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டதாக நூலின் அட்டைப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிழை தொடர்கிறது.

11. கதா மஞ்சரி 5ஆம் பதிப்பு 1933ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது என்ற செய்தியும் தவறு.

12. கதா மஞ்சரி 6ஆம் பதிப்பு 2024ஆம் ஆண்டில் தற்போது அச்சிடப்பட்டு உள்ளது என்ற செய்தியும் தவறு.

13. லூயி சவினியன் துப்புய் ஒழுக்க மாலை என்ற நூலை எழுதினார் என்ற செய்தி தவறு. லூயி சவினியன் துப்புய்யால் ஒழுக்க மாலை என்ற நூல் எழுதப்படவில்லை. ஔவையாரால் எழுதப்பட்ட ஒழுக்க மாலை என்ற நூல், ஆதிச்சுவடி என்ற தலைப்பிலான நூலில் துப்புய்யால் 1844ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்டது. இந்நூல் 84 பக்கங்களைக் கொண்டது. 03-12-1844 நாளிட்ட கடிதத்தின் வழியாக, துப்புய் அச்சிடப்பட்ட ஆதிச்சுவடியின் ஆறு படிகள் பாரிசுக்கு அனுப்பப்பட்ட செய்தியை ழான் தெசோன் என்பவருக்குத் தெரிவித்தார். இந்நூலுக்குத் தேவைப்பட்ட சிறு குறிப்புகளைத் திரட்டுவதற்குத் தேவைப்பட்ட உதவிகளை சார்லஸ் டேலட் (1829-1878) என்பவர் வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

14. நீதிசாரா வாக்கியம் நூல் கொத்தமங்கலம் இராமசாமிப் பிள்ளையால் எழுதப்பட்டது. இந்நூல் 1844ஆம் ஆண்டில் சென்னையில் அச்சிடப்பட்டது. புதுச்சேரி அரசு 1864ஆம் ஆண்டில் (176 பக்கங்களைக் கொண்டது) மீண்டும் மறுபதிப்பு செய்து வெளியிட்டது. லூயி சவினியன் துப்புய்க்கும் நீதிசாரா வாக்கியம் நூலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. புதுச்சேரியில் இருந்த லூயி சவினியன் துப்புய் நீதிசாரா வாக்கியம் நூலை அச்சிடவில்லை. கதா மஞ்சரி நூலில் இருவகையான உரையினைக் கண்டுபிடிப்பது என்பது ஆர்வந்தரக் கூடியது. முதலாவதாக, சந்தி பிரித்துப் புத்தகத்தின் இடது பக்கத்தில் அச்சிடப்பட்டு, குழந்தைகளால் படிக்க எளிதாகப்பட்டது. அச்சிடப்பட்ட புத்தகத்தின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பனையோலைக் கையெழுத்துப் படியில் காணப்படுவது போல், இடைக்காலத்தில் இயற்றப்பட்ட சந்திப்பிரிப்பு இல்லாமல் வழங்கப்பட்டுள்ள உரையும் உள்ளது.

தமிழிலிருந்து கதா மஞ்சரி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பாகி 1860இல் வெளிவந்தது (சான்று: *S. Rajagopala Mudaliar, Thirty Selected Stories from Katha Manjari with Translation, Madras*, 1860, பிரித்தானிய நூலகம், லண்டன், 14170.i. 7 (No.1). கதைகள் மேலைநாட்டுத் தாக்கத்தின் மூலம் அச்சு வெளிச்சத்தைக் கண்டன. புதிய கதைகளும் கடந்தகாலத்தைப் போலவே தமிழர்களால் தொடர்ந்து எழுதப்பட்டு வளர்ந்தது என்பது மற்றொரு வளர்ச்சி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னையில் ஆங்கிலேயர்களும் புதுச்சேரியில் பிரஞ்சுக் காரர்களும் அவற்றை அச்சிடத் தொடங்கினர். ஆ.ச. அந்தோணிசாமி, ராஜ்ஜாவால், 'கதா மஞ்சரி தொகுப்பாசிரியர் துப்புயி லூயிஸ் சவினியன்' என்ற பொய்த் தகவல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கூற்றைத் தொடர்ந்து பல எழுத்தாளர்களாலும் தவறாக எழுதப்பட்டு வரக்கூடாது.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜேன்டிர சோலனா?
# இராஜேந்திர சோழனா?

அண்மையில் நான் சோழர் காலத்துச் செப்பேடுகள் பற்றிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றை வாசித்தேன். அதில் வழக்கமாக ஆங்கில வரலாற்று நூல்களிலும் கட்டுரைகளிலும் குறிப்பிடப்படுவது போலவே, *Chola, Rajendra Chola* என்று குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால், வியப்பளிக்கும் வகையில் இந்தச் செப்பேடுகளை ஆய்வு செய்த மகாதேவன் நூலைப் பற்றியும் கா. சங்கரநாராயணன் ஆய்வு பற்றியும், *M.* இராஜேந்திரன் அவர்களின் நூல் பற்றியும் குறிப்பிடும்போது, *Sozhar Ceppedugal* என்றும் *Rajendra Sozha Ceppedugal* என்றும் அச்சடித்திருந்தார்கள்.

இதை வாசித்தபோது எனக்கு சில வினாக்கள் தோன்றின.

- சோழர், பாண்டியர், சேரர், பல்லவர் ஆகியோர் எல்லாம் ஆங்கிலத்தில் *Chola, Pandiya, Chera, Pallava* என்று ஏன் அழைக்கப்படுகிறார்கள்?
- இராஜேந்திரர் எப்படி இராஜேன்டிரா ஆக மாறினார்?
- இராஜ இராஜ சோழர்(ன்) *Raja Raja Chola I* என்று ஏன் பெயர் சூட்டப்பட்டார்?
- பாண்டியன் நெடுஞ்செழியனை ஆங்கிலத்திலும் அதே ஒலி வருமாறு எழுதுகிறார்கள். ஆனால் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு வரும் வரலாற்றில் ஆங்கிலத்தில் சுந்தர பாண்டியா *I* குலசேகர பாண்டியா *III* என்று எழுதத் தொடங்குகிறார்கள். அது ஏன்?
- சோழ வரலாற்றிலும் ஆங்கிலத்தில் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு வந்த மன்னர்களை விஜயால்யா, ஆதித்யா *I* குலோத்துங்கா என்று எழுதுகிறார்கள். காரணம் புரியவில்லை.

ஏன் இப்படி ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள், எப்போதிருந்து எழுதுகிறார்கள் என்று ஆராய்வது நல்லது. இதற்கு எந்தத் தர்க்கவியல், மொழி நூல், இலக்கணக் காரணமும் இருப்பதாகத் தோன்றவில்லை.

இந்தக் கேள்வியை நான் இப்போது வசதியாகக் கிடைக்கும் செயற்கை நுண்ணறிவுச் செயலியில் கேட்டேன். அதற்கு எனக்குக் கிடைத்த முதல் விடை ஆங்கிலமயமாக ஆக்கும் போது இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கும் என்று வந்தது. ஆனால் ஒரு தமிழ்ச் சொல்லை ஆங்கில எழுத்து வடிவில் மாற்றும் போது இப்படிப்பட்ட நாம் மேலே கூறிய மாற்றங்கள் நடைபெற வாய்ப்பு இல்லை. எடுத்துக்காட்டாக, ஊர்ப் பெயர்களான மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி முதலான சொற்களை ஆங்கிலேயர் உச்சரிக்க இயலாததால் அவற்றை மஜூரா, டின்னவேலி, டூற்றுக்குரின் என்று மாற்றினார்கள். ஆனால் அதற்கு எந்த உச்சரிப்பு இலக்கணமும் இல்லை. எனினும், பிற பெயர்ச்சொற்களை மாற்றவில்லை.

ஏற்கனவே நான் இது பற்றி இன்னொரு நண்பரிடம் கேட்டபோது அவர் சொற்களை வடமொழியாக்கும் முயற்சியில் இப்படி மாறியிருக்கும் என்று சொன்னார். வடமொழியில் இராமாயணா என்றும் துரியோதனா என்றும் இவ்வாறு பல இடங்களில் ஆ உயிரெழுத்து ஒலியில் முடிவதாக இருப்பதை அவர் எடுத்துக்காட்டினார். எனவே நான் மீண்டும் அந்தச் செயற்கை நுண்ணறிவுச் செயலியில் இதைச் சுட்டிக்காட்டி கேட்டபோது அது தனது நிலையை மாற்றிக்கொண்டது.

பத்தாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் வடமொழித் தாக்கத்தினால் பல சொற்கள் அதற்கு ஏற்றாற்போல மாற்றம் பெற்றன அல்லது புதுச் சொற்கள் உருவாயின. இராஜ இராஜ சோழரே தனது பெயரை இவ்வாறு மாற்றிக்கொண்டார் அல்லவா? இது ஒரு காரணம். இன்னொரு காரணம் ஆங்கிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனவே இனி ஆங்கில வழியில் கற்கும் தமிழ் மாணவர்களுக்கு உரிய வரலாற்று நூல்களில் சரியான எழுத்துள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதே நோக்கம். அதாவது Rajenthira Chozhar, Mahenthira Pallavar, Chozhar, Pandiyar, Cherar, Pallavar என்று இனி மாணவர்க்குரிய வரலாற்று நூல்களில் எழுத வேண்டும் என்று வேண்டுகிறோம். அது போலவே தமிழ்நாட்டு வரலாற்று நூல்களை எழுதும் ஆசிரியர்களும் இவ்வாறு தமிழ்ப் பெயர்களை ஆங்கில நூல்களில் எழுதும் போது அவற்றிற்குரிய ஆங்கில spelling பயன்படுத்த வேண்டும்.

தமிழ் வரலாறு முதலில் எழுதிய தமிழ் வரலாற்று அறிஞர்கள் வடமொழிப் பயிற்சி பெற்றவர்களாக இருந்ததால் இவ்வாறு வடமொழி மரபையொட்டி அரசர்கள் முதலானோர்களுடைய பெயர்களையும் மாற்றி எழுதினார்கள். அதாவது வடமொழியில் எப்படி பேசப்பட்டதோ அதனை எழுத்து வடிவில் கொண்டு வந்தனர். இவர்களைப் பின்பற்றி எழுதிய ஆங்கில வரலாற்று ஆசிரியர்களும் அதே எழுத்து உருவினைக் (*spelling*) கொண்டு வந்தார்கள்.

இப்போது நம்முடைய கேள்வி ஆங்கிலத்தில் இவ்வாறு உருக்குலைந்த உச்சரிப்புள்ள பெயர்ச்சொற்களை இன்னும் பயன்படுத்த வேண்டுமா என்பதுதான். இப்போது ழ எழுத்துருவிற்கு *zh* என்பதைப் பதிலியாகப் பயன்படுத்துவது வழக்கில் வந்துவிட்டது என்பதை நாம் இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இனி ஆங்கில வழியில் கற்கும் தமிழ் மாணவர்களுக்கு உரிய வரலாற்று நூல்களில் சரியான எழுத்துள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதே நோக்கம். அதாவது *Rajenthira Chozhar, Mahenthira Pallavar, Chozhar, Pandiyar, Cherar, Pallavar* என்று இனி மாணவர்க்குரிய வரலாற்று நூல்களில் எழுத வேண்டும் என்று வேண்டுகிறோம். அது போலவே தமிழ்நாட்டு வரலாற்று நூல்களை எழுதும் ஆசிரியர்களும் இவ்வாறு தமிழ்ப் பெயர்களை ஆங்கில நூல்களில் எழுதும் போது அவற்றிற்குரிய ஆங்கில *spelling* பயன்படுத்த வேண்டும்.

இதுவெல்லாம் சரிதான். தமிழை ஏன் *Tamil* என்று எழுத வேண்டும்? இந்த எழுத்தமைப்பைக் கொண்டு வந்தது ஆங்கிலேயர்கள்தான் என்பது தெளிவு. ஏற்கனவே அவர்களால் உச்சரிக்க முடியாமல் புதிய உச்சரிப்புகள் தரப்பட்ட ஊர்ப் பெயர்கள் மாற்றப்பட்டுவிட்டன. மஜூராவும், டின்னவேலியும், டூற்றுக்குரினும் அவற்றிற்குரிய சரியான உச்சரிப்பு வரக்கூடிய வகையில் ஆங்கிலத்தில் மாற்றப்பட்டுவிட்டன. அது போலவே *Tamil* ஐயும் *Thamizh* என்று மாற்றுவதில் என்ன குழப்பம் நேரும்? அல்லது என்ன இடர்ப்பாடு இருக்கும்? ஆனால் இதனை அரசுதான் செய்ய வேண்டும். சட்டமன்றத்தில் தகுந்த தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமா என்று தெரியவில்லை. ஆனால் தமிழ் என்பதை ஆங்கிலத்திலும் *Thamizh* என்று குறிப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் ஏற்கும் என்று நம்புகிறோம்.

●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வறிஞர் வையாபுரியாரின் சொல்லாய்வு

நாகபுரியில் 1946 ஆம் ஆண்டு நிகழ்ந்த கீழ்த்திசை அறிஞர்களின் மாநாட்டில் திராவிட மொழிப் பகுதிக்குத் தலைமை தாங்கினார் பேராசிரியர் வையாபுரியார். அவர் ஆங்கிலத்தில் ஆற்றிய தலைமைப் பேருரை 1947இல் 'திராவிட மொழிகளின் ஆராய்ச்சி' என்ற பெயரில் தமிழில் வெளிவந்துள்ளது. அச்சொற்பொழிவில் சில தமிழ்ச் சொற்களை வடமொழிச் சொற்களாக வையாபுரியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொல்லியல் ஆய்வு இப்போதுபோல் அவர் காலத்தில் வெளிவராததாலும், கால்டுவெல்லின் ஆய்விற்குப் பின்னும் அவர் கருத்து விரிவாகப் பரவாமல் சமற்கிருதமே இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய் என்ற கருத்து வலுப்பெற்றிருந்ததாலும், வேதநாகரிகத்தினும் முந்தையது திராவிட நாகரிகம் என்பதை வையாபுரியார் ஏற்றுக்கொள்ளாததாலும், எமனோ பர்ரோவின் திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளிவராமையாலும் தமிழ்ச்சொற்களை வடசொற்களாக அவர் கருத நேரிட்டுள்ளது. இன்றைய ஆய்வு வளர்நிலையில் அவர் கருத்துகளின் வன்மைமென்மைகளை ஆராய்ந்து உண்மை காண்பது தமிழ்மொழி வரலாற்றிற்குப் பெரிதும் பயன்படும்.

வையாபுரியார் தம் சொற்பொழிவில் சில தமிழ்ச் சொற்களை வடசொற்களாகக் சுட்டிக்காட்டியுள்ளார். 'பீடா' என்ற வடசொல் தமிழில் 'பீழை' என்றும், 'சிர்ஷிக்' என்பது 'சிகழிகை' என்றும், 'பல' என்பது 'பழம்' என்றும், 'க்ல' என்பது 'கழகம்' என்றும், 'மயூர' என்பது 'மயில்' என்றும், 'ஹநுமந்த' என்ற வடசொல் 'ஆணமந்தி' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது என்றும் கூறுவது தவறு என்று சுட்டிக்காட்டியுள்ளார். (திராவிட மொழிகளின் ஆராய்ச்சி, பக்.21-22) அவற்றுள் 'மயூர', 'ஹநுமந்த' ஆகிய இரு சொற்களை மட்டும் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

வையாபுரியார், "தமிழில் 'மயில்' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இச்சொல் 'மயூர' என்பதனோடு தொடர்புடையது என்றும் அதற்குச் சான்று தெலுங்கு கன்னட மொழிகளில் 'மயூர' என்ற சொல் ஒன்றே இடம்பெற்றது இத்தொடர்பை வலியுறுத்தும்" என்கிறார். எமனோபர்ரோவின் திராவிட மொழிச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் தெலுங்கு தவிர்த்த பிற திராவிட மொழிகளில் கன்னடம் உட்பட தமிழ்: மஞ்ஞை, மயில்; மலையாளம்: மயில்; கோடா: மை-ல்; தோடா: மி-ஸ்; கன்னடம்: மயில, மயிலு; கொடகு: மைலி; துளு : மைரை; பர்ஜி: மஞ்சில், மாஞில்; கோண்டி: மால், மால்லு; கோண்டா: மீரில், மிரிலு; பெங்கோ: மால்; மாண்டா: மெல்; கூய்: மேடு, மேலு; கூவி: மெல்லு, மெல்லு, மெலு என்று தமிழ் வடிவத்தை ஒட்டிய சொற்களே திராவிட மொழிகளில் காணப்பெறுகின்றன. . (*A Dravidian Etymological Dictionary - T.Burrow and M.B.Emeneau, Second Edison 1984 P.410, Word No. 4642*) கன்னடத்தில் தமிழ்ச்சொல் வடிவம் இல்லை என்று கூறிய வையாபுரியார் கருத்துக்கு மாறாக எமனோபர்ரோ அகரமுதலி மயிலா, மயிலு என்றஇரண்டுதமிழுக்கேற்றசொல்வடிவங்களை எடுத்துக்காட்டுகிறது. திராவிட மொழிகள் பலவற்றிலும் தமிழ் வடிவமே சற்றுத் திரிந்து காணப்படுகிறது. எனவே, தெலுங்கில் 'மயூர' என்ற சொல்வடிவம் இருப்பது கொண்டு மட்டும் வடசொல்லே முந்தையது என வரையறுக்க இயலாது.

மயூர என்ற வடசொல் இருக்கு வேதத்தில் பயின்று வந்துள்ளது என்று வையாபுரியார் மேலும் ஒரு சான்று காட்டுகிறார். இருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தில் தமிழ்ச்சொற்கள் ஐம்பதிற்கு மேல் இடம்பெற்றுள்ளன என்று சுநித்குமார் சட்டர்சி சுந்தரராசன் மற்றும் மேலையறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனவே, இருக்கு வேதத்தில் இடம்பெற்றதால் மட்டுமே அது வடசொல் ஆகிவிடாது. மயில் என்ற தமிழ்ச் சொல்லின் மாற்று வடிவமாகவே மயூர என்ற சொல் வடிவம் அமைந்துள்ளது. எனவே, அவரது மேற்குறித்த சான்றும் பொருந்தாது.

அடுத்து அறிஞர் ஒருவர் மயில் என்ற சொல்லை மா + இல் எனப் பிரித்து மா என்பது அழகு என்றும் இல் என்பது இடம் என்றும் கூறி அழகிய சிறகினை உடையது எனச் சொற்பொருள் விளக்கம் செய்துள்ளது பொருந்தாது என்றும் வையாபுரியார் கூறுகிறார். ஆயின் அந்த அறிஞர் விளக்கம் பொருத்தமில்லாமல் போனதால் அச்சொல் தமிழ்ச்சொல் அன்று என்று கூறுவது தகாது. இதற்குப் பொருத்தமான விளக்கத்தை மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் தம் வடமொழி வரலாறு என்ற நூலில் விளக்கியுள்ளார்.

மை = கருநிறம்; இல் = இடம், கண்;

மை = மயி+ இல் = மயில்= கரிய அல்லது நீலநிறப் பீலிக் கண்களையுடையது.

மயில் தமிழகக் குறிஞ்சி நிலப்பறவை: குறிஞ்சி நிலத்தெய்வமாகிய முருகனூர்தி.

வடவர் ஐயுற்றுக் காட்டும் மூலம் மா2 - ஒலி *(To sound)* (வடமொழி வரலாறு பக்கம்-222-223).

எனவே, மயில் என்ற தனித்தமிழ்ச் சொல்லே இருக்கு வேதத்தில் புகுந்து வடிவுமாறி மயூர என்ற வடசொல்லாயிற்று என்பதே மொழியியல் அடிப்படையில் உண்மையாகும்.

அடுத்து ஹநுமந்த என்ற சொல் குறித்து வையாபுரியார் பின்வருமாறு விரிவாக விளக்குகிறார். 'வேறொரு மேல்நாட்டு மொழியாராய்ச்சியாளர் வடமொழியிலுள்ள ஹநுமந்த என்ற ஒரு சொல் 'ஆண்மந்தி' என்ற தமிழ்த் தொடரினின்றும் பிறந்ததாக எழுதியுள்ளார். ஆண்மந்தி என்பதை ஆண்குரங்கு என்ற பொருளில் அவர் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால், மந்தி என்ற சொல் முற்காலத்தில் பெண் குரங்கிற்கே வழங்கப்பட்டது. பெண்பாற் பெயர்களை உணர்த்துமிடத்து, தொல்காப்பியர் குரங்குமுசுவும் ஊகமு மந்தி (பொருள் - மரபு-68) எனக் கூறினர். பிற்காலத்தும் இதுவே வழக்காறு என்பது மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின (சித்திரக்கூட-43) என்று கம்பராமாயணச் செய்யுளில் வருவதால் அறியலாம். ஆகவே, ஆண்மந்தி என்பது இயற்கையில் எத்தனை பரிகாசத்திற்கிடமோ அத்தனை அளவாக சொல் - தொடர் அமைப்பிலும் அது பரிகாசத்திற்கு ஏதுவாகும்". (திராவிட மொழிகள் ஆராய்ச்சி பக்.21-22) என்று வையாபுரியார் கூறுகிறார். இதற்கு விடையாகத் திரவிடர் வரலாறு எழுதிய அறிஞர் சோதிப்பிரகாசம் நூலுக்கு மதுரையிலிருந்து வெளிவந்த ஒப்புரவு என்ற இதழில் 2006 ஆம் ஆண்டு நான் எழுதியதைச் சுட்டலாம். "இங்கே மந்தி என்ற அஃறிணைப் பெண்பாற்சொல் எவ்வாறு உயர்திணை ஆண்பாலைக் குறிக்கும் என்ற ஐயம் எழலாம். மந்தி என்ற சொல் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் பெண் குரங்கைக் குறிக்கும் சொல்லாகவே சுட்டப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் உள்ளது உண்மைதான். தொல்பழங்காலத்தில் விலங்கைக் குறித்த சொற்கள் முதலில் பால் வேறுபாடற்ற பெயர்களாகவே (பால்பகா அஃறிணைப் பெயர்களாகவே) தொடக்கத்தில் இருந்திருக்கும் என்ற மொழியியல் கொள்கையைக் கருத்தில்கொண்டால் இக்குளறுபடிக்கு இடமே இல்லை. இதற்குப் பெட்டைக் கோழிக்கும் சேவற் கோழிக்கும் பொதுப்பெயராய் இருந்த கோழி என்ற சொல் இன்று பெட்டைக் கோழியை மட்டும் குறிப்பதைச் சான்றாக்கலாம். அதுபோலவே தொல்பழங்காலத்தில் மந்தி என்பது ஆண், பெண் இரண்டையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இருந்திருக்கலாம்" 'ஹனுமந்த' என்ற சொல் இராமாயணக் காலத்தது என்பதால் பால் பகா அஃறிணைப் பெயராக இருந்திருக்க வாய்ப்புண்டு என்றும் ஊகிக்கலாம். எனவே, மேலை அறிஞர் கருத்தை ஏற்று ஹநுமந்த என்ற வடசொல் ஆண்மந்தி என்ற தமிழ்ச் சொல்லிலிருந்தே தோன்றியிருக்கும் என உறுதிப்படுத்தலாம். எனவே, வையாபுரியாரின் உழைப்புக்கு வணக்கம் செலுத்துவோம். ஆனால், உண்மைக்கே வாழ்த்துக் கூறுவோம்.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | அரிஅரவேலன்

# வே. தில்லைநாயகத்தின் நூலகத்தமிழ் இலக்கியம்

### நூலகத்தமிழ்

நூலகத்தமிழ் என்னும் சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தியவர் பேராசிரியர் மது. ச. விமலானந்தம். ஆனால், அச்சொல்லின் பொருளை அவர் வரையறுக்கவில்லை. எனவே, "தமிழிசைக்கும் இசைத்தமிழுக்கும் உள்ள வேறுபாடு என்ன?" என்று வினவியபொழுது, "தமிழில் உள்ள இசை மரபைக் குறிப்பது தமிழிசை; இவ்விசையின் இலக்கணப்படி இசைப்பதற்காகத் தமிழில் இயற்றப்படும் பாடல் இசைத்தமிழ்" என்று புதுச்சேரிப் புலவர் திருமாறன் விளக்கியதை அடியொற்றி, 'தமிழ்மரபிலுள்ள நூலகவியல் சிந்தனையை விளக்குவது தமிழ்நூலகவியல்; அம்மரபின் வழியே நூலகவியல் சிந்தனையை மொழிவது நூலகவியற்றமிழ்' என வரையறுக்கலாம். இவ்விருகூறுகளையும் இணைத்துப் பொதுவாக 'நூலகத்தமிழ்' என அழைக்கலாம்.

### வே. தில்லைநாயகம்

'பழைய மொழிகளில் ஒன்றான தமிழில் புதிய துறையான நூலகவியல் கருத்துகள் உள்ளனவா என நுணுகிப் பார்த்து, அலசி ஆராய்ந்து, விளக்கியதன்' வழியாகத் தமிழ்நூலகவியல் என்னும் புதிய துறையைத் தொடங்கியவர் வே. தில்லைநாயகம் (வேதி). இவர் பள்ளி மாணவராக இருந்தபொழுது, மதுரைக் கல்லூரிக் கணிதப் பேராசிரியர் சிறீகண்டனின் நூலகச் சட்டத்தின் தேவையைப் பற்றிய உரையைச் செவியுற்றதால் நூலகவுணர்வைப் பெற்றார். அதன் விளைவாக பொதுக்கல்வி இயக்குநரக நூலகராக, கன்னிமாரா நூலகராக, தமிழ்நாட்டு அரசுப் பொதுநூலகத் துறையின் முதல் தொழில்புரி நூலக இயக்குநராகப் பணியாற்றியவர். நூலியல், நூலகவியல், நூற்றொகையியல், நூலக ஆட்சியியல், நூலக வரலாற்றியல், நூலகச் சட்டவியல், நூலக இலக்கியம் என நூலகம் தொடர்பான பல்வேறு துறைகளில் ஏறத்தாழ 60 ஆண்டுகளாகப் பங்களித்தவர் வேதி. எனவேதான், "நமது மக்களை நூலக விழிப்புணர்வு பெறச் செய்வதற்காக தில்லைநாயகம் செய்யும் அனைத்திற்கும் நமது தமிழ்நாடு அவருக்குக் கடன்பட்டுள்ளது" என்று இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படுகிற சீ.இரா. அரங்கநாதன் இவரைப் பாராட்டினார்.

### நூலகத்தமிழ் இலக்கியம்

இயல்பிலேயே எழுத்தார்வம் உடைய வேதி, நூலகவியல் கல்வியைப் பெற்று நூலகரானதும் நூலகத்தமிழ் இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினார். நூலகவியலில் இலக்கியத்தைச் செய்யுள், நாடகம், கதை, கடிதம், சொற்பொழிவு, உரைநடை, பிற என ஏழாகப் பகுப்பர். அம்முறையில் வேதியின் நூலகத்தமிழ் இலக்கியங்களை நோக்கலாம்.

### செய்யுள்/பாடல்/கவிதை

'அறிவகம்' என்னும் செய்யுளே நூலகம் தொடர்பான வேதி இயற்றிய முதற்செய்யுள். அவர் நூலகவியல் தொடர்பாக 9 செய்யுள்களையும் 17 இசைப்பாடல்களையும் இயற்றி இருக்கிறார். அவற்றுள் 'அறிவகம்', 'இன்றைய சரசுவதி' என்னும் செய்யுள்கள் பாரதியின் செய்யுள்களிலிருந்து மீட்டுருவாக்கம் செய்யப்பட்டவை. 'தண்ணெனும் நீரும்' என்னும் செய்யுள், ஆந்திர நூலக இயக்க முன்னோடியான சிலகமர்த்தி லட்சுமி நரசிம்மம் எழுதிய செய்யுளின் மொழிபெயர்ப்பு. எட்டு இசைப்பாடல்கள் திரைப்பாடல்களின் மீட்டுருவாக்கங்கள்.

### நாடகம்

வேதி நூலகவியல் தொடர்பான நாடகம் எதனையும் எழுதவில்லை. மாறாக, புதிய படிப்பாளர்களுக்காக 'நூலகப்பணி' என்னும் சுவடியைத் தாத்தாவுக்கும் பேரனுக்கும் இடையில் நிகழும் உரையாடலாக இச்சுவடியை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கதை**

'விலகவில்லை - தொடர்கிறேன்?', என்னும் கதையையும் 'கி.பி.2000இல் நூலகப்பணி' என்னும் புனைவுக் கட்டுரையையும் எழுதினார். இவற்றுள் முன்னது 1958இல் மதுரை தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நாடகமாக மேடையேறியது.

**கடிதங்கள்**

வேதி நூலகம், நூலகவியல் தொடர்பாகப் பலருக்கும் பல கடிதங்களை எழுதியிருக்கிறார். ஆனால், அவை எவையும் நூலாக இதுகாறும் தொகுக்கப்படவில்லை.

**சொற்பொழிவுகள்**

வேதி நூலகராகவும் இயக்குநராகவும் பணியாற்றிய பொழுது நூலகம் தொடர்பான விழாக்கள், கருத்தரங்குகள் பலவற்றில் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றினார். வானொலியிலும் தொலைக்காட்சியிலும் உரையாற்றினார்.

**கட்டுரைகள்**

நூலகக்கல்விபெற்று, நூலகராகப் பணியாற்றத் தொடங்கியபொழுது நடைமுறைச் சிக்கல்கள் புரிபட்டன. அப்பொழுது கிடைத்த பட்டறிவை 'நூலகக்குறிப்புகள்' என்னும் தலைப்பில் தொடராக எழுதினார். அத்தொடரின் முதற்படைப்பான 'நூலகத்தேவை' என்னும் கட்டுரையே வேதியின் முதல் நூலகத்தமிழ்ப் படைப்பு.இதன்பின்னர் சீ.இரா. அரங்கநாதனின் நூலக அறிவியலின் ஐந்து கட்டளைகள் என்ற நூலை அடியொற்றி அமைச்சன் இதழில் கட்டுரைகள் எழுதினார். அவற்றை விரிவுவாக்கமே நூலகவுணர்வு, நூல்கள் படிப்பதற்கே, ஆளுக்கொரு நூல், நூலுக்கு ஓர் ஆள், காலம் கருதுக, நூலகம் வளரும், நூல்கள், வாசகர், நூலகர் என்னும் ஒன்பது பகுதிக்கொண்ட 'நூலகவுணர்வு' என்னும் நூல் ஆகும். தொடர்ந்து குத்தூசி, நூலகம் இதழ்களில் இந்திய நூலக வரலாறு தொடர்பான கட்டுரைகளை எழுதினார். அவற்றின் விரிவாக்கம் அறிமுகம், நூல், நூல்கள், சங்ககாலம், சமய காலம், இசுலாமியர் காலம், ஆங்கிலேயர் காலம், சுதந்திர காலம் என்னும் எட்டுப் பிரிவுகளைக் கொண்ட நூலாக 'இந்திய நூலக இயக்கம்' என்னும் பெயரில் வெளிவந்தது. இந்நூலுக்கு, "எந்த ஐரோப்பியனும் இந்தியனும் ஏன் எந்தத் தமிழ்மகனும் இந்திய வரலாற்றைக் காவிரிக் கரையிலோ, வையைக் கரையிலோ தொடங்கியதாகத் தெரியவில்லை. ஆனால், இந்நூலாசிரியர் இந்திய நூலக இயக்க வரலாற்றை வையைக் கரையில் மிகத்துணிச்சலாகத் தொடங்கியுள்ளார்" என்று சிந்துச்சமவெளி ஆய்வாளரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநருமான முனைவர் க.த.திருநாவுக்கரசு மதிப்புரை எழுதினார். மஞ்சரி இதழ் இந்நூலின் சுருக்கத்தை வெளியிடப்பட்டது. பின்னர் அது 'நூலகக்கதை' என்னும் நூலக வெளிவந்தது, அதே வேளையில் மதுரையின் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அதற்கு வருகைதந்த பேராளர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதற்காக இந்நூல் மேலும் சுருக்கப்பட்டு 'இந்திய நூலக வரலாறு' என்ற தலைப்பில் பொதுநூலகத் துறையால் வெளியிடப்பட்டது.

நூலகத்தின் அடிப்படைகளையும் வரலாற்றையும் நூல்களாக எழுதி வேதி, நூலகத்திற்காக உழைத்தவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை நூலகம், தமிழ்ப்பணி உள்ளிட்ட வெவ்வேறு இதழ்களில் எழுதினார். அவற்றுள் தொல்காப்பியர், கன்னிமாரா பிரபு, பரோடா மன்னர் கெய்க்வட், போர்டன், கூடல்கர், அசதுல்லா, சீ.இரா.அரங்கநாதன், ஐயங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கடரமணய்யா ஆகியோரைப்பற்றிய கட்டுரைகளின் தொகுப்பே 'நூலக முன்னோடிகள்' என்னும் நூல் ஆகும்.

பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சீ.இரா. அரங்கநாதனின் வாழ்வு, பணி, சிந்தனை ஆகியனபற்றி 10 நூல்கள் எழுதத் திட்டமிட்டார். அதில் முதல் நூலாக 'நாமறிந்த அரங்கநாதன் வாழ்மை' என்னும் நூலை வெளியிட்டார். அரங்கநாதனைப் பற்றி தமிழில் விரிவாக எழுதப்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல் இதுவே ஆகும்.

இவை தவிர அவ்வப்பொழுது நூல், நூலியல், நூலகம், நூலகவியல் தொடர்பாக பல கட்டுரைகளை வெவ்வேறு இதழ்களில் எழுதியிருக்கிறார். அவை முறையாகத் தொகுக்கப்பட வேண்டும்.

### பிற

தமிழ்நாட்டு நூற்றொகை, குழந்தைகள் நூற்றொகை, நூலறிமுக விழா மலர்கள் ஆகியவற்றிக்கு எழுதப்பட்ட பதிப்புரைகள், தமிழ்நாட்டில் நூலகப்பணி வளர்ச்சி என்னும் சுவடி ஆகிய வேதி நூலகத்தமிழுக்கு ஆற்றிய பிற பங்களிப்புகள் ஆகும். இவைதவிர நூலகவியல்தொடர்பாக 643 கலைச்சொல்களைக் கொண்ட பட்டியலை உருவாக்கி உள்ளார்.

மேலும் பொதுநூலகத்துறையில் பணியாற்றும் கிளை நூலகர்களுக்கு தமிழ்வழியில் நூலகவியலைக் கற்பிக்க கன்னிமாரா நூலகத்தில் நூலக அறிவியல் பயிற்றகம் தொடங்கப்பட்டது. அதற்கான பாடத்திட்டத்தையும் பாடக்குறிப்புகளையும் வேதி வரைந்தார்.

### தமிழ்நூலகவியல் படைப்புகள்

பெ.சுந்தரனார், கா. நமச்சிவாயர், ந.சி. கந்தையா, டி. கிருட்டிணமூர்த்தி ஆகியோரை உள்ளிட்ட சிலர் நூலகவியல் தொடர்பாகத் தமிழில் எழுதியுள்ளனர். ஆனால், அவை ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ அமைந்தன. மாறாக, வேதி எழுதிய சில கட்டுரைகள் தமிழ்ச்சிந்தனை மரபில் நூலகவியல் கூறுகள் எங்ஙனம் இடம்பெற்றிருக்கின்றன என்பதைத் துலக்கிக் காட்டுகின்றன. இப்பங்களிப்புதான் வேதிக்கு முன்னும் பின்னும் தமிழில் நூலகவியலைப் பற்றி எழுதியவர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுகிறது.

வேதி, 'தமிழில் நூலக அறிவியல்' என்னும் ஆங்கிலக் கட்டுரையை எழுதினார். அதில் நூல், நூலகம், பகுப்பியல், வகைப்பாடுகள், நினைவுக்குறிகள், நூலகர் ஆகியனவற்றைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் இடம்பெற்றிருக்கின்றன என்று எழுதினார்.

அதனைக் கண்ணுற்ற சீ.இரா.அரங்கநாதன், அக்கட்டுரையை விரித்து எழுதும்படி கூறினார். அந்த அறிவுரையை ஏற்ற வேதி 'தமிழ் நோக்கில் நூல் தரம்', 'தமிழில் நூலகவியல் முத்துகள்', 'சங்க இலக்கியத்தில் நூலகவியல்', 'நூலகவியல்:தமிழ் மரபு' என்னும் கட்டுரைகளை எழுதினார். இவற்றின் விரிவாக்கமே இந்திய நூலக இயக்கம் என்னும் நூலில் 'நூல்' என்னும் இயல் ஆகும்.

இக்கட்டுரைகளில் தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், இறையனார் அகப்பொருள், வச்சணந்திமாலை, யாப்பிணக்கன விளக்கச் சூத்திரம் ஆகிய இலக்கண நூல்களிலும் பதினெண் மேற்கணக்கு நூல்களிலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, நீலகேசி ஆகிய காப்பியங்களிலும் திருமந்திரம், சிவஞான சித்தியார் ஆகிய மெய்யியல் நூல்களிலும் வில்லிபாரதம், விநாயகபுராணம், கந்தபுராணம் போன்ற சமயநூல்களிலும் பிங்கல் நிகண்டு, விக்கிரம சோழன் உலா, அருங்கலச்செப்பு, பரமதத் திமிரபானு, திருவள்ளுவமாலை, முதுமொழி மேல்வைப்பு ஆகிய பிற்கால நூல்களிலும் செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகியன போன்றவற்றிலும் நூல், நூலகம் பற்றிய சிந்தனைகளும் நூலகவியற் கூறுகளும் எவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன என்பதனை விளக்குகிறார் வேதி.

இங்ஙனம் நெடுங்காலம் வேதி ஆற்றிய நூலகத்தமிழ்ப் பணியை இன்றைய நூலகவியற் போக்குகளின் நோக்கில் வளர்த்தெடுக்க வேண்டியது இக்கால நூலகவியலாளர்களின் கடமை ஆகும்.

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரசேவை



தமிழ் நிலத்தின் வாழ்வியல் பரப்பில் பல்வேறு இனக்குழுக்கள் தங்கள் தொழில் சார்ந்தே தகவமைத்துக் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக பெரும்பான்மைச் சமூகங்களால் ஒதுக்கித் தள்ளி வைக்கப்படும் ஆதிக்குடி சமூகங்கள் இன்றளவும் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் உருக்குலைந்து போனவர்களாக வகைப்படுத்தி வைத்திருப்பதைச் சமூகப் புரிதலற்ற கோணங்களில் பார்க்க முடிகிறது. எழுத்தாளர் பிரதிபா ஜெயச்சந்திரனின் "கரசேவை" சிறுகதைத் தொகுப்பு மதுரைக்குத் தெற்கே பெருங்குடியில் துவங்கி காரியாபட்டி வரை அங்குள்ள ஆதிக்குடிச் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் அங்கே நடக்கும் பல்வேறு மேலாதிக்க போக்குகளைக் குறிக்கும் வகையில் கதைகளில் விரிவுபடப் புலப்படுத்தியிருக்கிறார்.கிறிஸ்தவத்திற்கு மாறிய ஒரு குடும்பத்தின் பாடுகளை கதைகளில் ஆவணப்படுத்தியிருக்கிறார்.பதின்மூன்று சிறுகதைகளைக் கொண்டுள்ளது இந்நூல். "கரசேவை" என்ற தலைப்பு இன்னும் கொஞ்சம் வித்தியாசமாகத் தானிருக்கிறது.எந்த லாப நோக்கமற்ற ,மாறுபட்டு சொல்ல வேண்டுமானால் எதையும் எதிர்பாராமல் எந்த பலனின்றி ஒருவருக்குச் செய்யும் சேவையை கரசேவை என்பார்கள். இத்தலைப்பே சுயவிமர்சனத்தோடு பரிணமிக்கின்றன.

"இடைவார்ப்பட்டை சமயன்" என்கிற முதல் கதை தொடங்குகிறது. காட்டுக்கு பனையோலை வெட்டச் செல்லும் இடைவார்ப்பட்டை சமயனுக்கு நாருப்பெட்டியில் கஞ்சி கொண்டு போகும் பஞ்சவர்ணமும் கிராமத்தை கண்முன்னே கொண்டு வருகின்றனர். எளிய வட்டாரப் பேச்சு வழக்கு நடையில் கதாசிரியர் நகர்த்துவது நூலை வளப்படுத்துகின்றன.

கிறிஸ்து பற்றுடைய குடும்பத்தின் உரையாடலும் உபசரிப்பும் "பிதாகுமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே" என்னும் இக்கதையில் மிக எதார்த்தமான மொழியில் அமைந்துள்ளன. அவர்களது அன்னாடங்காட்சி நிலையை ஆழமாகக் காண்பிக்கும் வகையில் எடுத்துரைக்கின்றன. விருதுநகர் நண்பர் வீட்டிற்குச் சென்று முப்பது நாள்கள் விடுமுறையை கழிக்க இருந்த தங்கராசு இரண்டே நாள்களில் வீடு திரும்புவதும், காரணம் தெரியாமல் தவித்தவனுக்கு தெருவில் உள்ள அக்கம் பத்தினர் சொல்லியிருக்கிறார்கள் "என்னா ஆளுகனு" விசாரித்து விட்டுச் சென்றதாக....சாதியின் ஈரநப்பு அடித்த வண்ணமே உள்ளன. வாசகனாக வாசிக்கையில் உள் மனதில் கேள்வி எழுப்புகின்றன. "சாதியற்ற சமுதாயம் படைப்போம்..." என்று வெற்று முழக்கங்கள் போட்டு ஊர் ஊராகச் சென்று என்ன பயன். மானுடர்களின் மனதின் அடியாளத்திலிருந்து சாதி எக்களித்துக் கொண்டு தானிருக்கிறது.

கடை வைத்து பிழைப்பு நடத்திய சமூகத்தைப் பற்றியும் வேளாண்மை செய்து வந்து சமூகத்தைப் பற்றியும் சம்சாரி வேலை செய்த ஆதிக்குடி சமூகங்களின் பாடுகள் பற்றியும் எலி,அணில்களை வேட்டையாடி வாழ்க்கை நடத்திய மக்களைப் பற்றியும் "சகோ-டி" கதையில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. தெக்குப்பட்டி,வடக்குப்பட்டி இரண்டு ஊர்களிலும் உள்ள சாதிகளின் பெயர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. தேவர், நாடார், பிள்ளைமார், பள்ளர்,வலையர், பறையர், அருந்ததியர் என தனது கதைகளில் விரிவாகவேப் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர். தெக்குப்பட்டியில் மூன்று சமூக மக்கள்(பள்ளர், பறையர் , அருந்ததியர்) வாழ்ந்து வந்திருக்கின்றனர்.மேற்குறித்த மூன்றில் ஒரு சமூக மக்கள் வேதத்திற்கு மாறுவதாகவும் ஒரு சமூக மக்கள் நாயன வாசிப்புதாகவும் ஒரு சமூக மக்கள் சம்சாரி வேலை செய்வதாகவும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

"பள்ளப்பயலுகனு" சொன்ன மேலாதிக்கவாதியை வெட்டிக் கொலை செய்த கருப்பையா,"பள்ளப்பயலுகனு சொல்லாத..." "குடும்பமாருகனு சொல்லு..." எவனாவது "பள்ளப்பயலுகனு.." அப்படிச் சொன்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பல்லுலயே வெட்டுங்கடா.." என்று சொல்லிவிட்டுச் சிறைக்குச் சென்று மீண்டும் வந்து திருந்தி வாழ்வதாகவும் குறிப்பிடுகின்றன. இந்தக் கதையில் சாதியக் கூறுகள் வெளிப்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவத்திற்கு மாறிய ஆதிக்குடி மக்களுக்கு சர்ச்சுகளில் நாட்டாமையாக ஆக முடியாமல் தவித்தலையும் முன் வைத்திருக்கின்றன. கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வேலை கிடைக்காமல் ஊர்ஊராகச் சுற்றித்திரியும் ஒரு இளைஞனின் அல்லல்பாடுகளை "வெயில் காற்று" என்னும் கதை பயணிக்கின்றன. ஒரு வழியாக அரசு வேலை வாங்குகிறான் இளைஞன். தனது நண்பனுக்கு பதில் கடிதம் போடாமலே மனதைப் போட்டுப் பிணைகிறான்.

இரு நண்பர்களும் மாறி மாறி நினைக்கிறார்கள் "நமக்கு வேலை கெடச்சு அவனுக்கு வேலை கெடக்காட்டி..." "அவன் பாவம் சங்கடப் படுவான்..." என்று இருவரும் பதில் கடிதம் போடாமலே புறக்கணித்தலையும், எதார்த்தமாக தலைமை அலுவலுகத்திற்கு செல்லும் இளைஞன் பியூனிடம் கேட்டு தனது நண்பன் இருப்பதை உறுதி செய்து விட்டு பார்க்காமலே கிளம்புகிறான் என்று கதை முடிகிறது. வெயில் காற்றின் வெக்கை வாசகனை உண்மையிலேயே வாட்டி வதைக்கிறது.

ஒவ்வொரு கிராமங்களிலும் யாரேனும் இறந்தால் எழவு சொல்வதற்கென ஒரு ஆளை நியமித்து வைத்திருப்பார்கள். அனைத்து சாதியினரும் இருக்கின்ற ஊரில் கீழத்தெருவில் ஒருவரை எழவு சொல்ல நியமித்து வைத்திருப்பார்கள் பெரும்பான்மைச் சமூகங்கள். ஆதிக்குடிகளை மட்டுமே துண்டுச் சீட்டாக பயன்படுத்துவார்கள். அப்படி "எழவு சொல்லி" என்னும் தலைப்பில் வேலுச்சாம்பான் என்கிற ஒருவரின் கதையை இந்நூலாசிரியர் நமக்குக் காண்பித்திருக்கிறார். வெளியூர்களுக்குச் சென்று எழவு சொல்லி விட்டு வருவதும் அங்கே அரங்கேறும் சம்பவங்களும் காலக்கயிற்றில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன.

பண்ணையார்கள் ஒரு சமூக மக்களை சாதிய அதிகாரப் போக்கின் திமிரால் அடக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துரைக்கின்றன "கிட்டா மனம்" என்ற தலைப்பில் அமைந்துள்ள கதை. பண்ணையார் வயல்களில் சம்சாரி வேலை செய்வது முதல் அவர்கள் வீட்டு கொட்டடியில் சாணி, சகதி அள்ளுவதற்கும், கொட்டங் கூட்டுவதற்கும் பயன்படுத்திக்கொண்டு ஆதிக்குடிகளை அதிகாரத்தால் ஒடுக்குகின்றனர். பண்ணையார்கள் தெருவிற்கு வரும் பூம்பூம் மாடு முதல் சாமியார் வரை யாரும் பறையர் இன் மக்கள் வாழும் தெருவிற்கு போகக்கூடாது. அப்படி மீறிப்போனால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை. இப்படியிருக்கையில் மிட்டாய் விற்கும் தாத்தா ஒரு நாள் தவறிப் போய் பண்ணையார் தெருவில் மிட்டாய் விற்றுக் கொண்டிருக்கையில், மிட்டாய் விற்கும் தாத்தாவின் ஊரின் பெயரைக் கேட்ட பண்ணையார் தெருவைச் சேர்ந்த நபர் "பறைப்பய நீ எப்புடா உள்ள வரப் போச்சுனு..." அடித்து உதைத்து கீழே தள்ளி விட காயங்களோடு ஊர் திரும்பியிருக்கிறார் மிட்டாய் தாத்தா. மதுரையில் இதுபோன்ற சம்பவங்கள் எண்ணற்றவை. கதையை வாசித்து முடிக்கையில் சருவப்பானை நீராய் கண்கள் ஊத்த ஆரம்பித்த விட்டன. பரந்து விரிந்த தமிழ் நிலப்பரப்பில் இன்னும் தீண்டாமை நடந்துகொண்டு தானிருக்கிறது. சமூக அக்கறை ஒவ்வொரு குடிமகனுக்கும் இன்றியமையாதது. அதுதான் மனித குலத்தைக் காக்கும்.

கடலை எடுத்த பின் உழவு ஓட்டப்பட்டிருந்த காட்டில் தப்புக்கடலை பெறக்கியதற்காக வேலாயி என்ற பெண்ணை அடித்து தலைமுடியைப் பிடித்து இழுத்து கடலையைப் பிடுங்கிக் கொண்ட பின்பும், முதுகிலும் அடித்து வெளுத்த ஒச்சாத்தேவர் மனைவியை பற்றி "ஒரு நாள்" என்கிற கதையில் மிக நெருக்கமாய் உரையாடுகின்றன. இச்சிறுகதை தொகுப்பு முழுவதும் சமூகக் கருத்தாடல்களும் உரையாடல்களும் நிறைந்த காணப்படுகின்றன. ஒடுக்குமுறையும் அதிகாரப் போக்குகளும் நடப்பியலோடு ஒத்திசைந்து செல்கின்றன. காலங்காலமாக ஒரு குறிப்பிட்ட சமூக மக்கள் அல்லல்படும் துயரமும் அழுகையும் தீர்மானிக்கப்பட்டவை போலவே இருக்கின்றன. சமூகச் சிக்கலை தனது எழுத்துகளில் நேர்மையாக அறத்தோடு பதிவு செய்திருக்கிறார் எழுத்தாளர் தோழர் பிரதிபா ஜெயச்சந்திரன்.

**ஆசிரியர் : ப்ரதிபா ஜெயச்சந்திரன்**
**வெளியீடு : பாரதி புத்தகாலயம்; 7 இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018**
**பக்கங்கள் : 126 விலை : ரூ.120/-**

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.எட்வின்

# 65/66

"எது சோத்தாங்கை
எது பீச்சாங்கை
மலம் அள்ளும்
தோட்டிக்கு...?"
– சதீஷ்

தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் முடிந்ததாகத் தெரியவில்லை. ஆனால் முடிந்துபோனதாக இந்த அரசு நம்புகிறது.

"தூய்மைப் பணியாளர்களின் மாண்பை ஒருபோதும் இந்த அரசு விட்டுக்கொடுக்காது" என்கிறார் முதல்வர் ஸ்டாலின். இந்தப் பிரச்சினையை திமுக அரசு கையாண்ட விதத்தை நாம் ஏற்பதிற்கில்லை. ஆனாலும் தூய்மைப் பணியார்களின் மாண்பைக் குலைக்கிற காரியத்தை இந்த அரசு ஒருபோதும் மனதார செய்துவிடாது என்றே நம்புகிறோம். அவர்களது மாண்பைக் காப்பது என்பது சமூகநீதியின் அடிப்படை. அவர்களது மாண்பை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று சொல்வதற்கான அவசியம் முதல்வருக்கு ஏன் வந்தது?. எனில், ஏதோ ஒரு வகையில் அவர்களது மாண்பு கீறப்பட்டிருக்கிறது என்பதாக முதல்வர் உணர்கிறார் என்றுதான் பொருள். ஆனால், இந்தப் பிரச்சினையின் மையத்தை எந்தவொரு இடத்திலும் அமைச்சர் சேகர்பாபு புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை. இல்லை பிரச்சினையின் வேரறிந்தவர் அவர் என்றால் உறுதியாக அவர் சமூகநீதிக்கு எதிரானவர். "இது கொள்கை முடிவு" என்று இந்தப் பிரச்சினை குறித்து அவர் செய்தியாளர்களைச் சந்திக்கும்போதெல்லாம் கூறிக்கொண்டிருந்தார்.

பணி நிரந்தரம்; தனியார் மயமாக்கக்கூடாது; 7,000 ரூபாய் என்ற அளவிற்கு ஏற்படும் ஊதியக் குறைப்பைத் தடுக்க வேண்டும்; தூய்மைப் பணியாளர்களின் இந்தக் கோரிக்கைகள் தாராளமயத்திற்கு எதிரானவை. இவை தங்களது கொள்கைக்கு எதிரானவை என்று சேகர்பாபுவோ திமுகவோ கருதினால் திமுக அரசு தாராளமயத்திற்கு ஆதரவானது என்று பொருள். திமுக தாராளமயத்திற்கு ஆதரவான கட்சி என்றால் அது "சமூகநீதிக்கு" எதிரான கட்சி என்று பொருள். இன்னொன்றையும் சொல்ல வேண்டும். திமுக தாராளமயத்திற்கு ஆதரவான கட்சி என்றால் அது கலைஞருக்கு எதிரான கட்சி என்றும் பொருள். *"In fact, liberalization economically veponised the upper-caste of India"* என்று தாராளமயம் குறித்து கலைஞர் கூறியுள்ளதை *A.S.*பன்னீர்செல்வம் எழுதிய *Karunanidhi A life* என்ற புத்தகத்தை மேற்கோள்காட்டி தோழர் மருதையன் தனது *Roots* இணையதள உரையில் கூறுகிறார்.

தாராளமயம் பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக மாற்றும் என்பது பொதுவான புரிதல். தாராளமயம் ஆதிக்கச் சாதியினரை மேலும் மேலும் பொருளாதாரத்தில் பலம் மிக்கவர்களாக மாற்றும் என்பது கலைஞரின் புரிதல். இது ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை பேரதிகமாக பலவீனமாக்கும் என்பது ஆழமான புரிதல். கலைஞரது புரிதல் சமூகநீதி புரிதல். கலைஞரது புரிதலுக்கும் பொதுவான புரிதலுக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டின் நுட்பத்தை திமுக தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே நமது ஆசை. அத்தோடு நிற்கவில்லை கலைஞர். தாராளமயத்தை எதிர்த்துப் போராடுவது என்பது சமூக ஏற்றத் தாழ்வை எதிர்த்துப் போராடுவது என்றும் கூறுகிறார். இந்த வகையில் தாராளமயத்திற்கு எதிரானப் போராட்டம் என்பது சமூக நீதியைக் காப்பதற்கானப் போராட்டம் என்றாகிறது.

தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் என்பது தங்களது கொள்கை முடிவிற்கு எதிரானது என்று நேரடியாகவே சேகர்பாபு சொல்கிறார். கலைஞரது பார்வையில் இவர்களது போராட்டம் சமூகநீதியைக் காப்பதற்கான போராட்டம். சேகர்பாபுவின் பார்வையில் சமூகநீதிக்கான போராட்டமுமான தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் இந்த அரசின் கொள்கைக்கு எதிரான போராட்டம். எனில், திமுக சமூகநீதிக்கு எதிரானக் கட்சி என்று வருகிறது. சுருக்கமாகச் சொன்னால் திமுகவின் அடிப்படை கொள்கைகளைச் சல்லிசல்லியாக நொறுக்கித் தள்ளிக்கொண்டிருக்கிறார் சேகர்.

சென்னையில் மொத்தம் 15 மண்டலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இவற்றில் 4,700 நிரந்தர ஊழியர்களையும் உள்ளடக்கி ஏறத்தாழ சுமார் 20,000 தூய்மைப் பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இப்போது 1953 தூய்மைப் பணியாளர்கள்தான் இந்தப் போராட்டத்தில் இருக்கிறார்கள்.

2000ஆம் ஆண்டில் 16,000 நிரந்தரப் பணியாளர்கள் இருந்ததாக CITUவின் தலைவர்களில் ஒருவரான தோழர் திருவேட்டை கூறுகிறார். இவர்களில் 4,700 பேர் நிரந்தர பணியாளர்கள் எனில், மீதமுள்ள ஏறத்தாழ 15,000 ஊழியர்களில் 1,953 பேர் மட்டுமே போராடுகிறார்கள் எனில், மீதமுள்ள ஊழியர்களுக்கு பாதிப்பில்லையா?

சென்னையில் உள்ள 15 மண்டலங்களில் 11இல் ஜெயலலிதா முதல்வராக இருக்கும்போதே பணியாளர்கள் Urbasar மற்றும் Ramki ஆகிய இரண்டு தனியார் கட்டமைப்பிற்குள் கொண்டுவரப்பட்டுவிட்டனர். இந்த 11 மண்டலங்களில் உள்ள தனியார் ஊழியர்கள் ஏற்கனவே 16,000 ரூபாய் என்ற அளவில்தான் ஊதியம் பெறுகிறார்கள். மீதம் உள்ள நான்கு மண்டலங்களில் இரண்டை இப்போது Ramki நிறுவனத்திற்குள் கொண்டுவருகிறது திமுக அரசு. அம்பத்தூர் மற்றும் மாதவரம் ஆகிய திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகள் சென்னை மாநாகரத்தோடு இணைக்கப் பட்டுள்ளன. போராடிக் கொண்டிருக்கிற 1,953 ஊழியர்களும் இந்த இரண்டு மண்டலங்களுக்குள் வருகிறார்கள். இந்த 1,953 பேரும் போராடுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் தாங்கள் 480 நாட்கள் தொடர்ந்து பணியாற்றிய நிலையில் தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி அளிப்பு-1981)சட்டத்தின்படி தங்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றவேண்டும் என்று ஏறகனவே ட்ரிபியூனலுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களை RAMKI யில் இணைத்தால் ட்ரிபியூனல் தீர்ப்பிற்குள் இவர்கள் வரமாட்டார்கள். ஏற்கனவே திருவள்ளூர் மாவட்டத்தில் தற்காலிக நகராட்சிப் பணியாளர்களாக 23,000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த இவர்கள் தனியார் ஊழியர்களானால் 16,000 ரூபாய் ஊதியத்திற்கு மாற வேண்டும் . இது இவர்கள் ஏற்கனவே வாங்கிக்கொண்டிருந்த ஊதியத்தைவிட 7,000 ரூபாய் குறைவானது. RAMKI மற்றும் URBASAR ஆகிய இரண்டு நிறுவனங்களும் Deen Dayal Antyodaya Yojana என்ற ஒன்றிய அரசின் திட்டத்திற்குள் வருவன. இந்தத் திட்டம் யார் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த தீனதயாள் என்பவர் ஜனசங்கத்தைத் தோற்றுவித்த RSS சார்புள்ளவர். இவர் குலத் தொழில் திட்டத்தில் உறுதியாக நின்றவர். எனவே இந்தப் பெயருக்காவே திமுக அரசு இதை ஏற்றிருக்கக் கூடாது என்பதுதான் நமது ஆசை.

இவை இப்படியிருக்க இந்த ஊழியர்களை நிரந்தரப் படுத்தினால் இந்த வகையிலான குலத்தொழில் உறுதிப்படும் . எனவே நிரந்தரப் படுத்தக் கூடாது என்று எழும் குரல் நிராகரிக்கப்பட வேண்டிய குரல்.

நிரந்தரப் பணியும் நல்ல ஊதியமும் அடுத்த தலைமுறையை கல்லூரிகளுக்குள் கொண்டுபோய் சேர்த்துள்ளதாக தனது கள ஆய்வில் கண்டுள்ளதாக தோழர் திவ்யபாரதி கூறுவது கவனத்தில் கொள்ளத்தக்கது. நிரந்தரப் பணியில் உள்ளவர்கள் பணிக்காலத்தில் இறந்துபோனால் கருணை அடிப்படையில் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். அப்படியான சந்தர்ப்பங்களில் அந்தக் குழந்தைகள் தங்கள் படிப்பிற்கு ஏற்ற அமைச்சுப் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளதும் தனது ஆய்வில் தெரிய வந்திருப்பதாகவும் திவ்யா கூறுகிறார்.

தூய்மைப் பணியாளர்களின் இந்தப் போராட்டத்தை நீதிக்கட்சி காலம்தொட்டு நடந்துவரும் "சமூக நீதிக்கான" போராட்டத்தின் நீட்சியாகவே திமுக அரசு பார்க்க வேண்டும்.

இவர்களை நிரந்தரப்படுத்துவதும் நல்ல ஊதியத்தோடு பாதுகாப்பதும் இவர்களது அடுத்த தலைமுறையை இந்தத் தொழிலில் இருந்து மீட்க உதவும். அந்த வகையில் இவர்களை நிரந்தரப்படுத்துவது சங்கிகளுக்கு எதிரானது. சங்கிகள் கதறக்கூடிய ஒரு காரியத்தை எப்போதும்போல் மகிழ்ந்து செய்யவேண்டும் என்பதே அரசிற்கான நமது கோரிக்கை.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம் | வெற்றிச்செல்வன்

# தமிழர் நிதி நிர்வாகம்



சங்க காலம் தொடங்கி, தற்போதைய காலம் வரையிலான தமிழர்களின் நிதி மேலாண்மை குறித்த ஆவணமாக வெளிவந்துள்ளது தமிழர் நிதி நிர்வாகம் நூல். தமிழ்நாடு அரசின் நிதித்துறை இந்நூலை வெளியிட்டுள்ளது.

பண்டைத் தமிழரின் வாழ்வியல் விழுமியங்களைச் சங்க இலக்கியம் பிரதிபலிக்கிறது. அதனுடன் அறம் சார்ந்து பொருளீட்டும் முறை, அரசன் வரி விதிப்பதற்கான நெறிமுறை உள்ளிட்ட பல செய்திகளைச் சங்க இலக்கியத்தில் காணலாம். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (184) அறிவுடைய வேந்தன் நெறியறிந்து வரி வசூல் செய்ய வேண்டும் என்கிறார் புலவர் பிசிராந்தையார். திருக்குறளோ வருவாய் வருகின்ற துறைகளை இயற்றல், வருவாய்களை ஈற்றல், வருவாய்களைக் காத்தல், செலவுகளை வகுத்தல் ஆகியவற்றை அரசின் கடமைகளாகச் சுட்டுகிறது. இதனூடாகப் பார்க்கும்போது தமிழரின் நிதி வரலாறு 2000 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் செல்கிறது. அவ்வரலாற்றைச் சுவைபடத் தொகுத்து மிக முக்கிய சான்றாவணமாக வெளியிட்டுள்ளது தமிழக அரசின் நிதித்துறை.

சங்க காலத்தில் அரசின் முக்கிய வருமானமாக விளைநிலங்களின் மீதான வரிவிதிப்பு இருந்தது என்று நாம் ஊகிக்கலாம். அரசு வருவாயின் முக்கிய மூன்று இனங்களாக நிலவரி (உறுபொருள்), வணிகவரி (உல்கு), திறைப்பொருள்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது திருக்குறள். "உறுபொருளும் உல்குபொருளும் தன்னொன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்" என்கிறது குறள். அயல்நாட்டு வணிகம், உள்நாட்டு வணிகம் என்ற இரண்டின் மீதிலும் உல்கு என்னும் சுங்க வரி செலுத்தப்பட்டது, இலங்கை அனுராதபுரத்தில் வணிகச் சாத்திற்கான மாளிகை இருந்த விவரங்களிலிருந்து தமிழரின் வணிகம் பெற்றிருந்த ஏற்றத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

கல்லணையின் தொழில்நுட்பத்தைக் கண்டு வியந்த ஆர்தர் காட்டன், அதே தொழில்நுட்பத்தைக் கையாண்டு கோதாவரி ஆற்றில் தௌலீஸ்வரம் அணையைக் கட்டிய வரலாறு, தமிழர்கள் பெருமிதத்திற்கு உரியது. ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது, காவிரியின் கரையை உயர்த்துவது, வீரநாராயண ஏரியை உருவாக்கியது ஆகிய செயல்பாடுகள் சோழர்கள் நீர் மேலாண்மையில் காட்டிய அக்கறையைப் புலப்படுத்துகின்றன.

பாண்டியர் காலத்தில் வரி என்பதற்கு இறை, பேறு, ஆயம், இராசகரம், வினியோகம், சோறு, காணிக்கை, பாட்டம், பந்தி, வடை, கடமை, குடிமை, சில்வரி, பெருவரி என்று பல்வேறு பெயர்கள் வழங்கியது கல்வெட்டுகள் கூறும் செய்தி. கடலில் கிடைக்கும் முத்தில், பத்தில் ஒரு பகுதியை அரசருக்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற செய்தியை மார்கோ போலோவின் பயணக் குறிப்புகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

விஜயநகரப் பேரரசின் வருவாய் முறைகளை அறிய வரும்போது, பிறப்பின் அடிப்படையில் வரிவிதிக்கப்பட்டதை அறிய முடிகிறது. அதேநேரம், வரிச்சுமை தாளாமல் மக்கள் அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையும் கல்வெட்டுச் செய்திகள் அறிவிக்கின்றன. கிராம வருவாய் அதிகாரி மணியக்காரர் அல்லது அம்பலக்காரர் என்று மதுரை நாயக்கர் காலத்திலிருந்துதான் அழைக்கப்பட்டுள்ளனர்.

தஞ்சை மராட்டியர் காலத்தில் உப்பளங்களில் வரிவசூல் செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பியர்கள் ராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கே சுங்க வரி வசூலிக்கப்பட்டுள்ளது. அதுவும் நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஜயநகரப் பேரரசின் வருவாய் முறைகளை அறிய வரும்போது, பிறப்பின் அடிப்படையில் வரிவிதிக்கப்பட்டதை அறிய முடிகிறது. அதேநேரம், வரிச்சுமை தாளாமல் மக்கள் அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையும் கல்வெட்டுச் செய்திகள் அறிவிக்கின்றன. கிராம வருவாய் அதிகாரி மணியக்காரர் அல்லது அம்பலக்காரர் என்று மதுரை நாயக்கர் காலத்திலிருந்துதான் அழைக்கப்பட்டுள்ளனர்.**

வருவது, குதிரையில் வருவது, பல்லக்கில் வருவது என்று அவரவர் தன்மைக்கேற்ப வரிவிதிக்கப்பட்டது என்பது வியப்பான செய்தி. சேதுபதி மன்னர்கள் காலத்தில் வேளாண் விளைச்சலில் இருந்து பெறப்பட்ட தானியங்கள் 'சேகரம் பட்டறை' என்று அழைக்கப்பட்ட கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் நடைபெற்ற நிதி நிர்வாகம் குறித்து பத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தொடக்கத்தில் மையப்படுத்தப்பட்டதாக இருந்த அதிகாரம் நாளடைவில் கூட்டாட்சி நிதி நிர்வாகமாக மாறுவதற்கான நடவடிக்கைகள் விவாதிக்கப்பட்டுள்ளன. வைஸ்ராயின் நிர்வாகக் கவுன்சிலில் நிதிக்குழு உறுப்பினராக இருந்த ஜேம்ஸ் வில்சன், சென்னை மாகாண ஆளுநராக இருந்த சார்லஸ் டிரிவேலியன் ஆகியோரின் நிதி நிர்வாகம் சார்ந்த பங்களிப்பு விவரிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேய அரசின் செலவினங்கள் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களுக்கே முக்கியத்துவம் அளித்தன. சமூகநலம் அல்லது வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவினங்களுக்குக் குறைவாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டது. மிகத் தாமதமாகவே கல்வி உள்ளிட்ட சேவைகளுக்குச் செலவினம் அதிகரிக்கப்பட்டது. அதே வேளையில், பாசன மேலாண்மையில் பென்னி குயிக் போன்ற அரசு அதிகாரிகளின் உழைப்பு வியப்பூட்டுவதாக இருந்துள்ளது. 1790களில் தொடங்கிய முல்லைப் பெரியாறு அணைக்கான திட்டமிடுதல் வடிவம் பெறுவதற்கு நூறாண்டுகள் பிடித்தன.

இந்த நூலின் இரண்டாம் பகுதி 'சமூக நீதிக்கான திட்டமிடல்' என்ற பேராசிரியர் நாகநாதனின் கட்டுரையுடன் தொடங்குகிறது. நிதி அதிகாரப் பகிர்வில் மாநில அரசை நோக்கிய ஒன்றிய அரசின் பாராமுகத்தைச் சுட்டிக்காட்டுவதோடு, மக்கள் நலத் திட்டங்கள் எவ்வாறு சமூகநீதியின் அடித்தளங்களாக அமைந்தன என்பதை விவரிக்கிறது.

இன்றைக்குத் தமிழ்நாடு அடைந்துள்ள சமூக ஏற்றங்கள் என்பது கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற அரசியல் அதிகாரத்தினால் உருவானவை. வெறும் வளர்ச்சி என்று சுருக்கிவிடாமல், அவ்வளர்ச்சி எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருந்தால் மட்டுமே அது பொருள் பொதிந்ததாக இருக்கும். அதைச் சாதித்துக் காட்டியுள்ளதே திராவிட மாடல். இதற்கான சான்றுகள் 200 பக்கங்களாக இந்நூலில் விரிகின்றன.

இந்தியாவிலேயே அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டம் *(Universal PDS)* என்பது தமிழ்நாட்டில்தான் நடைபெறுகிறது. ஒவ்வொரு குடிமகனுக்குமான உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக ஒவ்வொரு கட்டத்திலும் நடைபெற்ற முயற்சிகள் என்னென்ன, அவற்றில் ஏற்பட்ட சிரமங்கள் என்னென்ன என்பவை எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. உணவுத் தன்னிறைவு ஒரு குடும்பத்தினைச் சுயமரியாதை ஏணியில் ஏற்றிய வரலாறும், ஆண்டையை ஒருவாய்ச் சோற்றுக்காக அண்டியிருந்த அடிமைநிலை ஒழிக்கப்பட்ட வரலாறும் இன்றைய தலைமுறை உணர வேண்டியது.

இந்தியாவைப் போல ஜாதியின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் நாட்டில், சமத்துவச் சமூகத்தைப் பொருளாதார வளர்ச்சி மட்டுமே கொண்டுவர இயலாது. அத்தகைய சமூகத்தைக் கொண்டுவருவதற்கான திட்டங்களில் ஒன்றுதான், பெரியார் நினைவு சமத்துவபுரம்.

இன்றைக்குத் தமிழ்நாடானது கல்வி வளர்ச்சிக் குறியீடுகளில் மற்ற மாநிலங்களைவிட அசுரப் பாய்ச்சலில் இருக்கிறது என்றால், அதற்கு அடித்தளமிட்டது மதிய உணவுத் திட்டம். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் சோதனை செய்து பார்க்காத மதிய உணவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தைத் தமிழ்நாடுதான் துணிச்சலுடன் கையில் எடுத்தது. அரசின் கொள்கை முடிவுகள் தாண்டி, ஒரு திட்டம் வெற்றிபெறுவதற்கு எத்தனையோ முகம் தெரியாத அரசு அலுவலர்கள் பின்னணியில் இருக்கின்றனர். அப்படிப்பட்ட ஒருவர்தான் மதிய உணவுத் திட்டம் கொண்டுவரப்படுவதில் முனைப்புடன் செயல்பட்ட முன்னாள் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு. தந்தை பெரியாரால் "நம்ம வைஸ்சான்சிலர்" என்று உரிமையுடன் அழைக்கப்பட்ட நெது.சு. அப்போது பொதுக்கல்வி இயக்குநராக இருந்தார். தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, ஒன்றிய அரசிடம் நிதியைப் பெறும்போதும் ஏற்பட்ட தடைக்கற்களைத் தாண்டி, மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் வெற்றிகண்டவர்.

தமிழ்நாட்டில் காமராஜர் காலத்திற்குப் பிறகு, அணைகள் கட்டப்படவில்லை என்ற தொடர்ச்சியான அவதூறுக்குப் பதிலடியாக அவரது காலத்திற்குப் பிறகு கட்டப்பட்ட அணைகளின் பட்டியல், கட்டப்பட்ட ஆண்டுகளின் விவரத்தோடு தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது தனிநாட்டின் வளர்ச்சி அன்று. அது இந்தியக் குடியரசு என்ற ஒற்றை ஆட்சியின்கீழ், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் குறைந்த அளவு நிதியைக் கொண்டு சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுக்கும் ஒரு மாநிலம். இந்த வரையறைக்கு உட்பட்டு இத்தனை சாதனைகளையும் தமிழ்நாடு படைத்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

எல்லோரும் சமம் என்ற கோட்பாட்டைக் கொண்டும், அனைவருக்குமான உரிமைகள் வழங்கப்பட்டதைக் கொண்டும் தமிழகம் சமத்துவமின்மையைக் களைவதில் அரும்பாடுபட்டு வெற்றியடைந்துள்ளது என்று "*The Uncertain Glory*" என்ற நூலில் குறிப்பிடுவர் அமர்த்திய சென் மற்றும் ழான் தெரெசே. அந்தச் சாத்தியமாக்கலின் வரலாறை, பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணமாகத் தந்துள்ளது தமிழக அரசின் நிதித்துறை. இந்த நூலை வாசிப்பதும், வரலாற்றை அறிந்து கொள்வதும் கற்றோரது கடமை.

நூலைத் தரவிறக்கம் செய்யும் இணைப்பு:
*https://budget.tamildigitallibrary.in/*

●

---

கட்டுரையாளர்: ஆய்வாளர்



கவிதை | ஜே.ஜெ.ஃபர்னாண்டஸ்

# அழிவுசூழ்உலகு

உலகில்எங்கேனும்
ஒருமலைகுமுறிவெடிக்கிறது;
ஊருக்குள்நுழைந்துஅழிக்கிறதுலாவா.
எங்கேனும்நிலத்தட்டு
இடம்பெயர்ந்துமோதிநடுங்கி
ஆழிப்பேரலையாய்கடல்எங்காவது
அழிவைத்திணிக்கிறது.
மேகவெடிப்புபெரும்மழை
காட்டாறுதடம்புரண்டு
ஊர்களுக்குள்ஓடிஅழிக்கிறது.
மலையில்தீமளமளவென
காட்டைஅழிக்கிறது.
சித்திரம்சிதைகிறது
சித்திரக்காரன்தவிக்கிறான்.
சிலைசிதைகிறது
சிற்பிபரிதவிக்கிறான்.
அண்டசராசரங்களையும்
ஆக்கியவன்அழுவானோ
அழிவைக்கண்டு?
கர்த்தர்காண்கிறார்
கண்களில்கருணைத்தேக்கி.
மெழுகுவர்த்திஒளிர்ந்து
அழிந்துகொண்டிருக்கிறது.
என்வாழ்க்கைகட்டிலில்
இயலாமல்கிடக்கிறது.
ஆண்டவனுக்கு
அவசரச்செய்திஅனுப்பினேன்;
அவசரஊர்திவந்தது;
மருத்துவம்கைவிட்டது
மறக்காமல்கைகழுவிக்கொண்டது.
அமரர்ஊர்திவந்தது.
ஏலி! ஏலி! லாமாசபக்தானி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை | சுப்ரபாரதிமணியன்

# சேலைகளின் நிறங்கள்



“கைத்தறி ஐட்டத்தை எல்லாம் விசைத்தறியின்னு போடக்கூடாது சொல்லிட்டாங்க”.

“சட்டமாயிடுச்சா” என்றாள் ருக்மணி

“இல்ல கைத்தறிக்காரர்கள் எல்லாம் போராடுகிறார்கள் அதனால் அப்படி ஆயிரும். சட்டம் பண்ணி விடுவார்கள்ன்னு பேச்சு. அப்படி பண்ண கூடாதுன்னு நாம ஸ்ட்ரைக் பண்றோம். ஆமா நாங்களும் ஸ்ட்ரை பண்றோம் கைத்தறிக்காரங்களும் ஸ்டிரைக் பண்றாங்க போராட்டம் பண்றாங்க நம்ம பொழப்பு என்ன ஆகும்.”

“சிரமம்தான்”

ரமணன் போட்டிருந்த விசைத்தறிகள் கைத்தறி பாடர்கள் உள்ளடங்கிய ரகங்களை நெய்யும் வேலையால் இரண்டு ஆண்டுகளாய் அவன் ஜீவனம் சுமூகமாக போய்க் கொண்டிருந்தது. அப்படி பார்டர் எதுவும் இல்லாமல் வெள்ளைத் துணியை ஓட்டுவது தான் அவனின் வேலையாக முன்பு இருந்தது. அதில் வருமானம் குறைவு. விசைத்தறிகளை விற்று விடலாம் என்று கூட நினைத்தான். அந்த சமயத்தில் கைத்தறி ஐட்டங்களை விசைத்தறியில் போடும் திட்டத்தால் கொஞ்சம் அதிகக் கூலி கிடைத்தது.

“அவங்களும் போராடுறாங்க. நாங்களும் போராடுகிறோம் அவர்கள் பக்கம் நியாயம் இருக்கு. எங்க் பக்கமும் வேலை வேணும்கற நியாயம் இருக்கு. ஆனாலும் கைத்தறிநெசவாளர் பக்கம் இருக்கிற நியாயம் தான் முக்கியம்” என்றாள் ருக்குமணி.

“ஆமாம் அது உண்மைதான் காலங்காலமா நெய்யறாங்க நாமெல்லாம் இடையில வந்தவங்க”

என்ன இருந்தாலும் பூர்வீகத் தொழில் அக்கறை ருக்மணிக்கிருந்தது.

••

ரமணனுக்கு தூக்கம் வரவில்லை. போராட்டத்தால் முடங்கி கிடக்கும் விசைத்தறியை பார்த்தான். நான்கு நாட்களுக்குள் புழுதி அடர்ந்து வேறு நிலைக்கு வந்துவிட்டது. தினசரி பார்க்கிறத் தறிகள் தான். ஆனால் இப்போது நான்கு நாட்களுக்குள் புழுதி அடர்ந்து விட்டது. வேலை இல்லாமல் போனாலும் இப்படித்தான் பிழைப்பில் ஏதோ மண் விழுந்தது போல் ஆகிவிடும். உடனடியாக வேறு வேலைக்கு போக முடியாது என்பது தான் அவன் யோசனையாக இருந்தது.

“நான் என்ன மில்லுக்கு டெம்ப்ரேரியா போய் பாக்கலாமா”

“அது எத்தனை நாளைக்கு தாங்கும். நம்ம தறி ஓட ஆரம்பிச்சோம்னா நீ மறுபடியும் இங்க வர வேண்டி இருக்கும். அதுவரைக்கும் ஏதோ லீவு கிடைச்சதுன்னு எடுத்துக்கோ.”

“ஆமா அது கூட நல்லது தான் ஆனால் கையும் காலும் பரபரக்குது. அதற்காக சும்மா வீதியில் ஓடிட்டு இருக்க முடியுமா பாக்கறவங்க என்ன நினைப்பாங்க”

ருக்மணியும் தூக்கம் வராமல் தான் தவித்தாள் என்பதுஉடம்பை பாயில் அசைத்தசைத்துத் தூங்குவதில் தெரிந்தது. அவர்கள் இருவருக்கான இருப்பிடம். ஒரு காலத்தில் இருந்த குழந்தையும் காலராவில் இறந்து விட்டது. எந்த காலத்தில் இதெல்லாம் வந்தது என்றார்கள். ஆனால் தன் குழந்தைக்கு வந்து கொண்டு போய் விட்டது. அதற்கு பின்னால் அந்த கோரப்பாய் இருவருக்கு மட்டும் ஆனது என்று தான் ஆகிவிட்டது.

“நாளைக்கு எப்படி பொழுது போக்கப் போறீங்க”

“நீ எப்படி பொழுது போக்கப் போறே”

“எனக்கு தான் வீட்டு வேலை இருக்கே, இருக்கிற தூச அடிச்சு சரி பண்ணவே நேரம் போயிரும்.”

“சரி உன் மூக்கை பார்த்துக்கோ, தூசு சளியை பார்த்துக்கோ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது இருக்கிறதுதா. மூக்குன்னு இருந்தா சளி இருக்கிறதுதா ஆனாலும் வீண் வேலையை கொண்டு வந்த கூடாது."

அவனுக்கு கூட இன்றைக்கு வெயிலில் அலைந்த போது உடம்பு அசந்து போய்விட்டது வீட்டுக்கு வந்து மதியம் ஒரு தூக்கம் போட்டான். மதிய தூக்கம் இப்போதைய இரவு தூக்கத்தை தவிர்க்க செய்யும் அல்லது இருக்கிற கவலைகள் தூக்கம் வராமல் செய்யும் என்று நினைப்பு வந்தது. இந்த கைத்தறி ஐட்டங்களுக்கும் எப்படி நிறம் எல்லாம் வந்தது என்று நினைப்பவர்களுக்கு வந்தது சவுண்டியம்மன் கதை. எல்லாம் சவுண்டம்மன் கொடுத்த வரம் இல்லாமல் இருந்தால் காலம் காலமாக வெள்ளை ஆடை தான் அணிய வேண்டுமா அவர்தான் இந்த துணிகளுக்கு எல்லாம் நிறம் கொடுத்தவர்..

பிரம்மன் பல உலகங்களையும் உயிர்களையும் படைத்தார். ஆதி மனுவை ஆடை தரப் படைத்தார்... சிவன் தேவனைப் படைத்தார் திருமாலின் நாபிக்கமலத்தில் தோன்றிய தாமரை நூலை வாங்கிச் சென்று ஆடை நெய்யச் சொன்னார். சிவன். சகர நாட்டு தலைநகர் ஆமோதா அவன் ஊர் என்றார்.. திருமால் தாமரை நூலை தந்து பாதுகாப்புக்காக சக்கராயுதம் ஒன்றை கொடுத்தார். வழியில் தங்கியிருந்த ஆசிரமத்தில் இருந்த அரக்கர்கள் நூலை பறிக்க முயல்கின்றனர். சக்கராயுதத்தை அவர் ஏவ அரக்கர்கள் நிலத்தில் விழுந்த இரத்தத்திலிருந்து ஆயிர கணக்கில் தோன்றிப் போரிட்டனர்.. சக்கராயுதம் செயலற்று போனது. தேவலர் தனக்கு உதவ தாயார் சண்டிகையை எண்ணி பிரார்த்தனை செய்தார். ஆயிரம் கோடி சூரிய பிரகாசத்துடன் தோன்றினாள் சவுடேஸ்வரி. சூலம், சக்கரம், கத்தி, கதாயுதம் என்ற நான்கு கைகளிலும் ஆயுதங்கள் மின்னின அரக்கர்களின் ரத்தம் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை என ஐந்து நிறமாக இருந்தன. தேவர் தன்னிடம் இருந்த நூலை ஐந்தாய் பிரித்து அந்த ரத்தத்தில் நனைத்துக் கொண்டார். அப்படித்தான் நிறங்கள் நூலில் சேர்ந்து சேலையில் உற்பத்தியாகி மிளிர்கின்றன.

காலையில் அவன் நடந்த போது தாலுக்கா அலுவலகம் எதிரில் இருந்து கூட்டம் அவனுக்கு உற்சாகம் தருவதாக இருந்தது. ஏதாவது கூட்டத்தில் போய் நின்று கொண்டால் போதும் அன்றைய பாதி நாள் போகும். பணம் பத்துவாடா செய்கின்ற ஆட்கள் யார் என்று தெரிந்து போய் அவர்கள் பின்னால் நின்றால் கொஞ்சம் பணம் கிடைக்கும். அப்படித்தான் அவனுக்கு அந்த கூட்டத்தை பார்த்து உற்சாகம் ஏற்பட்டது கூட்டத்தை நேரில் நெருங்க அது கைத்தறி நெசவாளர்கள் கூட்டம் என்பது தெரிந்தது .அவர்கள் தான் செய்கின்ற தொழிலுக்கு எதிராக ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள் அவர்களை வயிற்றில் அடிக்கிற விஷயத்தை சொல்லிக் கொண்டிருந்தார்கள். பழைய ஆட்சியில் இருந்தவர்கள் கைத்தறி ஐட்டங்களை தோளில் போட்டு வீதிவீதியாக அலைந்து அதின் முக்கியத்துவத்தை சொல்லி விற்கவிட்டார்கள் என்றார்கள். ஆமாம் அரசியலுக்காக அவர்கள் அதை செய்து இருக்கிறார்கள் கைத்தறி சேலைகளை வாங்குங்கள் என்று அவர்கள் பிரச்சாரமே செய்தது அது ஒரு காலம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த காலம். அப்போது அவன் சிறு குழந்தையாக தான் இருந்தான். அதெல்லாம் இப்போது யாரோ சொல்ல மனதில் வந்து கொண்டே இருந்தன.

இன்னும் கொஞ்சம் நடந்தபோதுதான் தமிழ்நாடு விடுதி பக்கத்தில் ஒரு கூட்டம் தென்பட்டது. அந்த கூட்டம் தூரத்திலிருந்து பார்க்கிறபோது ஏதோ அரசியல் கட்சியின் கூட்டம் என்பதை தெரிவித்தது. பலவர்ண கொடிகள் தென்பட்டன அவை காற்றில் அலைந்து இன்னும் காற்று வேண்டுமா என்று சொல்லிக் கொண்டிருந்தது. வானத்தின் மேகங்கள் அந்த நேரத்தில் நல்ல சூழலை கொண்டு வந்து அவர்கள் சோர்வு இல்லாமல் பேசவும் சத்தம் போடவும் சரியாக சூழ்நிலையை கொண்டு வந்திருந்தது.

அவனுக்குக் கூட இவ்வளவு தூரம் வந்து நடந்து வந்ததில் எந்த களைப்பும் தெரியவில்லை. ஆறுதலாக இருந்தது இப்படி களைப்பு தெரியாமல் இருந்தால் இன்னும் நடக்கலாம். பசி ஆகிற வரைக்கும் நடக்கலாம். திரும்பும் போது ஏதாவது நகர பேருந்தில் எந்த ஏறி மீண்டும் வந்து விடலாம். ஆனால் தினசரி இப்படி எல்லாம் செய்ய முடியாது. நகர பேருந்திற்கு தினசரி தரும் கட்டணத்தை கணக்கிட்டுப் பார்த்தால் சில சமயங்களில் சில நாட்களுக்கான வீட்டில் செலவு தொகை என்பது ஞாபகம் வந்தது. அதனால் நடையை கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணமும் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூட்டத்தோடு சேர்ந்து நின்று கொண்டான். ஊழல் அரசாங்கங்கள் அதை எதிர்த்து போராட வேண்டிய நிலைமை நாம் கட்சி ஆட்சிக்கு வந்தால் இதெல்லாம் போகும் என்று பலர் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு மேகம் கூடி வந்ததும் வெயில் குறைவாக இருந்ததும் ஆறுதலாக இருந்தது. அலுப்பு தரவில்லை. ஆனால் அவர்கள் பேச்சு திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தை சொல்லிக் கொண்டிருப்பது போல் பட்டது . எதற்கும் கொஞ்ச நேரம் என்று பார்க்கலாம் ரொம்ப நாள் ஆகிவிட்டது இது போல் கூட்டத்தோடு நின்று. அவனும் அவர்கள் போட்ட கோஷத்தை சொல்ல முயன்றான். கோஷங்களை திருப்பிச் சொல்ல முயன்றான். கோஷம் விளங்கவில்லை. வாய் முணுமுணுத்தது. ஆனால் சரியான கோஷம் அல்ல என்பது விளங்கியது,

• •

அவன் கையில் இருந்த பணம் அவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஏதோ செலவு ஆகும். ஆனால் இது இடையில் வந்த பணம் இந்த பணம் எப்படி செலவாகும். தெரியாது. தண்ணீர் செலவாவது போல் செலவாயிவிடும். ஆகவே இந்த பணத்திற்கு ஏதாவது உத்தரவாதமாய் செய்ய வேண்டும் என்று நினைப்பு வந்தது. கூட்டம் முடிந்த பின்பு பணம் பட்டுவாடா செய்ததை கவனித்துச் சென்று காத்திருந்த போது கிடைத்தது.

வழக்கமாய் நைலான், வாயில் என்று குறைந்த செலவில் புடவைகள் எடுப்பான் ருக்மணிக்கு .கைத்தறி புடவைகள் அவனுக்கு பிடிக்கும். ரொம்பவும் மெல்லிதாக இருக்கும். உடம்பை கணக்க செய்யாது. இப்ப எல்லாம் அதெல்லாம் எடுக்க முடியாது போல கைத்தறி சேலைஅவ்வளவு விலைக்கு வந்து விட்டது. அதிக விலை கொடுத்து வாங்க முடியாது . நல்லாத்தான் இருக்கும் ஆனால் வடநாட்டுக்காரங்களுக்கு ஆகும் என்பது போல அங்குதான் அதிகம் போகிறது. வடக்கே அதை வாங்க நிறையப் பேர் இருக்கிறார்கள்.

கொஞ்ச தூரம் நடந்தபோது தென்பட்ட அந்த கைத்தறி கூட்டுறவு சங்க கடையின் முன் நின்றான். இங்கு ஏதாவது ஒரு புடவை வாங்கிக் கொண்டு போகலாம். இப்படி வந்த பணம் ஒரு புடவை ஞாபகமாக இருந்து கொண்டே இருக்கும். கைத்தறி சேலைகளை அவன் தெருவில் நின்றபடியே அங்கு மாட்டப்பட்டிருந்த பொம்மைகளின் உடம்பில் இருந்ததை கூர்ந்து கவனித்தான். அதன் விலையை குறிப்பிட்ட துண்டு சீட்டுகளும் தென்பட்டன.

போக வேண்டாம். உள்ளே போக வேண்டாம் இங்கிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஏழை மக்களுக்கு அரசாங்கம் கூட இலவசமாய் கைத்தறி சேலைகளையும் வேட்டிகளையும் தருவதாக சொல்கிறார்கள் ஆனால் அவையெல்லாம் நிஜமான கைத்தறி தயாரிப்புகள் அல்ல. பெரும்பாலும் விசைத்தறியில் நெய்து வருகிற தயாரிப்புகளைத் தருகிறார்கள். இலவசமாக தருகிறார்கள் என்பதால் யாரும் பெரிதாக கேள்வி கேட்பதில்லை என்பது போல் தொடர்ந்து அதையேத்தான் தருகிறார்கள்

அது போன்ற ஜட்டங்கள் தான் ரமணனின் நெசவு வாழ்க்கைக்கு உத்திரவாதமாய் எதையோ தந்து கொஞ்சம் நகர்த்திக் கொண்டிருந்தது .ருக்மணி கூட அரசாங்கத்தின் இலவச சேலையை வாங்கப் போனபோது இப்படித்தான் விசைத்தறியில் ஓடுகிற சேலையை வாங்கி வந்தாள். கைத்தறி சேலை என்றுதான் தந்தார்களாம்.

• •

இந்த பணத்தை கொண்டு அவளுக்கு ஒரு நல்ல சேலை வாங்க வேண்டும் என்பது அவன் குழப்பமாக இருந்தது

அவனுக்கு பெண் தேடுகின்ற போது ஏற்பட்ட சிரமங்கள், குழப்பங்களை போல பெரிய சிரமம் போல் அது தென்பட்டது. ருக்மணியை தேர்வு செய்தது போல சுலபமாக இப்போதைக்கு ஏதாவது புடவையை வாங்கி விட முடியாது என்பது மட்டும் அவன் மனதில் வந்தது.

ஆனால் புடவைக்கானப் பணம் எப்படி வந்தது என்று தெரிந்தால் புடவையைத் தொடக்கூட செய்ய மாட்டாள் என்பதும் மலையாய் அவன் முன் நின்றது.

•

கதாசிரியர்: ஆசிரியர், 'கனவு' இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தி தேவி

அண்மையில் மறைந்த கல்வியாளரும் செயல்பாட்டாளருமான வெ. வசந்தி தேவி பலவகைகளில் மாறுபட்ட, தனித்துவம் மிக்க, ஓர் ஆளுமை. திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் (ம.சு.) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நியமனம் பெற்றதன் மூலம் (1992) சமூகத்தில் மதிப்புமிகு ஆளுமையாக உயர்ந்தவர். அந்நாட்களில், சில விதிவிலக்குகள் தவிர்த்து, துணைவேந்தர்களுக்கு சமூகத்தில் அதிக மதிப்பும் மரியாதையும் இருந்தது. துணைவேந்தர் நாற்காலியின் மதிப்பும் மரியாதையும் வசந்தி தேவியால் மேலும் உயர்ந்ததே தவிர, சிறிதும் கீழிறங்கவில்லை. தமிழக உயர்கல்வி வரலாற்றில் இவருக்கு சிறப்பிடம் உண்டு. எம்.ஜி.ஆர். அரசால் 1984-ல் நிறுவப்பட்ட கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தவிர்த்து, தமிழகத்தின் பிற பல்கலைக்கழகம் ஒன்றில் துணைவேந்தர் நியமனம் பெற்ற முதல் பெண்மணி இவர் என்பதே அச்சிறப்பு. 13 ஆண்டுகால இடைவெளிக்குப்பின், 1989-ல், மீண்டும் ஆட்சி அமைத்த கலைஞர் கருணாநிதி தன் கனவுத் திட்டங்களில் ஒன்றாக மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் திருநெல்வேலியில் நிறுவிய ம.சு. பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து இருமுறை (1992- 1998) துணைவேந்தராகப் பணியாற்றும் வாய்ப்பு அவருக்கு வாய்த்தது. முதல்முறை (3 ஆண்டுகள்) சிறப்புறப் பணியாற்றிய ஒரே காரணத்திற்காக இரண்டாம் முறை அவ்வாய்ப்பைப் பெற்றார். 'சிறப்புற' எனும் பதம் அதன் உண்மைப் பொருள் சார்ந்தே இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது. வசந்தி தேவியை ம.சு. பல்கலைக்கழகத்தி;ன் முதல் துணை வேந்தராக சிலர் கருதுகின்றனர் என்பதை சில ஊடகப் பதிவுகளிலிருந்து அறிய முடிகிறது. அது பிழையான புரிதல். அப்போதைய அமைச்சர்களுள் ஒருவரான நாஞ்சில் மனோகரனின் ஆசிரியரான வேதகிரி சண்முகம் தான் முதல் துணைவேந்தர். அவர் காலத்தில் பல்கலைக்கழகத்தின் இயக்கம் சீராகவில்லை. கட்டுமானங்கள் உருவாக்கப்படவில்லை. திருநெல்வேலி, கொக்கிரகுளத்தில் அமைந்திருந்த அரசு நிறுவனம் ஒன்றின் அறைகளில் பல்கலைக்கழக அலுவலகங்கள் மட்டும் இயங்கின. எனவேதான் அவர் அதிகம் அறியப்படாத துணைவேந்தராகிவிட்டார்.

மக்கள் பற்றும் போராட்ட குணமும் கொண்டதொரு குடும்பப் பரம்பரையில் தோன்றியவர் என்பதால் அறம் சார்ந்த மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தார் வசந்தி தேவி. திண்டுக்கல்லைச் சார்ந்த தொழிற்சங்கவாதியான சக்கரைச் செட்டியாரின் மகள் வழிப் பெயர்த்தி (பேத்தி) இவர். சாதி அடையாளத்தை பெயருடன் கோர்ப்பது பிற்போக்கானதாக கருதப்படாத காலம் அது. இவர் தந்தையான பி.வி. தாஸ் தேச விடுதலைப்போராட்ட ஆளுமைகளுள் ஒருவரான சித்தரஞ்சன் தாஸ் மீது மிகுந்த ஈடுபாடும் பற்றும் கொண்டவராம். சித்தரஞ்சன் தாஸின் மனைவி பெயர் தான் வசந்தி தேவி. அப்பெயரையே தன் மகளுக்குசூட்டியிருக்கிறார் பி.வி. தாஸ். வசந்தி தேவியை வடிவமைத்ததில் அவர் தந்தையின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகளின் பங்கு நிறையவே உண்டு. இறுதி மூச்சுவரை ஒரு சமூகப் பேராளியாகவும் செயற்பாட்டாளராகவும் அவர் இயங்கியதற்கு தந்தையின் தாக்கமும் ஒரு காரணம்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 2016-ல் வசந்தி தேவிக்கு பெரியார் ஒளி விருதினை வழங்கியுள்ளது. வசந்தி தேவியின் அறையில் இடம் பெற்றிருந்த ஒரே படம் ஈ.வெ.ரா. பெரியாருடையது என்பது ஓர் ஊடகத் தகவல். அத்தகவலின் உண்மைத்தன்மை பற்றி யாம் அறியோம். அம்பேத்கர் மீதும் அதிக மதிப்பு கொண்டிருந்தவர் அவர். வசந்தி தேவியின் தாய்வழித் தாத்தாவான சக்கரைச் செட்டியார் இலக்கிய உலகுடனும் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டிருந்தவர் எனத் தெரிகிறது. அவர் பற்றிய இரண்டு சிறப்புத் தகவல்களைக் குறிப்பிடுவது அவசியமென்று படுகிறது. 1918-ல் தொடங்கப்பட்ட சென்னை தொழிலாளர் சங்கத்தின் இரு துணைத் தலைவர்களுள் ஒருவர் சர்க்கரைச் செட்டியார். இன்னொரு துணைத் தலைவர் திரு.வி.க. வாம். இரண்டாவது தகவல் சிலிர்ப்பைத் தருவது. பாரதியாரின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்ற 11 நபர்களில் ஒருவர் சர்க்கரைச் செட்டியார் என்பதே அத்தகவல்.

வசந்தி தேவியும் இலக்கிய உலகுடன் தீவிரத் தொடர்பு கொண்டிருந்தவர். ஒரு சிறந்த வாசகர். அவரது நட்பு வட்டத்தில் பல சிந்தனையாளர்கள் மற்றும் செயல் பாட்டாளர்கள் மட்டுமல்லாது இலக்கிய ஆளுமைகளும் இடம்பெற்றிருந்தனர். ஞாநி அதில் முக்கியமானவர். வசந்தி தேவி ஓர் எழுத்தாளரும் கூட. மக்கள் மயமாகும் கல்வி, கல்வி ஓர் அரசியல், சக்தி பிறக்கும் கல்வி முதலானவை அவரது நூல்கள். பணிநிறைவு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அலுவலர் பி. எஸ். கிருஷ்ணனுடன் அவர் நிகழ்த்திய உரையாடல் சமூக நீதிக்கான அறப்போர் என்ற தலைப்பில் நூலாகியுள்ளது. தலித் மக்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் உரிமைகளுக்கான 70 ஆண்டுகால போராட்ட வரலாற்று ஆவணமாகக் கருதத்தக்க நூல் இது. மாநில மகளிர் ஆணையத் தலைவராகப் பணியாற்றிய (3 ஆண்டுகள்) கால அனுபவங்கள் பெண்ணுக்கு ஒரு நீதி என்ற தலைப்பில் நூலாகியுள்ளது. வசந்தி தேவி ம.சு. பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த வேளை சுந்தர ராமசாமி மற்றும் குழுவினர் அவருடன் நிகழ்த்திய கல்வி சார்ந்த உரையாடல் தமிழகத்தில் கல்வி: வசந்தி தேவியுடன் உரையாடல் என்ற நூலாக வெளியாகி தமிழக அளவில் காத்திரமான விவாதத்தை உருவாக்கியது. மட்டுமல்லாமல் இலக்கிய ஆர்வலர்களிடம் வசந்தி தேவியை அறிமுகமும் செய்தது.

பதவிகளை அலங்காரங்களாகக் கருதும் பலரிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட வசந்தி தேவி, சமூகத்தைப் படிக்கவும் பணி செய்யவும் கிடைத்த வாய்ப்புகளாகவே அவற்றைக் கருதினார். மகளிர் ஆணையத் தலைவர் பதவியை மட்டுமல்ல துணை வேந்தர் பதவியையும் அவ்வாறே கருதினார். மற்றும் பலரைப்போல் துணைவேந்தர் என்ற மாய பிம்பச் சிறைக்குள் அடைபட விரும்பாதவர் அவர். நான் பணியாற்றிய கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலராக சில ஆண்டுகள் செயல்படும் வாய்ப்பு அமைந்தது. அதில் 4 ஆண்டுகள் வசந்தி தேவி துணைவேந்தராயிருந்த காலம். நாட்டு நலப்பணித்திட்டம் என்றால் சடங்குக்காக ஒரு முகாம், சில புகைப்படம் எடுக்கும் நிகழ்வுகள் என்றிருந்ததை இயக்கமாக மாற்றியது வசந்தி தேவியின் தூண்டுதல். நாட்டு நலப்பணித் திட்டம் மூலமாகவும் சமூக மறுமலர்ச்சிக்கான விதைகளைத் தூவ முடியும் என்பது அவர் காலத்தில் பலரும் கற்ற பாடம். குறிப்பாக, உலக மகளிர் தினம் முதலான சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை கடமைக்கான சடங்குகள் என்ற நிலையிலிருந்து பொருள் நிறைந்த நிகழ்வுகளாக்கினார். அவை தொடர்பான சிந்தனைகளை மாணவர்கள் மனங்களில் விதைத்தார். நாட்டு நலப்பணித் திட்டத்தை அதற்கான கருவியாகப் பயன்படுத்தத் தூண்டினார்.

நாகர்கோவிலில் நடைபெற்றதொரு மகளிர் தின மாநாட்டுக்கு ஞாநி சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தார். மகளிர் மாநாட்டில் உரையாற்ற ஒரு பெண் ஆளுமை கிடைக்கவில்லையா என்பது என்னில் அப்போது எழுந்ததோர் வினா. திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் என் வினாவைப் பகிர்ந்தபோது, 'அது துணை வேந்தரின் முடிவு' என்று நழுவினார். ஞாநியின் எழுத்துக்களை படித்திருக்கிறேன். சிறந்த சிந்தனையாளர். ஆனாலும், மகளிர் தினத்துக்கு அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**'காக்கைச் சிறகினிலே' மாத இதழுக்கு படைப்புகளை அனுப்பும் எழுத்தாளர்களின் கவனத்துக்கு:**

**கட்டுரை மற்றும் சிறுகதை 1200 வார்த்தைகளுக்கு மிகாமலும் நூல் அறிமுகம், நூல் மதிப்புரை 600 வார்த்தைகளுக்கு மிகாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.**

**பக்கங்களின் அளவு கருதி பல படைப்புகளை உடனுக்குடன் அந்தந்த இதழில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.**

**-ஆசிரியர்**

அழைக்கவேண்டுமா? உரையைக் கேட்டபின் என் வினாவுக்கு நானே விடையைக் கண்டுபிடித்தேன். யார் பேசுகிறார் என்பதல்ல, என்ன பேசுகிறார் என்பதே முக்கியம். தவிர, வசந்தி தேவியின் பெண்ணியம் என்பது ஆணாதிக்கத்தை பெண்ணாதிக்கத்தால் நிரப்புவதல்ல. ஆண் - பெண் சமத்துவமே அவர் மதித்த பெண்ணியம். ஆணும் பெண்ணும் சரிசம உரிமைகளுடனும் மரியாதைகளுடனும் இணைந்து வாழும் சமூகத்தை உருவாக்குவதே அவர் நம்பியிருந்த பெண்ணியம். கல்வி உரிமை, மனித உரிமை மற்றும் சமூக நல்லிணக்கம் தொடர்பான அவரது செயல்பாடுகள் அனைத்தும் ஆண்களுடன் இணைந்தே நடந்துள்ளன.

பேராசிரியர் பணிக்காலத்தில் தீவிர தொழிற்சங்க செயல்பாட்டாளராய் இருந்த வசந்தி தேவி தனது கல்லூரி முதல்வர் பணிக்காலத்திலும் சரி துணை வேந்தர் பணிக்காலத்திலும் சரி அந்த உணர்வை மங்காமல் பார்த்துக்கொண்டவர். ஆசிரியர்களின் நியாயமான உரிமைகளுக்குக் குறுக்காகவோ சில நிர்வாகங்களின் அநீதியான போக்குகளுக்கு ஆதரவாகவோ நின்றதில்லை. பணிநிறைவுக்குப் பின் கல்வி மற்றும் சமூக மேம்பாடு தொடர்பான பல இயக்கங்களில் தன் காத்திரமான பங்களிப்பைக் கொடுத்தவர். பள்ளிக்கல்விப் பாதுகாப்பு இயக்கத்தில் தீவிரமாக இயங்கியவர். பணிநிறைவு பெற்ற நீதிபதி சந்துரு தான் இவரது சட்ட ஆலோசகராம். கல்வி உரிமை, மனித உரிமை, தலித் உரிமை, விளிம்பு நிலை மக்கள் நிலை என்றெல்லாம் சிந்திப்பவர்களும் பேசுபவர்களும் நகர்ப்புற நக்சல்களாகக் கருதப்படும் காலம் இது. அந்த வகையில் வசந்தி தேவியும் ஒரு நகர்ப்புற நக்சல் தான், மக்களை நேசியாதவர்களுக்கு.

வசந்திதேவியைப்பற்றி குறிப்பிட இன்னும் எத்தனையோ விஷயங்கள் உண்டு. எல்லாவற்றையும் இச்சிறு கட்டுரைக்குள் அடக்கிவிட முடியாது. எனவே, மேலும் இரு தகவல்களுடன் கட்டுரையை நிறைவு செய்வோம். 1992 டிசம்பர் 6-ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருநெல்வேலியில் மாணவர்கள் பங்கேற்ற பிரம்மாண்ட பேரணியை தலைமையேற்று நடத்தினார் வசந்தி தேவி. நானறிந்தவரை, வேறெந்தத் துணைவேந்தரும் பதவிக்காலத்தில் அப்படியொரு பேரணியில் பங்கேற்றதில்லை. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கட்டுமானப் பணிகள் தொடங்கியது இவர் காலத்தில். பல்கலைக்கழக கட்டுமானங்களுக்காய் ஒதுக்கப்பட்ட நிலப்பகுதியின் மண் உறுதித்தன்மை குறைந்தது. அப்போதைய தொழில்நுட்ப வசதிகளின்படி ஒரு மாடிக்கு மேல் கட்டிடம் எழுப்ப முடியாதாம் அங்கு. கட்டுமானங்களை முடிவு செய்வது சவாலாயிருந்தது அவருக்கு. பல்வேறு வகை கட்டுமானங்கள் தொடர்பான விவாதத்தில் நாகர்கோவிலில் அமைந்துள்ள ஓர் பள்ளிக்கூட கட்டிட அமைப்பு அவரை ஈர்த்தது. அதனைப் பார்வையிட நேரடியாக நாகர்கோவில் வந்தார். நான் பணியாற்றிய ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரிக்கு வந்து முதல்வர் மற்றும் சில பேராசிரியர்களுடன் அப் பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பார்வையிடச் சென்றது நினைவில் நிழலாடுகிறது. ஏனோதானோ என்றில்லாமல் பொறுப்புகளை உளப்பூர்வமாகக் கையாண்டவர் அவர் என்பதற்கு இது ஒரு சான்று மட்டுமே.

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'உலகமெலாம் பெரியாரைப் பரப்ப வேண்டும்'

## அறிஞர்கள் அழைப்பு

தந்தை பெரியாரின் பேச்சுகளும் எழுத்துகளும் கருத்துகளும் ஆங்கிலத்தில் அதிகளவில் மொழிபெயர்க்கப்பட்டு உலகமெங்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று தோழர் எஸ்.வி. ராஜதுரையின் 'பெரியார்: கேஸ்ட், நேஷன் & சோசலிசம்' ஆங்கில நூல் அறிமுக நிகழ்வில் பேசிய அறிஞர்கள் அழைப்பு விடுத்தனர்.

சென்னை தேனாம்பேட்டையிலுள்ள அன்பகத்தில் ஆக. 24, ஞாயிற்றுக்கிழமை தோழர் எஸ்.வி.ஆரின் 'பெரியார்: கேஸ்ட், நேஷன் & சோசலிசம்' நூல் அறிமுகம் நடைபெற்றது.

தொடக்கத்தில் வரவேற்றுப் பேசிய தோழர் எஸ்.வி. ராஜதுரை, ஆங்கிலத்தில் இந்த நூல் உருவாக்கப்பட்டதற்கான சூழலையும் காரணங்களையும் விளக்கியதுடன், பெரியாரின் ஆளுமைப் பரப்பை ஆங்கிலத்தில் எடுத்துச் செல்ல வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தினார்.

தலைமை வகித்துப் பேசிய திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்த நூலில் பெரியாருக்கு எதிராகக் காலங்காலமாக எழுப்பப்பட்டுவரும் ஐயங்கள், குற்றச்சாட்டுகள், மனதறிந்து சொல்லப்பட்டு வரும் பொய்களுக்குத் தக்க பதில்களை எஸ்.வி.ஆர். தந்திருக்கிறார். வன்முறைகளின்போது பெரியார் என்ன கருத்துகளைக் கொண்டிருந்தார்? அம்பேத்கர் நிலை என்னவாக இருந்தது? ஜெ. கிருஷ்ணமூர்த்தி என்ன கருத்தைக் கொண்டிருந்தார்? அவர் சொன்ன, இதுவரை தெரியவராத கருத்துகள் என்ன? என விரிவாகப் பதிவு செய்திருக்கிறார் என்றார்.

மேலும், 1969-ல் திமுகவை ஆதரிக்க என்ன காரணம்? எதுவரையிலும் இந்த ஆதரவு தொடரும்? என்பது பற்றிப் பெரியார் தெரிவித்ததை - பகுத்தறிவை வளர்த்தெடுக்கும் தன்மை, சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு இருக்கும் வரை ஆதரவு தொடரும் - என்பதுடன் இன்றைய நிலையுடன் பொருத்திக் காட்டினார். அம்பேத்கர், புத்த மதச் சடங்குகள் பற்றிய பெரியாரின் உரையாடல்களை நினைவுகூர்ந்து, புத்தம் பற்றிய பெரியார் பார்வையை வடக்கே கொண்டு செல்ல வேண்டும் என்றும் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

எஸ்ஆர்எம் சட்டப் பள்ளிப் பேராசிரியர் முனைவர் கனக விநாயகம் பேசும்போது, நாவலைப் போன்ற நூலின் மொழிநடை எனப் பாராட்டியதுடன், ஒவ்வொரு தலைப்பிலும் துறைபோகியவர்கள் மட்டுமின்றி எளிய வாசகர்களுக்கும் புரியும் வகையில் எழுதப்பட்டிருக்கும் நேரடியான, செறிவான நூல் என்றார்.

நூலில் திராவிட இயக்கத்தின் சாதி எதிர்ப்பு பற்றிய ஒரே கேள்விக்குப் பத்து பக்கங்களுக்கு மேலே விடையும் விளக்கமும் அளிக்கிறார் எஸ்விஆர். ஆய்வு எழுத்துக்கான மாதிரி இந்த நூல். 21 ஆம் நூற்றாண்டில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்துள்ள பொக்கிஷம் என்றார் கனக விநாயகம்.

நூலுக்காகத் தோழர் எஸ்.வி. ராஜதுரையுடன் உரையாடியவரும் நூலைப் பதிப்பித்தவருமான வித்யா பூஷண் ராவத், மிகக் கடினமான உழைப்பைக் கோரிய நூல் எனக் குறிப்பிட்டு, பெரியார் என்றால், ஏதோ கடவுள் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவர் என்பது போன்ற தோற்றமே வடக்கே இருக்கிறது. காரணம் இதழியல் துறையில் ஆசிரியர்களாக இருந்தவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள், பனியாக்கள். பெரியாரின் பேச்சு பற்றி, எழுத்து பற்றி, பெரும் பணிகள் பற்றித் தெரிவதில்லை. நாடு முழுவதும் அவருடைய கருத்துகள் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றார்.

நூலில் எங்கேயும், எந்தக் கேள்வியிலிருந்தும் எஸ்விஆர் விலகிச் செல்லவில்லை. மிகச் சிறப்பான பதில்களைத் தெரிவித்திருப்பதுடன், பெரியார் - அம்பேத்கர் நெருக்கம் பற்றியும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். உரையாடலில் மிக நேர்மையாக விஷயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார் ராவத்.

சென்னை இதழியல் பள்ளி முதன்மை இயக்குநர் ஏ.எஸ். பன்னீர்செல்வன் பேசும்போது, பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் அவர்களுக்கான ஊடகவெளியை அவர்களேதான் உருவாக்கிக் கொண்டார்கள்; அன்றைக்கு அதுதான் நிலை என்கிறபோது, ஆங்கிலத்தில் ஏன் இல்லை என்ற கேள்விக்கே இடமில்லை. ரிவோல்ட்டில் ஆங்கிலத்தில் வந்த பெரியாரின் எழுத்துகள் பின்னர்தான் எஸ்விஆரால் தொகுக்கப்பட்டன. கதர் - கைத்தறி இடையிலான விவாதமெல்லாம் யாருக்கும் தெரிவதில்லை. மொழிபெயர்ப்பதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. ஆனாலும் பெரியாரை எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய கடமை இருக்கிறது. இந்த நூல் *Explanatory Journalism*. கேள்வி - பதில் பாணியில் பொருளாதாரம் போன்றவற்றை எழுத முடிந்திருக்கிறது. இப்போது அரசியலையும் எழுத முடியும் என்று எஸ்விஆர் நிரூபித்திருக்கிறார். நம்மிடம் விஷயங்கள் இருக்கின்றன. வெளியே கொண்டுசென்று சேர்க்க வேண்டும் என்றார்.

பெங்களூர் இந்திய தேசிய பல்கலை. சட்டப் பள்ளித் துணைப் பேராசிரியர் முனைவர் கார்த்திக் ராம் மனோகரன் பேசும்போது, 1990-களில் பெரியார் பற்றி ஆங்கிலத்தில் வெளியிட இயலவில்லை. ஆனால், இன்றைக்குப் புகழ்பெற்ற ஆங்கிலப் பதிப்பகங்கள் எல்லாம் அவரை வெளியிட முன்வருகின்றன. பெரியார் பற்றித் தமிழில் நிறைய வாசிக்கக் கிடைக்கிறது. முற்போக்கு அரசியல் பேசுகிற யாரும் பெரியாரை விட்டுவிட்டுப் பேச முடியாது. ஆனால், இது ஆங்கிலத்தில் வெளிப்படவில்லை. இவற்றை ஆங்கிலத்தில் கொண்டுசேர்க்க வேண்டும். இனவாதம், மதவாதம், அதிதீவிர தேசியவாதம் பற்றியெல்லாம் பெரியார் பேசினார். அவர் தமிழர் தலைவரோ, திராவிடத் தலைவரோ அல்லர், உலகத் தலைவர். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டுப் பெரியார் மனித சமுதாயத்துக்காகப் பேசினார். பெரியாரைப் பற்றி ஆங்கிலத்தில் பலரும் எதிராகவும் அரைகுறையாகவுமே எழுதுகிறார்கள். வெறுமனே ஓபிசி லீடர் என்று முடிக்கப் பார்க்கிறார்கள். ஆங்கிலத்தில் எழுதி, மொழிபெயர்த்து இவற்றையெல்லாம் முறியடிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்றார்.

குப்பம் திராவிடப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் விசாகப்பட்டினம் பொருளாதார மற்றும் சமூகநீதிக்கான நிறுவன இயக்குநருமான கே.எஸ். சலம் உரையாற்றும்போது, 1891-க்கு முன் ஹிந்து என்ற சொல்லே இல்லை. அதற்கு முன்னரெல்லாம் பிராமண மதம்தான். வெள்ளையர்கள் எழுதிவைத்த ஆவணங்கள் எல்லாமும் பிராமணர்களான துபாஷிகள் வழியே அறிந்துகொண்டவைதான். எனவே, நமக்குக் கிடைக்கிற எல்லா ஆவணங்களையும் தீர ஆராய்ந்த பிறகே ஒரு முடிவுக்கு வர வேண்டும். 27 மொழிக் குடும்பங்களில் திராவிட மொழிக் குடும்பம்தான் மிகவும் பழைமையானது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு இவற்றில் ஏதேனும் ஒரு மொழி தெரிந்திருந்தால் மற்ற எல்லாமும் புரியும். ஒரே மொழிக் குடும்பம் இது. உள் முரண்பாடுகளால் வெளி அச்சுறுத்தல்களுக்கு நாம் இடம் தந்து விடக் கூடாது. இந்த நூலில் மிக நேர்மையாகவும் உண்மையாகவும் பெரியாரை நிலைநிறுத்தியிருக்கிறார் எஸ்.வி. ராஜதுரை என்றார்.

நிறைவில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையச் செயலர் தபசி குமரன் நன்றி கூறினார்.

---

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | அ.கா. பெருமாள்

# வலிய கேசி கொச்சு கேசி வில்லுப்பாட்டு

## – ஒரு கல்வெட்டு கூறும் கதை

1

தெக்கன் திருவிதாங்கூரில் இட நாட்டுப் பகுதியில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம்) இரணியல் ஊர் சிறிய அரண்மனையில் இருந்த வேணாட்டு அரசர் ஒரு நாள் காலையில் எழுந்ததும் காவலனை அழைத்தார் "வள்ளியாற்றின் கரையில் உள்ள பைங்குளம் ஊர்ப் பிரதானியான குறுப்பை அழைத்து வா" என்றார்.

சேவகன் "அப்படியே" என்று சொல்லிவிட்டுப் பைங்குளத்திற்குப் போனான். குறுப்பை அழைத்தான் அவர் இரணியலுக்கு வந்தார்.

அரசர் அவரிடம், "நீ வாழ்கின்ற பகுதியில் வலிமையான வீரர்கள் இருக்கின்றார்களா? நம் நாட்டின் தெற்குப் பகுதியில் புலையரும் வண்ணாரும் கலகம் செய்கின்றனர். அவர்களை அடக்க வேண்டும். நம் காவல் வீரர்களை அனுப்ப வேண்டாம் என்று நினைக்கிறேன்" என்று சொன்னார்.

குறுப்பு தலையைத் தாழ்த்திக் கொண்டு "எங்கள் ஊரில் (பைங்குளம்) மணக்கா தோப்பில் அண்ணன் தம்பிகள் இருவர் இருக்கின்றார்கள். ஒருவன் வலியகேசி, இன்னொருவன் கொச்சுகேசி. இருவரும் களரி பயின்றவர்கள். வாள் வீச்சில் வல்லவர்கள். திருமனசு கண்டால் அறியும்" என்றார்.

அரசர் இரண்டு கேசிகளையும் வரவழைக்க தூதனை அனுப்பினார். அவன் கேசிகளின் இல்லத்துக்கு வந்து அரசரின் ஆணையைத் தெரிவித்தான். கேசிகள் உடனே இரணியலுக்குச் சென்றனர். அரசனைக் கண்டனர். அரசன் அவர்களின் தோற்றத்தைப் பார்த்தான். அவர்கள் மாபெரும் வீரர்கள் என்பதை உடனே அறிந்து கொண்டான். கேசிகர்களைப் பார்த்து "வீரர்களே வேணாட்டின் தெற்கிலும் இடநாட்டிலும் வாழ்கின்ற புலையர்களும் வண்ணர்களும் கலகம் செய்கின்றனர். அவர்களை அடக்க வேண்டும். உங்களால் முடியுமா?" என்று கேட்டார்.

இரண்டு தேசிகளும் அரசரைப் பணிவுடன் வணங்கினர். "திருமனசின் எண்ணத்தை நிறைவேற்றுவோம். எங்களுக்கு உத்தரவு கொடுங்கள்" என்று சொன்னார்கள். அரசன் அவர்களுக்கு வலிமையான கேடயமும், வாளும் கொடுத்து வழி அனுப்பினான். கம்பீரமாய் அவர்கள் செல்வதைப் பார்த்த அரசன் இவர்கள் சொன்னதைச் செய்து முடிப்பார்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

வலியகேசி, கொச்சுகேசி என்பவர்கள் வேணாட்டின் எளிய பிரஜைகள்தாம். வள்ளியாற்றின் கரையில் இருக்கும் செழிப்பான பைங்குளம் என்னும் கிராமத்தின் எல்லையில் உள்ள மணக்கா தோப்பு என்ற இடத்தில் பிறந்தவர்கள். இந்த ஊரில் ஊராளி சாதியினர் (இப்போது இவர்கள் தண்டான் என அழைக்கப்படுகின்றனர்). கூட்டமாக வாழ்ந்தனர். அவர்களின் தலைவன் காலன்; மனைவி குஞ்சு நீலம்மை.

இவர்களுக்குத் திருமணம் நடந்த பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. குஞ்சு நீலம்மை கோவில் கோவிலாகச் சென்றாள். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவிலின் முன்னே தவம் இருந்தாள். கோவில் நடையைத் தன் முடியால் பெருக்கினாள். அதற்குப் பலன் கிடைத்தது. அவள் கர்ப்பமுற்றாள்.

ஏழாம் மாதம் பொங்குவாலை கல்யாணம் நடந்தது. பத்தாம் மாதம் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றாள். இரண்டு குழந்தைகளும் ஆதி கேசவன் அருளால் பிறந்ததால் கேசவன் எனப் பெயரிட்டனர். மூத்த குழந்தையை வலியகேசி (மூத்த தேசி என்றும் இரண்டாவது மகனை கொச்சுகேசி (சிறிய கேசி) என்றும் அழைத்தனர். அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் நிலைத்து விட்டன. இருவரும் உரிய வயதில் போர்கலை பயின்றனர். வடக்கன் களரி, தெக்கன் களரி, சிலம்பம், வர்மக்கலை என எல்லாவற்றையும் படித்தனர். வாள் வீசுவதில் வல்லவர்களாயினர். அடிமுறைகளைப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர். சாத்தன் காளி புலையன் என்பவனிடமும் நெய்யாற்றங்கரை நெடும் தோப்பு குஞ்சு வண்ணன் ஆசானிடமும் அடிமுறை பயின்றனர். வர்மம் பயில ஆத்தூர் என்ற ஊருக்குச் சென்றனர். அங்கே வைத்தியமும் படித்தனர்.

இப்படியாக, பல்வேறு இடங்களுக்குச் சென்று போர்க்கலைப் பயிற்சி முடித்துவிட்டுத் தம் சொந்த ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது பைங்குளம் குறுப்பின் தென்னந்தோப்பின் அருகே வந்தனர். களைப்புற்றனர். தாகத்தால் தவித்தனர். அங்கே கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் என்று அமர்ந்தனர். அப்போது அந்தத் தோப்பில் ஊராளிகள் தேங்காய் வெட்டிக் கொண்டிருந்தனர்.

இரட்டையர்கள் கங்காணியிடம் தாகத்திற்குக் கருக்கு (இளநீர்) தர முடியுமா என்று கேட்டனர். கண்காணி கொடுத்தான். மூத்த கேசி இதை வெட்டித் தரக்கூடாதா என்று கேட்டான். அதற்குக் கங்காணி "என்னைப் போல நீயும் ஊராளி தானே வெட்டத் தெரியாதோ, வெட்ட முடியாதோ" என்று ஆணவமாகப் பதில் சொன்னான். மூத்த கேசி பதில் பேசவில்லை. இளநீரை இரண்டு கைகளுக்கிடையே வைத்து நெரித்தான். தோல் உரிந்தது. நீரைக் குடித்தான். தம்பியும் அது போலவே குடித்தான்.

கேசிகள் இருவரும் வீட்டிற்குச் சென்றனர். தென்னந்தோப்பில் கங்காணி திமிராகப் பேசியது அவர்களுக்கு மனதை உறுத்தியது. அடுத்த நாள் இருவரும் அந்தத் தோப்பின் உரிமையாளரான குறுப்பின் வீட்டுக்குச் சென்றார்கள். அவரிடம் "உங்களது வேண்டாம். சாப்பாடு மட்டும் போதும்" என்றனர். குறுப்பு உடனே சம்மதித்தார். கேசிகள் சொன்னபடி மிக வேகமாக தேங்காய்களை உரித்துத் தங்கள் வலிமையைக் காட்டினார். தங்கள் வீட்டிற்குச் சென்றனர்.

பைங்குளம் குறுப்புக்குத் தேங்காயைக் கையால் நெரித்து இளநீரைக் குடித்த இரண்டு தம்பிகளின் உருவத்தை மறக்க முடியவில்லை. அவர்களைப் பற்றி விசாரித்தார். அவருக்குக் கிடைத்த செய்திகள் அவர்கள் போர்க்கலை பயின்றவர்கள், போராளிகள், மாபெரும் வீரர்கள் யாரும் அவர்களை வெல்ல முடியாது என்பதையெல்லாம் அறிந்து கொண்டார். மனதுக்குள் வைத்திருந்தார். அதைத்தான் அரசரிடம் குறுப்பு சொன்னார்.

வேணாட்டு அரசர் தம்பிகள் இருவருக்கும் ஆயுதங்களைக் கொடுத்து, புலையரும் வண்ணாரும் கலகம் செய்யும் இடத்திற்கு அனுப்பி வைத்தார். கேசிகள் இருவரும் கலவரக்காரர்களைக் கொன்று குவித்தனர். வில்லுப்பாட்டுக் கதையில், இருவரும் எந்தெந்த இடங்களில் கலவரக்காரர்களைக் கொன்றார்கள் என்ற விவரம் விரிவாகச் சொல்லப்படுகிறது. ஊர்களின் பட்டியலும் வருகிறது. இந்த இடங்கள் எல்லாமே இப்போது கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம், விளவன்கோடு வட்டங்களிலும் திருவனந்தபுரம் மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள ஊர்களும் ஆகும்.

கேசிகள் இப்படியாகப் பல இடங்களில் வேட்டையாடிவிட்டு மணவிளை வழியாக பத்மநாபபுரம் வருகின்றனர். அங்கே ஊரின் எல்லையில் அவர்களின் சிற்றன்னை இருந்தாள். அவளது வீட்டில் இளைப்பாறினர். அப்போது சில அபசகுனங்கள் தோன்றின. பல்லி சப்தமிட்டது. சித்தி அவர்களிடம "உங்கள் வேட்டையை நிறுத்திவிடுங்கள். இங்கே சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னாள். அவர்கள் கேட்கவில்லை.

தங்கள் கூர்மையான வாளை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். இந்தச் சமயத்தில் வள்ளி ஆற்றங்கரையில் இருந்த தோப்பு வீட்டுக் காளி பேரான் புலையன் என்ற ஆசான் கேசிகளின் செயல்பாடுகளைக் கேள்விப்பட்டான். தன் வீட்டில் புலையர்களுக்கும் வண்ணார்களுக்கும் அடைக்கலம் கொடுத்தான். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட கேசிகள் காளி பேரான் வீட்டுக்குச் சென்றனர். வீட்டின் உள்ளே அடைபட்டுக் கிடந்த வண்ணார்களையும் புலையர்களையும் வெட்டிச் சாய்த்தனர்.

அந்த வீட்டில் வேறு யாரும் இல்லை என்பதை முடிவு செய்த பின் வலியகேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிச் செல்ல ஆரம்பித்தான். அப்போது காளிப்பேரான் வலிய கேசியின் முதுகில் குத்தினான். வலியகேசி அப்படியே நிலத்தில் சாய்ந்தான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. இனி அவன் உயிர் வாழ மாட்டான் என்பதைக் கண்டுகொண்ட அவனது தம்பி வாளைத் தன் மார்பில் பாய்த்துக் கொண்டான்.

வலியகேசி தன் ஆசான் (குரு) தனக்குக் கொடுத்த சாபத்தை நினைத்துக் கொண்டான். "நீ என் சாதியினரை அழிக்கும் போது நீயும் அழிந்து போவாய்" என்று சொன்னது நினைவுக்கு வந்தது. இப்போது அவனுக்குத் தாகமாக இருந்தது. அந்த நேரத்தில் மீனவர் பெண் ஒருத்தி அங்கே வந்தாள். அவளிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டான். அவள் பனையோலைப் பட்டையில் இரு சகோதரர்களுக்கும் தண்ணீர் கொடுத்தாள். வலியகேசி நீரைப் பருகியதும் "பெண்ணே, நாங்கள் இறந்து விடுவோம். கைலாசம் செல்லுகிறோம். வரங்கள் வாங்கி வந்து எங்களைக்கொன்றவர்களைப் பழிவாங்குவோம். உனக்கும் உதவி செய்வோம்" என்று சொன்னான். உடனே உயிரை விட்டான்.

இந்தப் பகுதியில் ஒரு விருத்தப் பாடல் வருகிறது. அண்ணன் தம்பி இருவரும் கைலாசம் சென்று வரங்கள் வாங்கி பூவுலகு வருகின்றனர். அவர்கள் வரும்போது கடந்து செல்லும் கிராமங்களின் பட்டியல் சொல்லப்படுகிறது. இரண்டு தம்பிகளும் காளி போரான் ஊருக்குச் சென்று அவனைக் கொன்றனர். அவன் குடும்பத்தை அழித்தனர். அவனது ஆடு மாடுகள், பறவைகள் எல்லாவற்றையும் அழித்தனர். பின்னர் கல்லடிவிளையில் கோவில் கொண்டனர்.

**2**

எண்பதுகளின் ஆரம்பத்தில் பெரும்பாலும் *1983* இல் இருக்கலாம், மணவாளக்குறிச்சி ஊரில் திருவிக்ரமன் தம்பி *(1920-2018)* என்பவரைச் சந்தித்தேன். அவருக்கு அப்போது *60* வயதுக்கு மேல் இருக்கும். திருவனந்தபுரம் லயோலா கல்லூரியில் பணி செய்துவிட்டு ஓய்வு பெற்றிருந்த சமயம். அவர் மலையாளப் பேராசிரியர். ஊர்ப் பெயர்கள் குறித்து ஆய்வு செய்து பெல்ஜியம் பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர். மலையாள இலக்கியங்கள், வழக்காறுகள் குறித்து கட்டுரைகள் எழுதியவர். தமிழ் நன்கு அறிந்தவர்.

விக்கிரமன் தம்பி தான் எனக்கு முதலில் வலியகேசி கொச்சு கேசி கதையைச் சொன்னார். அது பற்றி அவர் மலையாளத்தில் எழுதிய கட்டுரை ஒன்றையும் காட்டினார். அந்தக் கதைப்பாடல் பற்றிய வேறு செய்திகளையும் சொன்னார். இதன் பிறகு ஒருமுறை ரமேஷன் நாயர் *(1948-2021)* என்ற மலையாள எழுத்தாளரைச் சந்திக்கப் போயிருந்தேன். அவர் என் நண்பர். திருக்குறளை மலையாளத்தில் மொழிபெயர்த்தவர். கேரளத்தில் பிரபலமானவர். மலையாளத் திரைப்படப் பாடல் ஆசிரியர். கன்னியாகுமரி மாவட்டம் குமரபுரம் என்ற ஊரினர். அவரிடம் நான் தற்செயலாக வலியகேசி கொச்சுகேசி கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். அவர் அது பற்றி 'ராஜ ரதம்' என்னும் தலைப்பில் தான் ஒரு நாவல் எழுதி இருப்பதாகச் சொன்னார். அது *2002* இல் வெளிவந்தது என்றும் அறிந்து கொண்டேன்.

என் நீண்ட நாளைய நண்பர் திக்குறிச்சி கங்காதரன் நாயர் என் வீட்டுக்கு ஒருமுறை வந்தார். அவர் அப்போது தமிழ் வில்லுப்பாட்டுகளை மலையாளத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அது குறித்து மலையாள மனோரமாவில் எழுதியிருந்தார். நான் தொகுத்து வைத்திருந்த வலியகேசி கதைப் பகுதிகளைக் காட்டினேன். என்னிடமிருந்த அந்த மூலக்கதை நாகர்கோவில் இந்துக் கல்லூரி நூலகத்தில் உள்ள எம்.பில். ஆய்வேட்டில் இருந்து எடுக்கப்பட்டது. அந்த ஆய்வை அகிலா ஸ்ரீதேவி என்பவர் செய்திருந்தார். கங்காதரன் நாயர் அதை மலையாளத்தில் மொழி பெயர்த்தார். அவர் தமிழில் இருந்து மொழி பெயர்த்த வில்லுப்பாட்டுகளைத் "தெக்கன் பாட்டுக்கள் தம்புரான் கதைகள்" என்னும் தலைப்பில் வெளியிட்டார். அந்தத் தொகுப்பில் 18 கதைப்பாடல்கள் இருந்தன. அவை எல்லாமே தமிழ்க் கதைப்பாடல்கள். கேசிகளின் கதை பற்றி மனோரமாவிலும் ஒரு கட்டுரை எழுதினார்.

– தொடரும்

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மடல் திறப்பு

**சி**ல இதழ்களுக்குப் பிறகு மிகவும் எளிமையான அட்டைப்படம் இரு வேறு வண்ணங்களில் இரண்டு இலைகள். காணும் ஒவ்வொரு முறையும் மன அமைதியைத் தருகிறது. அதைத் திறந்து வாசித்துப் பார்த்தால் எண்ணங்களில் புயல் அலைகளை தோற்றுவிப்பதாய் உள்ளது ஒவ்வொரு கட்டுரையும். 'ஆன்மீகம் என்ற சொல்லுக்கு பின்னே' என்ற கட்டுரை சொல்ல வந்த கருத்தை முழுமையாகச் சொன்ன போதும் இன்னும் கொஞ்சம் விரிவாக எழுதியிருக்கலாமென்ற ஆதங்கம் தோன்றுகிறது. திரளான வாசிப்பனுபவம் இல்லாதவர்களுக்கு இன்னும் கொஞ்சம் விரிவாக எடுத்துரைக்க வேண்டியது அவசியம். ஏனென்றால் சிந்தனையை மாற்ற நீண்ட விரிவுரையும் அவசியமென்றே எண்ணுகிறேன். நம்பிக்கை என்ற ஒன்றை மட்டும் மூலதனமாகக் கொண்டு நம் எண்ணங்களை வளரவிடாமல் செய்து கேள்வி கேட்காமலே இருக்க பழகிக் கொண்டோம். அதன் விளைவுகள் நம் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. இதிலிருந்து விடுபடுவதற்கு இது போன்ற சிந்தனைகள் பெரிதும் உதவும். குழந்தைகளுக்கான நீதிக் கதைகள் அவர்களிடம் இயல்பாகவே இருக்கும் கேள்வி எழுப்பும் எண்ணத்தை நீர்த்துப் போகவே செய்கிறது. அப்படி இல்லாமல் கேள்வி கேட்கும் எண்ணத்தை வளர்த்தெடுத்தாலே அவர்கள் சிறப்பானவர்களாக வருவார்கள். அவ்வகையில் விஷ்ணுபுரம் சரவணனின் கதைகள் முக்கியத்துவம் பெறுகிறது. மதச்சார்பற்ற வரலாற்று நூல்களை எழுதியவர்கள் பட்டியல் மற்றும் பழங்குடியின மக்களின் வரலாறுகளையும் எழுதவில்லையென்பதும் அதன் விளைவுகள் அம்மக்கள் மீதான பொதுசமூகத்தின் ஒவ்வாமை பெரும்பான்மையான நிகழ்வுகளில் வெளிவந்த வண்ணமுள்ளது என்பது கண்கூடு. ஆகஸ்ட் மாத இதழ் கல்வியின் அவசியத்தையும் அதை எடுத்துரைக்கும் விதமாக கற்பிக்க வேண்டிய வழிமுறைகளை விளக்கிக் கூறும் இதழாகக் கருதலாம்.

– சி சு ஜெகன்நாதன், பெங்களூரு

**கா**க்கைச் சிறகினிலே ஆகஸ்ட் இதழ் கிடைத்தவுடன் முழுமையாக வாசித்து விட்டேன்! முதலில் என் கண்ணில் பட்டது பாவ்லோ பிரேயர் பற்றிய ரூபன் சிவராஜாவின் கட்டுரை. அதன் அடுத்த பகுதி வரும் இதழில் வெளிவரும் என்று நினைக்கிறேன். ஆழமான கட்டுரை. குறிப்பாக அவருடைய வாழ்க்கையே பின்னிப் படர்ந்து பரவுகின்ற அவருடைய கண்டுபிடிப்பாய் ஒரு புதிய கல்வி முறை என்பது நல்ல அறிமுகம். இந்துத்துவாவின் வடமொழி அல்லது இந்தித் திணிப்பு குறித்த தனிக் கவனம் பெறுகின்ற முக்கிய கட்டுரைகள் இந்த இதழுக்குப் பெருமை சேர்க்கின்றன. அவர்களுடைய மொழி அரசியல் மட்டுமல்ல உடல் அரசியலையும் தெளிவாகப் பேசக்கூடிய எழுத்துக்கள் இதழில் உள்ளன. அந்த வகையில் ஜமாலனின் கட்டுரை, சு. குமணராசனின் கட்டுரை ஆகியவை ஆழமானப் புரிதலை ஏற்படுத்துபவை. இந்த அரசியலைச் சரியான கண்ணோட்டத்தில் அணுகி இருக்கிறார்கள். வடமொழி மேலாதிக்கத்தைத் தமிழ்நாடு ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற டாக்டர் சு. நரேந்திரன் கட்டுரை நமக்குப் பல விஷயங்களைப் புரிய வைக்கிறது. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொற்களை நம்முடைய அரசு எப்படி கண்டு அடைந்தது என்பதற்கான நுணுக்கங்களைக் கண்டிப்பாக இன்றைய பேராசிரியர்களும் கல்லூரி மாணவர்களும் வாசிக்க வேண்டும். மற்றபடி பீஹார் குறித்த புரிதலும் மோகன் ராஜன் எழுதப் போகின்ற வழிபாட்டு அரசியல் குறித்த தொடரும் காலத்தின் தேவை. தமிழ் மெய்யியல் வரலாற்றின் முக்கிய நூலாகிய நீலகேசி குறித்து இரா. முரளியின் கட்டுரை எவ்வளவு ஆழமான இலக்கியத்தை நம்முடைய இதழ் முன்வைக்கிறது என்பதற்குச் சான்று. இதற்கு முன்னால் அகத்தியர் குறித்த அப்பணசாமி கட்டுரைகளோடு இவற்றை ஒப்பிட முடியும். வள்ளுவரின் இறைக் கோட்பாடு என்கின்ற பார்வையில் எப்படி திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் திருக்குறளின் முதல் பத்துக் குறட்பாக்களை அணுகினார்கள் என்பது ஆச்சரியப்படத் தக்க வகையில் ஒப்பிடப்பட்டுள்ளது. இவ்வகையான முயற்சிகள் தொடர வேண்டும். சென்ற இதழின் தொடர்ச்சியாக செய்தலி மற்றும் சாகுல் ஹமீது இணைந்து வழங்குகின்ற களத்தில் இருந்து எழும் பிரதிபலிப்புகள் இந்த நூற்றாண்டின் கடைசி பத்து ஆண்டுகள் பாடப் புத்தகங்கள் எப்படி விரிவாக்கம் பெறுகின்றன, தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு வரலாறு என்கிற ஒரு பாடத்தை எப்படிச் சீர்குலைக்கிறது என்பதை எல்லாம் விளக்கும் பொழுது இன்னொரு வகையான அரசியல் புரிதல் கண்டிப்பாக வாசிப்பவருக்கு ஏற்படும்.

'காக்கைச் சிறகினிலே' இதழ் இன்றைய சூழலில் ஆழமான இடதுசாரி இதழ் என்பதில் சந்தேகமே இல்லை. இந்த இதழ் இன்னும் பல ஆயிரம் பேரைச் சென்று அடைய வேண்டி இருக்கிறது. இந்த இதழில் வெளிவருகின்ற கட்டுரைகளை நாம் பலருக்கும் பரவலாகச் சென்று அடைய வைப்பதற்கு இன்னும் வேறு உத்திகளையும் கையாளலாம் என்று தோன்றுகிறது. PDF வடிவத்தில் இதனை இன்றைக்கு அச்சுக் காகிதங்களைத் தொட விரும்பாத இளைய சமுதாயத்தினரிடம் எடுத்துச் செல்வதற்கும் ஏதாவது ஒரு வகையிலே நாம் முதல் படியை எடுத்து வைக்க வேண்டி இருக்கிறது என எனக்குத் தோன்றுகிறது. அது மட்டுமல்ல; மேலும் மேலும் பலரை இவ்விதழை வாசிக்க வைப்பதற்காக நாம் சந்தாக்களைச் சேர்ப்பதற்கும் களத்தில் இறங்க வேண்டும். காக்கைச் சிறகினிலே வாசகர் வட்டங்களை ஏற்படுத்துவதும் கட்டுரைகளை விவாதிப்பதற்கான ஒரு தளமாக அமையும் என்று தோன்றுகிறது.

ஆயிஷா இரா. நடராசன், கடலூர்.

**ஆ**கஸ்ட் 2025 இதழில் தலையங்கத்தின் தேர்தலும் ஜனநாயகமும் என்ற தலைப்பு சற்றே முரண்நகையாக. ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக சீர்குலைக்கும் ஒரு தீவிரவாத செயலாகத் தான் தேர்தலை கட்சிகள் கையாளுகின்றன. தன்னாட்சி அமைப்பு என்று சட்டம் சொன்னாலும், ஆளும் கட்சிகளோ, தேர்தல் ஆணையத்தை தன் கை பாவையாக்கி விடுகின்றன. சற்றே ஆறுதலாக நீதிமன்றங்கள் செயல்படுவதால்தான் ஜனநாயகம் அவ்வப்போது செத்துப் பிழைக்கிறது. இலவச வாக்குறுதிகளில் மயங்கி, நோட்டுக்கு ஓட்டை விற்பனை செய்கிற சந்தையாக மக்களும் தேர்தலை பாவிப்பதுதான் அசிங்கமான அபத்தம். அந்த வாய்ப்பை நேர்மையாக, அறிவுப்பூர்வமாக செயல்படுத்துவது, ஒவ்வொரு குடிமகனும் தங்கள் தலையெழுத்தை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் தகுதியாகும் என்பதை உணர வேண்டும்.

– அண்ணா அன்பழகன் அந்தணப்பேட்டை.

Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street, Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.வி. ராஜதுரை

## புதிய வெளிச்சத்தில் பெரியார்

இரண்டாவது அட்டைத் தொடர்ச்சி...

இந்த நிலைமையில் எஸ்.வி. ராஜதுரை உடன் நடத்திய உரையாடல் முக்கியத்துவம் பெறுகிறது. வித்தியாசமானதாக உள்ளது. பெரியார் வட மாநிலங்களில் பல ஊர்களுக்கு பயணம் செய்துள்ளார். அது குறித்தத் தகவல்கள் இந்த உரையாடல் மூலம் முதன்முறையாக வெளிவந்துள்ளது.

லக்னோ போன்ற இடங்களுக்கும் பெரியார் சென்றுள்ளார். ஆனால் அந்த பயணங்கள் குறித்த விவரங்கள் கிடைக்கவில்லை என்று கவலை தெரிவிக்கிறார் வித்யாபூசன். பெரியாரின் வட மாநில பயணங்கள் குறித்து திராவிடர் கழகம் நடத்திய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. வட மாநிலங்களில் அவரது அரசியல் செயல்பாடு மற்றும் பயணங்கள் குறித்து பெரியார் வாழ்க்கை வரலாறு எழுதியவர்கள் பெரிதாகக் கண்டுகொள்ள வில்லை. உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் தோழர் எஸ்.வி.ராஜதுரை இந்த புத்தகத்துக்காக கடுமையாக உழைத்து உள்ளார். அவரது இந்த அர்ப்பணிப்பு பெரியாரியத்துக்கு அவர் செய்துள்ள பெரிய மரியாதை. இந்தப் புத்தகத்தை இந்தியில் மொழி பெயர்க்க வேண்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் விரும்புகிறேன். அதன் மூலம் பெரியார் எந்த லட்சியத்திற்காக பாடுபட்டார் என்பதையும் அவர் குறித்த தவறான சித்திரங்களை மாற்றுவதற்கும் அது பயன்படும் என்று வித்யாபூசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூல் குறித்து அமேசான் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. அதன் விவரம் வருமாறு: சுயமரியாதை இயக்கம் பின்னர் திராவிடர் கழகமாக மாறிய காலகட்டம் குறித்த விவரங்கள் அத்தியாயங்கள் முக்கியமானவை. பெரியாரின் எதிர்ப்பாளர்கள் அவரை குறுகிய நோக்கில் சித்தரிக்கிறார்கள் அவரை ஒரு விக்ரகம் உடைப்பவர், இந்து கடவுள்களை பழிப்பவர், இந்தி எதிர்ப்பாளர் என்று மட்டுமே பரப்புரை செய்கிறார்கள். அது தவறானது. பிரபலமான அம்பேத்கர் ஆதரவாளர்கள் வட மாநில நகரங்களில் ஏற்பாடு செய்த கூட்டங்களில் பெரியார் உரையாற்றியுள்ளார். அந்த உரைகளில் அம்பேத்கருடன் பெரியார் ஒன்றுபடும் கருத்துகள் மாறுபடும் கருத்துகள் இடம் பெற்றன. புத்த மதத்தை பரப்புவதில் பெரியாருக்கு இருந்த ஆர்வம் தெரியவருகிறது. அதேபோல் கம்யூனிஸ்ட்களுடன் இருந்த அவரது நட்பு, மாறுபாடு, சாதியை ஒழிக்க வேண்டும் என்று இருந்த வாழ்நாள் லட்சிய உணர்வு, சுதந்திர திராவிட நாடு/ தமிழ்நாடு, சமத்துவ சமுதாய விருப்பம் ஆகியவை உரையாடல் மூலம் வெளிவந்துள்ளது.

புத்தகத்தினைப் பெற:

தொடர்பு எண்: **9004308889**
விவேக் சத்பால்

விலை: ரூ. 799/-

●

---

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

இந்த நூல் குறித்து அமேசான் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. அதன் விவரம் வருமாறு: சுயமரியாதை இயக்கம் பின்னர் திராவிடர் கழகமாக மாறிய காலகட்டம் குறித்த விவரங்கள் அத்தியாயங்கள் முக்கியமானவை. பெரியாரின் எதிர்ப்பாளர்கள் அவரை குறுகிய நோக்கில் சித்தரிக்கிறார்கள் அவரை ஒரு விக்ரகம் உடைப்பவர், இந்து கடவுள்களை பழிப்பவர், இந்தி எதிர்ப்பாளர் என்று மட்டுமே பரப்புரை செய்கிறார்கள். அது தவறானது. பிரபலமான அம்பேத்கர் ஆதரவாளர்கள் வட மாநில நகரங்களில் ஏற்பாடு செய்த கூட்டங்களில் பெரியார் உரையாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Posted at Egmore RMS Patrika Channel
Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org